
ஈழ அண்ணல்

# மாவை. சோ. சேனாதிராசா

## பவழ விழா மலர்




உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம்

கனடா தலைமையகம் மற்றும் இந்தியக் கிளை

P49
பொது நூலகம்
வலி. ...க்கு பிரதேச சபை
தெல்லிப்பளை



ஈழ அண்ணல் மாவை. சோ. சேனாதிராஜா



இலங்கை சிறையில் இருந்து வெளிவந்த போது
மாவை. சோ. சேனாதிராஜா (13 ஏப்ரல் 1977)

"ஈழ அண்ணல்"

# மாவை. சோ. சேனாதிராஜா

# பவள விழா மலர்

பொது நூலகம்
வலி. வடக்கு பிரதேச சபை
தெல்லிப்பளை

சிறப்பாசிரியர்

முனைவர் **பாஞ். இராமலிங்கம்**

சிறப்புத் தலைவர், உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம், கனடா

தலைவர், 13ஆவது பன்னாட்டு மாநாடு 2017

யாழ்ப்பாணம்

பதிப்பாசிரியர்

**மாவை. சோ. தங்கராஜா**

உ.த.ப.இ., ஜேர்மனி

## உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம்

புதுச்சேரி - 605 008

**யாழ்ப்பாணத்தில் 05.08.2017 அன்று வெளியிடப் பெற்ற மலரின் செம்மைபெற்ற மறுபதிப்பாக இம்மலர் வெளியிடப் பெறுகிறது.**

வெளியீடு

**தமிழ்ப் புதுவை,**

எண். 17, 14 ஆவது தெரு,

கிருஷ்ணா நகர்,

புதுச்சேரி - 605 008

பக்கம்: 208

ISBN.

வெளியீடு : ஜுன் 2019

அச்சீடு

M/S. Print Process

சென்னை - 600 014

தட்டச்சு

மகிழும் கிராபிக்ஸ்

புதுச்சேரி - 605 010

உரிமை

**உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம்**

17, 14 ஆவது தெரு,கிருஷ்ணா நகர், புதுச்சேரி - 605 008

**© All Right reserved. No part of this book may be reproduced or retrieved or photocopied in any form excepting for the purpose of reference or research without prior permission of the Editor.**



தந்தை செல்வநாயகம் அவர்களுக்கு முடி சூட்டி வெற்றி விழா காணும்
மாவை. சோ. சேனாதிராஜா



அ. அமிர்தலிங்கம் - மங்கையர்க்கரசி




லண்டனில் நடைபெற்ற அண்ணல் அமிர்தலிங்கம் அவர்களின் நினைவு நாள் விழாவில்
மாவை. சோ. சேனாதிராஜா



மாவை. சோ. சேனாதிராஜா - பவானி தம்பதியினர்



மாவை. சோ. சேனாதிராஜா குடும்பத்தினர்
(மகன்கள் கலை அமுதன், ஆரா அமுதன், மாவை சோ. சேனாதிராஜா, பவானி, மகள் தாரகா)



மாவை. சோ. சேனாதிராஜாவுக்கு
இலங்கை சிறையில் இருந்து வெளிவந்த போது அளிக்கப்பட்ட வரவேற்பு



இளைஞர் அணித் தலைவராக மாவை. சோ. சேனாதிராஜா-பொறுப்பேற்பு



## தோரண வாயில்

திரு. மாவை. சோ. சேனாதிராஜா அவர்கள் ஈழத் தமிழர்களின் விடிவெள்ளியாகத் திகழ்கின்றார். கால ஓட்டத்தில் அவருடன் 1981 ஆம் ஆண்டுமுதல் தொடர்பில் இருக்கின்றேன். அவருடைய தமிழ், இலக்கிய, சமூகப் பணிகளை அவ்வப்போது அறிந்து அகமகிழ்ந்ததன் விளைவாக அவருடைய நெடிய தொடர்பினை எழுத்துருவில் கொண்டவர வேண்டும் என்பது என் அவா. அதன் முதற்படியாகத்தான் இந்த மலர் உருவாக்கப்பட்டுள்ளது. அதற்கு உறுதுணை புரிந்தவர் அவருடைய இளைய சகோதரர் திரு. மாவை. சோ. தங்கராஜா அவர்கள். அவர்தம் இடையறா ஊக்கம்தான் இம்மலர் உங்கள் கரங்களில் தவழ்கின்றது. நான் 1994 ஆம் ஆண்டில் புதுவைப் புரவலர் வேல். சொக்கநாதன் அவர்களின் மணிவிழா மலர் பொறுப்பாசிரியர், நீதியரசர் எஸ். இராமலிங்கம் அவர்களின் மணிவிழாக் கட்டுரைகளை "அறநெறிக் கட்டுரைகள்" என்ற தலைப்பில் நூலாக்கம் செய்துள்ளேன். இவ்வரிசையில், கலைமாமணி வி. முத்து அவர்களின் மணிவிழா மலர் பொறுப்பாசிரியர். மேலும் தமிழர்த் தலைவர் அ. அமிர்தலிங்கம் அவர்களின் பவழ விழா மலர் உருவாக்கிய அனுபவத்தின் காரணமாக மாவை. சோ.சேனாதிராஜா அவர்களின் ஒரு வரலாற்றுத் தொகுப்பினை வெளியிட எண்ணினேன். என் எண்ண ஓட்டத்திற்குச் செயல் வடிவம் கொடுத்ததில் முன்னின்றவர் திரு. மாவை. சோ. தங்கராஜா. இவர்தம் இடையறா ஒத்துழைப்பினால் உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கம் இந்தியக் கிளையின் சார்பில் தற்போது வெளியிடுகிறோம். இம்மலரை யாழ்ப்பாணத்தில் 2017 இல் உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் தலைமையகத்தின் சார்பில் வெளியிடவும் முடிந்தது.

ஈழத் தமிழர்களின் துன்பங்கள் நினைத்துப் பார்க்க முடியாதவை. அவை பெருங் கடலையும் மிஞ்சும் அளவிலானது. அவ்வளவு துயரங்களையும் அமைதியாக ஆழமான தன் பட்டறிவால் அரசியல் அறிவால் தமிழ் கூறும் நல்லுலகம் ஏற்கத்தக்க வகையில் தமிழ் மக்களின் ஒன்றுபட்ட செயலாற்றலால் முன்னெடுத்து செல்லும் திரு. மாவை சோ. சேனாதிராசா அவர்களின் சேவையைப் பாராட்டி 1994 ஆம் ஆண்டில் புதுச்சேரியில் மாண்புமிகு ந. ரங்கசாமி அவர்களின் திருக்கரங்களால் "ஈழ அண்ணல்" விருது வழங்கி நாங்கள் பூரித்துக் கொண்டோம். அவர் அப்போதும் சரி, இப்போது பவழ விழா எடுக்கவுள்ளோம் என்று கூறிய போதும் சரி அதனை ஏற்றுக்கொள்ள வில்லை. பாராட்டு விழாக்கள் எமக்கு வெகுதூரம் என்று விலகிக் கொள்ளும் பெருந் தகையாளர். நாங்கள் வலிந்து தங்களுக்கு விழா எடுக்கவில்லை தங்களின் வரலாற்றுப் பயணத்தை எழுத்துருவில் பதிவு செய்ய விரும்புகிறோம் என இம்மலர் உருவாக்க முயற்சியினையும் யாழ்ப்பாணத்தில் பவழ விழாவினை நடத்திடவும் ஏற்பாடு செய்தோம்.

ஈழத்தில் எவ்வாறு மூலை முடுக்குகளில் எல்லாம் பயணித்து மக்கள் பணி ஆற்றி வருகின்றாரோ, அவ்வாறே உலகின் பல நாடுகளுக்கும் சென்று ஈழத் தமிழர்களின் இன்னல்களை எடுத்துரைத்து வருகின்றார். 1980களில் புதுவை, தமிழகப் பகுதிகளில் சிற்றூர், பேரூர், நகரம் என வாய்ப்பு ஏற்பட்ட எண்ணற்ற கூட்டங்களில் பங்கேற்று மக்களோடு மக்களாகப் பழகி, கலந்துரையாடி அனைவரின் உள்ளம் கவர்ந்த உன்னதத் தலைவர் ஆனார்.

தந்தை செல்வா, அண்ணல் அமிர்தலிங்கம் ஆகியோரின் வழியில் ஈழ அண்ணல் மாவை. சோ. சேனாதிராசா பயணித்துக் கொண்டிருக்கின்றார். தம்முடைய பணி இலங்கையில் மட்டுமல்ல உலகளாவியது என்பதில் உறுதியாக உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தினை வழி நடத்தவதிலும் ஜேர்மனி, பிரான்சு, கனடா, இந்தியா, இங்கிலாந்து என பல்வேறு நாடுகளில் நடைபெற்ற மாநாடு, ஆய்வரங்கங்களில் பங்கேற்று உலகத் தமிழர்களின் ஒற்றுமை, உரிமை, வாழ்வாதாரம், போன்ற பல்வேறு தளங்களில் தமது ஆழமான புலமையைப் புலப்படுத்தி ஆய்வாளர்களையும் தமிழறிஞர்களையும் ஊக்கமூட்டி ஒரு பன்னாட்டுச் செயலுருவாக்கத்திற்கு தூண்டு கோலாகத் திகழ்கின்றார்.

இம்மலர் உருவாக்கத்திற்கு பலர் உதவியுள்ளனர். குறிப்பாக உலகத் தமிழ் பண்பாடடு இயக்கத்தினர், திரு. பிரதீபன், திரு. கலை அமுதன், திரு ஆரா அமுதன், அட்டைப்படம் தீட்டிய புதுவை ஓவியர் முனைவர் இரா.கோபால், தட்டச்சு செய்துதவிய திரு சிவா, மகிழம் கிராபிக்ஸ், என் துணைவியார் திருமதி இரா. மங்கையர்க்கரசி அச்சிட்டுதவிய பிரிண்ட் பிராசஸ், சென்னை, மற்றும் அச்சீட்டில் உதவிய ஜெ. ஜெய் கணேஷ் ஆகியோர் என்றும் நன்றிக் குரியோராவர்.

**பாஞ். இராமலிங்கம்**
சிறப்பாசிரியர்

**மாவை. சோ. தங்கராஜா**
பதிப்பாசிரியர்

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| தோரணவாயில் | 9 |

## வாழ்த்துச் செய்தி

| | |
|---|---|
| இரா. சம்பந்தன் | 15 |

## மலர் - 1 வாழ்த்துக்கள்

| | |
|---|---|
| டி. எம். சுவாமிநாதன் | 27 |
| வி.எஸ். ராதாகிருஷ்ணன் (பா.உ) | 28 |
| ந. நல்லுசாமி | 29 |
| சீ.வி.கே. சிவஞானம் | 30 |
| தாவிதன்னுசாமி | 31 |
| கி. வீரமணி | 32 |
| R.K.R.ஆனந்தராமன் | 33 |
| சி. சிவமோகன் | 34 |
| அமிரதலிங்கம் பகீரதன் | 35 |
| மகாலிங்க சிவம் | 37 |
| க. லட்சுமிநாராயணன் | 39 |
| உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம். யேர்மனி | 40 |
| செல்லையா சிவராசசிங்கம் | 41 |
| வி.ஜி. சந்தோசம் | 42 |
| செவாலியே துபாய் குழந்தை | 43 |
| சிவா கணபதிப்பிள்ளை | 45 |
| பொ.சிறீஜிவகன் | 46 |
| முனைவர் சீர்காழி வி. இராம்தாஸ் | 47 |
| சாமி அப்பாதுரை | 48 |
| மெய்ஞானி பிரபாகரபாவு | 49 |
| இ. லோகேஸ்வரன் | 50 |
| முனைவர் வி. முத்து | 51 |
| உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கம் | 52 |
| தி. வரதன் | 54 |
| அனைத்துலக தமிழர் கூட்டமைப்பு | 56 |

## மலர் - 2 வாழ்க்கைத் தரவுகள்


மாவை. சோ. சேனாதிராஜா வாழ்க்கைத் தரவுகள் 67
ஈழ அண்ணல் மாவை. சோ. சேனாதிராசா 70
தந்தை செல்வா, அண்ணல் அமிர் வழியில் மாவையார்...
முனைவர் பாஞ். இராமலிங்கம், 76
மாவை ஒரு மாபெரும் சரித்திரம்! 81


## மலர் - 3 கட்டுரைகள்


**தமிழனுக்குச் சுயநிர்ணய உரிமை வேண்டும்**
அ. அமிர்தலிங்கம் 99
**வரலாறு போதிக்கும் புதிய பாதை**
கதிர் பாலசுந்தரம் 104
**பவழ விழா வாழ்த்து**
இரா.துரைரத்தினம். 107
**ஈழத் தமிழர்தம் உயிர் மூச்சு**
வி.சு. துரைராசா 110
**ஈழ அண்ணல் மாவை. சோ. சேனாதிராசா அவர்களின் பவழவிழா வாழ்த்து**
புலவர் கதிர். முத்தையன் 112
**ஈழ அண்ணலின் வாழ்வும் பணியும்**
முனைவர் வீ. செல்வப்பெருமாள் 115
**மொழி, இன போராளி**
தூ. சடகோபன் 119
**அவரால்தான் விடிவு**
பேராசிரியர் இரா. ச. குழந்தைவேலன் 122
**வாழ்க ஈழ அண்ணல் மாவை.சோ. சேனாதிராசா வெல்க அவர்தம் கொள்கை**
தமிழ்மாமணி வா.மு.சே.திருவள்ளுவர், 126
**இலட்சியப் பாதையில் ஈழ அண்ணல்**
கலாநிதி முருகு தயாநிதி 128
**சீர்வளச்சீர் ஈழ அண்ணல் மாவை சோ.சேனாதிராசா**
பாவலர் அப்துல் மஜித் 134
**நீதிக்காய் எழுவோம்**
ஆ. ச. அந்தோணிசாமி அடிகள் 139
**மாவை என்றொரு சரித்திரம்**
கலைமாமணி. பாவலர் மு.கு. இராமன் 142
**மாவை அண்ணர் வரலாறு**
சோ. செல்வரத்தினம் 146

## மலர் - 4 கவிதைகள்



| | |
|---|---|
| பெருங்கவிக்கோ வா. மு. சேதுராமன் | 163 |
| கவிஞர் முகவை முத்து | 165 |
| பேராசிரியர் சி. இராமமூர்த்தி | 166 |
| மாவை. சோ. தங்கராசா | 167 |
| கவிஞர் வயி.பி. மதியழகன் | 168 |


## மலர் - 5 மாவை. சோ. சேனாதிராஜா பவழ விழா


| | |
|---|---|
| மாவை. சோ. சேனாதிராஜா பவழ விழா | 180 |
| தமிழாராய்ச்சி மாநாட்டு துயரத்தின் பின் யாழில் இடம்பெறும் தமிழ் மாநாடு | 181 |


## பின்னிணைப்புகள்


| | |
|---|---|
| தமிழ்த் 14 தேசியக் கூட்டமைப்பு | 189 |
| The Tamil National Alliance | 198 |



மாவை. சோ. சேனாதிராஜா - பவானி அம்மையார்

Office

Office of the Leader of the Opposition,
03rd Floor, Parliament,
Sri Jayewardenepura Kotte,
Sri Lanka.

ආර්. සම්බන්ධන්, පා.ම.
இரா. சம்பந்தன், பா.உ.
R. Sampanthan, MP
විපක්ෂ නායක - ශ්‍රී ලංකා පාර්ලිමේන්තුව
எதிர்க்கட்சித் தலைவர் - இலங்கைப் பாராளுமன்றம்
Leader of the Opposition - Parliament of Sri Lanka

Telephone
Office 011-2777253, 011-2777256
Fax 011-2777257, 011-2777285
Residence 011-2559787, 026-2227520
Email

# வாழ்த்துச் செய்தி

**இரா. சம்பந்தன்**

**எதிர்க்கட்சித் தலைவர்**

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினரும் எம் அனைவரது அன்பிற்குரியவருமான திரு.மாவை. சோ.சேனாதிராசா அவர்களது பவள விழாவினையொட்டி வெளியிடப்படும் சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பேருவகை அடைகின்றேன். எழுபத்தைந்தாவது அகவையில் அடியெடுத்து வைக்கும் அன்புத்தம்பி சேனாதிராசா அவர்கள் கண்ணியம் மிக்கவர். தலைமைக்கு மதிப்பளிக்கும் சிறந்த பண்பாளர். அனைவருடனும் அன்பாகப் பழகும் இயல்பு கொண்டவர்.

திரு.சேனாதிராசாவின் வாழ்வின் பெரும்பகுதி தமிழ்பேசும் மக்களின் உரிமைப் போராட்டத்துடன் பின்னிப் பிணைந்தது என்றால் மிகையில்லை. எமது பெருந்தலைவர் தந்தை செல்வநாயகம் அவர்கள் பிரதிநிதித்துவப்படுத்திய காங்கேசன்துறைத் தொகுதியில் அமைந்துள்ள மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு.சேனாதிராசா அவர்கள் மிக இளவயது முதலே தந்தை செல்வா காட்டிய அகிம்சைவழி அரசியல் பாதையில் பயணிக்கத் தொடங்கியவராவார்.

1961 ஆம் ஆண்டு எமது கட்சியினால் வடக்கு கிழக்கு மாகாணங்களில் முன்னெடுக்கப்பட்ட சத்தியாக்கிரகப் போராட்டத்தில் இளவயதுச் செயற்பாட்டாளராகப் பங்குபற்றினார். இலங்கைத் தமிழரசுக் கட்சியின் இளைஞர் அமைப்பாக அன்று அரசியலில் பெரும்பங்காற்றி வந்த தமிழ் இளைஞர் பேரவையின் செயற்பாடுகளில் தன்னை இணைத்துக் கொண்ட அவர், அதன் முக்கிய செயற்பாட்டாளராக விளங்கினார். ஈழத்தமிழ் இளைஞர் இயக்கத்தின் செயலாளராக 1966 முதல் 1969 வரை பொறுப்பு வகித்திருந்தார்.

காலத்துக்குக் காலம் எமது கட்சியினால் முன்னெடுக்கப்பட்டு வந்த பல்வேறு வடிவங்களிலான அகிம்சைவழிப் போராட்டங்களின்போது முன்னின்று உழைத்த இளைஞர் குழாத்தினரின் பணிகளில் இவரது பங்களிப்பு குறிப்பிட்டுச் சொல்லத்தக்கதாகும். குறிப்பாக, 1972 ஆம் ஆண்டின் புதிய அரசியல் யாப்புக்கெதிரான போராட்டம், தரப்படுத்தலுக்கு எதிரான போராட்டம் மற்றும் வடக்குக் கிழக்கு மாகாணங்களுக்கான அமைச்சர்களின் வருகைக்கெதிரான கறுப்புப் பட்டிப் போராட்டம் எனப் பல்வேறு போராட்டங்களின்போது முன்னின்று செயற்பட்டார்.

அவரது தீவிர செயற்பாடுகள் காரணமாக 1969 ஆம் ஆண்டு முதல் 1983 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் பல தடவைகள் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு சித்திரவதைகளுக்குள்ளானதுடன், வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு எட்டுச் சிறைக்கூடங்களில் சுமார் ஏழு ஆண்டுகள் சிறைவாசம் அனுபவித்தார். அரசாங்கத்தின் இத்தகைய அடக்குமுறைகளால் அவரது அரசியல் பயணத்துக்குத் தடைபோட முடியவில்லை. அவர் சளைக்காது தனது அரசியல் பயணத்தைத் தொடரவே செய்தார்

தந்தை செல்வாவின் மறைவைத் தொடர்ந்து 1977 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலில் அமரர் அண்ணன் அமிர்தலிங்கம் அவர்கள் காங்கேசன்துறைத் தொகுதியில் போட்டியிட்ட போது அவரது தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் முக்கிய பேச்சாளராக தம்பி சேனாதிராசா பங்காற்றினார். எமது கட்சியின் பொதுக்கூட்டங்கள், தேர்தல் பிரசாரக் கூட்டங்கள் மற்றும் கட்சியின் மாநாடுகளில் எல்லாம் கலந்து கொண்டு தனது பேச்சாற்றலால் மக்களிடையே நன்மதிப்பைப் பெற்ற ஒருவராக வளர்ச்சி பெற்றார். வடக்கு மாகாணத்தில் மட்டுமல்ல, கிழக்கு மாகாணத்தில் ஒழுங்கமைக்கப்பட்ட கட்சிக் கூட்டங்களிலும் பரப்புரைக் கூட்டங்களிலும்

முக்கிய பேச்சாளராகக் கலந்து கொண்டார். இவரது இத்தகைய செயற்பாடுகளால் எமது கட்சியின் அனைத்துப் பிரிவினருடனும் நெருங்கிய தொடர்பைப் பேணும் வாய்ப்பு அவருக்குக் கிடைத்தது.

1983ஆம் ஆண்டு அரசியலமைப்புச் சட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட 6வது திருத்தத்திற்கமைய உறுதிப்பிரமாணம் செய்வதில்லை என்ற கட்சியின் தீர்மானத்துக்கமைய அன்றைய பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் எமது பாராளுமன்றப் பதவிகளைத் துறந்தோம். அத்துடன் நாட்டில் ஏற்பட்ட இனக்கலவரத்தைத் தொடர்ந்து நான் உட்பட எமது அன்றைய பாராளுமன்ற உறுப்பினர்கள் பலரும் நாட்டைவிட்டு வெளியேறியபோது தம்பி சேனாதிராசாவும் இந்தியாவுக்கு இடம்பெயர்ந்தார். அங்கிருந்த காலத்திலும் அவர் எம்முடன் இணைந்து ஓயாது அரசியல் பணிகளில் ஈடுபட்டு வந்தார்.

இந்திய அரசாங்கத்தின் முயற்சியினால் உருவான இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் பயனாக நாட்டில் ஏற்பட்ட அரசியல் சூழ்நிலை மாற்றம் காரணமாக நாம் இலங்கை திரும்பி நேரடி அரசியல் நடவடிக்கைகளை ஆரம்பித்திருந்த காலத்தில், 1989 ஆம் ஆண்டு யூலை மாதம் 13ஆந் திகதி, அன்றைய காலகட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினராகப் பதவி வகித்த அண்ணன் அமிர்தலிங்கம் அவர்களது மறைவினைத் தொடர்ந்து ஏற்பட்ட வெற்றிடத்துக்கு தமிழர் விடுதலைக் கூட்டணியின் தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராக முதல்தடவையாக திரு.சேனாதிராசா அவர்கள் பாராளுமன்றம் சென்றார். அதன் பின்னர் 1999 ஆம் ஆண்டு தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராகப் பதவி வகித்து வந்த கலாநிதி நீலன் திருச்செல்வம் படுகொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து அவ்வெற்றிடத்துக்கு மீண்டும் நியமிக்கப்பட்டார்.

2000ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் போட்டியிட்டு யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு பாராளுமன்றில் பிரவேசித்தார். அதனைத் தொடர்ந்து 2001, 2004, 2010, 2015 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற பொதுத்தேர்தல்களில், பின்னாளில் உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்புச் சார்பில் யாழ்.மாவட்டத்தில் போட்டியிட்டு மக்களின் அமோக ஆதரவுடன் வெற்றியீட்டிய அவர் இன்றும் பாராளுமன்ற உறுப்பினராகச் செயற்பட்டு வருகின்றார்.

2014 ஆம் ஆண்டு தமிழரசுக் கட்சியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படும் வரை அக்கட்சியின் பொதுச் செயலாளராகவும் பணியாற்றியுள்ளார். இவ்வாறெல்லாம் கட்சியின் முக்கிய பொறுப்புக்களைக் காலத்துக்குக் காலம் வகித்து வந்த அவர், இனப்பிரச்சினை தொடர்பாக இடம்பெற்ற பல்வேறு பேச்சுவார்த்தைகளின் போதெல்லாம் என்னுடன் இணைந்து பங்குபற்றி தனது காத்திரமான பங்களிப்பைச் செய்து வந்துள்ளார்.


நீண்டகாலமாகவே அரசியல் பணிகளில் பங்குபற்றி வரும் திரு.சேனாதிராசா அவர்கள் 75வது வயதை அடைந்துள்ள இவ்வேளையில் அவரது சேவைகளைக் கௌரவிக்கும் வகையில் எடுக்கப்படும் இவ்விழாவானது சாலப் பொருத்தமானதாகும். எனவே, எமது இனப்போராட்டத்தின் பெரும்பகுதியுடன் தன்னை இணைத்துக் கொண்ட அவர் கடந்து வந்த பாதையின் நிகழ்வுகள் பதிவுசெய்யப்பட வேண்டியது எமது எதிர்கால சந்ததியினருக்குப் பயனுறு வகையில் அமையும் என நான் நம்புகின்றேன்.

ஆரம்ப காலத்தில் இருந்த அதே கொள்கைப் பற்றுடன் தளம்பல் ஏதுமின்றி இன்றும் உறுதியுடன் செயற்படும் தம்பி சேனாதிராசாவுக்கு எடுக்கப்படும் இப்பவள விழாவானது மிகச் சிறப்புடன் நடந்தேற வேண்டுமெனவும், அவ்விழா தொடர்பில் வெளியிடப்படும் சிறப்பு மலர் அவரது வாழ்வையும் அரசியல் வகிபாகத்தையும் எடுத்தியம்பும் கனதியான ஓர் ஆவணமாக அமைந்திட வேண்டுமெனவும் வாழ்த்துவதுடன், அவர் உடல் நலத்துடன் நீளாயுள் பெற்று தொடர்ந்தும் எமது மக்களுக்குச் சேவையாற்ற அருள்பாலிக்க வேண்டுமென எல்லாம் வல்ல கோணேஸ்வரப் பெருமானையும் பத்திரகாளி அம்பாளையும் இறைஞ்சுவதுடன் எனது நல்லாசிகளையும் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

நன்றி.

இரா. சம்பந்தன்

# வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வுகளில் சில



மாண்புமிகு இந்திய பிரதமர் நரேந்திர மோடி அவர்களுடன்
மாவை. சோ. சேனாதிராஜா, குழுவினர்



இந்தியப் பிரதமருடன் சந்திப்பு




இலங்கை அதிபர் கௌரவ. சிறிசேன
அவர்களுடன் மாவை. சோ. சேனாதிராஜா




தந்தை செல்வா நினைவு நாள் நிகழ்வில்
மாவை. சோ. சேனாதிராஜா



மாவை. சோ. தங்கராஜா,
மாவை சோ. சேனாதிராஜா மற்றும்
முனைவர் பாஞ். இராமலிங்கம்



இலங்கை முன்னாள் அதிபர் மகிந்த ராஜபக்சே
அவர்களுடன் மாவை. சோ. சேனாதிராஜா



வெற்றி வாகைச் சூடிய
மாவை. சோ. சேனாதிராஜா வரவேற்பு



மாண்புமிகு இந்திய பிரதமர் மன்மோகன்சிங்
அவர்களுடன் மாவை. சோ. சேனாதிராஜா



வை. கோபால்சாமி அவர்களுடன்
மாவை. சோ. சேனாதிராஜா



தமிழக முதல்வர் கௌரவ மு. கருணாநிதி
அவர்களுடன் மாவை. சோ. சேனாதிராஜா



தந்தை செல்வா நினைவு நாள் நிகழ்வில் இலங்கை
அதிபர் சிறிசேன மற்றும் மாவை. சோ. சேனாதிராஜா





மாண்புமிகு இலங்கை நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் கௌரவ இரா.சம்பந்தன் அவர்களுடன்
மாவை. சோ. சேனாதிராஜா






15 ஆவது இலங்கைத் தமிழரசுக் கட்சி மாநாட்டில் பங்கேற்றுள்ள மாவை. சோ. சேனாதிராஜா



அயல் நாட்டு பிரதிநிதிகளுடன்
மாவை. சோ. சேனாதிராஜா



பாதிக்கப்பட்ட பெண்களுக்கான நிதியளித்தல்
நிகழ்வில் மாவை. சோ. சேனாதிராஜா



பத்திரிகையாளர் சந்திப்பில்
மாவை. சோ. சேனாதிராஜா



நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் அவர்களுடன்
மாவை. சோ. சேனாதிராஜா

## மாவை. சோ. சேனாதிராஜா பங்கேற்ற நிகழ்வுகளில் சில


















தேர்தல் வெற்றி விழாவில் மாவை. சோ. சேனாதிராஜா

























Tamil Arasu Kadchi




Thanthai Chelva Memorial Lecture
TAMIL ARASU KADCHI







மாவை. சோ. சேனாதிராஜா கருத்துரை



கல்முனையில் தமிழர் விடுதலைக் கூட்டணி ஆலோசனைக் கூட்டத்தில் சிவ. சிதம்பரம், அ. அமிர்தலிங்கம், மாவை. சோ. சேனாதிராஜா உள்ளிட்டோர் (1979)

# மாவை. சோ. சேனாதிராஜா புதுச்சேரி வருகை



தமிழ் ஈழ நட்புறவுக் கழகத்தின் சார்பில் நடைபெற்ற கூட்டத்தில்
மாவை சோ. சேனாதிராஜா உரை (1984)



தமிழ் ஈழ நட்புறவுக் கழகத்தின் கூட்டத்தில்
அ. அமிர்தலிங்கம் உரை



கம்பன் கலையரங்கில் பங்கேற்றோர்



புதுவைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர்
கி. வேங்கிடசுப்ரமணியன், நீதியரசர்
இரா. கோவிந்தராஜன் மற்றும் தமிழர் தலைவர்
அ. அமிர்தலிங்கம் தம்பதியினர், மாவை.
சோ. சேனாதிராஜா உள்ளிட்டோர் (1987)



மாவை. சோ. சேனாதிராஜா இரண்டாம்முறை
புதுச்சேரியில் உரை (1987)



மலர் - 1

# வாழ்த்துக்கள்



இலங்கை அதிபர் சிறிசேன அவர்களுடன் மாவை சோ. சேனாதிராஜா



## வாழ்த்துரை

இலங்கைத் தமிழரசுக்கட்சியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான கௌரவ மாவை.சேனாதிராஜா அவர்களது பவள விழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் அகமகிழ் வெய்துகிறேன்.

தமிழர் தம் அரசியல் வரலாற்றில், தனக்கென ஒரு நெடிய வரலாற்றைக் கொண்ட திரு.சோமசுந்தரம் சேனாதிராஜா அவர்கள் 27.10.1942 இல் சோமசுந்தரம் தையல்நாயகி தம்பதியினருக்கு மாவையின் மைந்தனாகப் பிறந்து, அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் அரசியல் அறிவியலில் முதுகலைமாணிப் பட்டம் பெற்று, இலங்கைத் தமிழ்த் தேசிய இயக்கத்திற் செயற்பட்டு, 1961 இற்சத்தியாக்கிரகப் போராட்டத்திற் பங்கெடுத்து, 1962 இல் இலங்கை தமிழரசுக் கட்சியின் இளைஞர் அணியிற் தன்னை இணைத்துக்கொண்டு, 1966 முதல் 1969 வரையான காலப்பகுதியில் ஈழத்தமிழர் இளைஞர் இயக்கத்திற் செயலாளராகப் பணியாற்றி, 1969 இலிருந்து 1983 வரையான காலம் இலங்கை அரசாற் கைதாகி எட்டு வெவ்வேறு சிறைச்சாலைகளில் சிறைவாசம் அனுபவித்த காலமாக அமைந்ததோடு, 1972 இல்தமிழர் விடுதலைக் கூட்டணியின் தமிழ் இளைஞர் பேரவையின் செயலாளராகி, 1989 இல் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் E.N.D.L.F., E.P.R.L.F., T.E.L.O. மற்றும் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் யாழ். மாவட்ட வேட்பாளராகப் போட்டியிட்டுப் பதின்மூன்றாவது நிலைக்கு வந்து நாடாளுமன்றுக்குத் தெரிவாக முடியாமற் போனபோதும்,1989 ஜூலை 13 இல் அ.அமிர்தலிங்கம் அவர்கள் படுகொலை செய்யப்பட்டமையைத் தொடர்ந்து அவரது இடத்திற்குத் தேசியப்பட்டியல் மூலம் நாடாளுமன்றத்திற்குத் தெரிவாகி, 1999 ஜூலை29 இல் நீலன் திருச்செல்வம் அவர்கள் படுகொலை செய்யப்பட்டமையைத் தொடர்ந்து மீண்டும் தேசியப்பட்டியல் மூலம் நாடாளுமன்றத்திற்குத் தெரிவாகி,2000, 2001, 2004, 2010 மற்றும்2015 களில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தல்களில் யாழ்.மாவட்டத்தில் முறையே 10965, 33831, 38783, 20501 மற்றும் 58782 வாக்குகளைப் பெற்று நாடாளுமன்றம் தெரிவாகி, 2014 செப்டம்பர் மாதம் இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவரானார்.இவரது அரசியற் பயணம் பல தியாகங்களையும் தனதினத்திற்கான அர்ப்பணிப்புகள் பலவற்றையும் கொண்டதென்பது மறுப்பதற்கில்லை. இவரது அரசியற் பயணமும் சிந்தனையும் வெற்றிகரமாகத் தொடர எல்லாம்வல்ல எம்பெருமானை வேண்டி, வாழ்த்தி அமைகின்றேன்

டி.எம். சுவாமிநாதன்
சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும்
இந்துமத அலுவல்கள் அமைச்சர்

වී. එස්. රාධාක්‍රිෂ්ණන් (පා.ම)
வி.எஸ். இராதாகிருஷ்ணன் (பா.உ.)
V. S. Radhakrishnan (M.P)
අධ්‍යාපන රාජ්‍ය අමාත්‍ය
கல்வி இராஜாங்க அமைச்சர்
State Minister of Education

| | | | | | |
|---|---|---|---|---|---|
| මගේ අංකය<br>எனது இல.<br>My No. | MOE/SM/2018/NI/022 | ඔබේ අංකය<br>உமது இல.<br>Your No. | | දිනය<br>திகதி<br>Date | 2018.06.08 |

## வாழ்த்துச் செய்தி

பாராளுமன்ற உறுப்பினர் மாவை சோ. சேனாதிராசா அவர்களின் 75 ஆம் அகவையை சிறப்பிக்கும் வகையில் பவள விழா மலருக்கான வாழ்த்து செய்தி ஒன்றை வழங்குவதில் பெருமை அடைகின்றேன்.

இலங்கை அரசியல் வரலாற்றில் சோ. சேனாதிராசாவின் பங்களிப்பு அளப்பரியது. கடந்த 57 வருடங்களுக்கு மேலாக தம்மை அரசியலுக்கு அர்ப்பணிதது தமிழர்களின் விடிவிற்காக போராடிக் கொண்டிருக்கும் ஒரு போராளியாகவே நான் அவரைக் கருதுகின்றேன்.

யாழ்பாணத்தில் மாவிட்டப்புரத்தில் பிறந்த சோ. சேனாதிராசா ஆரம்பக் கல்வியை யாழ்ப்பாணத்தில் பயின்று யுத்தத்தின் காரணமாக அகதியாக இந்தியாவிற்குச் சென்று அங்கே அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் அரசியல் அறிவியலில் முதுகலைமாணி பட்டம் பெற்றுக்கொண்டார்.

அதனை தொடர்ந்து நாடு திரும்பிய சோ. சேனாதிராசா இலங்கையில் நடைபெற்ற பல்வேறு போராட்டங்களில் தன்னை இணைத்துக் கொண்டார். குறிப்பாக 1972 ஆம் ஆண்டு புதிய அரசியல் அமைப்பிற்கு பதிராக போராட்டங்கள் காரணமாக 11 முறை சிறைபடுத்தப்பட்டார். அதே போன்று தொடர்ச்சியான பல போராட்டங்கள் காரணமாக 11 முறை சிறைபடுத்தப்பட்டார். இதே ஒரு அனுபவம் வாய்ந்த அரசியல்வாதி. இவர் தந்தை செல்வா, அ. அமிர்தலிங்கம் போன்ற அரசியல் தலைவர்களால் வளர்த்தெடுக்கப்பட்டவர் ஆவார்.

1972 ஆம் ஆண்டு தமழர் ஐக்கிய விடுதலை முன்னனி தொடங்கப்பட்டபொழுது அதன் இளைஞர் பிரிவில் செயலலாளராக பொறுப்பேற்று சிறப்பாகச் செயற்பட்டுள்ளார். இந்தியாவின் முன்னல் பிரதமர்களான இந்திரா காந்தி, ராஜிவ் காந்தி ஆகியோரின் தலைமையில் நடைபெற்ற பல பேச்சு வார்த்தைகளில் பங்கு கொண்ட பெருமை இவருக்கு உண்டு.

75 ஆவது அகவையில் தடம் பதிக்கும் பாராளுமன்ற உறுப்பினர் சோ. சேனாதிராசா அவர்கள், இன்னும் நீண்ட ஆயுளுடன் தமிழர்களுக்குச் சிறப்பான சேவையை முன்னேடுக்க எல்லாம் வல்ல இறைவன் அனைத்து வழிகளிலும் துணை நிற்க வேண்டும்என மலையக மக்கள் சார்பில் வாழ்த்துவதில் பெருமை கொள்கிறேன்.

ள், நிள, நுமிடயஹெஜ்ஸரா (பா.உ)
கல்வி இராஜாங்க அமைச்சர்.

**ந. நல்லுசாமி,** பி.ஏ.இ பி.எல்..
தமிழக முன்னாள் அமைச்சர்

ஏ- 10/156, சாலை ரோடு
திருச்சிராப்பள்ளி - 620 018.
தமிழ்நாடு
செல்: 9789165063

தேதி: 07.06.2018



## வாழ்த்துச் செய்தி

ஈழ அண்ணல் திரு.மா.வை. சோ. சேனாதிராஜா எம்.பி. அவர்களின் 75வது பவழவிழா இலங்கை யாழ்பானத்தில் நடைபெற்றதை தொடர்ந்து புதுவையில் பவழ விழா மலர் வெளியிட ஏற்பாடு செய்துவரும் அமைதியாக அடக்கமாக ஆழ்ந்து தமிழ் பற்றுடன் துணிவுடன் தமிழ்வளர்ச்சி மற்றும் தமிழன் நலன்காக்க தூய தமிழ்பணி ஆற்றிவரும் உலக தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் சிறப்பு தலைவர் முனைவர் திரு. பாஞ்ச் ராமலிங்கம் அவர்கள் ஈழ தமிழருக்கு என்றும் உழைத்து வரும் தியாகி இழ அண்ணலுக்கு ஏற்பாடு செய்து வரும் விழா சிறப்புடன் நடைபெற வாழ்த்துகிறேன்.

இலங்கை தமிழரசு கட்சியின் மூத்த உறுப்பினர். அவரது வாழ்க்கை சிறையே வாழ்க்கை, வாழ்க்கையே சிறை. பல சிறைகளில் ஏழாண்டு சிறை வாழ்க்கையே ஏற்றுக்கொண்டவர்.மனிதனில் வாழ்க்கையில் இது சாதாரனமான காரியம் அல்ல மிக பெரிய தியாகம். என்றும் அவர் வாழ்க்கையே தியாகம் செய்யும் உத்தமர் தலைவர் ஆவார்.

உழைப்பின் சிகரம். அவரது வாழ்க்கை கடுமையான சோதனைக்கு உட்பட்டது. அதையும் மகிழ்ச்சியோட ஏற்றுக்கொள்ளும் அற்புதமான தலைவர். கடுமையான அரசியல் பணிகளிலும் இலக்கிய பணி ஆற்றுவதிலும் பெருமை கொண்டவர். அவரது வாழ்க்கையில் ஈழ தமிழர்களுக்காக புரட்சிகர போராட்டங்களில் ஈடுபட்டு வரலாறு கொண்டவர். தியாகமே தனது அரசியல் வாழ்க்கை என்று வகுத்துக் கொண்டவர். இன்று முன்னனிதலைவராக உள்ளார்.

அவருடன் நான் ஒரு ஆண்டு அல்ல பல ஆண்டு பலகிவருபவன். திருச்சியிலும் சென்னையிலும் அடிக்கடி சந்திப்பு இருந்தது. அவர் முழு நேர அரசியல் காரணமாக திருச்சி வருவது குறைந்து இருக்கிறது. காரணம் இலங்கை தமிழருக்கு உழைப்பதே அவரது வாழ்க்கை என மாறிவிட்டது. எப்போதும் என்னை சந்திததாலும் இலங்கை தமிழர்களின் எதர்காலம் என்னவென்று உணர்ச்சி வசப்பட்டு வெற்றி பெற என்ன செய்வது என்ற சிந்தனையில் தான் பேசுவார். அவரது குடும்ப வாழ்க்கையே பற்றி நான்தான் பிள்ளைகள் மற்றும் துணைவியார் எப்படி இருக்கிறார் என்று கேட்டால்தான் சொல்லுவார். இலங்கை தமிழர்களின் நலன் பற்றி உள்ளத்தில் ஆழ்ந்த சிந்தனையில் என்றும் இருப்பார்.

அவரதுதமிழர் பற்றுக்கும் தமிழ் வளர்ச்சிக்கும் அவரது உழைப்பு இலங்கை தமிழர் கொள்கைக்கு வெற்றி பெற நாம் அனைவரும் ஒத்துழைப்பு தர அவரை வாழ்த்துவோம். போற்றுவோம். பவழவிழா காணும் ஈழ அண்ணல் அவர்களும் அவர்கள் குடும்பத்தாரும் பல்லாண்டு வாழ்க எல்லா நலனும் பெற்று வாழ்க என வாழ்த்துகிறேன்.

**ந. நல்லுசாமி**
திருச்சி

சீ.வீ.கே. சிவஞானம்
அவைத் தலைவர், வடக்கு மாகாண சபை
සී.වී.කේ. සිවඥානම්
සභාපති, උතුරු පළාත් සභාව
C.V.K. SIVAGNANAM
Chairman, Northern Provincial Council

19 வீதி, கைதடி (யாழ்ப்பாணம்) / 19 පාර, කයිතඩි (යාපනය) / 19 Road, Kaithady (Jaffna)
மின்னஞ்சல் / විද්‍යුත් තැපෑල / e - mail: cvkayes@gmail.com
தொலைபேசி / දුරකතන / Telephone: 021 205 7084, 021 205 7081 (208)
தொலை நகல் / ෆැක්ස් / Fax: 021 205 7084

## மக்கள் நாயகனுக்கு
## பவளவிழா வாழ்த்து

தமிழ் மக்களின் நெஞ்சங்களில் நம்பிக்கை நாயனாக மிளிரும் மாவை. சேனாதிராஜா பவள விழா காண்பது நமக்குப் பெருமையளிக்கிறது.

19 வயதில் தமிழ் மக்களின் உரிமைக்காக ஒலிக்கத் தொடங்கிய குரலை நசுக்கிவிட - அடக்கிவிட பல நெருக்குவாரங்கள் கொடுக்கப்பட்டன. ஆனால் எந்த அச்சுறுத்தலுக்கும் பணிந்து விடாமல் நேர்மையுடன் இப்போதும் ஒலித்துக் கொண்டிருக்கிறது மக்கள் நாயகனின் குரல்.

1961 சத்தியாக்கிரகப் போராட்டத்தில் அடியெடுத்த போராட்ட வாழ்வு சிறை - அச்சுறுத்தல் - சித்திரவதை எனப் பல அபாயங்களைக் கடந்து இன்றும் தமிழ் மக்களின் காணி விடுவிப்பு, காணாமல் ஆக்கப்பட்டோர் போராட்டங்கள் எனத் தொடர்ந்து கொண்டேயிருக்கிறது.

1962 இல் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் இளைஞரணியில் இணைந்ததில் தொடங்கிய அரசியல் நெடும்வாழ்வு 1989 நாடாளுமன்ற உறுப்பினர் என உயர்ந்து இன்றுவரை யாழ்ப்பாண மாவட்ட தேர்தல்களில் தோற்கடிக்கப்படாத மக்கள் தலைவர் என்ற மகத்தான சாதனையுடன் தொடர்ந்து கொண்டேயிருக்கிறது. தமிழின விடுதலைக்காக 5 தடவைகள் சிறை சென்றவர்.

தமிழினத் தந்தை செல்வா தலைமை வகித்த இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் இளைஞரணி தொண்டராக கட்சி வாழ்வைத் தொடக்கியவர். அர்ப்பணிப்புமிக்க - பொறுப்பான சேவைகளால் உயர்ந்து கட்சியின் செயலாளர் பதவி வகித்தவர். 2014 ஆம் ஆண்டு தொடக்கம் கட்சித் தலைமையைப் பொறுப்பேற்று தந்தை செல்வாவின் வழியிலேயே தொடர்ந்து பணி யாற்றி வருகிறார். தந்தை செல்வாவின் தேர்தல் தொகுதியான காங்கேசன்துறையை, தொடர்ந்து நாடாளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் செய்கிறார்.

இலங்கை தமிழரசுக் கட்சியைப் பொறுத்தவரை வடக்கு - கிழக்கு தாயகப் பிரதேச ஊர்களையும் மக்களையும் பெயர்சொல்லி பேசக்கூடிய அறிமுகம் உள்ள தலைவர் என்றால் அது அன்புக்குரிய மாவை சேனாதிராசா என்பது தெளிவானது. வலி.வடக்கு மக்களின் இடம்பெயர் வாழ்வுக்கு நீதி தேடுவதற்காக நீதிமன்றத்தை நாடி வெற்றியும் கண்டவர்.

தமிழ் அரசியலின் மூத்த தலைவர்களான எஸ்.ஜே.வி. செல்வநாயகம், அ.அமிர்தலிங்கம், இரா.சம்பந்தன் ஆகியோரு டன் நெருங்கிய உறவைப் பேணி - அவர்களின் வழிகாட்டுதலில் கட்சியை இன்றும் வழிநடத்தும் தலைவர். சிங்களத் தலைமைகளுடன் அரசியல் சாணக்கியம் பேசியவர். புலம்பெயர்ந்து வாழும் ஈழத் தமிழர்களின் தலைவராக இப்போதும் மக்களுடன் மக்களாக வாழும் - போராடும் - மக்கள் தலைவனுக்கு பவள வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பேருவகை அடைகிறேன்.

"முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப்படும்"

சீ.வீ.கே. சிவஞானம்
அவைத் தலைவர், வடக்கு மாகாண சபை,
துணைப் பொதுச் செயலாளர், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி.

சீ.வீ.கே.சிவஞானம்,
அவைத்தலைவர்,
வடக்கு மாகாண சபை,
904/5 பருத்தித்துறை வீதி.

வதிவிடம் / Residence → முகவரி / Address: 904/5, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 904/5 Point Pedro Road, Nallur, Jaffna.
தொலைபேசி / Telephone: 021 222 9702, 077 116 6121, 071 316 6121

# வாழ்த்துரை

Justice David Annoussamy
59, Laporte Streeet,
Pondicherry - 605 001.

2.2.2017

மாவை. சோ. சேனாதிராசாவின் 75 ஆம் அண்டு பிறந்த நாள் முன்னிட்டு பெரும் விழா நடத்துவது பொருத்தமே.

அவரது வழிகாட்டியான அமிர்தலிங்கம் அவர்களை நன்கு அறிவேன். அவர் நம் வீட்டிற்கு வருகை தந்திருக்கிறார். புதுவை வழக்குரைஞர் வளாகத்தில் அவர் நடத்திய சொற்பொழிவைக் கேட்டு இலங்கைத் தமிழர்களின் துன்பங்களை நன்கு புரிந்துக் கொண்டேன். அவ்வமயம் அவரது மனைவி பாரதியாரின் தேசிய கீதங்களை இனிமையாகக் பாடி எல்லோரையும் மகிழ்வித்தார்கள்.

அவர் வழியில் நின்றுவரும் சேனாதிராசா அவர் விட்டுப்போன அனைத்தையும் பூர்த்தி செய்து வருகிறார்கள். சிறுபான்மையாக இருக்கும் தமிழர்கள் அவர்களுடைய உரிமைகளை பெறுவதற்கு சேனாதிராசா சுமார் 50 ஆண்டுகளாக பாடுபட்டு வருகிறார். அவருடைய நிதானமும், வைராக்கியமும் வீரமும் பாராட்டத்தக்கது.

கூடி வாழ்வோம் என்ற மனப்பான்மை எல்லோருக்கும் ஏற்பட்டுவிட்டால் யாவருக்கும் வாழ்க்கை இனிமையாக அமையும். 70,00,000 மக்களைக் கொண்ட சுய்செர்லேண்டு மூன்று மொழிகள் கொண்டநாடு, அதுபலகாலமாக ஒத்துமையை அனுசரித்து செழித்து வாழும் போது இரு மொழிகளைக் கொண்ட 1,70,00,000 இலங்கை மக்கள் அவ்வாறே வாழக் கூடாதா? இந்த நோக்கத்தில் பாடுபட்டுவரும் சேனாதிராசா வெற்றி பெறுக. அந்த நிலைமையை அனுபவித்து நெடுங்காலம் வாழ்க.

**தாவிதன்னுசாமி**

புதுச்சேரி

உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கம்



# திராவிடர் கழகம்

தலைமை நிலையம்: பெரியார் திடல், 84/1 (50), ஈ.வெ.கி.சம்பத் சாலை, வேப்பேரி, சென்னை-600 007.
தமிழ்நாடு, இந்தியா. • தொலைப்பேசி : 91-44-26618161/62/63 • தொலைப்படி: 91-44-26618666
• மின் அஞ்சல்: dkheadquarters@gmail.com • இணையதளம் : www.dravidarkazhagam.org

நிறுவனத் தலைவர்
**தந்தை பெரியார்**

தலைவர்
**கி.வீரமணி,** எம்.ஏ.,பி.எல்.,

## திராவிடர் கழகம்

## வாழ்த்துரை

அன்புடையீர்,

வணக்கம், அருமைத்தோழரும் தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் முன்னணித் தலைவர்களுள் ஒருவராக மிளிர்பவரும், இலங்கை நாடாளுமன்றத்தில் பலமுறை தொடர்ந்து உறுப்பினராக விளங்கி, ஈழத்தமிழர்களின் உரிமைக்கு ஓங்கிக்குரல் கொடுப்பவரும், அமிர்தலிங்கம் போன்ற தோழர்கள் இல்லாத காலகட்டத்திலும், அவர்களின் பணிகளையும் கூடுதலாகச் சுமந்து அரும்பணியாற்றிவரும், தமிழ்நாட்டில் பல்வேறு காலகட்டங்களில் கலந்து உரையாடக் கூடிய தோழராக விளங்கி வருபவருமான "ஈழ அண்ணல்" என்று மதிக்கப்பெறும் சோமசுந்தரம் சேனாதி ராஜா அவர்களின் 75 ஆம் ஆண்டு பிறந்த நாள் விழாவை யொட்டி மலர் வெளியிடுவது அறிந்து பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

மலர் மணம் பரப்பிடவும், ஈழப் போராளி சேனாதிராஜாவின் நூற்றாண்டையும் காணும் வகையில் நல்ல உடல் நலத்துடன் அவர் நீடு வாழவும் வாழ்த்துகிறேன். விழா ஏற்பட்டாளர்களுக்குப் பாராட்டுகள்.

அன்புடன்

(கி. வீரமணி)

தலைவர்

R.K.R. **ஆனந்தராமன்**, B.Tech.,M.B.A.
அரசு கொறடா
புதுச்சேரி அரசு

ச.பே. அலுவலகம்: 0413-2220602
ச.ம.உ. அலுவலகம: 0413-2601171
கைபேசி: 94432 65171

सत्यमेव जयते

தேதி: 04.06.2018

## வாழ்த்துச் செய்தி

உலகத் தமிழர்ப் பண்பாட்டு இயக்கம் சார்பாக ஈழ அண்ணல் மாவை. சோ. சேனாதிராஜா அவர்களின் 75-வது பிறந்தநாளை கொண்டாடும் வகையில் பவழ விழா மலர் வெளியிட உள்ளதை அறிந்து அளவில்லா ஆனந்தமும், மகிழ்ச்சியும் அடைகிறேன்.

ஈழத் தமிழரின் விடிவெள்ளியாக திகழும திரு. மாவை சேனாதிராஜா (Mavai. Senathirajah) என அழைக்கப்படும் சோமசுந்தரம் சேனாதிராஜா என்பவர் தம் இளமைக் காலத்தில் இலங்கை அரசுக்கு எதிராக பல்வேறு போராட்டங்களை மேற்கொண்ட காரணத்தினால் படிப்பை தொடர முடியாமல் இந்தியாவிற்கு வந்து அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் அரசியல் அறிவியலில் முதுகலைமாணிப் பட்டம் பெற்றுள்ளார். இளமையிலேயே அரசியல் ஆர்வம் காரணமாக இலங்கை தமிழ்த் தேசிய இயக்கத்தில் பங்கேற்றார். இலங்கைத் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மூத்த உறுப்பினராவார். 1984-ஆம் ஆண்டுமுதல் புதுச்சேரிக்கு பலமுறை வந்து ஈழமக்களின் இன்னல்களை எடுத்துரைத்தவர்.

1961-இல் நடைபெற்ற சத்தியாகிரகப் போராட்டத்தில் பங்கேற்றார். இந்தியாவில் பலதுறைகளிலும் இலங்கை மாணவர் உயர்கல்வி பெற உதவினார். திருவாளர் அமிர்தலிங்கம், சிவசிதம்பரம் அவர்களுடன் இந்திய இலங்கைத் தொடர்புகளில் இந்திரா காந்தி, பின் ராஜீவ் காந்தி பிரதமர்களாக இருந்த காலங்களில் தமிழகத் தலைவர்களுடன் தொடர்பில் இருந்து செய்யப்பட்டார். பொதுவுடமைக் கொள்கைகளில் ஈடுபாடு கொண்ட இவர் பல்வேறு போராட்டங்ளில் கலந்து கொண்டார். தமிழ்த் தேசிய வட்டமைப்பின் - பாராளுமன்ற குழுத்துணைத் தலைவராகவும், செயலாளராகவும் இருந்து பல்வேறு பணிகளை செவ்வனே சிறப்பாக திறம்பட செய்துள்ளார்.

மக்கள் நலன்கள் பல புரிந்து தொடர்ந்து தொண்டாற்ற வேண்டும் என்று கூறி பவழ விழா காணும் திரு. மாவை சேனாதிராஜாவாகிய நீங்கள் எப்பொழுதும் நலமுடன் வாழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டிகொள்கிறேன். மேலும் இந்த பவள விழா மலர் சிறக்க என்னுடைய மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

அன்புடன்

(R.K.R) ஆனந்தராமன்

# மாவை சோ. சேனாதிராசா ஈழவிடுதலை போராட்டத்தின் சரித்திர அடையாளம்

ஐப்பசி மாதம் 27 ம் திகதி 1942 ம் ஆண்டு சோமசுந்தரம் சேனாதிராசாவாக பிறந்தவர் பிற்காலங்களில் மாவிட்டபுரத்தின் அடையாளமாக மாவை சோ சேனாதிராசாவாக அழைக்கப்பட்டார். ஐப்பசி மாதம் 27 ம் திகதி தனது 75வது பிறந்த தினத்தை கடந்த அவரை பவளவிழா மலரில் நானும் ஒரு சிறியவன் வாழ்த்து சொல்ல அரிய சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு மன உவகை அடைகின்றேன்.

தமிழர் தேசியத்திற்க்காகவும் ஈழ விடுதலை போராட்டத்திற்காகவும் தமது வாழ்வை அர்ப்பணித்து போராடியவர்கள், உயிரை ஈகம் செய்தவர்கள் எல்லாம் மறக்கப்பட்டு வரும் இக்காலத்தில் அவர்களின் சாம்பலிலே முளையெடுத்த காளான்கள் எல்லாம் இன்று குடை பிடித்து தாங்களும் ஈழ போராட்டத்தில் வாழ்ந்தவர்கள் தான் என்று தம்பட்டம் அடிக்கையில் அமைதியாக தனக்கேயான பாணியில் வரலாற்றில் ஒரு சரித்திர நாயகனாக பவள விழா தொட்டவர் என்றால் மறுத்து சொல்ல ஒருவன் இல்லை இந்த தரணியில்.

தீவகத்தில் பேரினவாதிகளின் தமிழ் அடி வருடிகளால் அடித்து போட்ட பின் இறந்து விட்டார் என நினைத்துக் கொண்டு சென்ற பின்னரும் கூட தமிழர் மூச்சு அடங்கவில்லையடா என கூறி மூச்செடுத்ததவர் மாவை சோ . சேனாதிராசா.

தமிழர் அடக்குமுறையை எதிர்த்ததால் பலமுறை சிறையில் சின்னாபின்னமாக்கப்பட்டும் கூட சிறையில் சிரித்துக்க்கொண்டு தமிழர் தேசிய விடுதலை கீதம் பாடிய ஒரு மகான்.1956 இல் தனிச் சிங்கள சட்டத்தை எதிர்த்து தமிழரசு கட்சியினால் காலி முகத்திடலில் போராட்டம் நடைபெற்ற போது மாவை சோ. சேனாதிராசாவிற்கு 14 வயது .அப்போது இருந்தே ஈழ விடுதலை போராட்டத்தை தனது இரத்தத்திலே கொண்ட ஒரு வைரியவாதி.

தம்பி பிரபாகரன் என தொடங்கி அவர் சொல்லும் வரலாறுகளை நான் பலதடவை செவிமடுத்து இருக்கின்றேன். அப்படி ஒரு தலைவனுடன் நீங்களும் நானும் மக்கள் சேவை செய்திருக்கின்றோம் என்ற அடிப்படையில் என்மனதினிலே நமது பாதை ஒன்று தான் என்று எண்ணி புழகாங்கீதம் அடைந்திருக்கின்றேன். பவள விழா காணும் உங்களை வாழ்த்தி வணங்குகின்றேன் .

நன்றி

வைத்திய கலாநிதி சி .சிவமோகன்,
வன்னி மாவட்ட பா. உ.,
இணை தலைவர் முல்லை மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு.

அமிர்தலிங்கம் நினைவு அறக்கட்டளை
Amirthalingam Memorial Foundation
லண்டன்
E-mail: amfs1927@gmail.com Web: www.amirthalingam.com



# எத்தனை காலமானாலும் மறக்கவே முடியாதது வாழ்க பல்லாண்டுகள்

அமிர்தலிங்கம் பகிரதன்

எனக்கு நினைவு தெரிந்த காலம் தொட்டு எனது தந்தையாருக்கு ஒரு தம்பியாக வாழ்ந்தவர் அண்ணன் சேனாதிராஜா அவர்கள். தந்தை செல்வாவின் அரசியல் பாசறையில் அரசியல் அரிச்சுவடியை ஆரம்பித்து எனது தந்தையாரின் அருகாமையில் மெருகூட்டப்பட்டவர் அண்ணன் சேனாதிராஜா. இளமைக் காலத்தை எல்லாம் சிங்கள சிறைச்சாலைகளில் கழித்த இவர் 1976ம் ஆண்டு விடுதலையாகி வந்த போது பல ஆண்டுகளின் பின்னர் சிறை மீண்ட இளைஞர்களை வரவேற்க சென்றிருந்த எனது தந்தையாருடன் சென்று இவரை மீண்டும் சந்தித்தேன். 1977ல் தேர்தல் காலத்தில் காங்கேசன்துறையில் அவருடன் சேர்ந்து பணியாற்றிய சந்தர்ப்பங்கள் பல. அப்பொழுது மிகவும் சிக்கலான கிராமங்களில் தமிழர் விடுதலை கூட்டணி முன் எப்போதுமே கால் பதிக்காத இடங்கள் சிலவற்றிற்கு அண்ணன் சேனாதிராஜா அவர்களுடன் சென்று பல எதிர்க் கருத்துள்ள மக்களை சந்திக்க வேண்டிய ஒரு சூழ்நிலையில் அவர்களுடன் உரையாடி, சளைக்காமல் அங்கெழுந்த கேள்விகளுக்கு எல்லாம் தகுந்த பதில் கூறி அம்மக்களை எம்பக்கம் திருப்பிய திறமையை கண்டு வியந்துள்ளேன். கட்சியின் நெருக்கடியான கால கட்டங்களில் இளைஞர் பேரவையில் பிரிவுகள் ஏற்பட்டு இளைஞர்கள் தனி வழி சென்ற போது தலைமைக்கு விசுவாசமாக பணியாற்றிய நேர்மையை கண்டிருக்கிறேன்.

1983ம் ஆண்டு கலவரத்தின் பின்னர் தமிழர் விடுதலை கூட்டணி இலங்கையில் சுதந்திரமாக செயல்பட முடியாத சூழ்நிலை ஏற்பட்டு தமிழ்நாட்டில் இருந்து செயல்பட்டு கொண்டிருந்த காலகட்டத்தில் கட்சிக்காகவும் , இனத்திற்காகவும் அல்லும் பகலும் அவர் ஆற்றிய தொண்டை யாரும் சுலபத்தில் மறக்க முடியாது. நாடு கடந்து சென்னையில் இயங்கி வந்த தமிழர் விடுதலை கூட்டணி அலுவலகத்தின் அச்சாணியாக அதன் நிர்வாக செயலாளராக செயல்பட்ட அண்ணன் சேனாதிராஜாவின் சேவை மறக்க முடியாத ஒன்றே. அவர் மட்டுமல்லாமல் அவருடைய மனைவி அக்கா பவானி அவர்களும் அங்கேயே வாழ்ந்து, வந்தவர்கள் அனைவரையும் உபசரித்து விருந்தோம்பிய நாட்களை சென்னையில் வாழ்ந்த தமிழர் விடுதலை கூட்டணியை சேர்ந்த யாரும் அவ்வளவு சுலபமாக மறந்திருக்க மாட்டார்கள். எந்த இயக்கத்தை சேர்ந்த இளைஞர்களையும் தயங்காமல் சந்தித்து அவர்களுக்கு தேவையானவற்றை செய்து அவர்களை அரவணைத்த காலங்கள்

இன்னமும் பசுமையாக உள்ளது. தமிழர் விடுதலை கூட்டணியால் வளர்ச்சியடைந்த சிலர் அந்த காலத்தில் சென்னையில், அப்பொழுதும் கட்சியால் வழங்கப்பட்ட காசோலையை பெற்ற வண்ணம் கவிதை எழுதியபடியே தன்னை வளர்த்தவர்களையே துரோகிகள் என இன்னொரு இயக்கத்திற்காக துதி பாடி வாழ்ந்து தன்னை வளர்த்துக் கொண்டிருந்த கால கட்டத்தில் அதன் தலைமையையும் இயக்கத்தையும் மதித்து அதனுடன் செயல்பட்ட அண்ணன் சேனாதிராஜாவின் பங்கு எத்தனை காலமானானாலும் மறக்கவே முடியாதது. சென்னை நகரின் கொளுத்தும் வெயிலில் பேருந்திலும் துவிச்சக்கரவண்டியிலும் நடந்தும் சென்று பல அகதி இளைஞர்களுக்குரிய கடிதங்களையும், பேச்சுவாரத்தைகளுக்குரிய ஆவணங்களையும் , நூல்களையும் தயாரித்து அந்தந்த இடங்களுக்கு அனுப்பிய காட்சி எனது கண்ணில் இன்னமும் பசுமரத்தாணியாகவே உள்ளது. இன்று அவர் ஆடம்பர வீட்டில் வாழ்கிறார், சொகுசு வாகனத்தில் செல்கிறார் என்று அவரது அரசியல் எதிரிகள் பொய் பிரசாரம் மேற்கொள்ளும் போது அவர் பட்ட இன்னல்களை நான் மனதில் எண்ணுகிறேன்.

• மீண்டும் இந்திய இலங்கை ஒப்பந்தம் கையெழுத்தாகி தலைவர்கள் நாடு திரும்பிய பின்னர் எனது தந்தையார், தலைவர் திரு சிவசிதம்பரம், அண்ணன் யோகேஸ்வரன் அவர்களுடன் அண்ணன் சேனாதிராஜா அவர்களும் ஒரே வீட்டில் வாழ்ந்து வந்தார். பாதுகாப்பு கருதி அவர்கள் எல்லோரும் வாழ்ந்த அந்த வீட்டில் தான் எனது தந்தையின் படுகொலை நடந்தது. தமிழீழ விடுதலை புலிகளின் பிரதிநிதிகளின் சந்திப்பு அண்ணன் யோகேஸ்வரன் வேண்டுகோளுக்கமைய அண்ணன் சேனாதிராஜாவால் பேசி ஒழுங்கு செய்யப்பட்டது. இந்த சந்திப்பிலேயே எனது தந்தை படுகொலை செய்யப்பட்டார். அதுவரை கொழும்பில் இருந்து விட்டு இங்கிலாந்து சென்று இருபத்தி நான்கு மணித்தியாலங்களுக்கிடையிலேயே எனக்கு இந்த நெஞ்சை பதறவைக்கும் செய்தியை தனது உணர்வுகளை கட்டுப்படுத்தியவண்ணம் மிகுந்த கேவலுடன் சொன்ன அண்ணனின் குரல் என்றும் என் மனதை விட்டு நீங்காது. அதன்பின்னர் தலைவர் ஆனந்தசங்கரியுடனும் தலைவர் டாக்டர் நீலன் திருச்செல்வம் அவர்களுடனும் இணைந்து தமிழர் விடுதலை கூட்டணியை 2002ம் ஆண்டு வரை மிகவும் நெருக்கடியான காலகட்டத்தில் நடாத்தியதும் பாராளுமன்ற உறுப்பினராக திகழ்ந்ததும் சரித்திரம். பல தலைவர்கள் தமிழீழ விடுதலை புலிகளால் கொலை செய்யப்பட்ட போதிலும் தெயவாதீனமாக உயிர் தப்பியவர், தவிர்க்க முடியாமையாலும் இனத்தின் நன்மையை கருத்தில் கொண்டும் பின்னர் ஏக பிரதிநிதித்துவத்தை ஏற்று கொலைஞர்களுடன் உடன்பட்டு வாழ்ந்தது சரித்திரம்.

• இன்று ஒரு பாராளுமன்ற உறுப்பினராக, தமிழர்களின் சரித்திரம் சொல்லும் தமிழரசு கட்சியின் தலைவராக மிளிரும் அன்னாரை வாழ்த்துகிறோம்.

• இன்று பவளவிழா காணும் அண்ணன் சேனாதிராஜாவை வாழ்த்தும் இந்த சந்தர்ப்பத்தில் அவருடைய தாயாரதும் சகோதர சகோதரிகளதும் அரசியல் ஈடுபாட்டையும் அவர்கள் எனது பெற்றோர் மீதும் என்மீதும் கொண்ட அன்பையும் நினைவில் கொள்கிறேன்.

• பவளவிழா காணும் அண்ணன் சேனாதிராஜா அவர்கள், தனது அருமை பாரியாருடனும் அன்பு பிள்ளை செல்வங்களுடனும் பல்லாண்டுகள் வாழ எனது சார்பிலும் எமது குடும்பத்தின் சார்பிலும் மனம் நிறைய வாழ்த்துகிறேன்.

வாழ்க பல்லாண்டுகள்.

அமிர்தலிங்கம் பகீரதன், லண்டன்

# வரலாற்றில் உந்துதல்

மகாலிங்க சிவம், இலண்டன்

சர்வதேச அளவில், பொதுவாக பொதுமக்களாலும் அறியப்பட்ட ஒரு நாடாக இன்று இலங்கை விளங்குகிறது. சர்வதேச கிரிக்கெட்டில் இலங்கையின் சாதனை மிகுந்த அறிமுகமும் இதில் காரணமாகலாமெனினும், இப் பரவலான அறிமுகம், இலங்கையில் ஏற்பட்ட உள்நாட்டு யுத்தத்தின்பாலானது.

பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து இலங்கை சுதந்திரமடையத் தலைப்பட்ட காலத்திலிருந்து தொடங்கிய இந்நாட்டின் பெரும்பான்மை, சிறுபான்மை இனங்களுக்கிடையேயான இனப் பிரச்னை, நாடு சுதந்திரமடைந்த சுமார் அறுபது ஆண்டுகளில், உலகின் மிகக் கொடூரமான உள்நாட்டு யுத்தமொன்றாக வரலாற்றில் பதிவானது. இந்த யுத்தம் முடிவுற்று ஒரு தசாப்தம் நிறைவுறுகையில், இன்னமும், ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைப் பேரவையில் சர்ச்சைக்குரிய விவகாரமொன்றாக இது தொடர்கிறது.

இலங்கையில், சிறுபான்மை இனத்தவரான தமிழர்கள் தங்கள் அரசியல் உரிமைகளுக்காக நிகழ்த்திய போராட்டம், பொதுவாக அதன் பிந்திய காலத்து தீவிரவாத நடைமுறைகளுடனேயே அறியப்படுகிறது் அவதானிக்கப்படுகிறது. இது, இவர்களின் இப் போராட்டத்தை சில விதங்களில் நீதியற்றதாக ஆக்கிவிடுவதற்கும் பயன்படுகிறது. ஆனால், இலங்கையில் தமிழர்களுடைய அரசியல் போராட்டம் ஆட்சியிலிருந்த சிங்கள தலைவர்களால் நீதியற்றதாக ஒதுபோதும் கருதப்படவில்லை. மாறாக, அரசியல் ரீதியில் அவர்கள் தமிழர்களின் உரிமைகளை மறுத்தார்கள். 'தங்களுடைய மனத்தாங்கல்கள் தீர்க்கப்படாததில் தமிழ் மக்கள் தனிநாடு கோரும் ஒரு நிலைக்கு தள்ளப்பட்டிருக்கிறார்கள்' என்று, 1977ஆம் ஆண்டு, ஐக்கிய தேசிய கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் ஜே. ஆர். ஜயவர்த்தன தெரிவித்திருந்தமை இதன் சத்திய வார்த்தைகள்.

ஐக்கிய இலங்கைக்குள் தங்களுடைய அரசியல் உரிமைகளை நிலைநாட்ட முனைந்த முயற்சிகள் அளித்த விரக்தியில், இலங்கையில் தமிழர்கள் தனிநாடு கோரிக்கையில் துணிந்தார்கள். அப்போது, அதுவரை காலமும் சாத்வீக நெறிப்பட்ட இவர்களின் இப் போராட்டம், இளைஞர்கள் மயப்பட்ட தீவிரவாத போக்கையும் அணுகத் தொடங்கியது. அவர்களுடைய விடுதலைப் போராட்ட வரலாற்றில் ஒரு மாறுதல் காலமாகவும் அது அமைந்தது.

ஆக, இலங்கையில் தமிழர்களுடைய சுமார் அறுபது ஆண்டுகள் கால போராட்ட வரலாறு, முப்பது ஆண்டுகள் சாத்வீக போராட்டமாகவும் முப்பது ஆண்டுகள் தீவிரவாத போராட்டமுமாகியது. இந்த இரண்டு காலகட்டங்களுமே ஓர் இனத்தின் எழுச்சிமிக்க விடுதலைப் போராட்ட வரலாற்றில் பெருமை சேர்க்கும் வீரமும் தியாகமும் நிறைப்பவை. வரலாற்று பரிணாமமாக அமைந்தவை.

பல்கலைக்கழக அனுமதியில் ஏற்படுத்தப்பட்ட இனவாரி தரப்படுத்தலும், 1972இல் ஏற்படுத்தப்பட்ட குடியரசு அரசியலமைப்பும், 1974இல் ஏற்பட்ட உலக தமிழாராய்ச்சி மாநாட்டு சம்பவமும் இலங்கைத் தமிழர்களுடைய அரசியல் உரிமைப் போராட்டத்தில் இளைஞர்கள் முனைப்படைய தூண்டுதலாயின் அவர்களுடைய போராட்ட வடிவத்துக்கும் மாற்றத்தைச் சேர்த்தன.

இந்த மாறுதல் காலத்து உந்துதலாக, இலங்கைத் தமிழர்களுடைய இவ் வரலாற்றில் மூவர் தெரிவார்கள் அவர்கள், காசி. ஆனந்தன், வண்ணை ஆனந்தன், மாவை. சேனாதிராசா.

காலம் மாறினாலும், இன்னமும் பெரும் மாற்றத்தைக் காணாத இலங்கைத் தமிழர்களுடைய அரசியலில், தன்னுடைய பவள விழா ஆண்டிலும் மாவை. சேனாதிராசா அவ்வண்ணமே தெரிகிறார்.

- மாலி

# வாழ்த்துரை

இலங்கைத் தமிழரசு கட்சியின் தலைவராகவும் இலங்கை நாடாளுமன்ற உறுப்பினராகவும் உள்ள அன்பிற்குரிய திரு. மாவை. சோ. சேனாதிராஜா அவர்களின் பவழ விழா 2017 இல் சிறப்பாக யாழ்ப்பாணத்தில் நடைபெற்றதை எண்ணி மகிழ்வடைந்தேன்.

இலங்கைத் தமிழர்களின் விடிவெள்ளியாகத் திகழ்கின்ற திரு சேனாதிராஜா அவர்கள் புதுச்சேரிக்கு வருகை தந்த சமயங்களில் அவருடன் கலந்துரையாடவும் தமிழர்நலத் திட்டங்களை முன்னெடுப்பதில் அவர் காட்டிய ஆர்வமும் அவர்தம் பணியில் எங்களையும் இணைத்துக் கொள்ள வாய்ப்பாக அமைந்தது.

நான் இலங்கை சென்றிருந்தபோது இலங்கைப் பாராளுமன்றத்தில் அவரை சந்திக்கும் வாய்ப்பினைப் பெற்றதுடன் பல்வேறு இடங்களுக்குச் சென்று அங்குள்ள தமிழர்களின் மக்களின் இடர்பாடுகளை நேரில் கண்டறியும் வாய்ப்பினைப் பெற்றதுடன் பல்வேறு இடங்களுக்குச் சென்று அங்குள்ள தமிழ் மக்களின் பண்பாடு, மொழி யாற்றல் சமூக செயல்பாடுகளை அறிந்துகொள்ள முடிந்தது.

தமிழ்மக்களின் இடர்பாடுகளை காந்திய வழியில் களைந்திட உலகத் தமிழர்களின் ஒன்றிணைந்த பாலமாக திரு. மாவை. சோ. சேனாதிராஜா அவர்கள் தொடர்ந்து பணியாற்றி வருகின்றார்.

அவர்தம் சீரிய பணிகளைப் பாராட்டி மகிழ்வதுடன் அவர்தம் பவழ விழா மலர் சிறப்படைய வாழ்த்தி மகிழ்கிறேன்.

அன்புடன்

கி. லட்சுமிநாராயணன்

**உலகத் தமிழ்ப் பண்ப்பாட்டு இயக்கம். யேர்மனி**

**Internationale Bewegung füre Kultur - Deutschland e.V**

**International Movement for Tamil Culture - GermanY**

Postanschrift (Address) Goldschmidt Str 35 , 45127 Essen
Tlephone: 0201-2486284

Amtsgericht Rheine Geschäfts No **VR20988**

## மாவை சோ.சேனாதிராஜா பவளவிழா 2017

கௌரவ யாழ் பாராளுமன்ற உறுப்பினரும் தமிழரசுக்கட்சித் தலைவருமான கௌரவ மாவை சோ.சேனாதிராஜா அவர்கள் 75வது பிறந்த தினத்தைக்கொண்டாடும் இவ் வேளையில் நாம் மகிழ்வும் நிறைவும் அடைகின்றோம். தமிழ் மக்களின் விடிவு தங்கள் உள்ளத்தில் ஊற்றெடுக்க அவர்தம் விடிவுச்சுடர்கள் சூழ்ந்து ஒளியேற்ற அரசியலில் தங்கள் கால் ஒளிர்ந்து நின்றது

இராணுவம் எமது பிரதேசங்களில் இருந்து வெளியேற வேண்டும் எனும் உறுதிப்பாடும் ஐக்கிய இலங்கைக்குள் தீர்வு என்னும் வெளிப்பாடும் எம்தமிழ் மக்கள் உரிமையாய் விதந்துரைத்து கொண்டாடும் தங்களின் பவளவிழா உரிமையும் போராட்டமும் நிறைந்த களம் என்பதில் கிஞ்சித்தும் குறைவில்லை.

தமிழ்மக்கள் தம் இறைமையை எந்தவொரு ஆட்சிக்கோ அரசுக்கோ கையளிக்கவில்லை என்னும் உறுதி மொழி அறைகூவித் தங்களில் பவளச்சுடர் வீசுகிறது. 1961 சத்தியாக்கிரகத்தில் மாணவராய் உட்புகுந்து இன்றுவரை தங்கள் பணி தமிழ் மக்களுக்காய்த் தொடர்கின்றது. தங்கள் உடனிருப்பை எம்முடன் பதிவு செய்து மகிழ்வதில் நாம் நெகிழ்வுறுகின்றோம். இந்த உலகில், வன்முறைகளும், ஊழல்களும் ஒருபுறம் நிறைந்திருந்தாலும், பல நல்ல மனிதநேய மனிதர்களும் வாழ்ந்து வருகின்றனர். பல மனிதநேயச் செயல்களும் இடம்பெற்று வருகின்றன , வாழ்வில் நல்ல செயல்கள் ஆற்றுகையில், எதிர்கொள்ளும் விமர்சனங்களால் பின்வாங்காமல், நல்ல காரியங்களைச் செய்துகொண்டே தமிழ் மக்களின் உண்மை நிலையைப் புரிந்துசெயலுறும் தாங்கள் வாழ்வில் தொடர்ந்து முன்னேற வாழ்த்துகின்றோம்

| | | |
|---|---|---|
| இ.இராஜசூரியர் | கி.யேம்ஸ் அல்ஸ்ரன் | அ.பகீரதன் |
| தலைவர் | செயலாளர் | பொருளாளர் |

கிளை- யேர்மனி
30 .06.2017

# உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம். சுவிற்சர்லாந்து

**internationaleBewegung für Tamilische Kultur - Switerland**
**International Movement for Tamil Culture - Switerland**
*Nonprofit, nonpolicatiol, NonReligious, charitable, worldwide Registered TamilCulture Organization Erst in 1974*
**Belchen Str.21 4900 langenthal Switerland E,**
**Mail: sivam58@hotmail.com T.P 0041/629290578 Mobil: 0041-789020437**
**Ausgleichskasse des kantons Berne Reg.No 1546881**

## வாழ்த்துப்பா



பவளவிழாக் காணுகின்ற மாவை ஐயா
பசுந்தமிழாய்ப் பாரெல்லாம் வீசும் தென்றல்
தவமெனவே தமிழுக்குக் கிடைத்த செம்மல்
தடைபலவால் வலிமேய்ந்த தாய கத்தை
நவயுகத்தில் ஒளிகொள்ள வைத்த வீரன்
நானிலத்தும் இனம்வாழச் செய்த தீரன்
உவந்துமனம் சொல்கின்ற உணர்வைக் கொண்டே
ஊரெல்லாம் உயர்வு பெறச் செய்த வள்ளல் !
செழுமையுறச் சீர்பெருகச் செய்யும் சேவை
சிறந்தோனாய் வையத்தில் நிலைக்கும் வேளை
எழுபத்தி ஐந்தகவை ஆனால் என்ன
இருபதெனச் செயல்துடிப்பால் இளைஞர் ஆனார்
முழுமதியாய் எப்பொழுதும் முன்னே நின்று
மூச்செல்லாம் ஈழத்தைக் காவல் காத்தீர்
எழுதிங்கள் போலெங்கள் இதயத் துள்ளே
இருக்கின்ற வரையுமக்கு ஏற்றம் தானே !
பொன்னொளியாய்ப் புகழ்பரப்பிப் பூலோ கத்தில்
புதுமறைகள் காட்டியதால் பூக்கள் கூடத்
தன்னகத்துக் கந்தத்தில் மாலை சூட்டும்
தளராத உளத்தானாப் பாடல் தீட்டும்
இன்னருமைக் குணத்தாலே இதயம் எங்கும்
இருத்தியுனைப் போற்றுகிறோம் இன்னும் இன்னும்
மன்பதைகள் உள்ளவரை மாவை ஐயா
மகிழ்வுடனே வாழ்ந்திருக்க வாழ்த்து கின்றோம்
உலகத் தமிழ் பண்பாட்டு இயக்க்தாலே.

**செல்லையாசிவராசசிங்கம் - சுவிஸ்கிளைஅமைப்பாளர்**

# மண்ணின் மைந்தர்
# மாவை. சோ. சேனாதிராஜா நீடூழி வாழ்க!

**வி.ஜி. சந்தோசம்**

தமிழ் ஈழ மண்ணின் விடுதலைக்காக இளம் பருவம் முதல், தன் உடல், பொருள், உணர்வு யாவும் தந்து, போராட்டங்கள், சிறைவாசம், கொடுங்கோன்மை யாவற்றையும் எதிர்கொண்டு, 60 ஆண்டுகளாக தியாகச் சுடராக விளங்கிவரும் போராளி மண்ணின் மைந்தர் மாவை. சோ. சேனாதிராஜா அவர்கள், பவழ விழா காண்பது, தனி மனித விழா அல்ல, அது தமிழர்தம் வீர விழாவாகும்.

விழா நாயகர் மாவை. சோ. சேனாதிராஜா அவர்கள் விடுதலைப் போராட்டங்கள் அக்கினிப் பிரவேசங்களாக, அமைந்தவையாகக் காண்கின்றேன்.

மண் உரிமைக்காகப் போராட்டங்கள் உலகம் எங்கிலும் நடைபெற்றாலும், ஈழத் தமிழ் மண்ணில் நடைபெற்ற உரிமைப் போராட்டங்கள் எவ்வாறு நடைபெற்றது என்பதை நினைத்துப் பார்க்கும் போது, நெஞ்சம் ஒரு கணம் கலங்கித்தான் போகிறது.

அவ்வகையில், தமிழ் ஈழப் போரில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு, இரவு பகலாகப் போர் முனைச் சிந்தனையாகவே வாழந்து வருகிறார். அவர் சிந்திய வியர்வைத் துளிகளும், அவர் பெற்ற ரத்தக்கறைகளும் எந்நாளும் எவராலும் மறக்க முடியாது.

அவரது 75ஆவது அகவை நிறைவையொட்டி எடுக்கப்படும் பவழ விழா இனிதே நடைபெற வாழ்த்துகிறேன். தமிழ் ஈழப் போராளி ஈழ அண்ணல் மாவை. சோ.சேனாதிராஜா அவர்கள் இன்றுபோல் என்றும் தமிழுக்கும், தமிழர்தம் நல்வாழ்வுக்கும் பணிசெய்து நீடூழி காலம் வாழ்க! வாழ்கவென வாழ்த்துகின்றேன்.

வி.ஜி. சந்தோசம்

சென்னை



"பிறரின் அன்புக்கு உரியராவதே பெருமகிழ்ச்சி"

ஈழ அண்ணல் மாவை, சோ. சேனாதி ராசா

(இலங்கை பாராளுமன்ற உறுப்பினர்)

## அவர்களின் 75வது பவழ விழா

## வாழ்த்து

அன்பாலும் பண்பாலும், அறிவாலும், தெளிவாலும்

ஆற்றலுடன் புகழ் மணக்கும் பணிகள், பயன் கருதாத

தொண்டு, பல இன்னல்கள் வந்தபோதும், தமிழர்களுக்கு

உழைக்கும் உத்தம நாயகராக!

உலகத்தமிழ் பண்பாட்டு இயக்க விடி வெள்ளியாக

இலங்கை தமிழ் மக்கள் இலட்சிய வேந்தராக!

வழிகாட்டியாக பவழ விழா காணும்

மாண்புமிகு. திரு. மாவை சோ. சேனாதிராசா அவர்களே!

உங்கள் பவழ விழாவில், நீங்கள், யாழ்ப்பாண இலக்கிய தமிழர்

தாயக தமிழ் மக்களுக்காக போராடும் போராளியே

வாழ்க! வாழ்க! என வாழ்த்துகிறோம்!

கடமையை செய்து பலனை எதிர்பார்க்காத இதயவேந்தரே

சமூக இலக்கிய படைப்புகளை அரசியல் பயணத்தில் புகுத்தி,

தமிழ் கூறும் நல்லுலகம் முழுமைக்கும் எடுத்துக்காட்டாக

திகழும் மைந்தர் மாவை. சோ. சேனாதி ராசாவே!

உங்கள் 75 வது பிறந்த நிளை

உலகத் தமிழ், பண்பாட்டு இயக்கம் சிறப்பாக கொண்டாட

எங்கள் இதயங்கனிந்த நெஞ்சார்ந்த வாழ்த்து!

புதுச்சேரி உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்க இந்திய கிளை,

வருங்கால சந்ததியினருக்கு, வாழ்க்கை நெறிமுறைகளை புகட்டிட

காவியமாக வீதி எங்கும் விளக்கேற்றி

வைத்தது போல் ஒளிவீச எங்கள் வாழ்த்து!

பள்ளத்தில் இருந்து மேட்டில் எடுத்து செல்லும் தலும்பாத நீர்குடம்போல்,

உங்ள் எண்ணங்களுக்கும் வார்த்தைகளுக்கும், நீங்களே பொறுப்பாளியாக வாழ்ந்து

அன்பு, நாணம், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை என்னும்

ஐம்பெருங் பண்புடன் வாழ்க! வாழ்கவே!

உண்மையும், உழைப்பும், உயர் நிலைக்கு உயர்த்தி உணர்ந்தவரே!

ஔவையின் அமுத மொழியை அறிந்தவரே

ஊரும், உலகம் உம்மை வாழ்த்தி புகழ்ந்திட வேண்டும்.

ஏழு அதிசயங்கள் நிலைத்த புகழோடு வாழ

எங்கள்நெஞ்சார்ந்த நல் வாழ்த்துக்கள்!

ஏழிசை சுரங்களில் எல்லாவித இசைகளும் மகிழ்விப்பதுபோல்

ஏழு வண்ணங்கள் வில்லாய் வளைத்து வானை அழகு செய்வதுபோல்

ஓராயிரம் துன்பம் வந்தாலும் மனதில் உறுதியுடன்

ஆயிரம் பிறைகண்ட அண்ணலாக மிளிர எங்கள் வாழ்த்துக்கள்!

தாங்கள் எண்ணியதை முடிக்கும் ஆற்றலும் நல்லதை நிறைவேற்றும் நற்பண்பு

நெஞ்சத்தில் துணிவு வாக்கில் எளிமை, நெருங்கியவர்களிடம் தூய அன்புடன் பழகும்

நன்கு பழுத்த முதிர்ந்த மரம்போல் விண்நோக்கி செழித்து,

நெஞ்சத்தில் அமைதி காத்து, இறை அருள் பெற்று

இனிதுடன் வாழ்ந்திட தூய மன முடையராகிய தாங்கள்

75 கடந்தாலும், உங்கள் புகழ் புனிதம்பெற்று

அனையா ஜோதியாக விளங்கி, நன்மைகள்

பல செயலாற்றி, நல்ல உடல் நலன்களையும் செல்வ வளங்களையும் பெற்று

பல்லாண்டு வாழ்க! வாழ்க! என உளமார வாழ்த்தும்

அன்பு நெஞ்சம்

செவாலியே துபாய் குழந்தை.

**முஸீ யர் டூஆும்ரீ மஉஸ்ஷுதீ**
ஒப்பிசியே தெலா லெழியோன் தொன்னோர்
புதுவை மாநில முன்னால் பிரஞ்சு எம்.பி.
பிரெஞ்சு மக்கள் கருணைக்கடல் சங்கத்தலைவர்
49, மோந்தோர்சியே வீதி, புதுச்சேரி - 1
தோ. பே. 2228853 -கை.பே. 9597214583.

## “அகவை 75இலும் எழுச்சியோடு செயற்பட்டு வரும் என் இனிய சகோதரன் மாவை சேனாதிராசா அவர்களை என் இதயக் கமலத்திலிருந்து வாழ்த்துவதில் மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

ஈழத்தமிழ் ஆர்வலர், அருமைத்தம்பி மாவை சேனாதிராசா!

ஈழத்தமிழ் மண்ணையும், மக்களையும் இரு கண்களாக காணும் திருவாளர் மாவை. சேனாதிராசா அவர்கள் எழுத்திலும், பேச்சிலும், செயலிலும், சிறப்பாக, அயராது உழைத்து வரும் உத்தமர்.

தமிழர்களின் அவல நிலைகண்டு, முன்னேற்ற ஆவண செய்ய வேண்டும் என்று துடித்து நிற்பவர். அவரது தன்னலமற்ற பணிகள் என்றும் எங்கள் இதயக் கமலத்தில் வைத்துப் போற்றப்பட வேண்டியவை.

அரசியல் கோட்பாடுகளில் தாம் வகுத்த கோட்பாட்டில், தமிழரசுக் கட்சியோடு இணைந்து நின்று செயற்பட்டு வரும் உத்தமர். அவருடைய பணிகள் மென்மேலும் வளர வேண்டி.

பல்லாண்டு வாழ்ந்து பணிகள் பல புரிந்து
எம்மையும் எம் இனத்தையும் உயர்த்திக் கொள்ள
எல்லாம் வல்ல இறைசக்தியை பிரார்த்தித்து
வாழ்த்துவதில் பெரும் மகிழ்ச்சி அடைகின்றன்.

**சிவா கணபதிப்பிள்ளை**

அகில உலக உபத்தலைவர்,

அமெரிக்க ஒன்றியத் தலைவர்

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம்.

# யேர்மன் தமிழ்க் கல்விச் சேவை (ஐரோப்பா)
## (இலங்கைப் பாடத்திட்டத்திற்கு அமைய)
## Tamilischer Bildungsverein Deutschland e.V. (Europa)



"கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை"

Postfach 1646, 59159 Kamen. Germany.
Telefon (02307) 299384
Ponnuthurai Srijeevaghan
Nordenmauer 170, 59174 Kamen, Germany
E-Mail: Jeevaghan@web.de Datum: 05.07.2017

### பவளவிழா நாயகனுக்கு வாழ்த்துக்கள் பல!

இலங்கையின் வடக்கு மாகாணத்தின் பெரும் புகழ்பெற்ற இடமான மாவிட்டபுரத்தில் பிறந்து வளர்ந்த திரு.சோ.சேனாதிராசா அவர்கள் உலகத்தமிழ் மக்களால் பெரிதும் அறியப்பட்ட தலைவராகத் திகழ்கின்றார். மாவை என்றால் திரு.சேனாதிராசா அவர்களையே சிறப்பாக அறிந்து கொள்ளக்கூடியதாக அவரது பெயர் அமைந்துள்ளது. இன்று அவரை மாவை என்றும், மாவை சேனாதி என்றும், மாவை சேனாதிராசா என்றும் அன்புடன் யாவரும் அழைக்கின்றனர். மாவை என்பதைத் தவிர்த்து யாரும் அவரது பெயரைத் தனித்து அழைப்பதாக இல்லை. இது இடத்தின் மூலம் அவருக்கும், அவரின் மூலம் இடத்திற்கும் சிறப்பாக அமைந்திருக்கின்றது.

திரு.மாவை சேனாதி அண்ணர் அவர்கள், மாணவர் பருவத்திலிருந்தே தமிழ்மொழி மீதும், தமிழினத்தின் மீதும் பற்றுக்கொண்டு இன்றுவரை அரசியலில் ஈடுபட்டுச் செயற்பட்டு வருவதை யாவரும் நன்கு அறிவர். தமிழின விடுதலைக்காகவும், தமிழ்மொழி வளர்ச்சிக்காகவும் தன்னை முழுமையாக ஈடுபடுத்திப் பல போராட்டங்களில் செயற்பட்டவர். பலமுறை சிறைசென்று திரும்பியவர். இன்றும் பலவழிகளில் உலகத்தமிழ் மக்களை ஒன்றிணைத்துச் செயற்படுவதில் முன்நின்று உழைப்பவர். தமிழரசுக் கட்சியின் இளம் உறுப்பினராகச் சேர்ந்து பணியாற்றி, இன்று அக்கட்சியின் தலைவராகச் செயற்படுகின்றார். இவ்வாறான இவரது செயற்பாடு மேன்மேலும் வளர்ந்து தமிழ்மக்களுக்குப் பணியாற்ற வேண்டுகின்றோம்.

இன்று பவளவிழாக் காணும், அண்ணர் திரு.மாவை சேனாதிராசா அவர்கள், பல்லாண்டு காலம் நலமுடன் வாழ்ந்து, தமிழினத்திற்கும், தமிழ்மொழிக்கும் பல சேவைகளை ஆற்ற வேண்டுமெனப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வணக்கம்பல!

இங்ஙனம்
**பொ.சிறீஜிவகன்**
தலைவர்
யேர்மன் தமிழ்க் கல்விச் சேவை

Städtische Sparkasse Kamen Kto-Nr.: 5053335 (BLZ: 443 513 80)

சிவஞானக் கலாநிதி, இறைதமிழ்த்தென்றல்,

**முனைவர் சீர்காழி வி . இராம்தாஸ்**

சொற்பொழிவாளர்,எழுத்தாளர், இதழாளர், கல்வியாளர்

Dr Sirkali V Ramdas, Muruga Bhavanam,
3, Gandhi Adigal Road, R P Sivam Nagar,
Mannargudi 614001 , Thiruvarur-Dist.
Tamilnadu, India, Ph.00914367252729

# மணம் பரப்பிடும் மலர்

தமிழகத்தில் பல்வேறு மொழிப்போராளிகளை உருவாக்கி பெருமைபடைத்த சிதம்பரம், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பயின்ற ஈழமொழிப் போராளியும் இலங்கைத் தமிழ்மக்கள் இலட்சியப் பயணத்தின் இன்றைய விடிவெள்ளி என்றும் அழைக்கப்பெறும் பெருமைக்குரிய இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர் மாண்புமிகு மாவை.சோ. சேனாதிராசா அவர்களின் எழுபத்தைந்தாம் அகவை பவழ விழாவினை, உலகத் தமிழ்பண்பாட்டு இயக்கம் கனடா தலைமையகமும் இந்தியக்கிளையும் இணைந்து கொண்டாடுவதும் மலர் வெளியிடுவதும் மகிழ்வுக்குரியது. தமிழீழ அறவழி போராட்டங்களில் பங்கேற்று சிறைவாழ்க்கையையும் சித்ரவதைகளையும் இன்னல்களையும் எதிர்கொண்டவர்.

த.ஐ.வி.மு. இளைஞர் பிரிவின் தலைவராகவும், சென்னை அலுவலகப் பொறுப்பாளராகவும், இருந்தவர். தொடர்ந்து நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கிறார். தந்தை செல்வா, அமிர்தலிங்கம் வழியில் தம்மின வரலாற்றில் இடம்பெற்று தமிழரசுக் கட்சியின் எட்டாவது தலைவராகத் தொண்டாற்றியுள்ளார். இலங்கை காந்தியின் அமைதிவழியில் ஈழத் தமிழ்மக்களுக்காக கடந்த ஐம்பதேழு ஆண்டுகளுக்கு மேலாக இனஇலக்கிய சமூக சமய அரசியல் பொருளாதார அரும்பணிகளாற்றி வருகிறார். பெருந்தகையின் 75வது பிறந்தநாளை உலகத் தமிழ்ப்பண்பாட்டு இயக்கம் கொண்டாடி சிறப்புமலர் வெளியிடுவது சிறப்பாகும். பவழவிழா சிறக்கவும் மலர் உலகத்தமிழரிடையே ஒருமன உணர்வையும் ஒற்றுமையையும் உயர்வையும் மேம்படுத்தி மணம் பரப்பிட வேண்டுகிறேன். நன்றி,

அன்புடன்,

**முனைவர் சீர்காழி வி. இராம்தாஸ்**

சிவஞானக் கலாநிதி, இறைதமிழ்த்தென்றல்,

# வாழ்த்துரை

## பண்பானவர்க்கோர் பவளவிழா மாவை. சேனாதிராசா

தமிழரசுக் குட்டையில் ஊறிய மட்டைகளில் அதன் மணம், குணம், தரம் மாறாது அன்றிலிருந்து இன்றுவரை உறவோடும், உரிமையோடும் உள உறுதியோடும் செயல்பட்டு வரும் என் இனிய மாவை சேனாதிராசாவுக்கு பவளவிழா காணக் கனிந்த வேளை வாழ்த்துவதில் பெருமைப்படுகிறேன்.

அந்தக் குட்டையில் ஊறிய இளமட்டைகளாக அவர் காலத்தில் திகழ்ந்தவர்களில் நானும் ஒருவன். இன்றுபோல் இருக்கிறது 1961 ஆம் ஆண்டு காலைவேளை யாழ் கச்சேரி பழைய கட்டிட மன்வாசலில் தந்தை செல்வாவும் சாகாக்களும் வீற்றிருந்தனர். அவ்வேளை அமிர்தலிங்கம், டாக்கடர் நாகநாதன், திருமலிங்கம் உட்பட பலரும் மறுவாயில் மன் சக்தியாக்கிரகம் இருந்தனர்.

அவ்வளை வைஎம்சியோ கட்டிடக் கற்கள் முறுமுனையில் குவிக்கப்பட்டிருந்தன. இன்றைய புதிய கச்சேரிக் கட்டிடம் கட்டப்படவில்லை. என்னைப் போன்ற இளைஞர்கள் அமர்ந்திருக்கும் வேளையெல்லாம் மாலையின் துடிப்புகளை காண முடிந்தது. காலங்கள் மாறின. போராட்டப் பரிமாணங்கள் மாறின. ஆனால் ஈழமண்ணல் தமிழன் போர்த்துக்கீசர், ஒல்லாந்தர் ஆகியோர் பதிவு செய்த யாழ்ப்பான அரசின் எச்சம் எங்கேயோ ஓர் மூலையில் முணுமுணுக்கிறது. அதனை மீண்டும் காண விளையும் மாவை. சோ. சேனாதிராசா அவர்கள் பணிகள் சிறக்கட்டுமட். அவர் தம் சிந்தனைத் தடாகத்தில் தமிழ்த் தாமரைகள் மலரட்டும், வேற்றுமைகளில் ஒற்றுமை கண்டு உன்னதமான ஈழத்தமிழினம் இலங்கையில் வாழ, வளர உங்கள் பணி என்றும் ஓர் அச்சாணியாக இருக்கும், இருக்கக் வேண்டும் என இறைவனை இறைஞ்சி வாழ்த்துகிறேன்.

சாமி அப்பாதுரை

கனடா

முனைவர் மெய்ஞானி பிரபாகரபாபு
அயன்புரம், சென்னை - 600 023
தொடர்பு - 9790414379
Kaviprabhakar 123@gmail.com

M.E. Prabhakara Babu
M.Sc., CAIIB, MBA (Fin), MBA (HR). PGD (INL BKG)

## பவள மனிதர் திரு. சேனாதிராசா வாழ்க!

மக்களுக்காக வாழ்பவர் மனிதரின் மாணிக்கம்! மக்களுக்காகப்போராடி தனது வாழ்க்கையையே தியாகம் செய்து உலவுபவர், மக்களால் தெய்வீக மனிதர் என போற்றி வணங்கப்படுவதோ மகத்துவம்! அத்தகு தகைமையர்களுள் ஒருவர் ஈழ அண்ணல் இலங்கை பாராளுமன்ற உறுப்பினர் மாட்சிமிகு மாவை. சோ. சேனாதிராசா அவர்கள்!

பல நூற்றாண்டுகளாக ஆதிக்கத்திற்கும் அடக்குமுறைகளுக்கும் இடையே போராடும் விளிம்பு நிலை மக்களின் வாழ்க்கை, உலகெங்கும் என்றும கேள்விக்குறிகளோடுதான் நகர்கிறது. இலங்கைத் தமிழர்களின் வாழ்க்கையும்பல்வேறு அவலங்களுக்கிடையேயும் அவதிகளுக்கிடையேயும் பரிதவிப்போடு பயணித்துக் கொண்டிருக்கிறது. அவர்களுக்கு பற்றுக்கொடுகளாக, விடுதலை விடிவெள்ளிகளாக தியாக உள்ளம் கொண்ட செம்மல்கள் தோன்றி நம்பிக்கை வழங்கிய வண்ணம் வாழ்வித்துக்கொண்டு உள்ளனர். அவர்களுள் குறிப்பிடத் தக்கவர் தியாகச் செம்மல் மாட்சிமிகு திரு. மாவை. சோ. சேனாதிராசா அவர்கள்.

வெற்றிகள் நிறைந்த பள்ளி, கல்லூரி இளமைக் காலங்களைக் கடந்தாலும் தம் வாலிப உள்ளத்தை மனத்தூய்மையோடு, உறுதியோடும், நேர்மையோடும் சமூப, இலக்கியப் பணிகளிலும், மொழி, இனப் போராட்டங்களுக்கம் அர்ப்பணித்து அரசியலமைப்பையும், நில ஆக்கிரமிப்புகளையும் ஒருபோதும் நிலை குலையாமல் எதிர்த்துப் போராடிப் பல காலம் சிறைப்பட்டவர். அன்றாடத் தவிப்புகளோடு வாழும் நிராதரவான மக்களின் வாழ்வாதரங்களக்காகவேப் போராடப் புறப்பட்டவர்!

வாலிப வயதிலேயே வலிய தலைவர்களுடன் தமிழ்த் தேசிய இயக்கத்தில் இணைந்து, ஆண்டுக்கணக்கில் கொடிய சிறை வாசங்களின் சித்திரவதைகளை அனுபவித்து மீண்டெழுந்த போராளி! பல்லாண்டுகள் உறுதியான பாராளுமன்ற வாதியாகப் பரிமளித்து பல்லாயிரம் மக்கள் சேவைகளைச் செய்த உழைப்பாளி! மொழி உணர்வாளி! அறுபது ஆண்டுகளுக்கும் மேலாக இலங்கைத்தமிழின வரலாற்றில் ஜனநாயகப் புரட்சிப் போராட்டங்களில் மனத்திண்மையோடு பங்கேற்று, தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற துணைத் தலைவராகவும், செயலாளராகவும்விளங்குவது போற்றுதற்குரியது.

அடித்தட்டு மக்களின் மேம்பாட்டையே அகமெங்கம் சுமந்து உலகெங்கும் பயணித்து, திரு. சேனாதிராசா அவர்கள் இலங்கைத்தமிழர் நலன்களுக்காக புரிந்துவரும் சேவைகள் எழுதப் பக்கங்கள் போதா.

பவள மனிதர் திரு. சேனாதிராசா அவர்களின் 75-ஆம் அகவையைக் கொண்டாடும் விதமாக வெளிக்கொணரப்படும்விழா மலர் சிறந்து விளங்க நெஞ்சார வாழ்த்துகிறேன். மாட்சிமிகு திரு. சேனாதிராசா அவர்கள் நூறாண்டுகள் மக்கள் பணிசெய்து வாழ்வாங்கு வாழ நெஞ்சார வாழ்த்துகிறேன்!

வாழ்க தமிழினம்! வெல்க தமிழ்த் தெசியம்!

நன்மதிப்புடன்,

*கவிஞர் மெய்ஞானி பிரபாகரபாபு*

## வாழ்த்துரை

மாவை சேனாதிராஜா சுதந்திரத்திற்கான போராட்டத்தில் பல காலமாக பங்கேற்று வருகிறார். அவர் பல நாடுகள் சென்று விழிப்புணர்வை ஏற்படுத்தி, சுதந்திர போராட்டத்திற்கான ஆதரவை பெற பெரு முயற்சிகளை எடுத்துள்ளார்.

நாங்கள் கியூபாவில் உலக இளைஞர் (40,000) மாநாட்டில் கலந்துகொள்ள ஒன்றாக சென்றபோது மாவை சேனாதிராஜாவை ஓரளவு அறியக் கூடிய வாய்ப்புகள் இருந்தன. அவர் ஒரு அனுபவமுள்ளவராகவும் அறிவார்ந்தவராகவும் காணப்பட்டார். ஆத்திரமூட்டும் சூழ்நிலையிலும் கோபமடையாது சிரிப்புடன் பொறுமைகாத்தார். அவர் கியூபா அதிகாரிகளுக்கும் மற்றும் பல வெளிநாட்டு பிரமுகர்களுக்கும் தமிழர்களின் பிரச்சினைகளை விளக்கி அவற்றைத் தீர்க்க ஆதரவை வழங்கும்படி கேட்டுக்கொண்டார்.

தமிழ் அரசுக் கட்சியின் தலைவராக தனது பதவிக்காலத்தில் வடகிழக்கு முழுவதும் கட்சிக் கிளைகளை திறந்து பொருத்தமான நபர்களை நியமித்து, திட்டங்களை தீட்டி அவற்றை வெற்றிகரமாக அமுல்படுத்த, தமிழ் மக்களின்முழு ஆதரவை மீண்டும் பெற்று, அனைவரது பங்கேற்புடன் தமிழர்களின் உரிமைகளைப் பெற்றுத் தர வேண்டும் என்று கேட்டு, அவர் நல்ல ஆரோக்கியத்துடனும் மற்றும் நீண்ட ஆயுளுடனும் வாழ வேண்டும் என்று வாழ்த்துகிறேன்.

அன்புடன்

இ. லோகேஸ்வரன்

ஆராய்ச்சியாளர்

**புதுவைத் தமிழ்ச் சங்கம்**

பதிவு எண் : 1/1968

2, தமிழ்ச்சங்க வீதி, வெங்கட்டா நகர், புதுச்சேரி - 605 011.

இல்லம் : 'தமிழ்' - 21, நான்காவது குறுக்குத் தெரு, வெங்கட்டா நகர், புதுச்சேரி - 605 011.

அலைபேசி : 94429 81855, Email : drvmpdy@gmail.com


# மறக்க முடியாத மாமனிதர்

# மாவை. சோ. சேனாதிராசா

அன்பிற்கினிய மாவை. சோ. சேனாதிராசா அவர்கள் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவராகவும், இலங்கை நாடாளுமன்ற உறுப்பினராகவும், இலங்கைத் தமிழர்கள், மற்றும் உலகளாவிய தமிழர்களின் உற்ற தோழராகவும், தமிழர் நலன், தமிழர் வாழ்வின் முனனேற்றம், தமிழ் இனம், தமிழ் மொழி என்று பல்வேறு நிலைகளிலும் தன்னை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டு செயலாற்றி வரும் ஓர் அற்புதமான மாமனிதர் மாவை. சோ. சேனாதிராசா அவர்கள். அன்னாரின் பவளவிழா இலங்கையில் 2017-ல் நடைபெற்ற போது நேரில் சென்று பவள விழாவில் பங்கேற்று வாழ்த்துரை வாழங்கியதை இன்றளவும் பெமையாகக் கருதுகிறேன்.

அன்னாரின் பவள விழா மலர் தற்போது இந்தியாவில் வெளியிட இருப்பதை எண்ணி உள்ளம் மகிழ்வெய்துகிறது. தமிழர்கள் உலகளாவிய அளவில் வாழ்ந்துவரும் இவ்வேளையில் அனைத்து தரப்பு மக்களின் அன்பையும், நன்மதிப்பையும் பெற்றத் தலைவராக செயல்பட்டு வரும் மாவை. சோ. சேனாதிராசா அவர்கள் புதுச்சேரி மற்றும் தமிழ் நாட்டுத் தமிழ் அன்பர்களுடன் மிகவும் நெருங்கிப் பழகிவருபவர்.

புதுச்சேரிக்கு வருகை தந்த போதெல்லாம் அவருடன் உடனிருக்கும் வாய்ப்பைப் பெற்றவன். எங்களுடைய இல்லத்திற்கு வருகை தந்து எங்களுடைய குடும்ப உறுப்பினர்களில் ஒருவராக எங்களோடு அமர்ந்து அவரும், அவருடைய குடும்பத்தாரும் உணவு அருந்தியதையும், எங்கள் கல்லூரிகளில் பலமுறை, பல்லாயிரக் கணக்கான மாணவர்களிடையே இவர் ஆற்றிய எழுச்சியுரை இன்றும் பேசப்படும் ஒன்றாகத் திகழ்கிறது. உலக மயமாதல் எனும் தலைப்பில் இவர் ஆற்றிய 2 1/2 மணி நேர உரை ஒரு வரலாற்று நிகழ்வாகும்.

இலங்கைத் தமிழர்களின் துயர் துடைப்பில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு களப்பணி ஆற்றிவரும் திரு. மாவை சோ. சேனாதிராசா அவர்களின் சமூக, இலக்கிய, தமிழ்ப் பணிகளுக்கு நானும் புதுவைத் தமிழ்ச் சங்கமும் என்றும் உறுதுணையாக இருப்போம் என்றும், பவள விழா மலர் சிறப்புற எனது இதயம் கனிந்த நல்வாழ்த்தினையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்புடன்

கலைமாமணி

*முனைவர் வி. முத்து*

தலைவர், புதுவைத் தமிழ்ச் சங்கம்

புதுச்சேரி.

உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கம்

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம்
INTERNATIONAI MOVEMENT FOR TAMIL CULTURE
Non-Profit, Non-Political, Non-Religious, Charitable, Worldwide Registred, tamil Cultural Organization - Est. in 1974

Head Office 5310 Finch Ave. East, Unit #10, Toronto, Ontario M1S 5E8
Tel: 1.647.829.4044 email: raja@cfsginc.com
www.imtcweb.com

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் - பிரித்தானியா (UK)
10 Palmerston Road Harrow Middlesex HA3 7FA Mobile Tel: 00447939474342
PRESIDENT: ADAIKALAMUTHU ILANCHELIAN SECRETARY: GEETHA GOWRI
VICE PRESIDENT: SINNATHURAI SRIVAS TREASURER: MURUGESU THANGARAJA

## Think of it as Turning 18 with 57 Years of Experience

Hon. Senathirajah (சேனாதி ராஜா)hailed from Maviddapuram, born on 27 October 1942; commonly known as 'Mavai' is a Member of Parliament. He is the current Leader of the Illankai Tamil Arasu Kachchi (ITAK), a member of the Tamil National Alliance (TNA).Hon. Senathirajah was one of the first young Tamil political activists to be arrested and put behind bars when the crackdown began in the early seventies in the North to curtail Tamil extremism. Maviddapuram is the northern-most region in Valikamam North, where the first internal displacements started following the escalation of the armed struggle.

Hon. Senathirajah got involved in the Sri Lankan Tamil nationalism movement at a young age and took part in the 1961 Satyagraha. He joined the youth wing of Illankai Tamil Arasu Kachchi, Tamil Youth League, in 1962. He was secretary of the EelaThamilElangerEyakam (Eelam Tamil Youth Movement) from 1966 to 1969. He was arrested on several occasions between 1969 and 1983 and spent seven years imprisoned at different prisons. He became secretary of the Tamil Youth Front, the youth wing the Tamil United Liberation Front (TULF), in 1972.

It was at this point I first met him at our family home, when he came to visit my father Mr Adaikalamuthu also known as "AMUTHU PULAVAR". I was 12 years old and I listened to his many speeches at various meetings. He was a role model to younger generation, inspired by many as a Patriotic Tamil Leader.

He entered Parliament in 1989 when he was appointed as a National List Member of Parliament for the TULF, replacing A. Amirthalingam who had been assassinated on 13 July 1989. Once againHon. Mavai Senathirajah re-

entered Parliament in 1999 as a National List Member of Parliament for the TULF following the assassination of Neelan Tiruchelvam on 29 July 1999.

Hon. Senathirajah was one of the TULF's candidates in Jaffna District at the 2000 parliamentary election. He was elected and re-entered Parliament. On 20 October 2001 the All Ceylon Tamil Congress, Eelam People's Revolutionary Liberation Front, Tamil Eelam Liberation Organization and TULF formed the Tamil National Alliance (TNA). Hon. Senathirajah contested the 2001 parliamentary election as one of the TNA's candidates in Jaffna District. He was elected with 33,831 votes and re-entered Parliament. He was re-elected at the 2004, 2010 and 2015 parliamentary elections.

Hon. Senathirajah was general-secretary of ITAK before being elected leader of ITAK 6 September 2014. Since, Hon. Senathirajah is one of a trio of MPs (the other two being Hon. R. Sampanthan and M. A. Sumanthiran) who is leading the TNA now.

I wish you a Happy Birthday and to thank you for your service to the Tamil Nation. You are an inspiration and I hope you have many more years to keep up the good work. Thank you for your brave and fearless leadership. I hope that you have a day of joy on your Diamond Birthday.

A true leader is a symbol of success wherever they are. Leaders create new path where there was none. They make things easier. They provide solutions to the most insurmountable challenges. It is the greatest leaders who have been pivotal in changing history at different times.

There are very few people like you who spent their whole life for the welfare of the people and their freedom. You are a true devotee for Tamil nation.

Your continuous hard work in this age gives us the inspiration to pass the entire hurdle in the way of our target, and one day we will definitely get success. You will be a role model to all our younger generation. We become now one of the most emerging nations. You have proven yourself not from your words but from your work as a leader.Peace and prosperity are the priceless gifts always for every citizen. Thank you for your contribution to place our community in the row of international human rights council. I feel fortunate to see a leader like you and learn a lot from you.

On your Diamond Birthday you are turning 75. Think of it as turning 18 with 57 years of experience. Many auspicious wishes on this Diamond Birthday.

*"The task of the leader is to get his people from where they are to where they have not been" (Henry Kissinger).*

***President IMTC (UK)***

***Adaikalamuthu Ilanchelian***

*Lawyer (London)*

யா / யூனியன் கல்லூரி தெல்லிப்பளை
J / UNION COLLEGE TELLIPPALAI
web: www.unioncollege.lk E-mail: unioncollegete@gmail.com

எனது இல My No | உமது இல Your No. | திகதி Date 19.08.2017

## வாழ்த்துச் செய்தி

"என் பதத்தால் எய்தல் எளிதென்ப யார் மாட்டும்
பண்புடமை என்னும் வழக்கு"

மற்றவர்களிடத்தில் எளிமையாகவும், இனிமையாகவும், இளகிய மனதுடனும், மற்றவர்களுடன் எளிமையுடன் பழகிக் கொள்வதும், மற்றவர்களும் எளிமையோடு தமமுடன் பழகக்கூடிய இயல்புடையவராய் வாழ்வதே பண்புடையாரின் செயலாரும் என்ற வள்ளவரின் வாய் மொழிக்கேற்ப இன்றுவரை எடுத்துக்காட்டாய் வாழ்ந்து வருபவரே உத்தமரும், தமிழரசுக் கட்சியின் தலப்புதல்வருமான கௌரவ மாவை சேனாதிராஜா அவர்களாவார்.

பவள விழா நாயகனுக்கு அவர் பூத்த மண்ணின் மைந்தன் சார்பாகவும் 202 நூற்றாண்டு பழமைவாய்ந்த கல்லூரியின் முதல்வர் என்ற வகையில் வாழ்த்துச்செய்தி வழங்குவதனையிட்டு பெரும் உவகை அடைகின்றேன்.

"பத்தேமு உலகத்தும் ஈண்டும் பெறல் அரிதே
ஒப்புரவின் நல் பிற"

ஆம் கௌரவ மாவை சேனாதிராஜா அவர்கள் இற்றைக்கு 62 வருடங்களுக்கு முன்னரே அதாவது தமிழ் இயக்கங்கள் ஆரம்பிப்பதற்கு முன்னர் தமிழ் மக்களுக்கு எதிரான அடக்கு முறைகள் சூடுபிடிக்கத் தொடங்கிய வேளை 1956-ம் ஆண்டு தனது எண்ணத்திலும் உள்ளத்திலும் அரசியல் முனைப்புப் பெற்றவராக உருவானார். அதாவது 18வது வயதில் அரசியலில் களமிறங்கியமை வியந்து குறிப்பிடத்தக்கது. தமிழர் இன விடிவிற்காக தன் வாழ்நாளின் ஒரு பகுதியை சிறைவாசம் செய்து அர்ப்பணித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. தனது தோற்றத்திற்கேற்ப சொல்மழை பொழிந்து தமிழ் மக்களை தம் வசப்படுத்தும் திறன் கைவரப் பெற்றவர். அவர் உடுத்தும் ஆடைபோல் அகமும் புறமும் தூய்மையுடைய தூய்மையாளர்.

மனித வாழ்வில் பிறப்பு, இறப்பு என்பது இயற்கையே இவ்விரு இடைவெளிக்குள் பிறப்பெடுத்த மனிதர் ஒவ்வொருவரும் சாதிக்கப்பிறந்தவராய், சாதனையாளராய், ஈகையாளராய், இன்முகத்தோனாய் தோற்றத்திற்கு எளியோனாய் இருப்பது தாம் பெற்ற பிறப்பிற்கு அர்த்தமுடையதாகும்.

இவ் விலக்கண சிறப்பினை தனதாக்கி மனிதவுரு எடுத்த மகாசக்தி கௌரவ மாவை சேனாதிராஜா என்றால் மிகையாகாது. எமது கல்லூரிக்கும். நிதி உதவி வழங்கியதோடு எமது புகழ் பூத்த கல்லூரியின் 200-ம் நூற்றாண்டு விழாவிற்கு பிரதம அதிதியாகவும் வந்து சிறப்பித்துள்ளார். இவ்விடயமானது எனது கல்லூரிச் சமூகமும் நானும் பெற்ற பெரும் பேறாகக் கருதுகின்றேன். எனவே இவர் ஆல் போல் தழைத்து அறுகுபோல் வலிய வேரூன்றி நூற்றாண்டு விழாவும் கண்டு உவகை பெற வேண்டுமென உளமார வாழ்த்துகின்றேன்

"பிறப்பு ஒரு சம்பவமாக இருப்பினும்
வாழ்வு ஒரு சரித்திரமாகட்டும்"

*- கலாநிதி அப்துல்கலாம்*

**தி. வரதன்**

அதிபர்

யா/யூனியன் கல்லூரி,

தெல்லிப்பளை

## Federation of Internationa Tamil (FIT) ஒக்ரோபர் 23, 2017

## அனைத்துலக தமிழர் கூட்டமைப்பு

மாவை சேனாதிராஜா

பாராளுமன்ற உறுப்பினர் காங்கேசந்துறை

அன்புள்ள அண்ணா,

இந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் யாழ்ப்பாணத்தில் நடக்க இருக்கும் உலகத்தமிழர் பண்பாட்டு இயக்கத்தின் மாநாட்டில் தங்கள் எழுபத்தைந்தாவது பிறந்தநாள் விழாவைக்கொண்டாட இருப்பது அறிந்து அளவில்லா ஆனந்தம் அடைந்தேன். உலகத்தமிழர் பண்பாட்டு இயக்கத்தின் தலைவராகக்கூடிய காலம் (1985 தொடக்கம் 1996 வரை) தொடர்ந்து இருந்தவன் என்பதால் இந்த வாழ்த்து மடலை உங்களுக்கு அனுப்புவதில் நான் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகிறேன்.

நீங்கள் எம் இனத்திற்கு செய்த தொண்டும், ஆற்றிய சேவையும் அளப்பெரியவை. இது என்றும் மாறாது, மறையாது இருக்கவேண்டும். தன் ஆகைளை வென்ற புத்தனைப்போல்நீங்கள் இருக்காவிட்டாலும் உங்கள் ஆசைகளுக்கு நீங்கள் அடிமையாக என்றும் இருந்ததில்லை. புத்தர் தன் கேள்விகளுக்க விடை தேடி தியானித்ததுபோல் நீங்களும் எம் உறவுகள் உரிமையுடன் வாழவேண்டுமென்று தொடர்ந்து போராடியதை யாரால் மறக்க முடியும். மக்களுக்கு உதவுவதை உங்கள் வாழ:க்கையாகக் கொண்டு நீங்கள் இளைஞனாக, வாலிபனாக, இருந்தபோது எம் இனத்திற்காக பலமுறை மறியல் சென்று ஏறக்குறைய ஏழு ஆண்டுகள் நீங்கள் சிறையில் வாழ்ந்ததை எம் மக்கள் என்றும் மறக்கமாட்டார்கள்.

நீங்களும் வண்ணை ஆனந்தனும் ஆற்றிய சேவைகள்தானே இலங்கைத் தமிழரசுக்கட்சிக்கும், அதன் மாணவர் அமைப்புக்கும் நல்ல பெயரையும், பெருமையையும் எமது உறவுகளிடமிருந்து பெற்றுத்தந்தது.

தமிமிழரசுக் கட்சியின் தொண்டனாக ஆரம்பித்து அதன் தலைவராக நீங்கள் வந்ததுக்கு காரணம் உங்கள் தொடர்ச்சியான சேவையும் மக்கள் உங்கள் மீது வைத்த நம்பிக்கையும் அல்லவா.

எம் மக்களின் தேவையை உங்கள் கட்சியின் இலட்சியமாக எடுத்து செயல்படும் உங்கள் திறமையைய் எம் உறவுகள் என்றும் மறக்கமாட்டார்கள் நீங்கள் நீடுழி வாழ்ந்து எம் உறவுகளுக்கதொடர்ந்து உதவவேண்டும். இதுவே என் ஆசை, அவா.

“உடலில்லையேல் உயிரால் வாழ முடியுமா”

கலாநிதி ரோம் சிவலிங்கம்

Ph.D., B.Sc(Hons), FIMechE, P.Eng, C.Eng

# தேர்தல் பரப்புரைக் கூட்டங்களில் மாவை. சோ. சேனாதிராஜா












































































9 X
X

















# பாராளுமன்றப் பொதுத் தேர்தல் 2001
## யாழ் மாவட்டம்
### இவரை உங்களுக்குத் தெரிகிறதா?



தமிழர் தாயகத்தின் உதயசூரியன்...!
தமிழினத்தின் நம்பிக்கைப் பேரொளி ......!
இளைய சமுதாயத்தின் தங்கத்தலைவன்

## .....மாவை சேனாதிராசா.....

ஆம்........ தமிழினத்தின் விடிவிற்காகவே
**11 தடவைகள் கைது செய்யப்பட்டு 7 தடவைகள் சிறையில் அடைக்கப்பட்டு நீண்டகாலம் சிறைவாழ்வைக் கழித்துச் சிறைமீண்ட செம்மல் மாவை சேனாதிராசா!**

## இனவிடுதலை காணத் துடித்து நிற்கும் தமிழ் இலட்சிய நெஞ்சங்களே!

தமிழ் இனம் தமிழர் தாயகத்தில் தன்மானத்துடன் சுயநிர்ணய உரிமையுடன் தன்னைத் தானே ஆள - தலைநிமிர்ந்து வாழ .....40 வருடங்களாக களம் பல கண்ட பல வருடங்களை சிறையில் கழித்த கொடூரமான சித்திரவதைகளுக்கு உள்ளான இணையற்ற தலைவனை ஆதரிப்போம்!

- **வடக்கையும் கிழக்கையும் இணைத்து நிற்கும் ஒப்பற்ற தலைவன் !**
- **சுதந்திர உணர்வைத் தட்டி எழுப்பி நிற்கும் இணையற்ற தலைவன்!**

## மாவை சேனாதிராசாவின் இல 12



தமிழர்
விடுதலைக்
கூட்டணி



X

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |

**உதயசூரியன் சின்னத்திற்கு எதிரே (X) புள்ளடியிட்டு, உங்கள் விருப்புவாக்குகளில் ஒன்றை திரு.மாவை சேனாதிராசாவின் இல: 12இன் மேல் புள்ளடியிடுங்கள், அத்துடன் மேலும் இருவிருப்பு வாக்குகளை நீங்கள்விரும்பும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் இருவரின் இலக்கத்தின் மேல் புள்ளடியிட்டு இலட்சிய வாதிகளை அமோக வெற்றியடையச் செய்யும்படி வேண்டுகின்றோம்.**

- தமிழர் விடுதலைக் கூட்டணி ஆதரவாளர்கள் -

ஓ தமிழ் இனமே ..................இதற்கு உன் பதில் என்ன?

சிங்களத்தின் பாஸிஸ கைக்கூலி ...............

தன்மானத் தமிழர் தலைவனை அழிக்கத் துணிந்ததே...!

தீவகத் தமிழர் சிறை மீட்கச்சென்ற வேங்கையே ......

மாவை சேனாதிராசா....

அராஜக பாஸிஸ கூட்டம் உன்னை அழிக்கத் துணிந்ததென்ன?

தமிழர் தலைவா மாவை சேனாதிராசா

பொங்கி எழுமடா தமிழர் படை உன்னைக் காக்க!



தமிழ் மக்களே சிந்தியுங்கள் ...........!

தமிழர் தாயகமண்ணில் தமிழினம் தன்னைத் தானே ஆள - சுயமரியாதையுடன் சுயநிர்ணய உரிமையுடன் பாதுகாப்புடன்வாழ - களம்பல கண்டு - சிறைபல கண்டு - சித்திரவதைகள் பலகண்டு - நிற்கும் தன்மானத் தமிழன் -

மாவை சேனாதிராசா!

இன்று 28.11.2001..... புதன்கிழமை.....

சிங்களத்தின் எச்சில் சோற்றுக்காக...........

தமிழ் இனத்தையே விற்றுப் பிழைக்கும், மானம் கெட்ட இனவியாபாரிகள் கூட்டம், தங்கத்தமிழன் மாவை சேனாதிராசா மேனிமீது நாயாகப் பாய்ந்து பிறாண்டிக் குதறியுள்ளது....!

ஓ தமிழ் இனமே - இதற்கு உன் பதில் என்ன?

வன்முறைக்கு வன்முறையல்ல ........

ஜனநாயக வழியில் பதிலடி கொடுப்போம் !


உதய சூரியனுக்கு முன்னால் நீங்கள் போடும் புள்ளடி........... !

இலக்கம் 12 ன் மேல் நீங்கள் போடும் புள்ளடி .......... !

இனவெறி ஆட்சியாளருக்கும் அவர்களின் பாஸிஸ அராஜகக் கைக்கூலிகளுக்கும் கொடுக்கக்கூடிய ஒரே பதிலடி...!

ஆம் அவர்களை விரட்டியடிக்கக்கூடிய ஒரே பதிலடி....!





# மலர் - 2

# வாழ்க்கைத் தரவுகள்

பொது நூலகம்
வலி. வடக்கு பிரதேச சபை
தெல்லிப்பளை



மாவை. சோ. சேனாதிராஜா அவர்களுடன் வடமாகாண சபை முதல்வர் விக்னேஸ்வரன் அவர்கள்

# மாவை. சோ. சேனாதிராஜா

## வாழ்க்கைத் தரவுகள்

1942 27 அக்டோபர் 1942 இல் இலங்கை மாவட்ட புரத்தில் திரு சோம சுந்தரம் - தையல்நாயகி தம்பதியரின் தலை மகனாகப் பிறந்தார். செல்வரத்தினம், இராஜரத்தினம், தங்கராஜா, செல்வமணி, செல்வராணி, ராஜேஸ்வரி, ஆகியோர் உடன் பிறந்தவராவர்.

1947 வீமன் காமம் ஆங்கில மகாவித்யாலயாவில் சேர்ந்து கல்வி பயின்றார்.

1952 நடேஸ்வரா கல்லூரியில் பயின்றார் தொடர்ந்து யாழ்ப்பாணம் தொழில் நுட்பக் கல்லூரியில் பயின்றார்.

இலங்கை பெரடெனியா பல்கலைக் கழகத்தில் இளங்கலைப் பட்டம் பெற்றார்.

1961 தனிச்சிங்களச் சட்டம் அமுல் செய்யப்பட்டதைத் தொடர்ந்து. தமிழ்ப் பிரதேசத்தில் அரச தலைமையலுவலகம் முன் சத்தியாகிரகம் நடைபெற்றது. தமிழரசு தபால் சேவை தொடங்கப்பட்டது. இப்போராட்டங்களில் பங்கேற்றார்.

1962 வாலிப முன்னணியை உருவாக்கிய இவர் அதன் பின்புலமாக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் இளைஞர் அணியில் சேர்ந்தார்.

1966 ஈழத் தமிழர் இளைஞர் இயக்கத்தை தோற்றுவிப்பதில் முக்கியப் பங்காற்றி அதன் செயலராக பொறுப்பாற்றினார்.

1969 இலங்கை அரசால் கைது செய்யப்பட்டு ஏழு ஆண்டுகள் இலங்கையின் பல்வேறு சிறைகளில் இருந்தார்.

1972 தமிழர் கூட்டணி தொடங்கப்பட்டது. சேனாதிராஜா இளஞர் பேரவையின் செயலராக நியமிக்கப்பட்டார்.

1972 முதல் 1983 வரை பதினோரு முறை சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். இலங்கையின் எட்டு சிறைகளில் ஏழு ஆண்டுகள் வரை அடைக்கப்பட்டிருந்தார்.

1973 மல்லாகம் மாநாட்டில் 07.09.1973 அன்று தமிழரசுக் கட்சியின் 6ஆவது தலைவராக அ. அமிர்தலிங்கம் தேர்வு செய்யப்பட்டார்.

1974 யாழ்ப்பாணத்தில் 4 ஆவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு நடைபெற்றது.

1975 வட்டுக்கோட்டையில் தமிழர் கூட்டணி மாநாட்டில் தமிழீழ இலட்சியத்தை முன்வைத்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

வீடு தோறும் வட்டுக்கோட்டைத் தீர்மானம் வழங்கப்பட்டது.

1977 தந்தை செல்வா மறைவைத் தொடர்ந்து தமிழர் விடுதலைக் கூட்டணியில் பொதுச் செயலராக அ. அமிர்தலிங்கம் தெரிவு செய்யப்பட்டார்.

1978 புதிய அரசியலமைப்புச் சட்டம், சுதந்திர தமிழீழம் கோரிக்கை போராட்டத்தில் ஈடுபட்டதற்காக மட்டகளப்பு சிறையில் அடைக்கப்பட்டார்.

1980 பிப்ரவரி 6 ஆம் நாள் பவானி அம்மையாரை திருமணம் செய்து கொண்டார். இவர் சதாசிவம் - செல்வமணி தம்பதியரின் மகளாவார்.

1982 சென்னை எண் 2, தணிகாசலம் தெரு, தியாகராய நகரில் தமிழர் விடுதலைக் கூட்டணி அலுவலம் தொடங்கப்பெற்று அதன் பொறுப்பாளராகப் பணியாற்றினார்.

நவம்பர் 7 ஆம்நாள் தலைமகன் கலையமுதன் பிறந்தார்.

ஜனவரி 5 உலகத் தமிழ் மாநாட்டில் பங்கேற்பு.

இலங்கை நாடாளுமன்றத்தில் பிரிவினைக்கெதிரான உறுதிப் பிரமாணம் செய்ய மறுத்து பாராளுமன்ற உறுப்பினர் பதவியையும் எதிர்க்கட்சித் தலைவர் பதவியையும் அ. அமிர்தலிங்கம் தூக்கி எறிந்தார்.

1984 டிசம்பர் 19ஆம் நாள் இரண்டாம் மகன் ஆராஅமுதன் பிறந்தார்.

1986 இந்திய - இலங்கை ஒப்பந்தம் உருவாக்கும் முயற்சியில் பங்கு கொண்டார்.

1989 யாழ்பாண மாவட்டத்தில் போட்டியிட்டு தேர்தலில் தோல்வியுற்றார்.

ஜூலை 13 ஆம் நாள் கொழும்பில் அ. அமிர்தலிங்கம், படுகொலை செய்யப்பட்டார். அப்போது அவருடன் இருந்தார்.

அமிர்தலிங்கம் மறைவைத் தொடர்ந்து தேசியப் பட்டியலில் மாவை. சோ. சேனாதிராஜா பாராளுமன்ற உறுப்பினராகத் தேர்வு செய்யப்பட்டார்.

1992 ஜூலை 9 ஆம் நாள் மகள் தாராகா பிறந்தார்.

1999 ஜூலை 29 இல் நீலன் திருச்செல்வம் படுகொலைச் செய்யப்பட்டதைத் தொடர்ந்து இரண்டாவது முறையாக தேசிய பட்டியல் மூலம் நாடாளுமன்ற உறுப்பினராகப் பொறுப்பேற்றார்.

2000 தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் யாழ்ப்பாண மாவட்டத்தில் போட்டியிட்டு நாடாளுமன்ற உறுப்பினராகப்பொறுப்பேற்றார்.

2001 அக்டோபர் 20 இல் அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழீழ விடுதலை இயக்கம் ஆகிய கட்சிகள் இணைந்து தமிழ் தேசியக் கூட்டமைப்பை உருவாக்கினர்.

2001, 2004, 2010, 2015 தேர்தல் களில் வெற்றி பெற்று நாடாளுமன்ற உறுப்பினராகப் பொறுப்பேற்றார்.

2014 செப்டம்பர் 7 ஆம் நாள் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவராக தெரிவு செய்யப்பட்டார்.

ஜெர்மனியில் நடைபெற்ற 12 ஆவது உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கப் பன்னாட்டு மாநாட்டில் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றார்.

2016 ஜனவரி 16, 17 நாட்களில் புதுச்சேரியில் நடைபெற்ற உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்க சிறப்பு மாநாட்டில் பங்கேற்றுச் சிறப்புரை ஆற்றினார்.

2016 பிரான்சு பாரிஸ் நகரில் நடைபெற்ற உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்க சிறப்பு மாநாட்டில் பங்கேற்றுச் சிறப்புரை நிகழ்த்தினார்.

2017 ஆகஸ்டு 4,5 நாள்களில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின்13 ஆவது பன்னாட்டு மாநாடு சிறப்பாக நடைபெற உதவினார்.



## ஈழ அண்ணல்
## மாவை. சோ. சேனாதிராசா

**இலங்கை பாராளுமன்ற உறுப்பினர்**

திரு. மாவை. சோ. சேனாதிராசா அவர்களின் 75-ஆம் அகவையைச் சிறப்பிக்கும் வகையில் "பவழ விழா" மலர் வெளியிடப்படுகிறது.

இலங்கைத் தமிழ் மக்கள் இலட்சிய வேட்கையை ஏற்றுக்கொள்ளக் கூடிய அரசியல் தீர்வை நோக்கி ஓர் இலட்சிய வேட்கையுடன் பயணமேற்கொண்டிருக்கும் ஈழத்தின் இன்றைய விடிவெள்ளி மாவை. சோ. சேனாதிராசா அவர்களின் 75ஆம் ஆண்டு பிறந்த நாள் விழாவினை உலகத்தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் கனடா தலைமையகமும் இந்தியக் கிளையும் இணைந்து நடத்துவதென முடிவு செய்யப்பட்டது.

அவர்தம் வாழ்க்கை வரலாற்றுப் பெட்டகமாக திகழும் வகையில் **பவழ விழா** மலருக்கு அவர்தம் சிறப்பைப் போற்றும் புகைப்படங்கள், கட்டுரைகள், வாழ்த்துரைகள் இடம் பெறுகிறது. இம்மலர் சிறப்பாக அமைய பல படைப்புக்களை வழங்கிச் சிறப்பித்தவர்களுக்கு உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் சார்பில் நன்றியை உரித்தாக்குகிறோம்.

**மாவை. சோ. சேனாதிராசா**

ஈழத் தமிழரின் விடிவெள்ளியாகத் திகழும் திரு. மாவை. சோ.சேனாதிராசா 1942 அக்டோபர் 27-ஆம் நாள் யாழ்ப்பாண தீபகற்பத்தின் மாவட்டபுரம் எனுமிடத்தில் பிறந்தார். பெற்றோர்: சோமசுந்தரம் - தையல்நாயகி. தம் இளமைக் கல்வியை வீமன்காமம் பள்ளியிலும் நடேஸ்வரா கல்லூரியிலும் பயின்றார். யாழ் தொழில் நுட்பக் கல்லூரியிலும் பெரடெனியாவில் உள்ள இலங்கைப் பல்கலைக் கழகத்திலும் இளங்கலை பட்டம் பெறப் பதிவு செய்திருந்தார். இலங்கை அரசுக் கெதிரான போராட்டங்கள் காரணமாகப் படிப்பைத் தொடர முடியவில்லை. பின்னர் அகதியாக இந்தியாவுக்கு வந்திருந்த காலத்தில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் அரசியல் அறிவியலில் முதுகலைமாணிப் பட்டம் (M.A., in Political science) பெற்றுள்ளார்.

தம் பள்ளி பருவத்தில் காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி ஆசிரியர் சுப்பையா அவர்களால் ஊக்கம் பெற்றுப் பேச்சுப் போட்டிகளில் முதல்நிலை பெற்றார்.

கல்லூரிக் காலத்திலும் இளமைக் காலத்திலும் விளையாட்டுப் போட்டிகளிலும் வெற்றிக் கிண்ணங்கள் பெற்றார். சமூக விழிப்புணர்வில் தன்னிகரற்றுத் திகழ்ந்தார். சமூக சமவுரிமைகளுக்காகவும் போராடினார். பள்ளி வருவத்தில் தமிழ் வாலிபர் முன்னணியைத் தோற்றுவித்துச் சமூக இலக்கியப் பணிகளை முன்னெடுத்தார். தொடர்ந்து தமிழ் இளைஞர் பேரவையைத் தொடங்கினார். பாடசாலை மாணவக் காலத்திலேயே சிங்கள மொழி மேலாதிக்கத்திற் கெதிராகப் போராட்டங்களில் ஈடுபட்டார். 1972 ஆம் ஆண்டு புதிய அரசியல் அமைப்புக் கெதிரான போராட்டங்களிலிருந்து சிறைகளில் அடைக்கப்பட்டார். பின் 1978 ஆம் ஆண்டு புதிய அரசியலமைப்பை எதிர்த்தும், சுதந்திரத் தமிழீழம் கோரியும் நடைபெற்ற போராட்டங்களில் மட்டக் களப்பு சிறையில் அடைக்கப்பட்டார். அப்பொழுது நீதிமன்ற வழக்குகளையும் எதிர்நோக்கினார். சிங்கள அரசுகளின் அரசியலமைப்புக்கெதிரான போராட்டங்களிலும், நில ஆக்கிரமிப்புக் கெதிரான உச்சநீதிமன்ற வழக்குகளில் பல வெற்றிகளையும் பெற்றார். இலங்கை உச்சநீதிமன்றத்தில் இப்பொழுதும் ஏழு வழக்குகளை எதிர் நோக்கியுள்ளார்.

இளமையிலேயே அரசியல் ஆர்வம் காரணமாக இலங்கை தமிழ்த் தேசிய இயக்கத்தில் பங்கேற்றார். 1961-இல் நடைபெற்ற சத்யாகிரகப் போராட்டத்தில் பங்கேற்றார். தந்தை செல்வா, அ.அமிர்தலிங்கம் ஆகியோர் தலைமையில் இளைஞர் பாசறையை உருவாக்கி தமிழ் தேசிய விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டார். பாடசாலைகளில் சிங்களம், கல்வி அமைச்சரால் திணிக்கப்பட்டபோது ஈழத் தமிழ் இளைஞர் மாணவர் இயக்கத்தின் செயலாளராக இருந்து பேரணிகளையும், போராட்டங்களையும் நடத்தினார். 1962-இல் இலங்கைத் தமிழரசு கட்சியின் இளைஞர் அமைப்பில் இணைந்தார். 1966 முதல் 1969 வரை ஈழத் தமிழர் இளைஞர் இயக்கத்தின் செயலராகத் திகழ்ந்தார். 1972 முதல் 1983 வரை 11 முறை சிறை சென்றுள்ளார். இலங்கையின் எட்டு சிறைகளில் ஏழு ஆண்டுகள் சிறையில் இருந்தார்.உயிர் பிரிந்துவிட்டது யெனும் வகையில் சித்திரவதைப்பட்டார். 1972-இல் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி (TULF) தொடங்கியபோது, அதன் இளைஞர் பிரிவின் செயலராக பொறுப்பேற்றார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலகம் சென்னையில் 1983-இல் ஆரம்பித்த பொழுது அந்த அலுவலகத்தில் பொறுப்பாளராக இருந்து இயங்கினார். இந்தியாவில் பலதுறைகளிலும் இலங்கை மாணவர் உயர் கல்வி பெற உதவினார். காரணியாகத் திகழ்ந்தார். திருவாளர் அ.அமிர்தலிங்கம், சிவசிதம்பரம் அவர்களுடன் இந்திய இலங்கைத் தொடர்புகளில் இந்திரா காந்தி பின் ராஜீவ் காந்தி பிரதமர்களாக இருந்த காலங்களில் தமிழகத் தலைவர்களுடன் பேச்சுக்களில் கலந்து கொண்டார். தமிழ்நாட்டு அரசியல் தலைவர்களுடன் தொடர்பிலிருந்தார். முக்கியப் பங்காற்றினார். அமிர்தலிங்கம் மறைவைத் தொடர்ந்து 1989-ஆம் ஆண்டில் இலங்கை பாராளுமன்ற உறுப்பினராக தேர்வு செய்யப்பட்டார். பின்னர் 2001 பாராளுமன்றத் தேர்தலிலும் தொடர்ந்து 2004, 2010 மற்றும் 2015 பாராளுமன்றத் தேர்தல்களில் வெற்றி பெற்று பாராளுமன்ற உறுப்பினரானார். பாராளுமன்றக் காலத்திலும் அரசியல் சமூக, பொருளாதார மாநாடுகளுக்குச் சென்று பங்கு பெற்றார். பொதுவுடமைக் கொள்கைகளிலும் ஈடுபாடு கொண்டிருந்தார். விடுதலைப் போராட்டங்கள் உலக நாடுகளில் நடைபெற்ற போராட்ட அமைப்புக்களுடனும் ஆதரவு கொண்டிருந்தார். உலகநாடுகளிலும் இலங்கையிலும் தமிழின விடுதலைப் போராட்ட காலங்களில்

புரட்சிகரப் போராட்டங்களுக்கு ஆதரவுடன் இருந்து வந்தார். மொத்தமாக அறுபது ஆண்டுகள் இலங்கையில் தமிழின வரலாற்றில் ஜனநாயகம் மற்றும் புரட்சிகரப் போராட்டங்களில் ஈடுபாடு கொண்டு வரலாறு கண்டவராவார். தொடர்ந்தும் அவ்வாறே அர்ப்பணித்து வருகின்றார். தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் - பாராளுமன்ற குழுத் துணைத் தலைவராகவும், செயலாளராகவும் விளங்குகிறார்.

தந்தை செல்வா, அமிர்தலிங்கம் வழியில் தமிழின வரலாற்றில் தமக்கென ஒரு நெடிய வரலாற்றைக் கொண்டுள்ள திரு. மாவை. சோ. சேனாதிராசா அவர்கள் இலங்கைத் தமிழரசு கட்சியின் எட்டாவது தலைவராக தேர்வு செய்யப்பட்டபோது 15 ஆவது தேசிய மாநாடு (வவுனியா) 07.09.2014 அன்று ஆற்றிய உரையில் சில தரவுகள் இங்கே இடம்பெறுகிறது.

"1956 ஆம் ஆண்டு தனிச்சிங்களம் ஆட்சிமொழிச் சட்டம் பண்டார நாயக்காவினால் நிறைவேற்றப்பட்டமைக்கு எதிராக காலிமுகத் திடலிலே தந்தை செல்வநாயகம் தலைமையில் நடைபெற்ற சத்தியாகிரகப் போராட்டத்தின் பின் "திருமலைக்குச் செல்வோம் சிறுமை அடிமை வெல்லுவோம்" என்று 1956 ஆகஸ்ட் 17ஆம் திகதி திருமலை மாநாடு நடைபெற்றது. அந்த மாநாட்டிலே ஏற்கப்பட்ட தீர்மானம், "1957ஆம் ஆண்டு ஆவணி 20ஆம் திகதிக்கிடையில் பிரதம மந்திரியும் அரசும் இலங்கையில் சமஷ்டி அரசமைப்பில் தமிழர் தேசத்தில் தன்னாட்சியை நிறுவும் நடவடிக்கையை எடுக்கத் தவறின் அவ்விலட்சியத்தை அடைவதற்குச் சாத்வீக வழியில் கட்சி நேரடி நடவடிக்கையில் இறங்கும்" எனும் போராட்டத் தீர்மானம் அறிவித்தபின் 1957-07-26இல் பண்டாரநாயக்க செல்வநாயகம் ஒப்பந்தம் ஏற்பட்டது. ஓரளவு சுயாட்சி, நிலவுரிமை நிலைநாட்டப்பட்டது. 1958 ஏப்ரல் 08 ஆந் திகதி அந்த ஒப்பந்தம் ரத்துச் செய்வதாகப் பண்டாரநாயக்கா அறிவித்தார். அதற்குப் பின்தான் 1958 "மே" மாதத்தில் 25 ஆம் நாள் வவுனியாவில், 1958 தமிழரசுக் கட்சியின் மாநாடு தமிழ் மக்களை போராட்டங்களுக்கு அழைத்தது. 2014 செப்டம்பரிலும் அதே வவுனியாவில் மாணவ சேனாதிராசா தலைமையில் இராஜபக்- ஜனாதிபதி அரசுக் கெதிரான போராட்டத் தீர்மானங்கள் அறிவிக்கப்பட்டன. இந்த வன்னி நிலப்பரப்பிலே அந்த மாநாடு நடைபெற்றது. போராட்டத்டதிற்கான ஆயத்த நடவடிக்கைகளின் காலத்தில் 2015 ஜனவரியில் ஜனாதிபதித் தேர்தலில் இராஜபக்- வீழ்த்தப்பட்டார். புதிய நல்லிணக்க ஆட்சியேற்பட்டது, 2015 ஆகஸ்டில் ரணில் பிரதமர் தலைமையில் தேசிய அரசு ஏற்பட்டுள்ளது. புதிய அரசியல் அமைப்பு ஏற்படும், இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படுமெனும் இலக்கில் அரசியல் நடவடிக்கைகள் தீவிர மடைந்துள்ளன. இருப்பினும் தமிழர் மத்தியில் ஏமாற்றங்களும் இராணுவ ஆதிக்கமும் இருந்தே வருகின்றன. ஐ.நா. மனித உரிமைப் பேரவைத் தீர்மானத்தின் பின் இலங்கையில் சர்வதேச நாடுகளின் தலையீடுகளும் இராஜ தந்திர முயற்சிகளும் தீவிர மடைந்துள்ளன.

தந்தை செல்வநாயகம் 1949 மார்கழி 18இல் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வரலாற்று முக்கியம் மிக்க தலைமை யுரையை நிகழ்த்தினார். 1951இல் திருமலை மாநாட்டிலே தலைமை உரை நிகழ்த்தினார். தமிழினத்தின் முஸ்லீம் மக்களின் அடிமைத்தலையை அறுத்து சமஷ்டி அரசியற் கோட்பாட்டில் தமிழ் முஸ்லீம்களின் தன்னாட்சி அரசுகளை தமிழர் தாயகப் பிரதேசங்களில் நிலைநாட்டும் கொள்கைத் திட்டத்தைப் பிரகடனப் படுத்தினார். அந்த மாநாட்டில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் தான்

கடந்த காலங்களிலும் எதிர்காலத்திலும் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு ஒரு அரசியலமைப்புத் திட்டம் உருவாகினால் அதன் அடிப்படையாகவே இருக்கும் என்பதில் உறுதியாக இருக்கிறோம்.'' (சேனாதிராசா, 2015).

## இலங்கையில் தமிழன் வரலாறு

1920களிலிருந்தே கண்டியத் தலைவர்களும் கண்டிய சம்மேளனமும் இலங்கைப் பிரச்சினைகளுக்கு ஒரு தீர்வாக சமஷ்டி அரசியல் திட்டமொன்றை டொனமூர் மற்றும் சோல்பரி ஆணைக் குழுவிடம் சமர்ப்பித்தனர். அத்திட்டத்தின் முக்கிய அம்சமாக:-

1. வடக்கு கிழக்கு ஒரு மாநில ஆட்சி நிர்வாகம்.
2. கண்டி ஒரு மாநில ஆட்சி நிர்வாகம்.
3. தாழ் நில தெற்குப் பிரதேசம் ஒரு ஆட்சி நிர்வாக மாநிலம் என்றும், ஒன்றிலொன்று ஆதிக்கம் செலுத்தாமலும், இருக்கும் வகையில் மத்தியில் சமஷ்டி ஆட்சியும் மாநிலத்தில் தன்னாட்சியும் உருவாக்கப்படும் என்று தீர்வுத் திட்டம் அறிவிக்கப்பட்டது.

1972இல் தமிழ் மக்களுக்குரித்தான இறைமையை ஜனநாயக அடிப்படை உரிமைகளை நிராகரித்து சிறிமாவோ தலைமையிலான கூட்டமைப்பு முன்னரிலும் பார்க்க வலுவும் கடுமையும் மிக்கதான (entrenched unitary constitution) ஒற்றையாட்சி அரசியலமைப்பைப் பிரகடனப்படுத்திய சந்தர்ப்பத்தினாலேயே 1976இல் வட்டுக்கோட்டைத் தீர்மானம் நிறைவேற்றப்படவேண்டி ஏற்பட்டது. 1972ஆம் ஆண்டு அரசின் புதிய அரசியலமைப்பை எதிர்த்து இளைஞர்களின் போராட்டங்கள் தமிழர் பிரதேச மெங்கும் பரவியிருந்தது. 1973 மார்ச் 9ஆம் நாள் நாமெல்லாம் சிங்கள அரசினால் சிறையிலடைக்கப்பட்டோம். 2 1/2 ஆண்டுகளின் பின் விடுதலை செய்யப்பட்ட போதும் மீண்டும் சில நாட்களில் நாம் கைது செய்யப்பட்டோம். 11 தடவைகள் கைது செய்யப்பட்டு மொத்தம் ஏழு ஆண்டுகள் சிறையிருந்த பாக்கியம் பெற்றேன்.

1976 ஆம் ஆண்டின் வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை மக்களிடம் விநியோகித்துப் பிரசாரப்படுத்தினார்கள் என்பதற்காக திருவாளர்கள் அமிர்தலிங்கம், வி.என்.நவரத்தினம், துரைரத்தினம், கா.பொ. இரத்தினம் ஆகிய பாராளுமன்ற உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டு 70 ஆண்டுகள் சிறை, சொத்துப் பறிமுதல் என்றெல்லாம் அறிவித்து (Trial at Bar) சிறப்பு நீதிமன்றத்தில் வழக்கு நடத்தப்பட்டது. தந்தை செல்வநாயகம் G.C.தலைமையிலே, ஜீ.ஜீ. பொன்னம்பலம், மு. திருச்செல்வம், QC புள்ளேநாயகம் முதலான அறுபத்தேழு வழக்கறிஞர்கள் அந்த வழக்கிலே தமிழினத்தின் சார்பில் வாதாடியிருந்தார்கள். முதலாவதாக அவசரகாலச் சட்டம் நிறைவேற்றப்பட்டமை செல்லுபடியாகாது என நீதிமன்றம் தீர்மானித்தது. கைது செய்யப்பட்டோர். பிணையில் விடுதலை செய்யப்பட்டனர். இதன் காரணமாக 1977 ஏப்ரல் 13இல் சிறையிலிருந்து நானும் ஏனைய இளைஞர்களும் விடுதலைபெற வாய்ப்பு ஏற்பட்டது. 1977 பொதுத் தேர்தலில் சுதந்திர தமிழீழம் நிறுவ ஆணை வழங்கப்பட்டது.

## பாரதப் பிரதமர் திருப்தி

இவற்றைப் பற்றியெல்லாம் தலைவர் திரு. சம்பந்தன் 23.08.2014 புதுடெல்லியில் பிரதமர் திரு.நரேந்திரமோடி முன்னால் முன் வைத்த பொழுது, பிரதமர் சொன்னார், ''உங்களுடைய முகபாவங்களே உங்கள் நிலைமைகளை எடுத்துக்காட்டுகிறது. என்னை ஈர்த்துள்ளது. ஐக்கிய இலங்கைக்குள் அரசியல் தீர்வு ஒன்றைக் கோருகின்றோம். ''வன்முறையை நாடவில்லை'' என்பதையிட்டு நான் திருப்தியடைகின்றேன், நான் உங்களுடன் இருக்கின்றேன்'' என்றும் கூறினார். அவரின் பிரதிபலிப்பை அவர் வெளியிட்ட அறிக்கையில் வெளிப்படுத்தி யிருந்தார். இலங்கைப் பாராளுமன்றத்தில் உரையாற்றிய பாரதப் பிரதமர் நரேந்திர மோடி இனப் பிரச்சினைத் தீர்வு பற்றிக் குறிப்பிடும் வழியில் கூட்டிணைந்த சமஷ்டிபற்றிக் குறிப்பிட்டு ஆராயுமாறு கோரினார்.

அவர் நடவடிக்கைகள் பயனுற அமைவதற்கு நாம் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். அதனைப் புரிந்துகொண்டு அடுத்த நடவடிக்கைகளைத் திட்டமிட வேண்டியுள்ளோம். அத்துடன் இத்தகைய எடுகோள்களுக்கும் - தீர்மானங்களுக்கும், போராட்டங்களுக்கும் 2012, 2013, 2014 ஐ.நா. மனித உரிமை தீர்மானங்கள் ஆதரவாக உள்ளன. இத்தகைய அரிய இராஜ தந்திர சந்தர்பங்களை நாம் பற்றி நிற்கவேண்டும்.

அதற்காக எம்மிடம் எஞ்சியுள்ள, இந்தியா உள்ளிட்ட சர்வதேசம் ஒப்புக்கொள்கின்ற ஜனநாயக வழிகளில் எமது கிளர்ச்சி, போராட்டம்தான் உண்டு என்பதையும் இந்திய நாடும் சர்வதேசமும் அதைத் தெரிந்துகொள்ளும் வகையில் அந்த அடித்தளத்திலிருந்து அதற்கும் மேலாகவும் நாம் காந்திய வழியில், சாத்வீக வழியில் தருமத்தில், அறத்தில் நம்பிக்கை வைத்து எம் தமிழ்ப் பேசும் மக்கள் விடுதலைக்காகவும் விடிவுக்காகவும், அதற்குத் தன்னாட்சிக்காவும், இந்த மாநாடு, ''போராடுவோம்'' என்ற தீர்மானத்தை அறிவிக்கிறது.

### இம்மாநாட்டின் மூலம் அரசுக்கு விடுக்கும் செய்தி

1. இலங்கை அரசானது ஐக்கிய இலங்கைக் கட்டமைப்பில் வடக்கு கிழக்கு மாநிலத்தில் தமிழ்ப் பேசும் மக்களின் தன்னாட்சி உரிமையை அங்கீகரிக்கும் அரசியல் தீர்வொன்றை ஏற்படுத்த வேண்டும் என்றும்;
2. தமிழ் இன அடையாளங்களை அழிக்கும் மற்றும் இனக்குடிப் பரம்பலை குலைக்கும் செயற்பாடுகள் நிறுத்தப்பட வேண்டும் என்றும்:
3. தமிழ் முஸ்லீம் மக்களுக்குரித்தான சொந்த நிலங்களில் அகதிகளாயுள்ள மக்கள் மீளக் குடியேற்றப் பொருத்தமாக அக்காணிகளை அபகரித்து நிற்கும் இராணுவத்தினர் வெளியேறிச் செல்ல உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும்;
4. தமிழ்ப் பெண்கள் மீதான பாலியல் வன்முறைகள் தொடராமல் உடன் நிறுத்தும் நடவடிக்கையை அரசு எடுக்க வேண்டுமென்றும்
5. காணாமல் போனோர் விடயத்தில் அரசு உண்மையைக் கண்டறியும் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றும்; இம் மாநாட்டிலிருந்து எதிர்வரும் மூன்று மாதக் காலத்துக்குள் அரசு நம்பகத்தன்மையும்

அர்த்தமுள்ளதுமான நடவடிக்கை களையும் உறுதிப்படுத்த வேண்டும் என்றும் அல்லது ஜனநாயக வழிகளில் சாத்வீக வழிகளில் மக்களை அணிதிரட்டிப் போராட்டங்களில் ஈடுபடுவதென்றும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் இம்மாநாடு தீர்மானிக்கின்றது.

தமிழ் மக்களின் விடுதலைக்கான போராட்டத்தில் அனைத்து சக்திகளையும் அணிதிரட்டி ஜனநாயக வழியில் போராட்டங்களை நடாத்த வேண்டுமென்ற பொறுப்பை வரலாற்றுக் கடமையை நான் தெரிவு செய்து கொண்டிருக்கின்றேன். பாரதப்போரிலே யுத்தகாலத்திலே பார்த்தசாரதியாக நின்ற பரமாத்மா கிருக்ஷ்ணன் அர்ச்சுனனிடம் போதித்ததென்னவென்றால் ‘‘கடமையைச் செய் பலனை எதிர்பாராதே’’ என்பதுதான். அதுதான் பகவத்கீதையின் அடிநாதம். எம் கடன் பணி செய்வது, ஆனால் அது தமிழினத்தின் விடுதலைக்காக பயனுறவேண்டும் என்பதுதான் எம் இதய வேட்கை.

எனவே ஏற்கனவே கூறியதுபோல நாம் எல்லோரும் தமிழ்த் தேசத்தின் தமிழ் - முஸ்லீம், தமிழ்ப்பேசும் மக்களின் விடுதலைக்காகவும் விடிவுக்காகவும் ஒன்றுபட்டுழைப்போம் என்ற திடசங்கற்பத்துடன் உங்கள் அனைவருக்கும் மீண்டும் நன்றி கூறி விடைபெறுகின்றேன் (மாவை. சோ. சேனாதிராசா, 07.09.2014).

திரு. மாவை. சோ. சேனாதிராசா அவர்கள் இலங்கைத் தமிழ் மக்களுக்காக கடந்த 57 ஆண்டுகளாக ஆற்றிவரும் தொண்டினை இச்சிறு குறிப்பேட்டில் தந்திட இயலாது. அவருடன் சமூக, இலக்கிய, அரசியல் பயணத்தில் பலரும் பங்கேற்றுள்ளனர். தந்தை செல்வா, அ. அமிர்தலிங்கம் வழியில் காந்திய சிந்தனையில் இலங்கைத் தமிழ் மக்கள் மட்டும் அல்லாது தமிழ் கூறும் நல்லுலகம் முழுமைக்கும் ஓர் எடுத்துக் காட்டாய் திகழ்ந்து வருகிறார்.

உலகின் பல்வேறு நாடுகளுக்குப் பயணம் மேற்கொண்டு இப்பணியைச் செவ்வனே செய்து வருகிறார். அவர்தம் 75 ஆவது பிறந்த நாளை உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் சிறப்பான முறையில் கொண்டாடும் வகையில் இந்த பவழ விழா மலர் வெளியிடப்படுகிறது.

# தந்தை செல்வா, அண்ணல் அமிர் வழியில் மாவையார்...

ஷ்தூமிந் ரூீயளூ நுயிறர் சீ ஸூ.

புதுச்சேரி.



எப்போதும் பரபரப்பாக இயங்கிக் கொண்டிருக்கும் சென்னை மாநகரின் மையப்பகுதியான தியாகராஜ நகரின் பாண்டி பஜார் பகுதியில் உள்ள எண்2, தணிகாசலம் தெருவில் இரண்டடுக்கு கட்டிடத்தில் முதல் தளத்தில் தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணி அலுவலகம் செயல்பட்டது. அதன் பொறுப்பாளராகத் திகழ்ந்தவர் கூட்டணியின் இளைஞரணிச் செயலரான மாவை. சோ. சேனாதிராஜா அவர்கள். 1983 ஜுலை 13 ஆம் நாள் யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்த பெருங் கலவரத்தைத் தொடர்ந்து அணி அணியாக ஈழத்தில் இருந்து மக்கள் புலம் பெயர்ந்து அகதிகளாக வந்து கொண்டிருந்தனர். படகுகளின் மூலமாக ஆயிரக் கணக்கானோர் இராமேஸ்வரம், மண்டபம் வழியாக தமிழகத்திற்கு வந்து கொண்டு இருந்தனர். வசதி படைத்த இளைஞர்கள் பலரும் ஐரோப்பிய நாடுகளுக்கும் ஆஸ்திரேலியா, கனடா, அமெரிக்கா போன்ற நாடுகளுக்கும் வாழ்விடம் தேடி செல்லத் தொடங்கினர். தமிழகத்திற்கு வந்தோர் பல்வேறு இடங்களில் அகதி முகாம்களில் தங்கவைக்கப்பட்டனர்.

யாழ்ப்பான தீபகற்பத்தில் இருந்து புலம் பெயர்ந்த தமிழர்கள் உலகின்பல நாடுகளில் குடியேறி ஒருபுறம் தங்களின் வாழ்வாதரங்களை நிலைப்படுத்திக் கொண்டிருந்தனர். மற்றொரு புறம் தமிழீழப் போராட்டத்திற்கு உறுதுணையாக செயல்பட்டனர். குறிப்பாக இலங்கை இராணுவத்திற்கு ஈடு கொடுக்க முடியாத இளைஞர்கள் பெரும்பாலும் தங்கள் பெற்றோர்களின் வலியுறுத்தலால் புலம் பெயர்ந்தனர்.

இந்த சூழலில் தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணி இந்திய அரசின் நட்புறவோடு இந்திய - இலங்கை ஒப்பந்தம் ஏற்படுத்தி செயலாற்றிட முனைந்து கொண்டிருந்தது. தமிழக அரசின் முழு ஒத்துழைப்போடு அ. அமிர்தலிங்கம், சிவ. சிதம்பரம் போன்றோர் அரசியல் ரீதியான முன்னெடுப்புகளை மேற் கொண்டிருந்தனர்.

இலங்கையில் விடுதலைப் புலிகள் இயக்கம் உச்சத்தில் இருந்தது. மற்ற இயக்கங்கள் செயல்பட இயலாத நிலை. ஆயினும் அரசியல் ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணியினர் மக்கள் பிரச்சினைகளையும் படிக்க இயன்ற மாணவர்களின் படிப்புக்கான பரிந்துரைகளையும் சிறப்பாக செய்து வந்தனர். நூற்றுக் கணக்கான மாணவர்கள் இவ்வாறு பயன்பெற்று வந்தனர். இப்பணியை திரு. மாவை. சோ. சேனாதிராஜா சலைக்காமல் செய்து வந்தார்.

மாவட்டபுரத்தில் இலங்கை இராணுவத்தால் தமது வீடு தரைமட்டமாக்கப்பட்டுள்ள செய்தி கேட்டும் அப்பகுதியை இராணுவக் கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்ட செய்தி கேட்டும் தமிழ் மக்களின் இன்னல் போக்கிட தன்னலம் துறந்தார். தனது மனைவி பவானி அவர்களும் அவருக்கு துணையாக சென்னை வந்து தங்கினார்.

தமிழர் வாழ்வாதரப் பணிகளைத் திட்டமிட்டு செயல்படுத்தி ஈழ மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாக உயர்ந்தார். இவர்தம் இடையறா பணிகளை டாக்டர் அ. பகீரதன் அவர்கள் வாயிலாக அறிந்து அவருடன் சென்று சென்னையில் சந்தித்தோம். அந்த சந்திப்பின் போது புதுச்சேரியில் ஈழத்தமிழர் நட்புறவுக் கழகம் ஏற்படுத்து ஈழ மக்கள் இன்னல் போக்கிட முனைந்தோம்.

1979 ஆம் ஆண்டில் அ. அமிர்தலிங்கம் புதுச்சேரிக்கு முதன் முறையாக வருகை தந்தபோது இலங்கை நாடாளுமன்ற எதிர்க்கட்சிக் தலைவராக இருந்தார். அவருக்கு புதுச்சேரியில் அனைத்து தரப்பு அரசியல் பிரமுகர்களும் தமிழ் இன உணர்வு மிக்க அமைப்பு ரீதியிலான அன்பர்களும் இலக்கிய அன்பர்களும் உற்சாக வரவேற்பு அளித்தனர். உண்மையில் அந்நிகழ்ச்சி அமிர்தலிங்கம் - மங்கையர்க்கரசி அவர்களின் வரவேற்பு நிகழ்ச்சியாகவே இருந்தது. ஆனால் கூட்டத்தில் பங்கேற்று உரையாற்றிய அமிர்தலிங்கம் ஈழத்தமிழர்களின் இன்னல்களைப் பட்டியலிட்டபோது அவர்தம் உணர்ச்சிமிக்க உரை புதுச்சேரி மக்களிடம் ஈழத்தமிழர் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தியது. அன்று ஏற்றப் பெற்ற தீபம் புதுச்சேரி மக்களை ஈழத் தமிழர் போராட்டத்தில் அக்கறை கொள்ளச் செய்தது. புதுச்சேரியில் தமிழ் ஈழ நட்புறவுக் கழகத்தை அமிர்தலிங்கம் அவர்கள் தொடங்கி வைத்தார். பவானி மதுரகவி தலைவராக இருந்தார். வீ.சு. கரிகாலன் செயலராகவும் பாஞ். இராமலிங்கம் இணைச் செயலராகவும் இருந்தனர். இக்கழகம் தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணியின் செயல்பாடுகளை புதுச்சேரி மக்களுக்கு அவ்வப்போது எடுத்துரைக்கும் பணியில் ஈடுபட்டு வந்தது. 1983 ஆம் ஆண்டு ஜுலை மாதத்தில் தமிழ் ஈழ நட்புறவுக் கழகப் பொதுச்செயலராக பாஞ். இராமலிங்கம் தேர்வு செய்யப்பட்டார். திரு. ச. பரத புண்ணியன், திரு.வீர. மதுரகவி, திரு. கதிர் முத்தையன் போன்றவர்களின் அயரா உழைப்புடன் தமிழ் ஈழ நட்புறவு கழகம் புதுப்பொலிவுடன் செயல்படத் தொடங்கியது. புதுச்சேரியின் அனைத்து தமிழ் இயக்கங்களையும் ஒருங்கிணைத்து செயல்பாடுகள் திட்டமிடப்பட்டன. இப்பணியில் நீதியரசர் எஸ். இராமலிங்கம் தமிழ்மாமணி சிவ. கண்ணப்பா, கம்பவாணர் அ. அருணகிரி, புலவலர் ந. கோவிந்தசாமி நற்றமிழ்க் காவலர் நா. மணிமாறன், நீதியரசர் இரா. கோவிந்தராஜன், திரு. கோ. இராமச்சந்திரன் போன்றவர்கள் பல நிலைகளிலும் தமிழ்ஈழ மக்களின் இன்னல் போக்கும் பணியில் தங்களை இணைத்துக்கொண்டனர்.

புதுச்சேரி கடற்கரையில் உள்ள பிரெஞ்சு போர் நினைவுத் தூணுக்கு 14.07.1984 அன்று அமிர்தலிங்கம் அவர்கள் தலைமையில் மலர் வளையம் வைத்து பிரஞ்சு குடியரசு தின விழாவில் பங்கேற்றுச் சிறப்பித்தார். அன்று மாலை புதுச்சேரி கம்பன் கலையரங்கில் நடைபெற்ற தமிழ் - ஈழ நட்புறவு மாநாட்டில் அமிர்தலிங்கம் அவர்கள் உரையாற்றுகையில் உலகின் பல்வேறு நாடுகளில் நடைபெற்ற விடுதலைப் போராட்டங்களை நினைவுகூர்ந்து பிரெஞ்சு இராணுவத்தில் புதுச்சேரியில் இருந்து பங்கேற்றோரையும் நினைவு கூர்ந்து ஈழ மக்களின் இன்னல் தீர எதிர்கால சிந்தனைகளை எடுத்துரைத்த பாங்கு அனைவராலும் பாராட்டத்தக்கதாக இருந்தது.

14.07.1984ஆம் நாள் புதுச்சேரி வருகை முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியாக அமைந்தது. ஈழத் தமிழருக்கு ஆதரவாக உண்ணாவிரதம் இருந்தனர். ஆதரவு கூட்டம் நடத்தியோர் என பலதரப்பினரும் தலைவர் அ. அமிர்தலிங்கம் - மங்கையர்க்கரசி தம்பதியினரைச் சந்தித்து தமது செயல்பாடுகளை விவரித்தனர். இவ்வெழுச்சி புதுச்சேரி

மக்கள் கொண்டிருந்த அக்கறையை உணர்ந்துகொள்ளக் கூடியதாக இருந்தது. அன்றிரவு விருந்தினை பிரஞ்சு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பெர்னான் போல் தமது இல்லத்தில் ஏற்பாடு செய்திருந்தார்

இக்கூட்டத்தில் 'அண்ணல் அமிர்தலிங்கம்' என்று அன்போடு அழைக்கப்பட்டு கூட்டம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. புதுச்சேரி மாநில மக்களுக்கு நன்றி தெரிவித்து உரையாற்றுகையில் 'எமது விடுதலை நிச்சயம் உண்டு, அது வெகு தொலைவில் இல்லை' என்று குறிப்பிட்டார். புதுச்சேரி மக்களின் ஆதரவும் அன்பான உபசரிப்பும் நிச்சயமாக ஈழத் தமிழர் விடுதலைக்கு இடப்படுகின்ற உரமாகும் என்றுரைத்தார். அன்றைய பிற்பகலில் வழக்கறிஞர்கள் சங்க வரவேற்பிலும், புதுவை அரிமா சங்க வரவேற்பிலும் பங்கேற்றனர். 18.06.1986 ஆம் நாள் புதுச்சேரிக்கு வருகை தந்தபோது பல்வேறு அரசியல் தலைவர்களையும் மரியதை நிமித்தமாக சந்தித்து ஈழத் தமிழர்களுக்காக புதுச்சேரி அரசியல் தலைவர்கள் ஆற்ற வேண்டிய உதவிகள் குறித்து எடுத்துரைத்தார். குறிப்பாக திரு.தெ. இராமச்சந்திரன், திரு. ப. சண்முகம், திரு. எம்.ஓ.எச். பாரூக், திரு. நா. மணிமாறன் போன்ற தலைவர்களைச் சந்தித்தார். அன்று காலை சிற்றுண்டி திரு. ச. பரதபுண்ணியன் வீட்டில் ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது. பகல் விருந்து நீதியசர் இரா. கோவிந்தராஜன் வீட்டில் ஏற்பாடு செய்யபட்டிருந்தது. அவ்விருந்தில் புதுச்சேரி பல்கலைக் கழகத் துணை வேந்தர் டாக்டர். கி.வேங்கிட சுப்பிரமணியன், மாவை. சோ. சேனாதிராஜா, திரு.சிவ. கண்ணப்பா, திரு. அ. பகீரதன் உட்பட பலரும் பங்கேற்றனர், அவ்விருந்து வேளையும் ஒரு கலந்துரையாடல் நிகழ்ச்சியாகவே அமைந்தது.

புதுச்சேரி மக்களின் நீங்கா நினைவுகளில் நிலை பெற்றுவிட்ட அண்ணல் அமிர்தலிங்கம் - மங்கையர்க்கரசி தம்பதியினர் 09.06.1988ல் என்னுடைய திருமணத்தை தலைமை ஏற்று நடத்திட புதுச்சேரிக்கு வந்தனர். புதுச்சேரி துரை முனிசாமி திருமண மண்டபத்தில் நடைபெற்ற திருமண விழாவில் பங்கேற்று அண்ணல் அமிர்தலிங்கம் அவர்கள் பேசிய உரை இலக்கிய நயம் மிக்கதாகவும் தமிழ் கூறும் நல்லுலகம் போற்றும் வகையிலும் அமைந்தது. திருமண விழாவிற்கு வருகைதந்தோர் அண்ணல் அமிர்தலிங்கம் - மங்கையர்கரசி தம்பதியினரை நேரில் அணுகி ஈழத் தமிழ் மக்களின் நிலை குறித்து பல்வேறு தகவல்களைக் கேட்டறிந்தனர்.

என்னுடைய திருமணத்தை தங்களின் குடும்ப விழாவாக எண்ணி நடத்தி வைத்தமை அவர்களின் மீது நான் கொண்டிருந்த அன்பையும் மதிப்பையும் அளவிட முடியாத வானளவிற்கு கொண்டு சேர்த்தது. அதிலும் என்னுடைய துணைவியார் பெயரும் மங்கையர்க்கரசி என்பது எவ்வளவு பொருத்தம் என்று வியந்தனர்.

ஈழத் தமிழர் இன்னல் துடைப்பில் புதுச்சேரி மக்களின் பங்களிப்பை எழுத்தில் அடக்கிவிட முடியாது. அது ஒரு நெடும்பயணம். அண்ணல் அமிர்தலிங்கம் - மங்கையர்க்கரசி தம்பதியினர் கொண்டிருந்த 12 ஆண்டு கால நேரடி தொடர்புகள் முடிந்துவிட்ட சகாப்தம் அல்ல.

அண்ணல் அதிர்தலிங்கம் மறைவு செய்தி அறிந்து புதுச்சேரி மக்கள் மீளா துயரில் மிதந்தனர். மறைந்த தலைவருக்கு நினைவஞ்சலி ஏற்பாடு செய்தோம். தொடர்ந்து நாவலர் அ. அமிர்தலிங்கம் இலக்கியப் பேரவை என்ற அமைப்பைத் தொடங்கி அவர்தம் எழுத்துக்களை நூல்வடிவில் கொண்டுவர முயற்சித்தோம். அதன் தொடர்ச்சியாக முதலாண்டு நினைவு நாள் (13.07.1990) அன்று இலட்சிய

இதயங்களோடு'' என்ற முதல்தொகுப்பினை வெளியிட்டோம். தற்போது லண்டன் மாநகரில் வாழும் தமிழ் மக்கள் அமிர்தலிங்கம் நினைவு அறக்கட்டளை தொடங்கியதை அடுத்து புதுச்சேரியில் இயங்கி வரும் நாவலர் அமிர்தலிங்கம் இலக்கியப் பேரவையை ''அமிர்தலிங்கம் நினவை அறக்கட்டளை''யாக புத்தாக்கம் செய்துள்ளோம்

அண்ணல் அமிர்தலிங்கம் வழியில் திருமதி. மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் அவர்கள் 1994ல் புதுச்சேரி வருகை தந்தபோது முதல்வர் வெ. வைத்திலிங்கம், கல்வி அமைச்சர், அ. காந்திராஜ், வேளாண் அமைச்சர், ந. ரங்கசாமி ஆகியோரை சந்தித்தார். பல்வேறு அரசியல் தலைவர்களையும் நீதியரசர் எஸ். இராமலிங்கம், நீதியரசர் இரா. கோவிந்தராஜன், திரு. நா. மணிமாறன் போன்றவர்களையும் சந்தித்து ஈழத் தமிழர்களின் அன்றைய நிலையினை விளக்கினார். அன்று மாலை மதிகிருஷ்ணபுரத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட அண்ணல் அமிர்தலிங்கம் நினைவு நிகழ்ச்சியிலும் பங்கேற்றுச் சிறப்பித்தார். இக்கூட்டத்தை திரு.ந. கோதண்டபாணி சிறப்பாக செய்திருந்தார்.

சென்னையில் இருந்தபோது 1984 முதல் 1989 வரை வாய்ப்பு கிடைத்த போதெல்லாம் புதுச்சேரியை மையமாகக் கொண்டு பல்வேறு கூட்டங்களை நடத்தி ஈழத்தமிழரின் அவ்வப்போதைய நிலைமைகளை புதுச்சேரி, தமிழக மக்களுக்கு புதுச்சேரி, தமிழக மக்களுக்கு எடுத்துரைத்து வந்தார்.

குறிப்பாக புதுச்சேரி பகுதியில் அவருடைய கூட்டங்களை ஏற்பாடு செய்ததில் திரு ச. பரதபுண்ணியன், திரு. வீ. மதுரகவி, திரு. நா. மணிமாறன், பாவலர் கதிர். முத்தையன், அரியாங்குப்பத்தில் திரு.லோகு. அய்யப்பன்., திரு. து. சடகோபன், திரு. தயாளன், கணபதி செட்டிக்குளம் திரு. கோ. இராமச்சந்திரன், மதி கிருஷ்ணாபுரம் திரு. ந. கோதண்டபாணி போன்றோர் குறிப்பிடத் தக்கவர்.

மாவை. சோ. சேனாதிராஜா அரசியலுக்கு அப்பாற்பட்டு இலக்கிய நிகழ்ச்சிகளிலும் உளவியல் ஆய்வரங்கங்களிலும் பங்கேற்றுச் சிறப்பித்துள்ளார். 01.01.2001 இல் அனைத்திந்திய தமிழ் எழுத்தாளர்கள் சங்கத்தின் புதுச்சேரி கிளையின் சார்பில் வேல். சொக்கநாதன் திருமண நிலையத்தில் நடைபெற்ற கவிஞர் ந. நாகமுத்து அவர்களின் பிறந்த நாள் விழாவில் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்று சிறப்புரை ஆற்றினார்.

புதுச்சேரி உளவியல் சங்கத்தின் சார்பில் புதுவை ''ஓட்டல் மாஸ்'' இல் நடைபெற்ற ஏழாவது தேசிய மாநாட்டில் பங்கேற்று இலங்கைத் தமிழ்க் கல்வி மற்றும் மாணவர் இடர்பாடுகள் குறித்து சிறப்புரை ஆற்றினார்.

அனைத்திந்தியத் தமிழ் எழுத்தாளர்கள் சங்கத்தின் சார்பில் நடைபெற்ற பாவேந்தர் பாரதிதாசன் விழாவில் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றுச்சிறப்புரை ஆற்றினார்.

அவர் ஒவ்வொரு முறை புதுச்சேரிக்கு வரும்போதும் தவறாமல் பத்திரிகையாளர்களை சந்தித்து அவ்வப்போதைய இலங்கைத் தமிழர்தம் அரசியல் சூழல்களை எடுத்துரைப்பதோடு இந்திய அரசு மேற்கொண்டுவரும் நல்லெண்ண செயல்பாடுகளையும் எடுத்துரைப்பார்.

சிறியவர் முதல் பெரியவர் வரை எவருடனும் எளிதில் பழகும் பண்பாளர். கூட்டங்களில் வீரமுழக்கமிட்டு கைத்தட்டு பெறுவதுஅவருடைய நோக்கமாக

இருக்கவில்லை. கூட்டத்தில் பங்கேற்றுள்ளவர்களின் எதிர்பார்ப்பிற்கேற்ப ஈழ மக்களின் இன்னல்களை தமக்குரிய பேச்சாற்றலுடன் வரலாற்றுச் சான்றுகளுடன் எடுத்துரைப்பார்.

யாழ்ப்பாணத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தருமலிங்கம், ஆலால சுந்தரம் படுகொலை செய்யப்பட்டதை தொடர்ந்து புதுச்சேரியில் நடைபெற்ற கண்டனக் கூட்டத்தில் பங்குகொண்டு அப்படுகொலைகள் யாழ்ப்பாணத்தில் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதை எடுத்துரைத்தார்.

புதுச்சேரியின் அனைத்து அரசியல் தலைவர்களையும் நேரில் சந்தித்து இலங்கைத் தமிழர்களின்நிலை குறித்து எடுத்துரைத்துள்ளார். அந்த நட்பின் தொடர்ச்சியாக 2015 இல் புதுவையின் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற வே. நாராயணசாமி அவர்களைச் சந்தித்து வாழ்த்துக்களை தெரிவித்தார்.

அ. அமிர்தலிங்கம் நினைவு போற்றி நடைபெற்ற விழாவில் சிறப்புவிருந்தினராகப் பங்கேற்று 75 ஆம் ஆண்டு நினைவு மலரை வெளியிட்டு இணைய தளத்தையும் தொடங்கி வைத்தவர்.

இத்தகைய ஈர்ப்பின் காரணமாக தம் மகள் தாரகா மருத்துவக்கல்வி பயில விரும்பியபோது புதுச்சேரியில் உள்ள ஜிப்மர் மருத்துவக் கல்லூரியில் பயிலச் செய்தார். எம்.பி.பி.எஸ். முதல் படிப்பை முடித்த தாரகா 2017 டெல்லியில் உள்ள அனைத்திந்திய மருத்துவ ஆய்வு நிறுவனத்தில் பட்ட மேற்படிப்பு பயின்று வருகிறார்.

தாம் போராட்ட களத்தில் தமிழர் நலனை முன்னெடுத்த காலங்களில் அவர்தம் துணைவியார் பவானி அவர்கள் தமது மூன்று குழந்தைகளையும் திருச்சியில் வாடகை வீட்டில் குடியமர்த்தி சிறந்த கல்வி பயிலச் செய்தார். அவர் குழந்தைகள் மீது கொண்டிருந்த பற்றும் பாசமும் சிறந்த முறையில் கல்வி பயில காரணமாக அமைந்தது. தலைமகன் கலை அமுதன் திருச்சி கல்லூரியில் வணிகவியல் முதுகலைப் பயிற்று இலண்டன் மாநகரில் பணியாற்றினார். அண்மையில் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்து தந்தையுடன் அரசியல் பணிகளை மேற்கொண்டு வருகிறார்.

இரண்டாவது மகன் ஆரா அமுதன் இயந்திரவியல் பொறியியல் பட்டத்தினை காரைக்கால் பாரதியார் பொறியியல் கல்லூரியில் பயின்று பெங்களூரில் உள்ள நிறவனத்தில் பொறிஞராகப் பணி ஏற்றார். தற்போது தாய்லாந்தில் பணியாற்றி வருகிறார். இவர்தம் முயற்சியால் மாவட்ட புரத்தில் இராணுவத்தால் அழிக்கப்பட்ட இடத்தில் மீண்டும் வீடு கட்டப்பட்டுள்ளது.

"குறள்"

தந்தையின் இடையறா அரசியல் பணிகளுக்கு இடையூறு இல்லாமல் பிள்ளைகள் தத்தம் வழியில் செயலாற்றி வருகின்றனர்.

# மாவை ஒரு மாபெரும் சரித்திரம்!

"அகதிகளாக அடித்து விரட்டப்பட்டிருந்த எங்கள் மக்களைக் கண்டபோது நாங்கள் துடித்துப்போனோம். தலைகளில் காயம் பட்டோரும், கால், கைகள் உடைந்தோருமென எமது மக்கள் வந்திறங்கிய காட்சிகளை இப்போது கூட என்னால் மறக்க முடிவில்லை. அப்போது தான் அடக்கு முறைக்கெதிராக நாங்கள் குரல் கொடுத்தே ஆகவேண்டும் என்கிற ஓர்மம் என் மனதில் முளைவிடத் தொடங்கியது."

கொடி பிடித்தவர்கள், கொம்பிமுற்றவரகள் எலலாம் தம்மைப் பொராளிகள் என்றும் அரசியல் பிரமுகர்கள் என்றும் வரிந்து கட்டிக் கொண்டு நிற்கையில் என்றைக்கும் போல ஆரவாரமின்றி இருக்கும் ஒரு பெரும் சரித்திரம் மாவை. சோ. சேனாதிராஜா. முகப்புத்தகப் பதிவுகளுக்காகவும், மேடை முழக்கங்களுக்காகவும் தமிழ்த் தேசியம் பேசும் பலரிடைய சிறுவயது முதலே மூர்க்கமான போராட்ட குணமும், தீர்க்கமான தமிழ்த் தேசியச் சிந்தனையும் கொண்ட ஒருவர் தமிரசுக் கட்சியின் தலைவரான மாவை. சேனாதிராஜா தனது சிறு பராயம் முதல் தமிழர்களுக்கு எதிரான அடக்கு முறை குறித்து ஆழ்ந்த கவலை கொண்டு, அதற்கெதிராகப் பல முன்னெடுப்புகளை மேற்கொண்டு சிறைசென்று, பல இன்னல்களை அனுபவித்தவராவார். அவரிடம், அவரது வாழ்க்கை வரலாற்றைப் பதிவு செய்ய வேண்டும் என்ற எங்கள் எண்ணத்தை வெளிப்படுத்திய போது, வழக்கம் போல சிரித்தபடியே மறுத்துவிட்டார். ஆனாலும் நாங்கள் விடுவதாயில்லை. "ஐயா, இது உங்களுக்காகவோ அல்ல - எங்களுக்காகவோ அல்ல, நாளைய நமது சந்ததிக்காக" என்றோம். உடன்பட மறுத்தாலும், எங்களுடைய வற்புறுத்தலின் பேரில் உடன்பட்டுக் கொண்டார்.

இற்றைக்கு 62 வருடங்களுக்கு முன்னரே - தமிழ் இயக்கங்கள் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னரே அவரது அடக்கு முறைக்கெதிரான பயணம் ஆரம்பித்திருக்கிறது. அவருடைய அரசியல் பிரவேசம் பற்றி அவருடைய மொழிநடையிலேயே அப்படியே இங்கே தருகிறோம். மாணவப் பருவம் 1956 ஆம் ஆண்டு, மாவை வீமன் காமம் ஆங்கிலப் பாடசாலையில் நான் படித்துக் கொண்டிருந்தேன். கொழும்பு காலி முகத்திடலில் தனிச் சிங்களச் சட்டத்தை எதிர்த்து தமிழரசுக் கட்சியினால் பெரும் சத்தியாக்கிரகப் போராட்டம் ஒன்று நடத்தப்பட்டது. அந்த வேளையில் "பெரியவர்" (தந்தை செல்வா) அதனைத் தலைமையேற்று நடாத்தியிருந்தார். அந்தப் போராட்டத்தில் ஆட்சியாளர்களின் இராணுவம் மேற்கொண்ட கண்முடித் தனமான தாக்குதல்களில் எமது தலைவர்கள் பலர் படுகாயமடைந்திருந்தனர். அமிர்தலிங்கம் அவர்கள் காயத்துக்குக் கட்டுப் போட்டபடி, இரத்தக் கறைகளுடன் பாராளுமன்றத்துக்குச் சென்று உரையாற்றி இருந்தார்.

அப்போது எனக்கு14 வயது. காலி முகத்திடல் சம்பவங்கள் அரசல் புரசலாக எமக்குக் கிடைத்த வண்ணம் இருந்தது. நாங்கள் பாடசாலையில் இருந்த நேரம், வீமன்காமம் ஆங்கில பாடசாலையில் எமக்குக் கற்பித்த ஆசிரியர் ஒருவர் - பெயர் கூட இன்னும் எனக்கு ஞாபகம் இருக்கிறது. திரு. அரசரட்ணம் அவர்கள்,

1956 ஆம் ஆண்டு கலவரத்தில் அடி வாங்கியபடி - அதே உடுப்புடன் புகையிரதத்தில் வந்திறங்கி நேரடியாகப் பாடசாலைக்கே வந்திருந்தார். உடைகள்

முழுவதும் சேறும், கறையுமாக வந்திறங்கிய ஆசிரியரைக் கண்டதும், நாங்கள் அனைவரும் அதிபரின் அலுவலகத்தில் கூடி விட்டோம். அவர் தன்னுடைய அனுபவங்களைச் சக ஆசிரியர்களிடம் பகிர்ந்து கொண்டிருந்தார்.

நாங்கள் மிகவும் சிறியவர்களாக அரசரட்ணம் ஆசிரியருடைய பேச்சைக் கேட்டோம். சிறுபாண்மையினராகியத் தமிழர்களுக்கு நடந்தேறிய அட்டூழியங்களை அவர் விவரிக்க, விவரிக்க அவை எங்கள் அடி மனதில் ஆழமாகப் பதிந்து பெரும் தாக்கத்தை ஏற்படுத்தின.

அதன் பின்னர், 1958 ஆம் ஆண்டு கலவரம் இடம் பெற்ற போது, ஆயிரக்கணக்கான தமிழர்கள் தென்பகுதியிலருந்து அடித்து விரட்டப்பட்டபோது, தலை தப்பினால் போதும் என்று அணிந்திருந்த ஆடைகளுடன் மட்டும் காங்கேசன்துறைத் துறை முகத்தில் வந்திறங்கிய மக்களைக் காண நாங்கள் மாவிட்டபுரம் கந்தசாமி கோவிலின் முன்புறமாகக் கூடியிருந்தோம்.

அகதிகளாக அடித்து விரட்டப்பட்டிருந்த எங்கள் மக்களைக் கண்டபோது நாங்கள் துடித்துப் போனோம். தலைகளில் காயம் பட்டோரும், கால், கைகள் உடைந்தோருமென எமது மக்கள் வந்திறங்கிய காட்சிகளை இப்போது கூட என்னால் மறக்க முடியவில்லை. அப்போதுதான் அடக்குமுறைக்கெதிராக நாங்கள் குரல் கொடுத்தே ஆக வேண்டும் என்கிற ஓர்மம் என் மனதில் முளைவிடத் தொடங்கியது.

ஆண், பெண் பிஞ்சுகள் என்ற வேறுபாடின்றி அழுக்குப்படிந்த ஆடைகளுடனும், இன்னும் சிலர் இரத்தக் காயங்களுடனும் வந்தபோது, மாணவர்களாக இருந்த நாங்கள் அந்த மக்களை வரவேற்று ஆற்றுப்படுத்த முனைந்தோம். களைத்து விழுந்து வந்தவர்களுக்குத் தாக சாந்தி செய்யும் வகையில் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலுக்கு அருகில் இருந்த காணியில் நாங்களே ஏறி இளநீர் பறித்து களைப்படைந்து வந்த மக்களுக்கு தாக சாந்தி செய்திருந்தோம்.

நாங்கள் சிறுவர்களாக - மாணவர்களாக இருந்த போது இடம்பெற்ற இந்த இரண்டு சம்பவங்களும் எங்களை விழிப்படையச் செய்ததுடன் எங்களுக்கு போராட்டத்தின் மீது ஓர் ஈடுபாட்டை உருவாக்கியது.

அதன்பின், என்னுடைய உயர் கல்விக்காக நடேஸ்வராக் கல்லூரிக்கு வந்த பின்னர், 1961 ஆம் ஆண்டு சத்தியாக்கிரகப் போராட்டத்தின் போது, எல்லா ஊர்களிலிருந்தும் யாழ். நகரை நோக்கி மக்கள் கூடட்டம் கூட்டமாகக் கலந்து கொண்டிருந்தனர். அதன் போது, ஏற்கனவே 1956, 1958 கலவரங்களினால் உள்ளுக்குள்ளே கொதித்துக் கொண்டிருந்த எங்களுக்கு நேரடியாக - ஆக்க பூர்வமாகப் பங்களிப்பதற்கு வாய்ப்பளித்தது. மாணவர்கள் தனிப் பேரணியாகக் காங்கேசன் துறையில் இருந்து சென்றிருந்தோம்.

கிட்டத்தட்ட 3, 4 மாதங்களாக இலங்கை அரச நிர்வாகம் வடக்கு, கிழக்கில் முடங்கிப் போயிருந்தது. இதனால் கொதிப்புற்ற அரசாங்கம் அவசர காலச் சட்டத்தை அமுல் செய்து, சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டிருந்தவர்களைக் கைது செய்து சிறையல் அடைத்ததன் மூலம் அந்தச் சத்தியாக்கிரகத்தை முறியடித்திருந்தது.

இது மாணவர்கள் மத்தியில் பெரும் குமுறலை ஏற்படுத்தியிருந்தது. சமகாலத்தில் யாழ்ப்பாணத்தில் சிங்களப் பாடசாலைகளை நிறுவுவதிலும், ''சியவச'' அதிஷ்டலாபச் சீட்டுக்களை கட்டாயப்படுத்தி விற்பதிலும் அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கைகள் ''ஈழத் தமிழ் இளைஞர் - மாணவர் இயக்கம்'' என்ற ஒரு அமைப்பை நிறுவி போராட்டங்களை முன்னெடுப்பதற்கு வித்திட்டன.

(சுதந்திரன், இதழ் -04, 15 ஜுன் 2018. ப. 8)

## பகுதி -2

''கொடி பிடித்தவர்கள். கொம்பிழுந்தவர்கள்'' எல்லாம் தம்மைப் போராளிகள் என்றும் அரசியல் பிரமுகர்கள் என்றும் வரிந்து கட்டிக் கொண்டு நிற்கையில் என்றைக்கும் போல ஆரவாரமின்றி இருக்கும் ஒரு பெரும் சரித்திரம் மாவை. சோ. சேனாதிராஜா. முகப்புத்தகப் பதிவுகளுக்காகவும், மேடை முழுக்கங்களுக்காகவும் தமிழ்த் தேசியம் பேசும் பலரிடையே சிறுவயது முதலே மூர்க்கமான போராட்ட குணமும். தீர்க்கமான தமிழ்த் தேசியச் சிந்தனையும் கொண்ட ஒருவர் தமிழரசுக் கட்சியின் தலைவரான மாவை. சேனாதிராஜா தனது சிறு பராயம் முதல் தமிழர்களுக்கு எதிரான அடக்குமுறை குறித்து ஆழந்த கவலை கொண்டு. அதற்கெதிராகப் பல முன்னெடுப்புகளை மேற்கொண்டு சிறை சென்று பல இன்னல்களை அனுபவித்த அவரிடம், அவரது வாழ்க்கை வரலாற்றை பதிவு செய்ய வேண்டும் என்ற எங்கள் எண்ணத்தை வெளிப்படுத்திய போது, வழக்கம் போல சிரித்தபடியே மறுத்துவிட்டார். ஆனாலும் நாங்கள் விடுவதாயில்லை. ''ஐயா, இது உங்களுக்காகவோ அல்ல - எங்களுக்காகவோ அல்ல, நாளைய நமது சந்ததிக்காக'' என்றோம். உடன்பட மறுத்தாலும், நாங்கள் கேட்டுக்கொண்டதின் பேரில் உடன்பட்டுக் கொண்டார்.

இற்றைக்கு 62 வருடங்களுக்கு முன்னரே - தமிழ் இயக்கங்கள் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னரே அவரது அடக்குமுறைக்கெதிரான பயணம் ஆரம்பித்திருக்கிறது. அவருடைய அரசியல் பிரவேசம் பற்றி அவருடன் அளவளாவியதன் வெளிப்பாடாக அவரது மொழி நடையில் ''மாவை ஓர் மாபெரும் சிரித்திரம்'' தொடரின் இரண்டாவது பகுதி வெளிவருகிறது.

மாணவர் பருவத்தில் - பாடசாலைக் காலத்-தில் தமிழர்களுக்கு எதிராக இடம்பெற்ற அடக்கு முறைகளும, அதன் பின்னர் ஏதிலிகளாக அடித்து விரட்டப்பட்ட போதும் நாங்கள் கண்ட காட்சிகள் எம்மை அடக்குமுறைக்கெதிராகப் போராடத் தூண்டியிருந்தது.

தமிழ் மக்களுக்கு எதிரான அடக்குமுறைகளும், தாக்குதல்களும் ஒரு புறமிருக்க தமிழர் நிலங்களை ஆக்கிரமிக்கும் செயற்பாடுகளுக்கெதிராகவும் நாம் போராட வேண்டியிருந்தது. 1965 பொதுத் தேர்தலின் பின் தமிழரசுக்கட்சி தேசிய அரசாங்கத்தில் இணைந்திருந்த காலம், இளைஞர் அணி பெரும்பாலும் அதற்கு உடன்படாமலே இருந்து வந்தது. தமிழரசுக் கட்சியின் ஒவ்வொரு மாநாட்டிலும் நாங்கள் அதனைப் பதிவு செய்திருந்தோம். அது ஒரு முக்கியமான கால கட்டம், மாவட்டச் சபை கட்டமைப்புக்

குறித்து கட்சித் தலைமைக்கும் வாலிப முன்னணிக்கும் இடையில்கடும் கருத்து முரண்பாடு இருந்தது.

அந்தக் காலப்பகுதியில் தமிழர் தாயகப் பகுதிகளில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் முனைப்போடு முன்னெடுக்கப்பட்டு வந்தது. இன்றைக்குப் போலத்தான் கூட்டாட்சி என்று சொன்னாலும், தமிழர் பகுதிகளை - வளங்கொழிக்கும் மண்ணை திட்டமிட்டு பறிக்கும் முயற்சிகள் சூசகமாக இடம் பெற்றுக்கொண்டிருந்தது.

பண்டா - செல்வா ஒப்பந்தம், டட்லி - செல்வா ஒப்பந்தங்கள், அவற்றின் தமிழ் பேசும் மக்களுக்குச் சார்பாக இணக்கப்பாடு எட்டிய விடயங்கள் தொடர்பாக கட்சிக்கும் வாலிப முன்னணிக்கும் இடையில் பல சந்திப்புக்கள் இடம் பெற்றன. குறிப்பாக தமிழர் பிரதேசங்களில் தமிழ் பேசும் மக்களைக் குடியமர்த்துவது தொடர்பாக அரசாங்கம் உடன்பட்டுக் கொண்ட விடயம் தொடர்பில் எமக்கு விளக்கமளிக்கப்பட்டது.

தந்தை செல்வாவுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட பிரசாரங்களை முறியடிக்கும் வகையிலும் எமக்கு விளக்கமளிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் அப்போது வாலிப முன்னணியில் தலைவராக இருந்த அமரர் திருநாவுக்கரசு தலைமையில் இளைஞர்களுக்கும், மக்களுக்கும் விளக்கமளிக்கும் பல கூட்டங்களை ஏற்பாடு செய்து எமது பகுதிகளில் தமிழர்களைக் குடியேற்றுவதற்காக நாம் தீவிர பிரசாரங்களை மேற்கொண்டிருந்தோம். அவ்வேளையில் ;நான் வாலிப முன்னணியில் செயலாளராக இருந்தேன்.

கல்முனை, உடுவில் மாநாடுகளில் அதனை வலியுறுத்தி படித்த வாலிபர் குடியேற்றத் திட்டங்களை நடைமுறைப்படுத்தியது வாலிப முன்னணி, சிங்களக் குடியேற்றங்களைத் தடுக்கும் அதே வேளையில் தமிழர்களின் குடியிருப்புக்களை விஸ்தரிக்கும் படித்த வாலிபர் திட்டங்களில் குடியேற்றங்களை ஊக்குவித்து. கணிசமான அளவு தமிழ் இளைஞர்கள் வன்னியில் உடையார்கட்டு, கிளிநொச்சி, தருமபுரம், விசுமெடு, அக்கராயன் பகுதிகளில் சென்ற குடியேறினர். அங்கு போயும் நாங்கள் தமிழரகக் கட்சியின் கூட்டங்களை ஒழுங்குபடுத்தியிருந்தோம். அப்போது குடியேறிய பல குடும்பங்கள் இப்போதும் அங்கு குடியிருக்கிறார்கள் - அவர்களின் வழி வந்தவர்கள், குடும்பத்தினர் இன்னமும் அங்கு இருக்கிறார்கள்.

திருகோணமலை, முல்லைத்தீவு பகுதிகளில் சிங்களக் குடியேற்றங்களைத் தடுப்பதற்கும், தமிழர் தாயகப் பகுதிகளைக் காப்பதற்கும் தாம் கடுமையாகப் போராட வேண்டியிருந்தது. சிங்களக் குடியேற்றங்களைத்தடுக்கும் அதே வேனையில் தமிழர்களின் குடியிருப்புக்களை விஸ்தரிக்கும் நடவடிக்கைகளையும் தமிழரசுக் கட்சியின் இளைஞர் அணி முன்னெடுத்திருந்தது.

அதே காலப்பகுதியில் திருகோண மலை கித்துலூற்று (10ஆம் கட்டை) பகுதியில் அரசு சிங்களக் குடியேற்றத்துக்குத் திட்டமிடப்பட்டிருந்த போது. தமிழரசுக் கட்சி, அப்போது அரசில் அங்கம் வகித்த அமைச்சர் திருச்செல்வம் குறிப்பாக தந்தை செரவா, அண்ணர் அமிர்தலிங்கம் ஆகியோர் எமக்குத் தேவையான ஆதரவைத் தந்தார்கள். அப்போது உயர் தர மாணவர்களாக இருந்த நானும் 150 இளைஞர்களும்

இங்கிருந்து, திருகோணமலைக்குச் சென்று தற்காலிக கொட்டகைகளை அமைத்துக் குடியிருந்த தோடு, அதற்கு அருகில் வேப்பங்குளம், பன்குளம் பகுதிகளில் கடியேறியிருந்த இளைஞர்களும், நாங்களுமாக வேறு இடங்களிலும் தமிழர் குடியிருப்புகளை விஸ்தரிப்பதற்கான நடவடிக்கைகளில் இறங்கினோம். திருமலை அரச அலுவலகததில் காணிப் பகுதியில் கடமையாற்றி மாணிக்கசபாபதி அண்ணார் எமக்கு உதவியாக இருந்தார். மண்ணினால் வீடுகள் அமைத்ததோடு, அங்கிருந்த மரங்கள் தடிகளைக் கொண்டும், சாம்பல் தீவில் இருந்து கொண்டு வந்த கிடுகுகளைக் கொண்டும் கூரைகளையும் அமைத்தோம். இம் முயற்சிகளில் திருநாவுக்கரசு சிவகாருணியம், முத்துசுப்பிரமணியம், விசுவப்பா, மகேந்திரன், சிறிஸ்கந்தராசா, ஆகியோரை, மறந்து விடமுடியாது, ஏற்கனவே சிங்களவர்களை அந்தப் பகுதியில் குடியேற்றுவதற்குத் திட்டமிட்டிருந்த படியால், அப்போதைய அரசாங்க அதிபர், காணி அதிகாரிகள் எங்களுக்கெதிராகக் காவல் துறையில் முறைப்பாடுசெய்தார்கள். அந்த வேளையில் நானும், அமரர் திருநாவுக்கரசுவும் தமிழரசுக் கட்சியின் செயற்குழுக் கூட்டத்துக்காக யாழ்ப்பாணம் வந்திருந்தோம்.

யாழ்ப்பாணத்தில் இருந்து, நாங்கள் அன்றிரவே திருகோணமலைக்குத் திரும்பிச் சென்றபோது அங்கு குடியேற்றங்களை அமைத்த தமிழ் இளைஞர்கள் அத்தனை பேரும் காவல்துறையினரால் கைது செய்யப்பட்டிருந்தார்கள். நாங்கள் அமைத்திருந்த அத்தனை வீடுகளும் எரியூட்டப்பட்டன. அங்கிருந்த நூற்றக்கணக்கான தமிழ் இளைஞர்கள் உப்புவெளி காவல் நிலையத்திலும், திருமலை நகர காவல் நிலையத்திலும் தடுத்து வைத்திருந்தார்கள். இரவு 10 மணியிருக்கும் நாங்கள் இரண்டு காவல் நிலையங்களுக்கும் சென்ற தடுத்து வைக்கப்பட்டவர்களைச் சந்தித்ததோடு, உணவையும் கொடுத்தோம். அதற்கு உதவியாயிருந்த மொறிஸ் மைனர் லோறன்ஸ் சாரதி அவர் வாகனம் ஈ.எல். 6990 மறக்க முடியாது.

அந்த வேளையில் தான் சம்பந்தன் ஐயாவை நாங்கள் சந்தித்தோம். அவர் ஒரு வழக்கறிஞர் என்ற வகையில் தடுத்துவைக்கப்பட்டிருந்த இளைஞர்களைப் பிணையெடுப்பதற்காக நாம் அவருடன் பேசினோம். நீதிமன்றத்தில் வழக்குகளில் உதவியாய் இருந்தார்.

அந்த சில தினங்களில் மூத்த தலைவர்களான அமிர்தலிங்கம், தர்மலிங்கம் உட்பட தமிழரசுக் கட்சியின் பிரமுகர்கள் நேரில் வந்து எங்களுக்கு ஆறுதல் தந்தார்கள். கித்துலூற்று நிலத்தில் நாம் குடியிருந்தோம். திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம் தடுக்கப்பட்டது.

அதே சமகாலத்தில் தான் திருகோணமலை காளி கோவிலுக்கு அருகில் பாரதி விவசாயக் கழகம் என்ற பெயரில் அமைப்பொன்றை நிறுவி நாம் எமது நடவடிக்கைகளை முன்னெடுத்தோம்.

இன்றைக்கும் போல அன்றைக்கும் படைகளின் நில ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளும் இடம்பெற்றன. திருகோணமலை உவர்மலைப் பகுதியில், ஆகாயப் படையினர் முகாம் அமைக்கும் நடவடிக்கைகளை, நில ஆக்கிரமிப்பை

மேற்கொண்டார்கள். அப்போராட்டங்களில் நாமும் சங்கமித்திருந்தோம்.

அந்த வேளையில் ஆகாயப்படை முகாமுக்கான ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை எதிர்த்து, நிலமீட்புப் போராட்டத்தில் ஈடுபட்டோம். குறிப்பாக வீருசுப்பிரமணியம், ஈழத்துநாதன், நாதன் மாஸ்டர் ஆகியோர் தலைமை தாங்கி மிகத் தீவிரமாகப் போராடியமையை மறக்க முடியாது. அந்தப் போராட்டம் வெற்றியும் அளித்தது. ஆகாயப் படையினால் ஆக்கிரமிக்கப்பட்ட உவர் மலை நிலத்தில் இருந்து ஆகாயப் படை அகற்றப்பட்டதோடு, இப்போது அது தமிழர் பிரதேசமாக இருக்கின்றது.

இங்கே வடக்கில் வன்னி, கிளிநொச்சி பிரதேசங்களில் தமிழர் குடியிருப்புகளை விஸ்தரித்த அதே வேளையில், கிழக்கில் சிங்களக் குடியேற்றங்களைத் தடுத்து நிறுத்தி - ஆக்கிரமிப்பை உடைத்தெறிந்த பெருமை தமிழரசுக் கட்சியின் வாலிப முன்னணிக்கு பெரும் பங்குண்டு.

அதேவேளை முல்லைத்தீவு, நெடுங்கேணி, லொர் தோட்டம், கென் தோட்டம், செம்மலை, கொக்குத் தொடுவாய், நாயாறு பிரதேசங்களிலும் பணி இடம் பெற்றது.

(சுதந்திரன், இதழ்- 5. 10 அக்டோபர் 2018. ப. 7)

## பகுதி -3

திருகோணமலையில் தென்னமரவாடிக்கும் - முல்லைத்தீவு கொக்கிளாய், கொக்குதொடுவாய், நாயாறு பிரதேசங்களுக்கிடையில் பாலம் அமைப்பது அல்லது படகுப் போக்குவரத்து அமைப்பது பற்றிப் பேச்சுக்கள் நடைபெற்றன - அதற்கான திட்டங்களும் தயாராகியிருந்தன.

நாயாறு கடற் பிரதேசத்தில் தென்னிலங்கை மீனவர் நீர்கொழும்பு, சிலாபப் பகுதிகளிலிருந்து மீன்பிடித் தொழில் செய்ய வருகின்றமையால் அப்பகுதியில் நிரந்தரக் குடியேற்றங்களாகிவிடக் கூடாது என்பதில் நாங்கள் கவனமாக இருந்தோம். அதே காலத்தில் முல்லைத்தீவு மணலாறுப் பிரதேசத்தில் அநுராதபுரம், மதவாச்சிப் பிரதேசங்களிலிருந்து குற்றவாளிகளாகத் தண்டனை பெற்ற சிங்களவர்களைக் குடியமர்த்துவதற்கு வெலி ஓயா மகாவலித் திட்டம் அப்போதைய நீர்ப்பாசன அமைச்சராகவிருந்த காமினி திசநாயக்கவால் திட்டமிடப்பட்டிருந்தது. அத் திட்டத்தின் கீழ் குடும்பமொன்றுக்கு ஒரு லட்சம் ரூபா வீதம் 40 ஆயிரம் குடும்பங்களை குடியேற்றத் திட்டமிடப்பட்டிருந்ததையும் அறிந்திருந்தோம்.

இப்பகுதிகளில் போர்க்காலங்களில் கூடச் சென்றிருக்கின்றோம். தமிழ் நிலம் பாதுகாக்கப்பட வேண்டும் அல்லது தமிழர் ஆட்சிக்கு நிலமில்லாமல் தளம் போய்விடும் என்ற அச்சம், கேள்வி எம்மிடமிருந்தது. தமிழரசுக் கட்சியினால், தமிழர் விடுதலைக் கூட்டணியால் தந்தை செல்வாவின் எதிர்ப்பால் மகாவலிப் பிரதேசத்தில் 3000 சிங்களக் குடும்பங்கள் குடியேற்றத்துடன் மட்டுப்படுத்தப்பட்டிருந்தன.

இளைஞர்களாகிய நாம் இப்பிரதேசங்களில் சென்றிருந்த காலங்களை

நாடாளுமன்ற உறுப்பினர் செல்லத்தம்பு, ஜெகநாதன் ஆசிரியர் நன்கு அறிவர். கனடிய நாட்டில் தமிழர் அமைப்புக்கள் தென்னமரவாடி வீடமைப்புத் திட்டத்திற்காக ஒரு லட்சம் கனேடிய டொலர் திரட்டும் வைபவத்தில் பங்குபற்றியிருந்தேன். மகிழ்ச்சியாக இருந்தது. எனது செலவுக்காக தந்திருந்த 1000 டொலர்களைத் திருமலைக்காக நானும் கொடுத்திருந்தேன். அந்தளவுக்கு தமிழர் பகுதிகளில் சிங்களக் குடியேற்றங்கள் அமைவதைத் தடுப்பதிலும், தமிழர்களைக் குடியமர்த்தி தமிழர் குடியிருப்புத் திட்டங்களை விஸ்தரிப்பதிலும் தமிழரசுக் கட்சியின் இளைஞர்கள் அர்ப்பணிப்புடன் செயற்பட்டனர்.

சிங்கள மயமாக்கலின் ஒரு படியாக சிங்களக் குடியேற்றங்கள் இடம்பெற்று வருகின்ற போது அவற்றைத் தடுப்பதில் கரிசனை கொண்டிருந்த எமக்கு, தமிழர் தாயகப் பகுதிகளில் சிங்களப் பாடசாலைகளை நிறுவி, அவற்றினூடாகப் பௌத்த போதனை, சிங்கள மொழித் திணிப்பு என்பனவும் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டிருந்தன.

1968 காலப் பகுதியில் ஐ.தே. கட்சி அரசில் இரிய கொல்கம் கல்வி அமைச்சராகவிருந்த காலத்தில் யாழ்ப்பாணத்தில் அச்சுவேலி, கரவெட்டி, அல்வாய்ப் பிரதேசங்களில் பௌத்த பாடசாலைகள் நிறுவப்பட்டிருந்தன. அக்காலத்தில் கொக்குவில் ஞானோதய பாடசாலையில் ஈழத்தமிழ் இளைஞர் இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது. அரசியல் கட்சி சாராமல் ஆரம்பிக்கப்பட்ட அந்த அமைப்பில் நூற்றுக் கணக்கான இளைஞர்களும், மாணவர்களும் இணைந்தனர்.

வவுனியாவைச் சேர்ந்த தேச இலங்கை மன்னன் தலைவராகவும், நான் செயலாளராகவும், கொக்குவில் பரமசாமி பொருளாளராகவும் தெரிவு செய்யப்பட்டோம். அந்த இளைஞர்களில் மைக்கேல் தம்பி நாயகத்தை மறந்துவிட முடியாது. அவர் இப்பொழுது லண்டனில் இருக்கிறார். யாழ்ப்பாணத்தில் அவரது வீட்டில் தான் எங்கள் கூட்டங்கள் நடைபெறுவது வழக்கம். திடீர் திடீரென அந்த வீட்டுக்குள் பொலிஸார் புகுந்து அடித்துத் துரத்துவார்கள். அவ்வேளைகளில் காயம் கூடப் பட்டிருக்கிறோம். அவ்வேளையில் காயப்பட்டு அவதிக்குள்ளானவர்களில் மைக்கேலும் ஒருவர்.

அவ்வாறான கூட்டங்களுக்கு தம்பி சிவகுமாரனும் வருவார். மிகவும் அமைதியான சுபாவம் கொண்டவர். ஆனாலும் அந்தக் காலத்திலேயே அடக்கு முறைக்கெதிராகக் கடும் போக்கான சிந்தனையுடையவராக இருந்தார்.

கல்வி அமைச்சின் சிங்கள பௌத்த திணிப்புக்களுக்காக எத்தனையோ ஊர்வலங்கள், போராட்டங்களில் ஈடுபட்டிருக்கிறோம். எங்கள் பகிரங்கக் கூட்டங்கள் குருநகர், கிறீன் பீஃல்ட் விளையாட்டு மைதானத்தில் நடைபெறும். அப்போது யாழ்ப்பாண பொலிஸ் அத்தியட்சகராக இருந்த சுந்தரலிங்கத்தைப் பலமுறை சந்தித்திருக்கிறோம். அமைதியாகப் போராடுங்கள் என அனுமதி தருவார்.

பாடசாலைக் காலங்களிலும், இளைஞர் இயக்கக் காலத்திலும் பல தடவைகள் கைது செய்யப்பட்ட நாங்கள் யாழ்ப்பாணம் கோட்டைக்குள் ''சிங்ஸ் கவுஸ்''க்குக் கொண்டுசெல்லப்பட்டு விசாரிக்கப்பட்டிருக்கிறோம். உளவுத் துறையினரின் விசாரணைகள் அங்கு தான் இடம்பெறுவது வழமை. ஒரு சம்பவத்தை இன்னமும்

என்னால் மறக்க முடியாது. யாழ்ப்பாணம் சிறையிலடைக்கப்பட்டிருந்த ஒரு நாள் இரவு - பொலிஸ் சிறையிலே பல குற்றவாளிகளுடன் என்னையும் பூட்டி விட்டார்கள். அப்போதைய பொலிஸ் பொறுப்பதிகாரி சுந்தரலிங்கம் இரவு பத்துமணிக்கு அங்கு வந்தார். வந்தவர் எனக்குத் தரப்பட்ட உணவைப் பார்த்தார். அவருக்கு திருப்தி இல்லை. வேறொரு உணவு எடுப்பித்துத் தந்தார். உடனடியாகத் தனி அறையில் என்னை வைக்க உத்தரவிட்டார்.

இரிய கொல்லையினாலும், வைரமுத்துபௌத்த சங்க யாழ். தலைவரினாலும் நிறுவிய பௌத்த பாடசாலைகளுக்கு நாம் சென்றோம். தம்பி சிவகுமாரன், புதுவை இரத்தினதுரையும் ஆகியோரும் அப்போது உடனிருந்தனர். பௌத்தததிற்கும், சிங்களத்திற்கும் எம் மக்களை மாற்ற எடுத்த நடவடிக்கைகளுக்கு எதிராகத் தீ வைப்பு முதலான கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

ஆனால், அந்தப் பௌத்த பாடசாலைக்குச் சென்ற போது எமக்கு ஆச்சரியம் மேலிட்டது. சிவன், சரஸ்வதி, முருகன் படங்களை அங்கிருந்த மாணவரும் பெற்றோரும் வைத்து வழிபடுவதைப் பார்த்தோம். அவர்கள் நெற்றியல் விபூதி தரித்திருந்தனர். புத்தர் படத்தை அங்கு பார்க்க முடியவில்லை. சிங்களம் படிக்க விரும்பாதவர்களையே நாம் கண்டோம்.

அங்கிருந்த மக்களிடம் பௌத்தத்திற்கோ, சிங்களத்திற்கோ மாறப்போகிறீர்களா என்று நாம் கேட்டபோது, அம்மக்கள் - குறிப்பாகத் தாயமார் பெற்றோர் "எமக்கு விருப்பமில்லை. இங்கு கொண்டு விடப்பட்டுள்ளோம்" என்றனர்.

அதன்பின்னர் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சி. கதிரவேற்பிள்ளை முதலானோர் சைவ தமிழ்ப் பாடசாலைகளைத் திறந்ததாக அறிந்து மகிழ்ச்சியடைந்தோம். அதே வேளையில் பரஞ்சோதி முதலானோர் அரசின் மதமாற் நடவடிக்கைகளுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்தனர் எனவும் அறிந்தோம்.

அக் காலத்தில் கூறிய நடவடிக்கைகள், தீண்டாமை போன்றவற்றிக்கெதிராக தந்தை செல்வா தலைமையில் தமிழரசுக் கட்சித் தலைவர்கள் காங்கேசன் துறையிலிருந்து பாதயாத்திரையாக ஊரெல்லாம் சென்று பிரசாரஞ் செய்தனர். நாமும் இளைஞர்களும் இணைந்து கொண்டோம். அக்காலங்களில் ஆலயங்களில் பின் தங்கிய மக்கள் உள் சென்று வழிபட தடையிருந்தது. தேநீர் கடைகளில் பாத்திரத்தில் வேறுபாடிருந்தது. முடி திருத்துமிடங்களில் இடமில்லை. பாடசாலைகளில் வாங்கில் இடமில்லை. இவற்றிற் கெதிராகவும் நாம் போராட வேண்டியிருந்தது.

(சரித்திரம் தொடரும்)

(சுதந்திரன், இதழ் - 6. 19 டிசம்பர் 2018. ப. 5)



## புதுச்சேரியில் மாவை. சோ. சேனாதிராஜா





இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர்கள் தர்மலிங்கம், ஆலால சுந்தரம் நினைவஞ்சலிக் கூட்டம் புதுச்சேரியில் நடைபெற்றது. பாஞ். இராமலிங்கம், சிவ. கண்ணப்பா, மாவை. சோ. சேனாதிராஜா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.





அ. அமிர்தலிங்கம் எழுதிய இலட்சிய இதயங்களோடு நூலினை முதல்வர் தெ. ராமச்சந்திரன் வெளியிட மாவை. சோ. சேனாதிராஜா பெற்றுக்கொண்டார். அருகில் வேளாண் அமைச்சர் இரா. கமலக்கண்ணன், கல்வி அமைச்சர் நா. மணிமாறன், ச. பரதபுண்ணியன், பாஞ். இராமலிங்கம் உள்ளனர்.









அனைத்திந்தியத் தமிழ் எழுத்தாளர்கள் சங்க விழாவில் மாவை. சோ. சேனாதிராஜா சிறப்புரை. விழாவில்





மாவை. சோ. சோனாதிராஜா  புதுச்சேரியில் உரை





பாவேந்தர் தின விழாவில் மாவை. சோ. சோனாதிராஜா





ந. நாகமுத்து அவர்களின் பிறந்தநாள் நிகழ்வில் மாவை. சோ. சேனாதிராஜா





புதுச்சேரியில் நடைபெற்ற அமிர்தலிங்கம் பவழவிழா மலர் வெளியீடு மற்றும் அ. அமிர்தலிங்கம் இணையத் தளம் தொடக்க விழாவில்  மாவை சோ. சோனாதிராஜா, கல்வி அமைச்சர் க. லட்சுமிநாராயணன், நீதியரசர் இரா. கோவிந்தராஜன், துபாய் குழந்தை, ஆ.ச. அந்தொணிசாமி அழகன், பாஞ். இராமலிங்கம் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.




மாவை. சோ. சோனாதிராஜா முதல்வர்
தெ. இராமச்சந்திரன் அவர்களுடன்



மாவை. சோ. சோனாதிராஜா க. லட்சுமிநாராயணன்
அவர்களுடன்



அமைச்சர் ந. மணிமாறன் அவர்களிடம் அமிர்தலிங்கம்
எழுதிய இலட்சிய இதயங்களோடு... நூலினை பாஞ்.
இராமலிங்கம் கையளித்தத் தருணம்



மாவை. சோ. சேனாதிராஜா அமிர்தலிங்கம் இணைய
தளத்தைத் தொடங்கி வைத்து உரை



பேராசிரியர் மம்தா தாஸ் மாவை. கோ. சேனாதிராஜா
அவர்களை வரவேற்றல்





புதுச்சேரி உளவியல் சங்கத்தன் 7ஆவது தேசிய மாநாட்டில் மாவை. சோ. சேனாதிராஜா பங்கேற்றுச் சிறப்புரை



அனைத்திந்திய தமிழ் எழுத்தாளர்கள் சங்க விழாவில் மாவை. சோ. சேனாதிராஜா சிறப்புரை. நீதியரசர் எஸ். இராமலிங்கம் தலைமை வகித்தால்



அனைத்துலக அறக்கோட்டம் நிகழ்வில் மாவை. சோ. சேனாதிராஜா



புதுச்சேரியில் நடைபெற்ற அ. அமிர்தலிங்கம் பவழ விழாவில் பங்கேற்றுச் சிறப்பித்தமை (07.11.2002)



புதுவை, காலாப்பட்டில் நடைபெற்ற இலங்கைத் தமிழர் ஆதரவுக் கூட்டத்தில் பங்கேற்றமை



அனைத்துலகு அறக்கோட்டம் விழாவில் பங்கேற்றுச் சிறப்பத்தமை



அமிர்தலிங்கம் அவர்கள் புதுச்சேரி வருகை தந்த தருணம்



மாண்புமிகு முதலமைச்சர் ந. ரங்கசாமி அவர்களுடன் சந்திப்பு



பிரெஞ்சு பாராளுமன்ற உறுப்பினர் பெர்னார் போல் மாவை. சோ. சேனாதிராஜா அவர்களுக்கு அளித்த வரவேற்பு



அனைத்திந்திய தமிழ் எழுத்தாளர்கள் சங்கம் சார்பில் மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் ந. ரங்கசாமி அவர்கள் மாவை. சோ. சேனாதிராசா அவர்கள்கு ஈழ அண்ணல் விருது வழங்கிச் சிறப்புரை



மாண்புமிகு முதல்வர் வெ. வைத்திலிங்கம் அவர்களுடன் மாவை. சோ. சேனாதிராஜா, கலைமாமணி விக்கிரமன் பாலபாரி பாலசுப்பிரமணியன் சந்திப்பு





புதுவை இலக்கியச் சங்க விழாவில் பங்கேற்றுச் சிறப்பித்தமை







பாஞ். இராமலிங்கம், மாவை. சோ. சேனாதிராஜா &காந்தளகம் சச்சிதாநந்தம், துணைநிலை ஆளுநர் நாகேந்திர நாத் ஜா அவர்களைச் சந்தித்த தருணம்



பாஞ். இராமலிங்கம், மாவை. சோ. சேனாதிராஜா & சிவ. கண்ணப்பா (1984)

## 12 ஆவது உலகத்தமிழ்ப் பண்பாட்டு இயக்க மாநாடு ஜெர்மனி 2014













உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கச் சிறப்பு மாநாடு, புதுச்சேரி 2016







உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கம் சிறப்பு மாநாடு - புதுச்சேரி (2016)









புதுச்சேரியில் நடைபெற்ற உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் சிறப்பு மாநாட்டில் மாவை. சோ. சேனாதிராஜா சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றார்











மலர் - 3

# கட்டுரைகள்



# தமிழனுக்குச் சுயநிர்ணய உரிமை வேண்டும்

அ. அமிர்தலிங்கம்



இந்தியாவில் மொழிவாரியாக மாகாணங்கள் பிரிக்கப்படவேண்டும் என்று கிளர்ச்சி நடந்து, அப்படியே மாகாணங்கள் பிரிக்கப்படுவதையிட்டு விசாரணைக்கு ஒரு குழு நியமிக்கப்பட்டு, விசாரணை நடந்துவரும் இச்சமயத்தில், இலங்கையின் மொழிப் பிரச்சினையைத் தீர்க்க வழி என்ன என்பதை ஆராய்வது ஏற்புடையதாகும். இலங்கையில் மூன்று பெரிய சமூகங்கள் உண்டாயினும், மொழி வாரியில் சிங்களம் பேசும் மக்களும் தமிழ் பேசும் மக்களும் என இரு பிரிவுகளே உண்டு. இக்கட்டுரையில் தமிழர் என்று குறிப்பிடும்போது தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் எல்லோரையும் அவர்கள் இந்துக்களாக இருந்தாலென்ன, கிறிஸ்தவர்களாக இருந்தாலென்ன, முஸ்லிம்களாக இருந்தாலென்ன அது குறிக்கும்.

இலங்கை அந்நியர் ஆட்சியின் கீழ் இருந்த காலத்தில், அந்நிய மொழியிலேயே அரசாங்க அலுவல்கள் நடத்தப்பெற்ற காலத்தில் ,சிங்களமோ தமிழோ அரசமொழி என்ற பிரச்சினை எழவேயில்லை. இந்நாட்டிற்குச் சுதந்திரம் கிடைத்திருப்பதாகச் சொல்லப்படும் இக்காலத்தில் அதிகாரம் பெரும்பான்மையராகிய சிங்களம்பேசும் மக்களின் கைக்கு வந்திருக்கும் பொழுது, இவ்வாட்சியின் கீழ்த் தமிழருடைய நிலை என்று என்ற வினா எழுவது இயற்கையே. இவ்வினாவிற்குத் தங்களது வயிற்றுப்பிழைப்பையே பெரியதாகக் கருதும் தலைவரென்பார் சிலர், சிங்களவர், தமிழர் என்ற வேற்றுமை பாராட்டக்கூடாது. இலங்கையர் என்ற முறையில் எல்லோருடைய கைக்குமே அதிகாரம் மாறி இருக்கிறது. எல்லோரும் ஒத்துழைப்போம் என உபதேசம் செய்கிறார்கள். இது மேலே எழுப்பப்பட்ட வினாவிற்கு விடையாகாது. தன் தலையை மண்ணில் மறைத்துவிட்டதாக கருதும் தீக்கோழியின் செயலையே அது ஒக்கும். ஐரோப்பாவில் வசிப்பவர் ஐரோப்பியர் என்று சொல்வதைப்போல, இலங்கையில் வசிப்பவர் இலங்கையர் என்று சொல்லலாம். ஆயினும் ஐரோப்பியர் என்ற தோரணையில் எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும், என்று சொல்லி தொகையில் கூடிய ஜெர்மனியர் பலத்தில் குறைந்த இனத்தவரை ஆட்சி செய்தல் எவ்வளவு அநியாயம்? இலங்கையர் என்று சொல்லி சிங்களவர் தமிழரை ஆட்சி செய்தல் எவ்வளவு அநியாயமாகும்? இலங்கையர் என்ற தேசிய இனம் உலகத்தில் ஒரு பொழுதும் இருந்ததில்லை; இருக்கப் போவதுமில்லை. ஒரு இனம் என்று சொல்வதற்கு ஒரு மக்கள் கூட்டத்தவரிடையே மொழி, பண்பாடு, சமயம், சரித்திரத்தின் மூலம் வரும் ஒற்றுமை - இவை அவசியம் வேண்டும். இவ்வடிப்படையில் ஆராய்ந்தால் இலங்கையில் இரு இனங்கள் இருப்பது தெளிவு. இரு இனத்தவர்களும் இரு மொழிகளைப் பேசுகின்றனர். சிங்களவர் தாங்கள் ஆரியர் என்றும்

தமிழனுக்குச் சுயநிர்ணய உரிமை வேண்டும் வெளியீடு; இலங்கை தமிழ் அரசுக் கட்சி யாழ்ப்பாணம் மாவட்டக்கிளை

அந்நாகரிகத்திலிருந்தே தங்கள் நாகரிகம் வளர்ச்சியடைந்தது என்று கூறும்போது, தமிழரோ தாங்கள் உலகத்தில் மிக முற்பட்ட திராவிட இனத்தைச் சேர்ந்தவர்கள் என்று கூறிப் பெருமையடைகின்றனர்.

ஆரியராவது திராவிடராவது என்று கூறுவோரும் கலாசாரத்தைப் பொறுத்தவரை, இரு இனங்களுக்கும் வேற்றுமை உண்டு என்றே கூறுகிறார்கள். சமயத்தைப் பெறுத்தவரை, சிங்களவரிற் பெரும்பாலானோர் பௌத்தர்களாகவும், தமிழரில் அதிகமானோர் சைவர்களாகவும் இருக்கின்றனர். இந்நாட்டின் சரித்திரத்தை ஆராய்ந்தால் சிங்களவரும் தமிழரும் தனித்தனியாகத் தங்கள் அரசினை வைத்து நடாத்திச் சென்றது புலப்படும். அவர்கள் ஒருவரின் மேலொருவர் போரிட்டு சில காலம் ஒருவரை ஒருவர் ஆண்ட காலங்களிலன்றி ஐரோப்பியர் ஆட்சிக்காலத்தின் முன், ஒரு பொழுதும் ஒரு அரசின் கீழ் இருக்கவில்லை.

சமீபத்தில் மகியங்களை கோபுர திருத்தவிழாவில் பேசிய நிதிமந்திரியார் திரு ஜெ.ஆர். ஜயவர்த்தனா இவ்விரு இனங்களுக்குமிடையே இருந்த வேற்றுமையை மிகவும் தெளிவாகக் கூறியிருக்கின்றார். சிங்கள இனத்தின் வெற்றி வீரன் துட்டகைமுனு இங்கிருந்துதான் தமிழ் மன்னன் எல்லாளன் மேல் படையெடுத்துச் சென்றான் என்று கூறினார். அச்சரித்திரம் போதிக்கும் பாடம் இதுதான். சிங்களவரும் தமிழரும் ஒரே அரசின் கீழ் ஒற்றுமையாக ஒரு போதும் இருக்கவில்லை. வியாபாரம், உத்தியோகம் முதலிய பல நோக்கங்களையிட்டுச் சில சில இடங்களில் தமிழரும் சிங்களவரும் கலந்து வாழ்ந்த போதிலும், பொதுவாக தமிழர் இலங்கையின் வடகீழ்ப்பாகங்களிலும், சிங்களவர் தென்மேற்குப் பாகங்களிலும் பிரிந்தே வாழ்கின்றனர். இவ்விரு இனங்களுக்கும் பொருளாதாரம் என்ற ஒரு துறையிலேயே ஒற்றுமை இருக்கிறது. வடபகுதிப்புகையிரதப் பாதை திறக்கப்பட்ட பின்னரே இந்த ஒற்றுமை ஏற்பட்டது. இற்றைக்கு ஐம்பது வருடங்களுக்கு முன் தமிழர்களுடைய வியாபாரம், பொருளாதாரத் தொடர்புகள் எல்லாம் வடபகுதித் துறைமுகங்கள் மூலம் தமிழ்நாட்டுடன் இருந்தனவேயன்றிச் சிங்கள நாட்டுடன் அல்ல. ஐரோப்பியர் இலங்கையைக் கைப்பற்றிய பின்னர், தங்களுடைய வருவாயை நாடி சிங்கள நாட்டில் தேயிலை, கோப்பி, இரப்பர் முதலியவற்றைப் பயிரிட்டனர். அவற்றை ஏற்றுமதி செய்வதற்கு, அண்மையிலுள்ள துறைமுகமாகிய கொழும்பை அபிவிருத்தி செய்து அதனையே தலைநகராகவும் ஏற்படுத்தினர். வியாபாரம் முழுவதும் ஒரே துறைமுகத்தின் மூலம் நடந்தாலே அத்துறைமுகம் விருத்தியடையும் என்ற எண்ணத்தால் வடபகுதித் துறைமுகங்களை மூடினர். அவற்றின் மூலம் வியாபாரம் செய்து பிழைத்து வந்த ஆயிரக்கணக்கான தமிழர் தம் வேலையை இழந்தனர். மேலும் தமிழ் மாகாணங்களில் உற்பத்தியாகும் பொருள்கள் ஐரோப்பியருக்கு வருவாயைக் கொடுக்காததால் அம்மாகாணங்கள் கவனிப்பாரற்று காடடர்ந்து, குளங்கள் தூர்ந்து அவற்றின் மூலம் சீவியம் நடத்தி வந்த தமிழர் வறுமைப்பட ஏதுவாயிற்று. இவற்றால் தம் சீவனத்தின் பொருட்டு, தமிழர் ஆங்கிலம் கற்று மலாய் நாட்டிற்கும் சிங்கள நாட்டிற்கும் செல்ல வேண்டியதாயிற்று. கப்பலோட்டிய தமிழன் பேனா ஓட்டியானான். திரைகடலோடித் திரவியம் தேடிய தமிழன், அடிமை வேலை தேடி அந்நிய நாடுகளில் அலையலானான், இலங்கை வாழ் தமிழர் பொருளாதாரத் துறையில் சிங்கள நாட்டை ஓரளவிற்கு நம்பியிருக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. அந்நியர் ஆட்சியின் கீழ் தமிழ் மாகாணங்கள் கவனிக்கப்படாது போனதன் விளைவே இதுவாகும். சரித்திரக்

கண் கொண்டு பார்த்தால், இலங்கை இரு தேசிய இனங்களின் தாயகமேயன்றி ஒரே மொழி, ஒரே இனம், ஒரே கலாசாரம் என எப்பொழுதும் இருந்ததில்லை, அப்படி இருக்கவேண்டுமாயின் பலத்தின் கைக்கொண்டு அழித்தாலே ஆகும்.

எடுத்ததற்கெல்லாம் இங்கிலாந்தையே நோக்கும், இதை ஒரு குட்டி இங்கிலாந்து ஆக்க திட்டமிட்டிருக்கும் சிங்களத் தலைவர்கள், இலங்கைத் தமிழரை ஸ்கொட்லாந்து மக்களுக்கு ஒப்பிடுவது வழக்கம். இனப்பற்று, மொழிப்பற்றற்ற தமிழர் சிலரும் அப்படியே இங்கிலாந்தும் ஸ்கொட்லாந்தும் ஒரே அரசின் கீழ் இருப்பதைப் போல இலங்கைத் தமிழ் நாடும் சிங்கள நாடும் ஒரே அரசின் கீழ் இருக்க வேண்டும் என்று கூறுகின்றனர். ஆனால் ஸ்கொட்லாந்து மக்கள் இப்போலி ஒற்றுமைக்காக கொடுத்த விலை என்ன என்பதை இவர்கள் உணரவில்லை. பிரித்தானியா முழுவதும் ஆங்கிலமே அரசு மொழி மாத்திரமல்ல மக்கள் பேசும் மொழியாகவும் இருக்கிறது. ஒரு காலத்தில் ஆங்கிலத்தோடு சரியொத்த மொழியாக இருந்த ஸ்கொட்ஸீம் வெல்ஸீம் அழியும் தறுவாயிலிருக்கின்றன. இம்மொழிகளைப் பேசிய மக்கள் தங்கள் மொழி, தனிப்பண்பாடு ஆகியவற்றை இழந்ததோடு, இலங்கைத் தமிழருக்கும் இதே நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதை இங்குள்ள நிலையையும் அதிகாரத்திலுள்ளவர்களின் செயலையும் நுணுகி ஆராய்வோர் அறிவர். இங்கு சிங்களம், தமிழ் ஆகிய இரு மொழிகளும் அரசாங்க மொழிகளாகப் பேச்சளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட போதிலும், நடைமுறையில் என்ன நடக்கிறது என்று பார்ப்போம்; பாராளுமன்றத்தில் என்ன நடக்கிறது என்று பார்ப்போம். பாராளுமன்றத்தில் இரு மொழிகளிலும் பேசலாமெனினும், தமிழில் பேச இன்னும் அனுமதி கிடைக்கவில்லை.

சபைத் தலைவருக்கே தமிழ் விளங்காது என்று காரணம் கூறப்படுகின்றது. தமிழில் பேச உத்தரவு கிடைத்தாலும் தமிழ்ப் பிரதிநிதிகள் தமிழிற் பேசுவதிற் பயனுண்டா? அவர்களுடைய பேச்சு ஐந்தில் ஒரு பகுதி பிரதிநிதிகளுக்குத்தான் விளங்கும், அவர்கள் தங்கள் கருத்தை நிலைநாட்ட வேண்டுமாயின் பெரும்பான்மையான அங்கத்தவர்களுக்கு விளங்கக்கூடிய மொழியில் அன்றோ பேசவேண்டும்? இலங்கையில் உள்ள பாடசாலைகளில் எல்லாம், எல்லோரும் சிங்களம், தமிழ் ஆகிய இருமொழிகளும் படிக்க வேண்டும் என்று சட்டம் செய்தால், ஒவ்வொருவரும் தன் தன் மொழியில் பேசினாலும் எல்லோருக்கும் விளங்கும். ஆனால் அப்படிச் செய்யும் நோக்கம் இப்பொழுது அரசாங்கத்திலோ, எதிர்க்கட்சியில் இருக்கும் சிங்களத் தலைவர்களுக்கோ இருப்பதாகத் தெரியவில்லை. அதற்கு மாறாக அரசாங்கத்திலிருக்கும் திரு ஜயவர்த்தனா, திரு. டட்லி சேனநாயக்கா, டாக்டர் ராஜபக்– முதலியோரும் எதிர்க்கட்டியில் இருக்கும் திரு. ஸ்ரீநிசங்கா, திரு.சோமவீரசந்திரஸ்ரீ ஆகியோர் பகிரங்கமாக சிங்களம் மாத்திரமே அரசாங்க மொழியாக வேண்டுமென்று கூறியிருக்கிறார்கள். இதற்கிடையில் தமிழ் விபிஷீணர்களைக் கொண்டு வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவதைப் போலத் தமிழர் சிங்களம் படிக்க வேண்டும் என்று ஒரு சிங்களத் தலைவராவது சொல்லவில்லை. தமிழ், சிங்களம் கற்றால் இன்னும் சிறிது காலத்தில் எல்லோருக்கும் சிங்களம் தெரியுமாதலால் இரண்டு மொழிகளையும் அரசங்க பாசைகளாக வைத்து இடர்படத் தேவையில்லை என்று கூறி சிங்களத்தையே அரச மொழியாக்குவதற்கு எல்லா முயற்சிகளும் செய்கிறார்கள். என்பது வெளிப்படை.

ஆங்கிலம் அரச மொழியாக இருந்த காலத்திலேயே எவ்வளவோ தமிழ் மக்கள் சிலாபம், புத்தளம் முதலிய பகுதிகளில் சிங்களத்தைக் கற்றுக் கொண்டு படிப்படியாகச்

சிங்களவராய் வந்திருக்கின்றார்கள், வருகிறார்கள்.

இந்நிலையில் சிங்களம் அரச மொழியாக வந்தால் தமிழ் கற்பதால் சீவியத்திற்கு வழி ஏற்படாது என்ற நிலை ஏற்பட்டால் இன்னும் சில காலங்களில் தமிழர் தங்கள் மொழி, கலை, பண்பாடு, தன்மானம் எல்லாவற்றையும் இழந்து, பிரித்தானியாவில் ஸ்கொட்லாந்து மக்கள் அடைந்த நிலையையே அடைய நேரிடும்.

இப்பொழுதே தமிழரின் சனத்தொகை படிப்படியாகக் குறைந்து வருவதை காங்கேசன் துறைப் பிரதிநிதி திரு. செல்வநாயகம் அவர்கள் ஓர் தமிழ்த் தினசரிச் சுத்திர மலரில் எழுதிய கட்டுரையில் குடிவிபரக் கணக்கிலிருந்து எடுத்துக்காட்டியிருக்கிறார். 1834 ஆம் ஆண்டில் தமிழ் மாகாணங்களின் சனத்தொகை 1 லட்சத்து 95 ஆயிரமாகவும், நாட்டின் முழுச் சனத்தொகை 8 லட்சத்து 51 ஆயிரமாகவும் இருந்து வந்தது, அதாவது தமிழர் மொத்த சனத்தொகையில் 28 வீதமாகும். 1945 இல் எடுக்கப்பட்ட குடித்தொகைக் கணக்கெடுப்பில் மொத்தத் தொகையான 66 லட்சத்தில் ஏழரை லட்சம் மட்டுமே வடகீழ் மாகாணங்களில் உள்ள தமிழராவார். அதாவது பதினொன்றரை வீதமாகச் சுருங்கிவிட்ட சனத்தொகையே தமிழ் மாகாணங்களில் இருப்பதைக் காண்கிறோம் என்று அவர் அக்கட்டுரையில் கூறுகிறார். இந்நிலை தொடர்ந்து நடக்குமாயின் இலங்கைத் தமிழர் என்ற சாதியே இல்லாதொழியும், இதைத் தடுக்க முயற்சிக்க வேண்டியது தமிழர் தலைவர் என்று இருப்போரின் கடமையாகும். இதற்கு வழி சிங்கக்கொடி, சிங்கள மொழி, சிங்கள இனம் என்று ஹிட்லர் சென்ற பாதையைக் கைக்கொள்ளும் சிங்களத் தலைவர்களிடம் சரணாகதி அடைவதல்ல. இப்படிச் செய்வது விளக்கைத் தழுவிய விட்டில் பூச்சியின் நிலையாகவே முடியும். இதற்கு வழி இலங்கையின் சரித்திரத்திலிருந்து பிறக்கிறது. இந்திய பொதுவுடமைக் கட்சித் தலைவர் பி.ஸி.ஜோஷி, "அதிகாரத்தைக் கைப்பற்ற கடைசி முயற்சி" என்ற நூலில் இந்திய இனப்பிரச்சினைகளைப் பற்றி எழுதும்போது, ஆங்கிலேயர் இந்தியாவைக் கைப்பற்றுமுன் இந்தியா எத்திசையில் வளர்ச்சியடைந்து கொண்டிருந்ததோ அத்திசைக்குச் செல்வோம் என்று கூறுகிறார். இலங்கையின் மொழிப் பிரச்சினைக்கும் அதுவே வழியாகும். ஐரோப்பியர் வருமுன், தனியரசு நடத்திய தமிழருக்கு இன்றும் சுயநிர்ணய உரிமை வேண்டும். தமிழ் மாகாணம் பிரிக்கப்பட்டு தனியரசாக வேண்டும். அம் மாகாணங்கள் விரும்பினால் தமிழ் நாட்டோடு சேரும் உரிமை வேண்டும். தமிழருக்கு இப்போது வேண்டுவது உச்சிமீது வானிடிந்து வீழ்ந்தாலும் அஞ்சாது அசைந்து கொடுக்காது, முஸ்லிம் மக்களுக்கு பாகிஸ்தான் பெற்றுக்கொடுத்த வீரர் ஜின்னாவைப் போன்ற தலைமையேயாகும்.

ஐரிஸ் சிக்கம் டிவேலரா போன்றோர் தமிழரிடையே தோன்ற வேண்டும். இப்பிரிவினை பொருளாதாரத்துறையில் தமிழரைப் பாதிக்குமே என்று சிலர் சொல்லக்கூடும். தமிழர் அரசாங்க சேவையை நம்பி வாழ்வது இனி முடியாது. தமிழும் சிங்களமும் அரசாங்க மொழிகளாக இருந்தாலும் தமிழர் தமது விகிதாசாரத்திற்கு தக்கபடிதான் உத்தியோகங்கள் பெற முடியும். சிங்களம் அரச மொழியாக மாற்றப்பட்டால் அதுவும் கிடையாது. தமிழ் மாகாணங்கள் விவசாயத்துறையில் கவனிப்பாரற்றுக் கிடக்கன்றன.

சரியான முறையில் சாகுபடி செய்யப்பட்டால் இலங்கை முழுவதற்குமே சாப்பாடு கொடுக்கக்கூடிய நிலமுண்டு. அரசாங்கத்தின் உதவி ஒரு சிறிது இருந்தாலும்

அவற்றைப் பொன் கொழிக்கும் நிலமாகச்செய்யும் முயற்சியே உரமாக அமைந்த தமிழ் தொழிலாளருமுண்டு, சீமெந்த தொழிற்சாலை போன்று இன்னும் பல தொழிற்சாலைகள் தோன்ற வேண்டும். வடபகுதித்துறைமுகங்களைத் திறந்து விடல் வியாபாரத்தை மேற்கொள்ள வேண்டும். மீன்பிடித் தொழிலை விருத்தி செய்ய மாகாணங்கள் தங்கள் ஆட்சியை தாமே நடத்த வேண்டும் பிரிவினை இல்லாத தமிழர், சிங்களவர்களாக இருந்தாலும். இப்போதுள்ளதைப்போல் விகிதாசாரத்திற்கு மேல் உத்தியோகங்கள் வகிக்க முடியாது. தமிழ் மாகாணங்கள் விவசாயத்துறையிலும் விருத்தி செய்யப்பட்டாலன்றி தமிழர் பொருளாதாரத்தைப் பொறுத்தவரையில் மிகவும் கஸ்டப்படப் போகிறார்கள். அதையும் நீக்கி வழி தமிழ் மாகாணங்கள் தன்னாட்சி பெறுவதாகும். தூங்கிய தமிழன் விழித்துவிட்டான். தமிழ்நாடு இந்தியா சமதர்மக் குடியரசுகளின் யூனியனில் விருப்பத்தின் பேரில் சேர்ந்திருக்கும் ஓர் சுதந்திரக் குடியரசாக வேண்டும் என்ற கிளர்ச்சி வலுத்து வருகின்றது. தமிழ் ஈழமும் இத்தமிழ் குடியரசின் ஓர் அங்கமாக அமைவதற்கு உரிமை இருக்க வேண்டும். தமிழனுக்கு இன்று வேண்டுவது சுயநிர்ணய உரிமையே.

# வரலாறு போதிக்கும் புதிய பாதை

கதிர் பாலசுந்தரம்

முன்னாள் அதிபர் - யூனியன் கல்லூரி

திரு. மாவை சேனாதிராசா அவர்கள் தமிழ் அரசுக் கட்சிக்கு வரப் பல ஆண்டுகள் முன்னரே — தமிழ் அரசுக் கட்சியின் முதலாவது பிரசாரக் கூட்டம் 1949இல் நல்லூர் கைலாய பிள்ளையார் கோவில் வீதியில் நடந்த வேளை, அங்கு நின்ற, அன்று தொட்டு இன்று வரை அக்கட்சியை நெஞ்சில் சுமப்பவன் பேசுகிறேன்.

வாசகன் எனது கருத்தைப் புரிந்து கொள்வதற்காக, என்னைப் பற்றி நானே மேலும்சொல்வது அவசியம் என்று கருதுகிறேன். எனது வயது - இன்னும் இரண்டு ஆண்டுகள் ஓடி உருண்டால் தொண்ணூறு. எனது அரசியல் அநுபவம் அகிம்சை வன்முறை எல்லாம் நிறைந்தது. 1956 - பொதுவில் தொகுதியில் - முதலாவது முஸ்லீமான - ஜனாப் முஸ்தபா தமிழ் அரசுக் கட்சி சார்பில் போட்டியிடக் காரணமானவன். 1958 - மூன்று தடவைகள் இராணுவத்தின் சோதனைக்கு இலக்கானவன்.அமிர்தலிங்கம் சகாப்தம்' 'சத்தியங்களின் சாட்சியம்' எனும் இரு அரசியல் நூல்களும், இன்னும் 'மறைவில் ஐந்து முகங்கள்', 'சிவப்பு நரி' எனும் அரசியல் நாவல்களும் படைத்தவன். இந்த வரிசையில் இன்னும் ஏராளம்.

இந்த நீண்ட அனுபவத்தில் கற்றுக் கொண்ட பாடம்,திரு. மாவை சேனாதிராசா அவர்களின்அரசியல் பாதை பற்றிப் பேசவைக்கிறது.

அகிம்சை ஆயுதம் இரண்டும் தோற்று விட்டன. இந்தியா அகிம்சை வழியில் வெற்றி கண்டது. அது பிரித்தானியாவை எதிர்த்து நடந்தது. சிங்களவனிடம் அந்தப் பருப்பு வேகாது. ஆயுதப் போராட்டம் தோற்றது. பிரபாகரனே தோற்ற பின்னர், அதனை கையில் எடுப்பதும் நினைப்பதும் பேசுவதும் எமது அரசியல் அறிவீனத்தையே பகிரங்கப்படுத்தும். சிங்கள அரசை எதிர்க்கும் வல்லமை, எமக்கு இல்லை. 1977 - பலாலிக்குள் மட்டும் முடங்கியிருந்த இராணுவமல்ல இப்ப உள்ள இராணுவம். அவன் இராணுவத்தையும் ஆயுதத்தையும் இலங்கை முழுவதும் குவித்து வைத்துள்ளான். எந்த அரசும் எமக்காக ஆயுதம் ஏந்தாது. ஏந்தக்கூடியது என்று நாம் நம்பிய ரத்தவுறவு அரசையே நாம் கைகழுவிவிட்டோம்.

சிங்களவன் தனிப்பட்ட குணாம்சங்கள் கொண்டவன். அவனது அரசியல் உளவியல், பண்டைய வரலாற்றின் ஊற்றிலிருந்து கொதித்தெழுந்து பாய்வது. பண்டைக் கால தென் இந்திய சோழ மன்னர்படை எடுப்புகள் காரணமாக, சிங்களவர்கள் அநுராதபுர இராச்சியத்தைவிட்டு, கையில் கிடைக்கக்கூடிய பொருட்களுடன் அகதிகளாக ஓடினர். பின்னர் பொல்லனறுவை இராச்சியத்திலிருந்தும், அகதிகளாகத் தென் இலங்கைக்கு ஓடினர். அவ்வேளைகளில் தென் இந்திய தமிழ்ப் படைகள் புரிந்த பேரழிவுகள், கொலைகள், கொள்ளைகள், சித்திரவதைகள், பாலியல் அக்கிரமங்களை — சிறைபிடித்த ஒரு மன்னனின் கண்களைத் தோண்டி எடுத்த கொடுமையை -விகாரைகளின் ஆவணங்களைச் சிதைத்தவக்கிரமத்தை - அவர்கள் இன்னும் மறக்கவில்லை. அவர்கள் குருதியோடும் சிந்தனையோடும் உறைந்துபோயுள்ளன. இன்னும் ஒருமுறை அது நேர்ந்துவிடலாம் என்ற அச்சம், அவர்கள் உள்ளத்தில் ஊன்றி ஆலவிருட்சமாய் படர்ந்து நிற்கின்றது. அதனால், தமிழர் உரிமை என்று மூச்செடுத்தாலே, அவர்கள் தீப்பிடித்த பட்டாசுத் தொழிற்சாலை போல

உணர்ச்சி வசப்படுகிறார்கள். எனவே, அவர்களின் உளவியலுக்கு ஏற்ப, நாம் எமது அரசியல் சாணக்கியத்தை மாற்ற வேண்டும்.

அரசியல் தவிர்த்தால் அவனுக்கு தமிழன் மேல் அபார பிரியம். அவனிடம் எமது உரிமையை உரத்துக் கேட்கக்கூடாது. மௌனமாய் காய் நகர்த்தினால் எப்பன் எப்பனாய் இறுதியில் முழுவதையும் பெறலாம். அதற்கு ஆதாரங்கள் வரலாறு முழுவதும் நிறைந்து உள்ளன.

தமிழுக்குச் சமவுரிமை கேட்டோம். வடகிழக்கு மாகாணத்திற்கு மொழி ஆட்சி உரிமை கேட்டோம். அடிபோட்டவன் சிங்களவன். இன்றைக்கு வடகீழ் மாகாணத்தில் ஆட்சி மொழி தமிழ் என்றாயிற்று. இலங்கை முழுவதும் அரச விளம்பரப் பலகைகளில் சிங்களத்துக்கு நிகராக தமிழ் இடம் பிடித்திருக்கிறது. நிர்வாகத்திலும் சட்டப்படி உரிமை பெற்றுள்ளது. 1956இல் அடிபோட்ட சிங்களவன்தான் அதை செய்தவன். எச்சசொச்சம் இருந்தால் அதனையும் காலப்போக்கில் தருவான். வரலாறு அப்படிச் சொல்கிறது.

நாங்கள் வந்த பழைய பாதையில் - இனிமேலும் போய் சிங்களவனிடம் எதனையும் பெற முடியாது. புதிய பாதையில் சென்றால்தான் இலக்கை அடைய முடியும். அதற்கும் வரலாற்று ஆதாரங்கள் உள்ளன.

தொண்டைமான் எமது பாதையைப் பின்பற்றாமல் சிங்களவன் பின் போனார். வடகிழக்கில் எல்லோரும் நொடித்தார்கள். மெல்ல மெல்ல மலையக மக்கள் பெற்றவை ஏராளம். 1947 – பாராளுமன்றத்தில் 7 உறுப்பினர்கள். 1949 இந்திய-பாகிஸ்தான் குடியுரிமைச் சட்ட மூலம் வாக்குரிமை பறிக்கப்பட்டது. தொடர்ந்து வந்த மூன்று தேர்தல்களில் ஒரு பாராளுமன்ற உறுப்பினர்கூடத் தெரிவாகவில்லை. இன்று 8 பாராளுமன்ற உறுப்பினர். அடுத்த தேர்தலில் இன்னும் அதிகரிக்கும். பலர் மந்திரிகளாகலாம். அவர்களை நோக்கிப் பொன் சொரியும் காலமொன்று விரைந்து பறந்து வருகிறது.

அன்று தோட்டத்தொழிலாளர் வெறும் அடிமைகள். இன்று தோட்டத்தொழிலாளர் பிள்ளைகள் விரிவுரையாளர்கள், பேராசிரியர்கள், அரசபணியாளர்கள், அரசசார்பற்ற நிறுவன பணியாளர்கள், அதிகாரிகள் என்று ஒரு நீள் பட்டாளம் உண்டு. அவர்களுக்குத் தமிழ் சிங்களம் ஆங்கிலம் என்று மூன்று மொழிகள் தெரியும். கொழும்பில் குவிந்து காணப்படுகிறார்கள். யாழ்ப்பாணத்தில்கூட படித்த இளைஞர் யுவதிகள் தரிசனம் தருகிறார்கள். அவர்களின் வேகம் விரைவில் ஒரு காலம் - 20ஆம் நூற்றாண்டு முன் பாதியில் - யாழ் இளைஞர்கள் அடைந்த வெள்ளை உடைத்தொழில் இலக்கை அவர்கள் எட்டும் நிலை உள்ளது. தோட்டத்தில்கூடப் படிப்படியாக அவர்கள் வாழ்நிலை பெரிதும் மாறியுள்ளது.

நாம் பழைய பாதையில் மறுத்தான் அரசியல் நடாத்திக் கண்ட பலன் என்ன?

சிங்களவன் புதிய அரசியல் திட்டமூலம் எல்லாம் தருவான் என்று சொல்ல வரவில்லை. இன்றைய அரசியல் சூழ்நிலையில் அடுத்த ஜனாதிபதி தேர்தலில் ராசபக்ச பக்கம் வெல்லாமல் இருக்க வேண்டுமானால், எதிர்ப் பக்கத்துக்குத் தமிழன் ஆதரவு கட்டாயம் தேவை. ராசபக்ச பக்கம் வென்றால் இன்றைய தலைகள் எல்லாம் பழிக்குப் பழியாக கம்பி எண்ண வேண்டிவரும் என்பது அவர்களை அச்சுறுத்துகிறது. அண்ணனைக் கொன்று தம்பி அரசனாகிய - அப்பனைக் கொன்று மகன் அரசனாகிய - கணவனைக் கொன்று வைப்பாடிச்சி ராணியாகிய வரலாற்றின் வாரிசுகள் அவர்கள். இந்த கொலைக் கலாச்சாரத்தை மகாவம்சம் பத்திரப்படுத்தி வைத்திருக்கிறது. இந்தச் சாதகமான சூழ்நிலையில் அவசரம் சர்வநாசம் என்பதை உணர்ந்து, நாம்

காயை அவதானமாய் நகர்த்தி இயலுமானதைப் பிடுங்க முயற்சிக்க வேண்டும். ஒட்டுமொத்தமாய் அள்ளித்தர சிங்கள உளவியல் சம்மதிக்காது.

சிறுபிள்ளை வேளாண்மையை நம்பி, அடுப்பில் உலை வைப்பதை எமது இனம் தவிர்த்தால்தான் எமக்கு விடிவு.

நாம் ஆரம்பத்தில் அகிம்சை வழியிலும் பின்னர் ஆயுத வழியிலும் போராடியது தவறு என்பதல்ல. ஒரு இனம் தனது இருப்பிற்காக எதனைச் செய்யவேண்டுமோ அதனையே செய்தது. அது சிங்கள உளவியலுக்குச் சரிவராது என்று இப்போது எமக்கு வெள்ளிடை மலையாய் தெரிகிறது. எனவே இப்போது உள்ள ஒரேவழி பாதையை மாற்றுவதுதான்.

முன்னாள் எதிர்க் கட்சித் தலைவர் கௌரவ அமிர்தலிங்கம் அவர்களுக்கு அமைந்த அரசியல் அனுபவம், வேறு எந்தத் தமிழ்த் தலைவருக்கும் இல்லை. கற்பனை நிஜமாகி ஒரு வெளிநாட்டுப் படை, எமக்காக எமது மண்ணில் கால் மிதிக்க மூலகாரணமாயிருந்தவர். பிரதமர் திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவல மரணத்தைத் தழுவாதிருந்தால், நாங்கள் எப்போதோ வானம்பாடிகளாய் வானத்தில் பறந்திருப்போம். இந்திரா காந்தி அம்மையாரை போர்க் களம் வரை அழைத்து வந்த கௌரவ அமிர்தலிங்கம் அவர்களே, இறுதியில் - சிங்களவனின் உளவியலை உணர்ந்து,வரலாறு போதித்த தத்துவத்தை உணர்ந்து - தனது அரசியல் பாதையை மாற்றியவர்.

அதனைத்தான், இன்று மாவையும் மற்றும் சம்பந்தர், சுமந்திரனும் செய்கிறார்கள். சிங்கள உளவியலை - வரலாற்றை - புரிந்துகொண்டு புத்திசாதுர்யமாய் காய் நகர்த்துகிறார்கள்.

அகிம்சை வழியில் போராடி அது தோற்ற பின்னர், ஆயுத வழியில் போராடிச் சிறையும் சென்று சித்திரவதைப்பட்டுத் தப்பிப் பிழைத்த - இப்பொழுது எழுபத்தைந்தாவது அகவையில் புதிய பாதையில் பயணிக்கும் திருமகன் மாவை சேனாதிராசா அவர்களுக்கு, எனது ஆசிகளும் வாழ்த்துக்களும் ஆயிரமாயிரம்.

வாழ்த்துக்களுடன்

**கதிர் பாலசுந்தரம்**

கனடா

# பவழ விழா வாழ்த்து

இரா. துரைரத்தினம்

தமிழ் மக்களின் அகிம்சை போராட்ட வரலாற்றில் மாவை சேனாதிராசா பதித்த தடங்கள். தமிழர் அரசியல் வரலாற்றில் 50 வருடத்திற்கு மேலாக தடம் பதித்த மாவை சேனாதிராசா அவர்கள் 75ஆவது அகவை பூர்த்தி செய்யும் இவ்வேளையில் அவருக்கு வாழ்த்துக்களை தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

இலங்கையில் இப்போது இருக்கும் தமிழ் அரசியல் தலைவர்களில் மூத்தவராக மாவை சேனாதிராசா திகழ்கிறார். தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் ஆர்.சம்பந்தன் அவர்கள் வயதில் மூத்த தமிழ் அரசியல் தலைவராக திகழ்கின்ற போதிலும் அரசியல் போராட்ட வரலாற்றில் 53வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவத்தை கொண்டவராக திகழும் மாவை சேனாதிராசா அவர்களே இன்று இலங்கையில் இருக்கும் தமிழ் அரசியல் தலைவர்களில் மூத்தவர் எனலாம்.

தமிழ் மக்களின் விடுதலைப்போராட்டம் அகிம்சை வழியில் நடைபெற்ற போது மாணவ பருவத்திலேயே தன்னை இணைத்து கொண்ட மாவை சேனாதிராசா என அழைக்கப்படும் சோமசுந்தரம் சேனாதிராசா 1964ஆம் ஆண்டு தமிழ் மாணவர் அமைப்பின் செயலாளராக தமிழ் மக்கள் மத்தியில் அறிமுகமானார்.

22வயது இளைஞனாக இருந்த வேளையில் தீவிர அகிம்சைப் போராளியாக செயற்பட்ட அவர் ஆயுதப்போராட்டம் ஆரம்பமானபோது தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் உட்பட அனைத்து போராளிகள் இயக்க தலைவர்களுடனும் ஒரு அகிம்சை போராளியாக தொடர்பைப் பேணி வந்தார்.

தந்தை செல்வநாயகம் தலைமையிலான தமிழரசுக்கட்சியில் தனது 19ஆவது வயதில் இணைந்து கொண்டார். தமிழரசுக்கட்சியின் ஆரம்பகால போராட்டங்களில் பங்கெடுத்த அவர் 1972ஆம் ஆண்டில் தமிழ் இளைஞர் பேரவையின் செயல்பாடுகளும் போராட்டங்களும் தீவிரமடைந்தன. அக்காலத்தில் தமிழ் இளைஞர் பேரவையை வழிநடத்தியவர்களில் முக்கியமானவர் மாவை சேனாதிராசா ஆகும்.

இன்றுள்ள பெரும்பாலான தமிழ் அரசியல்வாதிகள் பாராளுமன்ற அரசியல் மூலம் அரசியலுக்கு வந்தவர்கள். ஆனால் மாவை சேனாதிராசா அரசியலுக்கு வந்த 1964ஆம் ஆண்டில் பாராளுமன்ற அரசியலை நோக்கி அவரின் செயல்பாடுகள் இருந்ததில்லை. முழுக்க முழுக்க மாணவர் போராட்டங்கள் இளைஞர் போராட்டங்களிலேயே கவனம் செலுத்தினார்.

1968ஆம் ஆண்டிலிருந்து 1977 வரையான காலத்தில் சுமார் 7 ஆண்டுகள் அரசியல் கைதியாக சிறைவாசத்தையும் சிறிலங்கா படைகளின் சித்திரவதைகளையும் அனுபவத்த ஒருவர். இன்றுள்ள இளைய தலைமுறையினர் பலருக்கு மாவை சேனாதிராசா அனுபவித்த துன்பங்களும் தியாகங்களும் தெரிய வாய்ப்பில்லைத்தான்.

தமிழ் மக்களின் ஒற்றுமையை எப்போதும் வலியுறுத்தி வரும் அவர் 2000ஆம் ஆண்டின் பின் தமிழ் அரசியல் கட்சிகளை ஒன்றிணைத்து ஒரே அணியாக செயற்பட

வேண்டும் என்ற எண்ணக்கருவுக்கு தனது பூரண ஒத்துழைப்பை வழங்கியவர்களில் மாவை சேனாதிராசா முக்கியமானவராகும்.

2000ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் தமிழ் கட்சிகள் பிரிந்து நின்று போட்டியிட்டதால் வடக்கு கிழக்கில் தமிழ் பிரதிநிதித்துவம் இழக்கப்பட்டிருந்தது. தமிழர் தாயகத்தின் தலைநகராக கருதப்படும் திருகோணமலை மாவட்டத்தில் தமிழர் ஒருவர் கூட தெரிவு செய்யப்படவில்லை. இதனை தொடர்ந்து தமிழ் கட்சிகளை இணைத்து ஒரே அணியின் கீழ் செயல்பட வைக்கவேண்டும், தமிழர்களுக்கான உறுதியான அரசியல் தலைமை ஒன்றின் அவசியம் கருதி தமிழ் கட்சிகளை ஒன்றிணைக்கும் பணி நடைபெற்றது. கிழக்கில் தான் அந்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அதற்கான தேவையும் கிழக்கில் தான் உணரப்பட்டது.

கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கம் தமிழ் கட்சிகளின் தலைவர்களை அழைத்து கூட்டங்களை நடத்தியிருந்தது.

ரெலோவும்,ஈ.பி.ஆர்.எவ்.எவ் சுரேஷ் அணியும் தமிழ் கட்சிகளின் கூட்டில் இணைவதற்கு மிக ஆர்வமாக இருந்த அதேவேளை தமிழர் விடுதலைக்கூட்டணி, அகில இலங்கை தமிழ் காங்கிரஷ் ஆகியன ஆயுதக்குழுக்களாக இயங்கிய ரெலோ மற்றும் ஈ.பி.ஆர்.எல்.எவ் ஆகியவற்றுடன் இணைந்து தேர்தலில் போட்டியிடுவதற்கு தயங்கின. துமிழர் விடுதலைக் கூட்டணியின் உபதலைவர் ஜோசப் பரரராசிங்கம், அகில இலங்கை தமிழ் காங்கிரஷ் தலைவர் விநாயகமூர்த்தி ஆகியோர் இதற்கு கடும் எதிர்ப்பை தெரிவித்தனர். ஆயுதக்குழுக்களுடன் தேர்தலில் போட்டியிட்டு சூடுகண்ட பூனையாக தாம் இருப்பதாக தமிழர் விடுதலைக்கூட்டணியின் உபதலைவராக இருந்த ஜோசப் பரராசசிங்கம் அச்சம் தெரிவித்தார். ஆரம்பத்தில் தமிழ் இயக்கங்களுடன் இணைந்து செயல்படுவதற்கு தமிழர் விடுதலைக் கூட்டணியில் உள்ள ஜோசப் பரராசசிங்கம் போன்றவர்கள் கடும் எதிர்ப்பை காட்டி வந்தனர்.

இலங்கை இந்திய ஒப்பந்தத்தை அடுத்து 1989ஆம் ஆண்டு நடந்த பொதுத்தேர்தலில் இந்திய அரசாங்கத்தின் ஏற்பாட்டில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமையில் அக்கட்சியின் சின்னமான உதயசூரியன் சின்னத்தில் ஈ.பி.ஆர்.எவ்.எவ், ரெலோ, ஈ.என்.டி.எல்.எவ் ஆகிய இயக்கங்கள் போட்டியிட்டன. தலைமை வேட்பாளர்களாக தமிழர் விடுதலைக் கூட்டணியை சேர்ந்தவர்களே போட்டியிட்டனர். உதாரணமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் அ.அமிர்தலிங்கம் தலைமை வேட்பாளராக போட்டியிட்டார்.

அத்தேர்தல் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு பெரும் சோதனையாகவும் வீழ்ச்சியாகவும் அமைந்தது. யாழ்ப்பாணத்தில் தெரிவு செய்யப்பட்ட மூவரும் ஈ.பி.ஆர்.எல்.எவ் உறுப்பினர்கள். மட்டக்களப்பில் ரெலோ உறுப்பினர் ஒருவரும், ஈ.பி.ஆர்.எல்.எவ் உறுப்பினர் இருவரும் தெரிவாகினர். அம்பாறையில் ரெலோ உறுப்பினர் தெரிவானார். வன்னியில் ஈ.பி.ஆர்.எல்.எவ் உறுப்பினர்கள் இருவர் தெரிவாகினர். பழம் பெரும் கட்சியான தமிழர் விடுதலைக் கூட்டணியிலிருந்து ஒருவர் கூட தெரிவாகவில்லை. தமிழ் இயக்கங்கள் கள்ளவாக்கை போட்டு தம்மை தோற்கடித்து விட்டன என தமிழர் விடுதலைக் கூட்டணியினர் தேர்தல் முடிந்த பின்னர் வெளிப்படையாக குற்றம் சாட்டினர். இனிமேல் தமிழ் இயக்கங்களுடன் ஒட்டும் இல்லை உறவும் இல்லை என தமிழர் விடுதலைக் கூட்டணி அறிவித்திருந்தது. இந்த கசப்பான அனுபவத்தால் ஈ.பி.ஆர்.எல்.எவ், ரெலோ போன்ற இயக்கங்களுடன் இணைந்து

தேர்தல் போட்டியிட தமிழர் விடுதலைக் கூட்டணி தலைவர்கள் தயக்கம் காட்டினர்.

2001ஆம் ஆண்டு முற்பகுதி தொடக்கம் தமிழ் கட்சிகளை இணைக்கும் முயற்சிகள் நடைபெற்றன. அந்த வேளையில் தமிழ் கட்சிகள் இணைந்து பலமான அரசியல் தலைமை ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என்பதில் மாவை சேனாதிராசா உறுதியாக இருந்தார்.

2001 செப்டம்பர் 22ஆம் திகதி சனிக்கிழமை கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கம் நடத்திய கருத்தரங்கிற்கு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த மாவை சேனாதிராசாவை அழைத்திருந்தோம். மட்டக்களப்பு அரசினர் ஆசிரிய கலாசாலை மண்டபத்தில் இக்கூட்டம் நடைபெற்றது. மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராசசிங்கம், பொன். செல்வராசா உட்பட கிழக்கு பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், மாணவர்கள் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இந்த கருத்தரங்கு முடிந்த பின் மட்டக்களப்பு அரசினர் ஆசிரிய கலாசாலையின் வகுப்பறை ஒன்றில் மாவை சேனாதிராசா, ஜோசப் பரராசசிங்கம், செல்வராசா ஆகியோருடனான சந்திப்பு இடம்பெற்றது. இதில் குறிப்பிட்ட சிலர் மட்டும் கலந்து கொண்டனர். இதில் தமிழ் கட்சிகள் ஒன்றிணைய வேண்டும் என்றும் நடக்க இருக்கும் தேர்தலில் தமிழ் கட்சிகள் பிரிந்து நின்று போட்டியிடுவதால் ஏற்படும் பின்னடைவுகள் பற்றியும் தமிழர் விடுதலைக் கூட்டணியினருக்கு கூறப்பட்டது. தமிழ் கட்சிகளின் கூட்டில் இணைந்து கொள்வதில் பிரச்சினை இல்லை, ஆனால் தமிழ் இயக்கங்கள் மீது மக்கள் வெறுப்படைந்திருக்கிறார்கள். அவர்களுடன் நாங்கள் சேர்ந்தால் எப்படி மக்கள் எங்களை ஏற்றுக்கொள்வார்கள் என ஜோசப் பரராசசிங்கம் தெரிவித்தார்.

தொடர்ந்து நடந்த உரையாடலில் மாவை சேனாதிராசா அவர்கள் என்னதான் கடந்த காலத்தில் கசப்பான அனுபவங்கள் இருந்தாலும் தமிழ் மக்களுக்கு பலமான அரசியல் தலைமை வேண்டும் என்ற நோக்கத்திற்காக தாம் இணையத்தான் வேண்டும் என கூறினார். எதிர்காலத்தில் தமிழ் கட்சிகள் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என்பதை தான் ஏற்றுக்கொள்வதாகவும் கூறினார். இந்த விடயத்தை தமிழர் விடுதலைக் கூட்டணியின் பொதுச்சபையில் பேசி ஒரு முடிவுக்கு வருவோம் என்றும் கூறினார்.

இதன் பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர்கள் மத்தியில் பேசி இணக்கத்தை ஏற்படுத்துவதில் மாவை சேனாதிராசா அவர்களின் பங்கு முக்கியமானதாகும். 2001ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பே இன்றுவரை தமிழ் மக்களின் அரசியல் தலைமையாக விளங்கி வருகிறது. அந்த முயற்சிகளுக்கு தமிழர் விடுதலைக் கூட்டணியிலிருந்து ஒத்துழைப்பை தந்தவர்களில் மாவை சேனாதிராசா முதன்மையானவராவார்.

இலங்கையில் தமிழ் மக்களின் அகிம்சை ரீதியான அரசியல் போராட்ட வரலாறு எழுதப்படும் போது மாவை சேனாதிராசா அவர்கள் 1961ஆம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை பதித்த தடங்கள் தவிர்த்து விடக் கூடியவை அல்ல.

**இரா.துரைரத்தினம்.**

ஊடகவியலாளர்.

மண்ணின் மைந்தர்

## மாவை. சோ. சேனாதிராசா
# ஈழத் தமிழர்தம் உயிர் மூச்சு

ள், கூஷிம் தூரிபிபிலீப
ழூரி ணரி

இலங்கைத் தமிழ் மக்களின் இலட்சிய வேட்கையை ஏற்றுக் கொள்ளக்கூடிய அரசியல் தீர்வை நோக்கி நீண்ட காலமாக தனது வாழ்க்கையை அர்ப்பணித்த பெருமகன் இலங்கைத் தமிழர்களின் அரசியல் வாழ்க்கையில் தந்தை செல்வா, தலைவர் அமிர்தலிங்கம் அவர்களின் பின்னால் அவர்களின் வழியில் தகைகென ஒரு தனியிடத்தை ஏற்படுத்திக் கொண்டவர்தான் திரு. மாவை. சேனாதிராசா அவர்கள் அவர் மாணவராக இருந்த காலம், இளைஞராக இருந்த காலம் அவர் முழுமையாக தமிழர்களின் அரசியல் எதிர்காலம் ஒன்றே அவர் முழுமூச்சாக இருந்து செயல்பட்டதை தன் முன்னால் பலதடவைகள் பார்த்தவன் 1970இல் தமிழ் இளைஞர் பேரவை என்ற அமைப்பை உருவாக்கி அவரே பொறுப்பாளராக இருந்து செயல்பட்டதை நேரில் பார்த்தவன் சாவகச் சேரித் தொகுதியில் இருந்து பத்துப் பேர் தெரிவு செய்யப்பட்டபோது பத்துப் பேரில் ஒருவராக நானும் தெரிவு செய்யப்பட்டு அவரோடு சேர்ந்து வேலை செய்தவன். நீண்ட காலம் அவருடைய அரசியல் வாழ்க்கையோடு நீண்டகாலம் தொடர்வாய் இருந்தவர்களுள் நானும் ஒருவன். ஆரம்ப காலத்தில் பலர் அவரை பாராளுமன்ற அரசியலில் ஈடுபடுமாறு கேட்டபோது அதை மறுத்தவர் ஈழத் தமிழர்கள் சுயமரியாதையோடு அரசியல் உரிமைபெற்ற ஒரு இனமாக வாழவேண்டும் என்பதில் அசையாத நம்பிக்கையோடு வாழ்ந்தவர். 1972இல் இலங்கை அரசாங்கத்தால் கைது செய்யப்பட்டு 1983 ஆண்டு வரை 11 முறை சிறை சென்றவர் இலங்கையிலுள்ள 8 சிறைச் சாலைகளில் சிறை வாசம் அனுபவித்தவர். சிறையில் இருந்த காலத்தில் அவர்பட்ட வேதனைகள் வார்த்தைகளால் சொல்ல முடியாத இன்றைய அரசியல் வாழ்க்கையில் இருப்பவர்களுள் திரு. மாவை. சேனாதிராசாவுடன் எவரையும் ஒப்பிட்டு சொல்ல முடியாது. அவருடைய அரசியல் நேர்மை, தியாகம் மட்டுமல்ல ஈழத் தமிழர்களுக்காக அவர் செய்த சேவைகளை, அவர்பட்ட துன்பங்களை எத்தனை, எத்தனை. பல தியாகங்கள் நிறைந்த அவருடைய அரசியல் வாழ்க்கையை அறவழியல் போராட்டம் நடாத்திய அரசியல் தலைவர்களுடன் மிக சிறிய வயதில் இருந்து தன்னை அர்ப்பணித்த அரசியல் தலைவனாக இன்றும் எம் முன் ஒரே ஒருவன் இருக்கின்றார் என்றால் அது திரு மாவை.சேனாதிராசா அவர்கள் தான் என்றால் உறுதியாக சொல்ல முடியும். இன்றுள்ள அரசியல் வாதிகளுள் வடக்கு மாகாணம், கிழக்கு மாகாணம் ஒரு அரசியல் தலைவன் திரு. மாவை. சேனாதிராசா அவர்கள் 1977இல் அவர் விரும்பி இருந்தால் அவர் ஒரு பாராளுமன்ற உறுப்பினராகி இருக்கலாம். அவர் அந்தப் பதவியை அன்று விரும்பவில்லை 1972இல் அவர் சிறை சென்று திரும்பியவுடன் பல தென்னிலங்கை அரசியல் கட்சித் தலைவர்கள் அவருடைய மாவிட்டபுரம் வீட்டிற்கு படையெடுத்து வந்ததை நான் நேரில் பார்த்தவன் அவர் ஒரு இடது சாரி சிந்தனை, கொள்கையுடைய ஒருவராக இருந்தாலும் ஈழத்தமிழர் பிரச்சனை தீர்க்க வேண்டுமானால் தந்தை செல்வா உருவாக்கிய தமிழரசுக் கட்சி கூடாகவே தீர்க்க முடியும் என்று நம்புகின்ற ஒரு தலைவர்.

அண்மையில் நான் கொழும்பு சென்றபோது அண்ணா திரு. மாவை. சேனாதிராசா அவர்களுக்கு திடீர் சுகயீனம் காரணமாக கொழும்பில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டார். அப்போது கௌரவ எதிர்கட்சி தலைவர் திரு. இரா. சம்பந்தன் அவர்களை இலங்கை பாராளுமன்றத்தில் சந்திக்கும் வாய்ப்பு எனக்கு கிடைத்தது அப்போது திரு. சம்பந்தன் ஐயா கூறிய ஒரு வார்த்தை எனது நெஞ்சை தொட்டது. அவர் சொன்னார் இன்று தமிழ்த் தேசிய கூட்டமைப்பு என்ற ஒரு அமைப்பு உருவாக இன்று சர்வதேச அரங்கின் எமது அந்தஸ்தை உயர்த்திய அந்த செயல்பாட்டுக்கு திரு. மாவை. சேனாதிராசா அவர்களே முழுக் காரணம் என்ற மனம் திறந்து அண்ணாரைப் புகழ்ந்து கூறியது அருகில் நின்றவர்களை எல்லாம் ஒரு கணம் மகிழவைத்தது. இன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வடக்கு கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழ் மக்களின் நம்பிக்கைக்கு உரிய ஒருவராக ஈழத் தமிழர்களின் அரசியல் எதிர் காலமே தனது உயிர் மூச்சாக நினைத்து வாழும் தன்னலமற்ற ஒரு தலைவனின் பவளவிழா கொண்டாடுவது ஈழத் தமிழருக்கு மட்டுமல்ல உலகமெல்லாம் புலம் பெயர்ந்து வாழும் தமிழர்களுக்கு பெரிய உவகை தரும் செய்தியாகும்.

நூற்றாண்டு காலம் நோய் நொடியில்லாமல் அனைத்து வளங்களும் நிறைந்துஅவர் வாழும் காலத்தில் ஈழத்தமிழர் சுயாட்சி உரிமையும், நிறைவான, செழிப்பும் பெற்று வாழ இறைவனை வேண்டி நிறைவு செய்கின்றேன்.

**வி.சு. துரைராசா**

(கனடா)

சாவகச்சேரி

# ஈழ அண்ணல் மாவை. சோ. சேனாதிராசா அவர்களின் பவழவிழா வாழ்த்துரை!

அூந் ஞுஃபூறைருவ்ஷபூநு> ஆா
ஃபூணரீ ஞு

ஈழத் தமிழர் போராட்டம் - இலங்கை அரசின் அடக்குமுறை தொடர்புடைய செய்திகளைத் தமிழ்நாடு - புதுச்சேரி மாநில மக்களிடையே பரப்புரை செய்து உண்மைநிலையை - உணர்த்தும் பணியல் 1983 இல் ஈடுபட்டிருந்தோம்.

கடலூரிலிருந்து வெளிவந்த ‘கோடுகள்’ என்னும் மாத இதழில் ‘வரலாற்றுப் போக்கில் தமிழீழம்’ என்னும் கட்டுரையை எழுதினேன். அக்கட்டுரையை விரிவுபடுத்தி எழுதி ‘தமிழீழத் தாயகம்’ என்னும் வரலாற்று நூலாக 16 பக்கத்தில் வெளியிட்டேன்.

ஒரே நிலப்பரப்பாகக் குமரிக்கண்டத்தில் திகழ்ந்த இலங்கை இரண்டாம் கடல்கோளில் தமிழகத்தின்று தனியே பிரிந்த நிலையும், ஒரு தாயகம் இரு தாயகமாக மாறிய நிலையும் குறிப்பிட்டு எழுதினேன். ஈழத்தில் - திருக்கேதீசுவரம், திருக்கோனேசுவரம், முன்னேசுவரம், நடுவேசுவரம் என்னும் திருக்கோயில்களின் தொன்மை குறித்து ‘மகாவமிசம்’ குறிப்பிடும் செய்திகளை விவரித்து எழுதினேன். ஈழத்துப் பூதந்தேவனார் இயற்றிய சங்கப் பாடல்களையும்குறிப்பிட்டுத் தமிழீழம் - தமிழர்களின் தாயகம் என்னும் வரலாற்றுச் - சான்றுகளை நிறுவி எழுதினேன். இந்நூலைப் பரவலாகப் பொதுமக்களிடத்தில் கொண்டு சேர்த்தேன்.

## இயக்கத் தொடர்பு

இதே காலகட்டத்தில் புதுச்சேரி மாநில உ.த.ப. இயக்கக் கிளையின் சார்பில் ஐயா வீர. மதுரகவி, வீரமங்கை பவானி மதுரகவி, திரு. பாஞ். இராமலிங்கம் உள்ளிட்டோர் பெரிய அளவில் பரப்புரை பயணங்களில் ஈடுபட்டனர்.

புதுவைக்கு வருகை தந்த திரு. அ. அமிர்தலிங்கனார், திருவமை. மங்கையர்க் கரசி அமிர்தலிங்கம், திரு. சோ. சேனாதிராசா உள்ளிட்ட பெருமக்களை வரவேற்றுப் பரப்புரைக் கூட்டங்களுக்கு அழைத்தச் சென்றோம்.

ஒருமுறை நானும் ஈழஅண்ணல் மாவை. சோ. சேனாதிராசா அவர்களும் சிறப்புரையாற்றும் கூட்டத்தை ஏற்பாடு செய்திருந்தனர். அக்கூட்டத்தில் கலந்து கொள்ள புதுவையிலிருந்து தூக்கணாம்பாக்கம் செல்வதற்கு மகிழுந்தும் (கார்) ஏற்பாடு செயதிருந்தனர். ஆனால், மகிழுந்து உரிய நேரத்தில் வரவில்லை. கூட்டத்திற்குச் சரியான நேரத்தில் போக வேண்டும் என்பதைத் திரு. சேனாதிராசா அவர்கள் வற்புறுத்தினார்.

எனவே, பேருந்தில் செல்ல முற்பட்டபோது பேருந்தில் அமரவும் இடமின்றி நின்றுகொண்டே நாங்கள் இருவரும் கூட்டம் நடைபெற்ற தூக்கணாம்பாக்கம் சென்று திரும்பினோம்.

'எத்தகைய இடர்பாடுகள், தடைமுடைகள் ஏற்பட்டாலும் திட்டமிட்டச் செயற்பாடடைத் திட்ட மிட்டபடி நடத்தவேண்டும்' என்பதில் அவருக்கு இருந்த உறுதிப்பாட்டை அன்று அவரிடத்தில் கண்டேன்.

## வளர்ச்சியும் திறனும்

திரு. சேனாதிராசா அவர்களின் செயற்பாடுகளை அறிந்து கொண்டபோது மிகச் சரியானதும் துல்லியமானதும் ஆகிய திட்டமிடல்; செயல்திறனில் நுணுக்கமான அணுகுமுறை; விடாமுயற்சி; தொய்வு அடையாதமனத்திட்பம் ஆகிய சிறப்புகளை உணர முடிந்தது.

இத்தகைய திடமான மனவுறுதிதான் 13 முறை சிறைப்படுத்தப்பட்டு, ஏழு ஆண்டுகள் சிறக் கொட்டடியில் கொடுமையான அடக்குமுறைகளை எதிர்கொண்ட போதும் மீண்டு வந்து தொண்டாற்றும் திறனைக் கொடுத்திருக்கிறது.

சீர்மிகு சிந்தனையும், சொல்லும், செயலும் ஒரே நிலையில் உடையவராய் வாழ்கிறார். இத்தன்மைதான் பாராளுமன்றத் தேர்தலில் 1989, 2001, 2004, 2010, 2015 எனத் தொடர்ந்து வெற்றிகளை இவருக்கு ஈட்டித் தந்திருக்கிறது.

கருத்துகளை வரிசைப்படுத்தி ஆற்றொழுக்காகப் பேசும் திறன்; அதற்கேற்ற குரல்வளம் எதிலும் வெளிப்படைத் தன்மை இவையாவும் இலங்கை தமிழரசு கட்சியின் எட்டாவது - தலைமையை நல்கி இருக்கிறது.

## இலங்கையில் உ.த.ப. இயக்கம்

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் நான்காம் உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு நடைபெற்றபோது திருவள்ளவராண்டு 2005 (08.01.1974)இல் இலங்கையில் தோன்றியது. இயக்கத்தின் நிறுவுநர் குரும்பச்சிட்டி திரு. இரா. கனகரத்தினம் அவர்களால் 'உலகத்தமிழர் குரல்' என்னும் இயக்க இதழும் இலங்கையிலிருந்து வெளியிடப்பட்டது.

பின்னர் வேலனை திரு. ஆ. சண்முகலிங்கம் இதனைத் தொடர்ந்து நடத்தினார். இலங்கையில் உ.த.ப. இயக்கத்தை வேலனை திரு. ச. செயசேகரன், திரு. ஆ. சண்மகலிங்கம், அச்சுவேலி திரு.ப. கந்தசாமி, கொழும்பு திரு. பொன். பூலோகசிங்கம், கல்முனை திரு. வ. செல்லத்துரை, துன்னாலை வடக்கு திரு. ச. செந்துராசா, தாவடி திரு. செ. பரமநாதன், வேலனை திரு. இ. சற்குருநாதன், தெல்லிப்பலை திரு. நா. பத்மநாதன், மாவிட்டபுரம் திரு. தேவதாசன்,திரு. சு. வித்தியானந்தன், திரு. இ. தவகோபால், திரு. கே. இரத்தின் சிங்கம் உள்ளிட்டோர் தமது உழைப்பால் வளர்ந்தெடுத்தனர்.

வாழையடி வாழையென வந்த நற்றொண்டர் வரிசையில் அயலகத்தி லிருந்து அமரர் சி. செல்லையா, திரு. வி.சு. துரைராசா, திரு. துரை, கணேசலிங்கம், திரு.

இராச சூரியர், தரு. சு. பிரசாந்தன் உள்ளிட்டோர் தலைமையக வளர்ச்சியில் ஈடுபாடு கொண்டு செயற்படுகின்றனர்.

## பவழவிழா

உ.த.ப. இயக்கத்தில் 13வது மாநாடு நடைபெறும் இதே வேளையில் பண்பாட்டு இயக்கத்துடன் நெருங்கிய தொடர்புடை ஈழ அண்ணல் மாவை. சோ. சேனாதிராசா அவர்களின் பவழவிழாவும் நடைபெறுவது மிகவும் போற்றுதற்கு உரியதாகும்.

ஈழத் தமிழர் வாழ்வியல் மீட்கப்பட வேண்டும். அவர்களது உரிமைகள் காக்கப்பட வேண்டும் என்ற நோக்கில் திரு. சேனாதிராசா அரசியலில் செயற்படுகிறார். அதே நோக்கல் பண்பாட்டு இயக்கம், பண்பாட்டுத் தளத்தில் செயற்படுகிறது.

எனவே, ஒருசேர நடைபெறும் பண்பாட்டு இயக்கப் பன்னாட்டு மாநாடும், ஈழ அண்ணல் மாவை. சோ. சேனாதிராசா அவர்களின் பவழவிழாவும்; ஈழத்தமிழர் வாழ்விலும், உலகத் தமிழர் வாழ்விலும் ஒரு மறு மலர்ச்சியை உருவாக்கட்டும்!

ஈழஅண்ணல் திரு. சேனாதிராசா அவர்கள் தம் பெயருக்கு ஏற்ப (சேனை - மறவர்படை: ராசா - அரசர்) கிடைத்திருக்கிறார். அவரைப் புரவலராகக் கொண்டு, போடவேண்டும். உலகத் தமிழரின் வாழ்வியல் - பாண்பாட்டியல் அரணாகத் தழைத்தோங்கி வளரவேண்டும்.

உ.த.ப. இயக்கத்தின் துணை கொண்டு ஈழ அண்ணல் மாவை. சோ. சேனாதிராசா அவர்கள் ஈழத்தமிழர் துயர்களையும் பணியில் வெற்றி வாகை சூட வேண்டும் என்றும் பல்லாண்டு பல்லாண்டு பயன்நல்கி வாழ வேண்டும் என்றும் வாழ்த்தி வணங்குகின்றேன்!

**“வளம்பல பெற்று வாழிய நலனே!**
**வளர்தமிழ் போல வாழிய நீடே!”**

# ஈழ அண்ணலின் வாழ்வும் பணியும்

ஷ்தூமிந் ரூப , முஜீந் பிறுறையஸ
துணைப் பேராசிரியர்
அறிஞர் அண்ணா அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி
காரைக்கால்,
செல்பெசி: 9486948060
மின்னஞ்சல் : selvaperumalrv@gmail.com

ஈழம் என்ற சொல்லைக் கேட்டாலும் பார்த்தாலும் உலகத் தமிழர் எவர் மனத்திலும் கணநேரத்தில் தோன்றும் இரு உணர்வுகள். ஒன்று ஈரம் மற்றுது வீரம். இவ்விரண்டு இணைந்து கலந்ததுதான் ஈழம். அந்த மண்ணில் பிறந்த எத்தனையோ தியாகச் செம்மல்கள் அவ்விரு உணர்வுக்காய் தம் வாழ்வை இழந்துள்ளனர். ஈழமண்ணில் பிறந்த ஈரத்தையும் வீரத்தையும் மிக வேகமாக முன்னெடுத்த பல உன்னத தலைவர்களை நாம் இழந்து விட்டோம். இவ்வரலாறு ஈழ மண்ணுக்கு மட்டுமே உரியதன்று. தன் மக்களை, இனத்தை, நாட்டை, மொழியைக் காக்க வேகத்தோடு வீரத்தை முன்னெடுத்த உலகத் தலைவர்கள் பலர் நோக்கம் நிறைவேறும் முன்னரே மாய்ந்த வரலாறுகள் பல. வீரத்தை மிக விவேகமாக முன்னெடுத்து சாதித்த சரித்திர நாயகர்கள் சிலர். அத்தகையவர்களுள் ஒருவரே நமது ஈழ அண்ணல் மாவை. சோ. சேனாதிபதி அவர்கள். ஈழமண்ணில் எத்தனையோ இழப்புக்களுக்கு மத்தியிலும் ஒரு வீர விவேக நாயகரை இன்றளவும் தமிழன்னைக் காத்து வருகிறாள். அவர் மூலமே தன் சுதந்திரக் காற்றை அவள் சுவாசிக்க விரும்புகிறாள்.

இந்திய மண்ணில் அண்ணல் என்னும் சிறப்புக்கு உரியவர்கள் இருவர். ஒருவர் அந்நியனிடம் இருந்து தாய் மண்ணை மீட்டெடுத்த அண்ணல் காந்தியடிகள் மற்றொருவர் தாய்மண்ணின் விடுதலைக்காக மட்டுமல்லாது அடித்தட்டு மக்களின் வாழ்வியல் தடைகளையும் அறுத்து விடுதலை ஈட்டித் தந்த அண்ணல் அம்பேத்கர் அவர்கள். அவ்விருவர் இந்திய மண்ணில் செய்த மகத்தான சாதனைகளை ஈழ அண்ணலே உங்கள் ஒருவரிடம் எதிர்பார்த்துக் கிடக்கிறது. ஒட்டுமொத்தத் தமிழ்ச் சமூகம். ஆதலால் தங்கள் பவளவிழா மலரில் தங்களின் சரித்திர பாதைகள் பார்ப்பவர் கண்ணுற வாழ்வும் பணியுமாய்.

## வாழ்வியல்

- ஈழ அண்ணல் 1942இல் அக்டோபர் 27-இல் யாழ்ப்பாண மாவட்ட புரம் மண்ணில் சோமசுந்தரம் தையல் நாயகி இணையருக்கு மகனாகப் பிறந்தவர்.
- பள்ளிக் கல்வியையும், தொழில் நுட்பக் கல்வியையும் இலங்கையில் மேற்கொண்டவர்.
- மாணவப் பருவத்திலேயே மண்ணின் மீதும், மொழியின் மீதும் கொண்ட

காதலால் இலங்கை அரசுக்கு எதிரான போராட்டங்களை முன்னெடுத்தவர். இம்முன்னெடுப்பினால் தமது உயர் கல்வியைத் தாய் மண்ணில் தொடர மறுக்கப்பட்டவர்.

- அகதியாகத் மிழகம் வந்த அண்ணல், மொழி, அரசியல், பொருளியல், அறிவியல், மருத்துவம் எனப் பல துறைகளிலும் எண்ணற்ற சான்றோர்களை உலகுக்கெல்லாம் வழங்கிய சிதம்பரம் அண்ணா மலைப் பல்கலைக் கழகத்தில் அரசியல் அறிவியலில் பட்டங்களைப் பெற்றவர்.
- ஈழ அண்ணல் தமது கல்விக் காலங்களிலேயே தெளிந்த ஞானமும் பேச்சுத் திறனும் கொண்டவர். விளையாட்டுப் போட்டிகளில் ஆர்வம் மிக்கவர். பேச்சு, விளையாட்டு என எப்போட்டியாயினும் பங்கேற்ற வற்றிலெல்லாம் பதக்கங்களை வென்றவர்.

## அரசியல்

மண் உரிமைக்காகப் போராட்டங்கள் உலகம் எங்கிலும் நடை பெற்றுள்ளது. ஆனால் அவற்றையெல்லாம் பின்னுக்குத்தள்ளி விஞ்சியப் போராட்டமாக ஈழப் போராட்டம் விளங்கியது. மண், மொழி சார்ந்த மக்களையும் தாண்டி ஒட்டுமொத்த உலக மக்களின் போராட்டத்தை நினைப்பவர் ஒவ்வொருவர் நெஞ்சமும் ஒருகணம் கலங்கிப் போவதை எவரும் மறுக்கவியலாது.

ஈழ அண்ணல் தமது மாணவப் பருவத்தில் இருந்தே தாய்மொழி மீதும், நாட்டின் மீதும், இனத்தின் மீதும் மிகுந்த பற்று கொண்டவர். அப்பற்றுக்களின் காரணத்தினால் மட்டுமே அரசியலை முன்னெடுத்தவர் நாடு, பொழி, இன விடுதலைக்காக அர்ப்பணிப்போடு பல போராட்டங் களை மேற்கொண்டவர். இதனால் உடலாலும், உள்ளத்தாலும் பல இன்னல்களுக்கு ஆளானவர். நாட்டின் அத்தனை சிறைகளிலும் அடைபட்டு அவதியுற்றவர். இலங்கைத் தமிழரசு கட்சியின் இளம் உறுப்பினராகச் செயலாற்றத் தொடங்கி தலைவர் என்னும் உயர் நிலையைப் பெற்றுள்ளவர். தமிழ் மக்களின் அரசியல் பிரதிநிதியாய் இலங்கை அரசுக்குச் சிம்ம சொப்பனமாய் விளங்கிவருபவர். உலகத் தமிழர்களை ஒருங்கிணைக்கும் முயற்சியில் வெற்றி கண்டவர். மாணவர் பருவத்தில் தொடங்கிய அரசியல் பணியை இன்றளவும் இடையறாமல் இம்மியளவும் குன்றாமல் கொள்கை மாறாமல் நடத்தி வருபவர். அவரது அரசியல் நிகழ்வுகளில் சிலவற்றைச் சரித்திர சான்றுகளாக.

- ஈழ மக்களின் அன்புக்குப் பாத்திரமான தலைவர்களுள் குறிப்பிடத் தக்கவர்களான தந்தை செல்வா, அ. அமிர்தலிங்கம் ஆகியோறது வாழ்வியலையும் வழிமுறைகளையும் தமது அரசியல் வாழ்வில் கடைப்பிடித்து வாழ்ந்து வருபவர்.
- ஈழத் தமிழ் மக்களுக்காக அறவழியில் ஏறக்குறைய 60 ஆண்டுகளாகப் போராடி வருபவர், தமிழ் இன, மொழி, இலக்கிய, சமூக, சமய, பொருளாதார விடுதலையே தமது அரசியல் வாழ்வின் போக்காகக் கொண்டவர்.
- 1961-இல் தமது 19-வது வயிதில் தந்தை செல்வா, அ. அமிர்தலிங்கம் ஆகியோரது தலைமையில் நடபெற்ற அறப்போராட்டத்தில் கலந்து கொண்டதோடு அப்பபொழுதே அவர்கள் தலைமையில் “இளைஞர் பாசறை” ஒன்றை உருவாக்கியவர்.

- 1962-இல் ஈழத்தமிழ் மக்களுக்கு விடுதலையை ஈட்டித் தரவேண்டும் என்னும் உயரிய நோக்கோடு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் உறுப்பின ராகத் தன்னை இணைத்துக கொண்டவர்.
- 1966- இலிருந்து 1969 வரையிலான மூன்றாண்டு காலம் ஈழத் தமிழர் இளைஞர் இயக்கத்தின் செயலாளராக இருந்து தமிழர் வீரத்தை நிலைநாட்ட அவர் ஆற்றிய பணிகள் அளப்பிடற்கரியது.
- 1972-இல் ஈழ மண்ணில் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி (TULF) தொடங்கப்பட்டபோது அதன் இளைஞர் பிரிவுச் செயலராக அரும்பணி ஆற்றியவர்.
- 1972-1983-க்கும் இடைப்பட்ட பதினோரு ஆண்டுகளில் மொழியையும், மண்ணையும் இனத்தையும் முன்னிறுத்தி இலங்கை அரசுக்கு எதிராக எடுக்கப்பட்டப் பல போராட்டங்களில் பங்குபெற்று 11 முறை சிறைத்தண்டனைப் பெற்றவர். தாம் அனுபவித்த ஏழு ஆண்டு சிறைத்தண்டனையின் போது எட்டு சிறைகளுக்கு மாற்றம் பெற்று கொடுங்கோலர்களால் உயிர் பிரிந்துவிடும் அளவிளான இன்னல்களை அனுபவித்தவர்.
- 1978இல் மேற்கொள்ளப்பட்ட சிங்கள அரசுக் கெதிரானப் போராட்டத்தில் பங்கு பெற்று மட்டக்களப்புச் சிறையில் அடைக்கப் பெற்று சொல்லொனா துன்பம் கண்டவர்.
- 1983-இல் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலகம் இந்தியத் தமிழகத்தில் தொடங்கப்பட்டபோது அதன் அலுவலகம் பொறுப்பாளராகப் பொறுப்பேற்று இந்தியப் பிதமர்கள், தமிழக முதல்வர்கள் மற்றும் முக்கியத் தலைவர்களோடு ஈழ விடுதலைக் குறித்த ஆக்கப்பூர்வ பேச்சு வார்த்தைகளில் கலந்துகொண்டு தமது பேச்சுத் திறத்தால் அனைவரையும் கவர்ந்தவர்.
- 1989 இல் முதன் முதலாக இலங்கைப் பாராளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அவர் தொடர்ந்து 2001, 2004, 2010, 2015 எனப் பல தேர்தல்களில் வென்று மக்கள் மனதில் நின்று அரசியல் பணி செய்து வருகிறார்.
- 2000 ஆண்டு பொதுத் தேர்தலில் தமிழர் கட்சிகள் பிரிந்து நின்று தோல்வியைத் தழுவியது. இதனைத் தொடர்ந்து தமிழர் கட்சிகளை ஒருங்கிணைக்கும் முயற்சியில் பல தடைகளைக் கடநது அரும்பணி ஆற்றினார்.
- 203-இல் தமிழர் கட்சிகளை ஒன்றிணைக்கும் இவரது தொடர் முயற்சிக்கு வெற்றிகிட்டியது. இவர பெருமுயற்சியால் உருவாக்கப்பட்ட தமிழர் தேசிய கூட்டமைப்பே இன்றுவரை ஈழத் தமிழ் மக்களின் அரசியல் தலைமையாகவும் நம்பக்கையாகவும் விளங்கி வருகிறது.
- 2014 - செப்டம்பர் 7-இல் வவுனியாவிலே நடைபெற்ற தமிழரசு கட்சியின் 15-வது தேசிய மாநாட்டில் அவர் ஆற்றிய பேருரை, தீர்மானம் மிகவும் போற்றுதலுக்கு உரிய ஒன்றாகும். அவ்வுரை அவரது ஒட்டுமொத்த அரசியல் ஞானத்தையும் வெளிக் கொணர்வதால் அமைந்துள்ளது.

## நிறைவாக

பண்டைக்கால தென்னிந்திய சோழமன்னர்கள் மேற்கொண்ட படையெடுப்புகளால் சிங்களவர்கள் நாடிழந்து இன்னலுற்ற அவல நிலைகள்

அவர்களது ஆழ்மனதில் தீப்பிழம்பாய் கனன்றுகொண்டிருக்கிறது. ஒருபுறம் தம்பி அண்ணனைக் கொன்று அரசனாதல், மகன் தந்தையைக் கொன்று மன்னனாதல், சேர்ந்தவள் இராணியாதல் என விசித்திர வரலாற்றுக்கும் உளவியலுக்கும் சிக்குண்ட சிங்களவர் மகாவம்ச வரலாறு மறுபுறம், இத்தகைய வரலாற்றப் பின்னணியில் சிங்களவர் மன நிலையை புரிந்து கொண்டதால் ஈழ அண்ணல் அறப்போராட்ட வழியினைத் தேர்ந் தெடுக்கிறார்.

ஆயுதப் போராட்டம் தோற்ற நிலையில் தமது அரசியல் அனுபவ அறிவினை மேலும் பட்டைத் தீட்டி அறப்போராட்டத்திற்கு மேலும் வலுவூட்ட விழைகிறார். இந்த நிலையில், அவரிடம் தமிழரசுக் கட்சியின் தலைமைப் பொறுப்பு வருகிறது. தாம் சார்ந்த கட்சியில் தோற்ற வரலாற்றை எண்ணிப் பார்க்கிறார். 1948-இல் அந்நியரிடம் இருந்து விடுதலை பெற்ற சிங்களவர்கள் ஒற்றையாட்சிமுறை என்னும் கொடுங் கோள்மையை முன்னெடுத்து 1949-இல் இந்திய வம்சாவழித் தமிழர்களின் வாக்குரிமையைப் பறித்தனர். இதை வென்றெடுக்க 1949-இல் டிசம்பரில் இலங்கைத் தமிழரசு கட்சி தோற்றம் பெற்றது. இத்தகைய வரலாற்ற பின்னனி கொண்ட அமைப்பின் எட்டாவது தலைமைப் பொறுப்பினை ஏற்ற ஈழ அண்ணல் இதுவரை எட்டாத விடியல் தமிழர்க்குக் கிடைத்திட விழைகிறார்.

"இந்தியா உள்ளிட்ட சர்தேசம் ஒப்புக் கொள்கிற ஜனநாயக வழிகளில் எமுத கிளர்ச்சி, போராட்டம்தான் உண்டு. இந்திய நாடும் சர்வதேசமும் அதைத் தெரிந்துகொள்ளும் வகையில் அந்த அடித்தளத்திலிருந்து அதற்கும் மேளாகவும் நாம் காந்திய வழியில், சாத்வீக வழியில் தருமத்தில், அறத்தில் நம்பிக்கை வைத்து எம் தமிழப் பேசம் மக்கள் விடுதலைக்காகவும், விடிவுக்காவும் அதற்குத் தன்னாட்சிக்காகவும் போராடுவோம்" என அவர் ஆற்றிய மாநாட்டு நிறைவுறை அவர் அறப்போராட்டத்தால் கொண்டிருக்கும் ஆழ்ந்த நம்பிக்கையினை வெளிப்படுத்தக் காணலாம்.

உலக வரலாற்றில் அறப்போராட்டம் காலம் தாழ்ந்தது உண்டு. ஆனால் முற்றிலும் வீழ்ந்தது இல்லை. வீழ்ந்துவிட்டதாக எண்ணப்படும் ஈழத்தின் வீரம் தங்கள் அறவழியில் மீண்டும் நிலை நிறுத்தப்படும். ஈழ மண்ணின் மக்களின் போராட்ட வரலாறு உலக அரங்கில் எழுதப்படும் போது தங்கள் அனுபவ ஆண்டுகால அறப்போராட்ட நெடிய வரலாறு அதில் நீங்க இடம்பெறும் என்பது திண்ணம். தாங்கள் வாழுங் காலத்திலேயே அது வென்றிட வேண்டும் என்பது உலகத் தமிழர்கள் அனைவரது எண்ணம்.

# மொழி, இனப் போராளி

## மாலை. சோ. சேனாதிராசா

பவழ விழா கட்டுரை: இலங்கைத் தமிழரசுக் கட்சித் தலைவரும் இலங்கைப் பாராளுமன்ற உறுப்பினருமாகிய மாண்பமை மாவை. சோ. சேனாதிராசா அவர்கட்கு 'உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம்' பவழ விழா கொண்டாடி' சிறப்பு மலர் வெளியிடுவது கண்டு மகிழ்வுருகிறேன். தமிழீழ முன்னணித் தலைவர்களுள் ஒருவர் 75 அகவையைக் கடந்தும், இனக் கொலைக் களமண்ணில் நிற்றல் என்பது காலத்தின் கொடையே. அய்யா மிகச் சிறந்த போராளி. சிறந்த கல்வியாளர்;சிறந்த சமூகவியலாளர்; மொழி இன உணர்வாளர். அய்யா அவர்களை 1983 ஆம் ஆண்டிலிருந்தே அறிந்திருக்கிறேன். 1985 ஆம் ஆண்டு சென்னை வீ. நகரில் பாண்டிபசாரில் தணிகாசலம் ரோடு -எண்:2 -இல்லத்தில் அய்யா அவர்களை நானும் உடன் சில தோழர்களும் சந்தித்து உரையாடியது இன்றும் பசுமையாக என் மனதில் நிலவுகிறது. அப்போதே நாங்கள் நடத்தவிருக்கும் நிகழ்ச்சிகளுக்குப் புதுச்சேரிக்கு வரவேண்டும், பொதுமக்களுக்கு இலங்கை நிலவரங்களை எடுத்துச் சொல்ல வேண்டும் என்று கேட்டுக்கொண்டோம். அப்போதெல்லாம் யார் எந்த அணி என்ற பாகுபாடே அறியாதகாலம். குழுகுழுவாக போராளிகள் வருவார்கள். தங்கள் துயரங்களைப் பகிர்ந்துகொள்வார்கள். நாங்கள் துயரில் தோய்ந்துபோவோம். இந்த நிகழ்வுகளுக்கெல்லாம் எங்கள் இனிய நண்பர் முனைவர் பாஞ்ச். இராமலிங்கம் உறுதுணையாய் இருந்திட்டார். தமிழர் தலைவர் அமிர்தலிங்கமும் மங்கையர்க்கரசியும் வருகின்றபோது அவர்களை எங்கள் தந்தையும் தாயுமாக பார்த்தோம். தந்தையின் பேச்சும் தாயின் இன்னிசையும் எங்களை அப்படியே கட்டிப்போட்டுவிடும். நிகழ்வுகள் முடியும்வரை ஒன்றித்து பார்த்திருப்போம். அணி அணியாய் மக்கள் திரண்டிருந்து கேட்டிருப்பர். அந்த தந்தையும் தாயும் ஊட்டிய இன உணர்வுகள் அளப்பரியது. அக்கால கட்டங்கள் தொடங்கி ஈழப்போர் தமிழர்களை ஈர்த்தது. இலங்கை வாழ் தமிழர்களைச் சிங்களர்களும் சிங்கள அரச பயங்கர வாதமும் கொன்றொழிக்கத் தொடங்கி ஓர் இனப்படுகொலையைத் தொடர்ந்து நடத்திவந்த காலம் அது. தமிழ் நாட்டுத் தமிழர்கள் கொதித்துப்போயினர். தமிழின உணர்வுகள் பொங்கி எழுந்தன. இளைஞர்கள் திரள் திரளாகக்கூடி இலங்கைவாழ் தமிழினத்திற்கு ஆதரவு குரல் எழுப்பினர். திராவிட இயக்கங்கள் போட்டா போட்டியில் செயல்பட்டன. தமிழ் நாட்டரசையும் இந்திய அரசையும் ஈழத்தமிழர்களுக்கு ஆதரவளித்து அவர்களின் சுய அரசுரிமைகளுக்காகப் போராட வேண்டும் என்று தமிழ்நாடெங்கும் கிளர்ச்சிகளும் போராட்டங்களும் நடத்தின. தமிழ், தமிழின உணர்வாளர்கள் புதியப் புதிய இயக்கங்கள் தொடங்கி ஆங்காங்கே போராட்டங்கள் பொதுக்கூட்டங்கள் நடத்தினர். அவ்வேளையில் புதுச்சேரியில் அரியாங்கும் பகுதியில் 10. 02. 1985 அன்று இளைஞர்கள் துணையுடன் 'பெரியார் அறிவியல் மன்றம்' சார்பில் தமிழீழ விடுதலை விளக்கப் பொதுக்கூட்டம் நடத்தி அய்யா மாவை. சோ. சேனாதிராசா அவர்களைப் பேசச் செய்தோம். அடுத்த நாள் அய்யா அவர்களுடன் தமிழீழங் குறித்தும் அங்கு நிலவும் சூழல்கள் குறித்தும் கேட்டறிந்தோம். ஊரைச் சுற்றிக் காண்பித்தோம். அப்போதெல்லாம் மாலை நேரங்கடந்த பின்னர் ஈழ போராளிக் குழுக்களோடும்

அவர்களின் தளபதிகளோடும் கலந்துரையாடல்கள் வெகு ஆர்வமாக நடத்தப்படும். கமுக்கமாகவும் நடக்கும். அப்போது உருவாகிய நம் புதுவை இளைஞர்கள் இன்றும் உணர்வுடை நெஞ்சினராக வீறு நடைபோட்டுவருகின்றனர் என்பது மகிழ்வுக்குரியது. மதுரையில் கமுக்கம் திடலில் திராவிடர் கழகம் நடத்திய தமிழீழ பாதுகாப்பு மாநாட்டில் குமரிநாடன் என்னும் விடுதலைப்புலி இளைஞன் ஒருவன் ஏற்றிவைத்த தமிழீழக் கொடியின் வடிவத்தை புதுச்சேரியில் தி. மு. க. மாநாட்டு ஊர்வல அலங்கார வண்டியில் வலம் வரச்செய்த நிகழ்வுகள் இன்றும் பசுமையான காட்சிகள். ஈழ மண்ணின் விடுதலை, மலயகத் தமிழர் உரிமைகள் என்ற தளங்களில் தொடர்ந்து போராடிவருகிற அய்யா சேனாதிராசா அவர்களின் உணர்வுகளுடன் தமிழ்நாட்டு அறிஞர்களின் பகிர்வுகள், தீர்வுகள் இருந்திருக்கின்றன என்பதை பெரியாரியல் அறிஞர் வே. ஆனைமுத்து அவர்கள் இலங்கையில் 45 நாட்கள் தங்கியிருந்து, தமிழீழத் தேசியத் தலைவர் தம்பி வேலுப்பிள்ளை பிரபாகரன் நடத்திய தமிழீழ ஆட்சியை, ஈழநிலவரங்களை ஆய்வு செய்தார். அப்போது 19. 06. 2005இல் சேனாதிராசா அவர்களை பெ. சந்திரசேகரன் அவர்களின் இல்லத்தில் சந்தித்து உரையாடியிருக்கிறார். அப்போது அரிய பல கருத்துகள் பகிரப்பட்டருப்பதை வே. ஆனைமுத்து அவர்கள் ‘தமிழீழத் தமிழரை இலங்கை மலையகத் தமிழரை நீங்களும் பாருங்கள்!நீங்களும் பேசுங்கள்!!’ என்ற நூலில் பதிவு செய்திருக்கிறார். இன்றைக்குத் தமிழீழம் தொடர்பாகவும் இலங்கைவாழ் மக்கள் நிலை தொடர்பாகவும் உலகநாடுகள் கவனங்கொண்டுள்ளன. அதிகார பகிர்வுகள் குறித்தும்கூட நம் தமிழீழ மக்களின் கருத்துகள் அறியப்படுகின்றன.

ஓரிரு நாட்களில் ஒன்றேமுக்கால் இலங்கைத் தமிழர்கள்-ஈழத் தமிழர்கள் கொன்று குவிக்கப்பட்ட பின்னரும் எஞ்சியள்ள தமிழர்களின் வாழ்வுரிமை, சமூகவுரிமை, சமயவுரிமை, மொழியுரிமை கல்வி உரிமை, வேலை உரிமை என அனைத்து உரிமைகளையும் இழந்திருக்கின்றனர். எதிர்வரும் காலங்களில் சிங்கள கொடு ஆட்சியினரால் அதிகார பகிர்வுகள் குறித்து பேசப்படுகிற வேளையில் நாம் ஏமார்ந்திடாதிருக்க திரு. வே. ஆனைமுத்து அவர்கள் அன்றைக்குப் பதிவு செய்துள்ளதை ஊன்றிக் கவனிக்கும்படியாய் உள்ளதாக நான் இதைக் கருதுகிறேன். ‘‘இந்தியாவுக்கு இந்திய அரசமைப்பு யாப்பு இருப்பதைப் போலவே, ‘ஜம்மு-காஷ்மீர் அரசியல் யாப்பு’ எனத் தனியான ஓர் அரசமைப்பு அவர்களுக்கு 1955 இல் உருவாக்கப்பட்டது. அது இந்தியாவை இந்திய அரசமைப்பை ஏற்றுக்கொண்டதுதான். ஆனால் ஜம்மு-காஷ்மீர் மக்கள் முதலில் ஜம்மு-காஷ்மீர் குடிமக்கள் (citizens); இரண்டாவதாக இந்தியாவின் குடிமக்கள்; அவர்களுக்குத் தனித் தேசியக்கொடி உண்டு. ஜம்மு-காஷ்மீருக்குக் குடிஅரசுத் தலைவர்(president) உண்டு. பிரதமர்(Prime Minister) உண்டு. இவ்வளவு உரிமைகளையும் 1956 முதற்கொண்டே இந்திய அரசு பறித்துவிட்டது. மேலும், 1976 இல் நிறைவேற்றப்பட்ட இந்திய அரசமைப்பின் 42 வது திருத்தத்தின் அதிகாரத்தை வைத்து , இந்திய மாநில அரசுகளின் பல அதிகாரங்கள் பறிக்கப்பட்டுவிட்டன என்பதை விவரமாக அவர்களிடம் நான் சொன்னேன். அவர்களுக்கு அச்செய்தி புதியதாக இருந்தது. இலங்கையிலுள்ள தமிழர்களுக்கு எதிர்காலத்தில் எப்படிப்பட்ட அரசியல் சட்ட யாப்பு அமைய வேண்டும் என்பதற்கான ஒரு

முன்வடிவை (A Draft Constitutionn for Sri Lankan Tamils) நீங்களே உருவாக்கி,

அதனைத் தமிழர்கள், சிங்களவர்கள், உலகநாடுகளிலுள்ள அரசியல் சட்ட நிபுணர்களின் விவாதத்திற்கு வைக்கலாமா என்பதுபற்றி நீங்கள் எல்லோரும் சிந்தியுங்கள் என வேண்டிக்கொண்டேன். “

என்று பதிவிட்டுள்ளதை இக்கட்டுரை வாயிலாக வெளிப்படுத்துவதன் நோக்கம் என்னவெனில் இலங்கைத் தமிழக முதலமைச்சர் மாண்புமிகு விக்னேசுவரன் அவர்களின் இப்போதைய சிந்தனையை எண்ணியே.

தமிழீழமே நம் முழுமையான எண்ணம். தமிழர் யாவரும் ஓரணி நிற்றலே அதற்காண வழி.

“கிளம்பிற்றுகாண் தமிழ்ச் சிங்கக் கூட்டம்

கிழித்தெறிய தேடுதுகாண் பகைகூட்டத்தை” என்ற புரட்சிக் கவிஞர் வரிகளை மனதில் நிறுத்தி பணிச் செய்வோம்.

அய்யா மாவை. சோ. சேனாதிராசா அவர்களின் பவழ நிறைவு நாளில் உறுதி ஏற்போம். நூறாண்டும் நிறைவெய்தி, நூற்றாண்டு விழா கண்டு, தமிழீழக் களிப்புடன், தானைகட்குத் தலைமை ஏற்று, நனிவாழ்வு வாழ்ந்திட அய்யா அவர்கட்கு நெஞ்சம் நிறைந்த வாழ்த்துகள்! நன்றி, இவண்

□, வீணைமூரீஎ

நிறுவனர்-தலைவர். புதுச்சேரித் தன்னுரிமைக் கழகம்.

நாள்: 12.06.2018

# அவரால்தான் விழவு

பேராசிரியர் இரா. ச. குழந்தைவேலன்

தலைவர், கடலூர், மாவட்டத் தமிழ்ச்சங்கம்

**தென்திசையைப் பார்க்கின்றேன்**
**என்சொல்வேன் என்றன்**
**சிந்தையெலாம் தோள்களெலாம்**
**பூர்க்கு தடா!**
**அன்றந்த இலங்கையினை ஆண்ட மறத்தமிழன்**
**ஐயிரண்டு திசைமுகத்தும்**
**தன்புகழை வைத்தோன்!**

என்று பாவேந்தர் தென்திசையிலுள்ள இலங்கையைப் பாடினார். இலங்கை குமரியின் தென்திசையில் இருந்து கடல் கொண்ட தொன்னாடு. இலெமுரியாக் கண்டம். பரந்து விரிந்த இந்த நிலப் பரப்பில் வாழ்ந்த மக்கள் நாகர்கள் என்ற அழைக்கப் பெற்றனர். அவர்கள் பேசிய மொழீ திராவிடம் (தொல்தமிழ்) என்பதுஅறிவுலர் மேதை அம்பேத்கரின் ஆய்வுக் கருத்து. கி.மு. 50,000 ஆண்டுகட்கு முன்பு ஒரே நிலப்பரப்பாக விளங்கிய தென்னாடு பல்வேறு கடல்கோள் காரணமாக மூழ்கியுள்ளது. அவற்றுள் மேடாக விளங்கிய நிலப்பரப்பு நாடாகவும் தீவுகளாகவும் பிற்காலத்தில் அமைந்தன. அவற்றுள் ஒன்றே தமிழ் நிலப்பரப்பாகிய இலங்கை. முன்பு இந்தியா முழுமைக்குமே வாழ்ந்தவர்கள் ஒரே இன மக்கள். வட இந்தியாவில் கண்டறியப் பட்ட சிந்துவெளி நாகரிகம் திராவிட நாகரிகம் என அறிஞர்களால் முடிவு செய்யப்பட்டுள்ளது.

ஆரியர்கள் இந்தியாவுக்குள் வருவதற்குமுன் வாழ்ந்த வட திராவிட (தொல்தமிழ்) மக்கள் எவ்வாறெல்லாம் ஏமாற்றப்பட்டனர் என்பதைப் பாவாணர் தம் நூலில் விளக்கியுள்ளார். வடக்கே ஆரயர் வருகை, தெற்கே சுற்றிலும் கடல்கோள் இவற்றால் தமிழகம் சுருங்கிப்போய்விட்டது. கடல்கொண்ட தென்னாடில்தமிழர்களின் பகுதியாகிய இலங்கை தனித்தீவு நாடாக விளங்கியது. அந்த நாட்டிலும் தமிழர்க்கு எண்ணற்ற இடர்பாடுகள்!

இன்று தமிழ் இலங்கையில் சிங்கள இனத்தவர் அதிகமாக இருப்பது எவ்வாறு? அவர்களது சிங்களமொழி தோன்றியது எப்படி? சிங்களர்கள் யார்? என்ற பல வினாக்கள் எழுகின்றன. இன்று பல்வேறு ஆய்வுகள் இது குறித்துப் பல செய்திகளை நமக்குப் புலப்படுத்துகின்றன.

இந்தியாவின் வங்காள நாட்டிலிருந்து விசயன் என்பவனுடன் நாடுகடத்தப் பெற்று இலங்கைக்கு வந்த ஆரியர்களே சிங்கள இனத்தின் முன்னோர்கள் என்று மகாவம்சம் என்ற நூலல் கூறப்பட்டிருப்பது உண்மையல்ல என்று கருதப்படுகிறது. ஆனால் விசயன் இலங்கையில் கால்பதித்த நாளாக ஒரு நாளை சிங்களர்கள் கொண்டாடுகிறார்கள். வரலாற்று ஆய்வாளர்கள் இந்தியா பாலா, சிங்க வரலாற்றய்வாளர்,சௌவிறத்னா, கசங்க குணத்திலக்கா போன்றோர் ஆரியர் வருகையை மறுத்துக் கூறுகின்றனர்.

இலங்கையில் தமிழ: ஈழம் நீங்கிய சிறிலங்கா பகுதியில் வாழ்ந்த தமிர்கள் சமத்கிருதத்தையும், பாலி மொழியையும் ஏற்றுக்கொண்டுசிங்க ளமொழியை உருவாக்கிச் சிங்களர்களாக மாறினர் என்ற பல ஆய்வுகள் காட்டி இன்று நிறவப்படுகிறது. இக்கருத்தை தமிழர் காசி ஆனந்தன் தம் கட்டுரையில் குறிப்பிடுகின்றர். ஆரியர்கள் வந்ததாகக் கூறுப்படுவதுபொய்யானால் சமத்கிருதம் நேரடியாகச் சிங்கள மொழியாக்கத்திற்குக் காரணமாக இருக்க வாய்ப்பில்லை.

இலங்கையில் 74 விழுக்காட்டினர் சிங்களர். 12.5.விழுக்காட்டினர் தமிழர்கள் 5.4 விழுக்காட்டினர் இந்தியத் தமிழர், 7.1 விழுக்காட்டினர் (மூர்கன்) முஸ்லிம்கள்.தமிழகத்தின் பகுதியாக விளங்கிய இன்றைய இலங்கையில் பெரும்பான்மை சிங்களர் என்றால் அவர்கள் யார் என்று அறிய வேண்டியுள்ளது.

அண்மையில் மானுடவியல் பேராசிரியர் முனைவர் பக்தவச்சல பாரதி அவர்கள் இலங்கையில் சிங்களவர் என்ற ஆய்வு நூல் ஒன்றினை வெளியிட்டுள்ளார். அந்த நூலில் இந்திய இனத்தொடர்ச்சியும் தென்னிந்தியப் பண்பாட்டு நீட்சியும் பற்றி விளக்கியுள்ளார். 125க்கும் மேற்பட்ட ஆய்வு நூல்களும், கடடுரைகளும் சான்று காட்டப் பெற்றுள்ளன. அந்த நூலில் சிங்களர் யார், அவர்கள் மொழியது என்பது பற்றியும், அவர்களின் பண்பாடு, வாழ்வியல் சார்ந்த அனைத்து செய்தகளையும் ஆராய்ந்துள்ளார்.

சிங்களர் தென்னிந்தியாவில் வாழ்ந்த தமிழ் மூதாதையர், அவர்கள் மொழி சிங்களம்தொல் திராவிட மொழிக் குடும்பத்தை ஒத்தது. தமிழர்களே சிங்களர்களாக மாறியிருக்கிறார்கள் என அவரது நூல் வாயிலாக அறிய முடிகிறது. மரபணு ஆய்வு, மொழி வரலாறு, பண்பாட்டு ஆய்வு முதலிய அடிப்படையிலான அவரது ஆய்வு மேற்கோள்கள் இந்த செய்திகளை வெளிப்படுத்துவனவாக உள்ளன. இவ்வாறு நீண்ட காலமாக வாழ்ந்து வந்த இலங்கை மக்கள் கி.பி. 12 ஆம் நூற்றாண்டின் இறுதியில்தான் சிங்களர், தமிழர் என்ற இன அடையாளம் பெற்றுள்ளனர்.

சிங்களர் என்ற சொல் பல்வேறு மொழீபேசுவோர் வழிவந்த குழுக்களை ஒரு குடைக்கீழ் அணைத்து நிற்கும் ஒரு பெயர் என் வரலாற்றுப் பேராசிரியர் குணவர்தன அவர்களும், பண்டைய காலத்தில் தென்னிந்திய மக்கள் இலங்கையில் குடியேறி சிங்களவர்களாக மாறிய முறை கருத்தூன்றி ஆராய்வதற்கு உரியதாகும் என்ற ஒபயசோர, ராபர்ட்ஸ், சில்வா முதலிய அறிஞர்கள் கூறியுள்ளதையும் கருத வேண்டியுள்ளது.

இவ்வாறாக வாழ்ந்தவர்கள் தங்களுக்குள் சிறுசிறு முரண்பாடுகளைப் பெரிதாக்கிக்கொண்டதாலும், வணிகம் செய்ய வந்த ஆங்கிலேயர்களின் பிரிந்தாளும் சூழ்ச்சியாலும் பொய்யான வரலாற்றுப்புனைந்துரைகளாளும், பெரும்பான்மையான, விளங்கிய சிங்களர்களின் ஆதிக்க மனப்பான்மையாலும் தமிழரின் இயல்பான விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையாலும் இன்ற பாகையாளிகளாக, எதிலிகளாக தங்கள் ஈழமண்ணில் துயருறுகின்றனர்.

தமிழ் மக்களுக்கான உரிமைப்போர் 1920 முதலே தொடங்கியது. இலங்கைச் சிக்கலுக்குத் தீர்வு கா1ம் பொருட்டுக் வட்டாட்சித் திட்ட மொன்றை உருவாக்கி டொனமூர்,

சோல்பரி ஆணைக்குழுவிடம் அளிததனர். அதன்படி வடகிாக்கு மாநிலம், கண்டி மாநிலம், தாழ்நில தெற்குப்பகுதி மாநிலம் என மூன்ற மாநிலங்களாகப் பிரித்து அவற்றை நெறிப்படுத்த மத்தியில் ஒரு கூட்டாட்சித் தலமை உருவாக்கவேண்டும் என்பது அந்தத் திட்டம்.

மாநிலங்களில் தன்னாட்சி மத்தியில் கூட்டாட்சி என்னும் இந்த திடடத்தை முன்வைத்து அமைதி வழியில் தமிழர்கள் போராடத் தொடங்கினர். தந்தை செல்வா, அமிர்தலிங்கம் முதலிய தலைவர்கள் தமிழர்களை ஒருங்கிணைத்து அமைதிவாயில் போராட்டத்தை முன்னெடுத்தனர். ஆனால் 1956ஆம் ஆண்டு பண்டாரநாயகா ஆட்சியல் இருந்த பொழுது தனிச்சிங்களம் ஆட்சி மொழிச் சட்டம் நிறைவேற்றப்பட்டது! இதனால் தமிழர்களைத் தீவிரமாகப்போராடும் நிலைக்குத் தூண்டியத இலங்கை அரசு.

ஆங்கிலேயரிடமிருந்து இலங்கை விடுதலை பெற்றபின்பு இவ்வாறு அடிமைச்சட்டத்தை நிறைவேற்றிய இலங்கை அரசை எதிரத்து 1956 ஆகஸ்ட் 17 ஆம் நாள் தந்தை செல்வா தலைமையில் திருமலை மாநாடு நடைபெற்றது. திருமலைக்ச் செல்வோம் சிறுமை அடிமை வெல்வோம்! என்பது அந்த மாநாட்டின் முழக்கமாக இருந்தது. தீவிர மடைந்த அந்த போராட்டம் காரணமாக 26.07.1957 அன்று பண்டாரநாயக, செல்வநாயகம் ஒப்பந்தம் ஏற்பட்டது. முழுமையாக இல்லையென்றாலும் ஓரளவு தன்னாட்சியும், நில உரிமையும் அதில் வழங்கப்பட்டன. ஆனால் 08.04.1958 அன்று அந்த ஒப்பந்தம் ஓராண்டுக்குள் ரத்து செய்யப்பட்டதாக அறிவித்தது மிகப்பெரிய துரோகமாகும். அதன் பின்னர்தான் தமிழரசு கட்சி 25.5.1958 அன்று வவுனியாவில் மாநாடு கூட்டித் தமிழர்களைப் போராட்டத்துக்கு அழைத்தது. அதுமுதல் தமிழர்கள் ங்கள் மொழிக்காகவும், நிலவுரிமைக்காகவும் பல்வேறு போராட்டங்களைத் தொடர்ந்து நடத்தி வந்தனர்.

வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போல 1972இல் சிறிமாவோ பண்டாரநாயக் அரசு ஒற்றை ஆடு;சி அரசியலமைப்பை அறிவித்தது. தமிழர்களை அடிமைப்படுத்திய இந்த சட்டத்தை எதிரித்துத் தமிழர்கள் தீவிரமாகப் போராட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர். மாணவர்கள் முத்ல அனைவரும் களத்தில் நின்றனர். அவ்வாறு களத்தில் இறங்கிப்போராடிய கட்டிளங் காளைகளில்; ஒருவர், வீர மறவன் மாவை. சோ. சேனாதிராசா அவர்கள்.

75 அகவை கடந்து பவளவிழா காணும் மாவை. சோ. சேனாதிராசா அவர்கள் யாழ்ப்பாணத்தில் மாவட்டபுரம் என்னும் ஊரில் 27.10.1942 அன்று விற்தார்., பெற்றோர் சோமசுந்தரம், தையல்நாயகி இணையர், இலங்கைப் பல்கலைக் கழகத்தில் இளங்கலைப் பட்டமும், அகதியாக வந்த காலத்தில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் முதுகலை அரசியல் அறிவியல (Political Science) பட்டமும் பெற்றார். இளமை முதல் பேச்சு, விளையா;டடு, பொதுத்தொண்டு அனைத்திலும் முதன்மையாகத் திகழ்ந்தார். மாணவர் பரவை மூலம் இளைஞர்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தினார். 1972 புதிய அரசியலமைப்புச் சடடத்திற்கெதிராகப் போராடியதால் சிறையில் அடைக்கப் பெற்றார்.

தொர்ந்து 1978 முதல் இலங்கை அரசியலமைப்புச்சட்டத்தை எதிரத்துப் போராடியும் விடுதலைத் தமிழீழம் கட்டும் போராடி மட்டக்களப்புச்சிறையில்



அடைக்கப்பெற்று பல நீதிமன்ற வழக்குகளைச் சந்தித்துள்ளார். இவர்மீது இன்றும் 7 வழக்குகள் உள்ளன. தந்தை செல்வா, அமிர்தலிங்கம் ஆகியோர் தலைமையை ஏற்றுத் தமிழ் தேசிய விடுதலை இயக்கப் போராட்டத்தில் இன்னின்றார். ஈழத் தமிழர் விடுதலை இயக்கத்தின் செயலாளராகவும் பின்னர் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி (TULF) இளைஞர் புரிவு செயலாளராகவும் திறம்படச்செயல் பட்டார் இவர். இந்தயாவில் தங்கியிருந்த பொழுது இந்தியத் தலமை அமைச்சர் இந்திராகாந்சதி, ராஜிவ்காந்தி ஆகியோருடன் நிகழ்ந்த பேச்சில் தமிழகத் தலைவர்களுடன் பங்குபெற்றார். இலங்கைத் தமிழர் அமைப்புகளில் சார்பில் தமிழகத் தலைவர்களுடன் தொடர்பில் இருந்தார்.

அய்யா அமிர்தலிங்கம் அவர்களின் மறைவுக்குப் பின்னர் 1989 முதல் 2015 பாராளுமன்றத் தேர்தல்வரை வெற்றி பெற்றுப் பாராளுமன்ற உறுப்பினராகச் செம்மையுடன் பணியாற்றினார். மாவை. சோ. சேனாதிராசா அவர்கள் பொதுவுடமைக் கொள்கையில் பற்றுள்ளவர். உலகெங்கிலும் நடைபெறும் மாநாடுகளில் பங்க பெற்றவர். புரட்சிமிக்கப் போராட்டங்கள் எங்கு நடந்தாலும் நல்லாதரவு நல்கி விடுபவர். இலங்கைத் தமிழரின் போராட்ட வரலாறில் 60 ஆண்டு கால பங்களிப்புடன் பிரிக்க இயலாதவாறு பிணைந்து நிற்பவர்.

மாண்பமை சேனாதிராசா அவர்கள் தந்தை செல்வா, அமிர்தலிங்கம் வழியில் தடம் மாறாமல் பயணித்துக் கொண்டிருக்கும் இணையற்ற தமிழ்ப்போராளி, தமிழ்தேசியக் கட்டமைப்பின் பாராளுமன்றக் குழுத் துணைத்தலைவர், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் எட்டாவது தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பெற்று அதன் 15 வது தேசிய மாநாட்டில் பேருரையாற்றி அனைவரின் பாராட்டைப் பெற்றவர்.

தமழர் விடுதலைக்காக வாழ்நாள் முழுதும் போராடிவரும் மாவை. சோ. சேனாதிராசா அவர்களின் போராட்ட வாழ்க்கையில் பெற்ற வீரத் தழும்புகள் எண்ணற்றவை. 7 அண்டகளில் 8 முறைகளில் 11 முறை சிறைக்குச் சென்றவர். அவருக்கு இழைக்கப்பெற்ற இறைக் கொடுமைகள் பலப்பல! சித்திரவதையின் உச்சத்தால் உயிர் பிரிந்துவிட்டது என்ற எல்லைக்குட் சென்று உயிர் பிழைத்தவர்! 75 ஆண்டுகாலம் வாழ்ந்திருக்கும் அவர் 60 ஆண்டுகாலம் மக்களுக்காக உழைத்திருக்கிறார். ஈடு செய்யமுடியாத ஒப்பற்ற தியாகம்! அவர் நெடிது வாழவேண்டும். இலங்கைத் தமிழர்களுக்கு வரால்தான் விடிவு ஏற்பட வேண்டும்! உலகத் தமிழ்ப்பண்பாட்டு இயக்கத்தின் இந்தப் பாராட்டு சேனாதிராசாவுக்குச் சூட்டப்பெற்ற மணிமகுடம்!

# வாழ்க ஈழ அண்ணல் மாவை.சோ. சேனாதிராசா

# வெல்க அவர்தம் கொள்கை.

தமிழ்மாமணி வா.மு.சே.திருவள்ளுவர்,

ஆசிரியர், தமிழ்ப்பணி, சென்னை,

தமிழ்நாடு

அண்மையில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற 13ஆம் உலகத் தமிழ்ப் பண்பாட்டு மாநாட்டிற்கு தமிழ்நாட்டுக் குழுவினரோடு சென்றிருந்தோம். உலக நாடுகள் பலவற்றிலுமிருந்து உலகத் தமிழர்கள் பங்கேற்று மாநாட்டை வெற்றிகரமாக நடத்தினர். அந்த மாநாட்டிற்கு எதிர்க் கட்சித் தலைவர் சம்பந்தனார் அவர்களும் கல்வி அமைச்சர் இராத கிருட்டிணன் அவர்களும் பவள விழா நாயகர் ஈழ ஆண்ணல் மா. வை.சோ.சேனாதிராசா அவர்களும் ஆற்றிய பங்களிப்பும் மகத்தானது. ஒரு பெரிய போர்க்குற்றம் நடந்து மக்கள் அல்லோலப்பட்டு ஆதரவற்ற நிலையில் குளிர் தருவாக அந்த மண்ணில் மக்களைப் பாதுகாக்கும் பொறுப்பும் கடமை உணர்ச்சியும் உள்ள பெருமனாக எங்கள் முன் நிற்கிறார் மாவை. சோ அவர்கள். மாநாட்டில் பங்கேற்ற பெருமக்களையும் மாநாட்டு நிகழ்வுகளையும் அடக்கமே உருவாக தொண்டே வாழ்வாக அவர்கள் ஆற்றிய பணி மகத்தானது.

தந்தை செல்வா அவர்களின் வழித்தடத்தில் தடம் புரளாத கொள்கைக் கோமகன் தலைவர் மாவை. சேனாதிராசா அவர்கள். தமிழர்தலைவர் அமிர்தலிங்கானாரின் தலைமையில் இலைஞர் பாசறையை உருவாக்கி தமிழ் தேசிய விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்ட தலைவர் பெருமகன்.

ஈழத்தில் சாதரணமக்கள் முதல் போராளிக் குழுக்களின் ஈகமானா அர்ப்பணிப்புகள் குறிப்பாக விடுதலைப் புலிகளின் உன்னதமான இலக்கு உலகத் தமிழர்கள் வணங்கி வரவேற்கும் போரட்டங்களாகும். இன்று தமிழர்கள் உலக அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்ட இனமாக தமிழ் உலக மொழிகளில் ஒன்றாக வலம் வருவது இந்த மண்ணின் மைந்தர்களின் மகத்தான தொண்டாகும். ஆனால் ஈழத்தில் துன்பமே உருவாக வாழும் என் மக்களைக் காணும்போது நாம் இக் காலத்தில் வாழ்கிறோமே? என்றன் நாடும் எந்த நாடும் எம் மக்களுக்கு நியாயாமன தீர்வை தரவில்லையே. என்ற வேதனை மீக்கெழுகிறது.

தம் இளமைக் காலத்தை போரட்டகளங்களால் பட்டக் கல்வியை நம் பவள விழா நாயகர் பெற இயலாமற் போனாலும் தமிழகத்தின் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் முதுகலைமாமணிப் பட்டம் பெற்ற சான்றோர் நம் பவளவிழா நாயகர்.

தம் இளமைக் காலம் முதல் இன்று வரை 57 ஆண்டுகள் தமிழ் மக்களின் வாழ்வுக்காவே வாழந்த பெருமகன்.பாராளு மன்றத்தின் இன்றும் அன்றும் தமிழர்கள் நலனுக்காக தொண்டாற்றும் தந்தை செல்வா தமிழர் தலைவர் அமிர்தலிங்கம் வழியில்



தொண்டாற்றும் சனநாயக காந்தீயச் செம்மல. தமிழின வரலாற்றில் தமக்கென நெடிய வரலாற்றை கொண்டுள்ள தலைவர் மாவை. சோ. வேனாதிராசா இலங்கைத் தமிழரசு கட்சியின் எட்டாவது தலைவராக வவுனியாவில் நடைபெற்ற 15ஆவது தேசிய மாநாட்டில் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டு தொண்டாற்றும் அறநெறிச் செம்மல்.

தமிழர்கள் அனைத்தையும் இழந்து அகதிகளாக சொல்லொனாத துயருக்கு ஆளாகி போராட்டங்களால் தமிழ் மக்கள் சிங்கள் ஏகதிபத்தியத்தால் கொன்றழிக்கப் பட்ட கொடுமைகளை உலகத் தழிழர்கள் மறக்க இயலாக் கொடுரமாகும். இக்கால கட்டத்தில் தமிழர்களை வழிநடத்தும் பவள விழா நாயகர் எம் இனம் ஈழத்தி தலைநிமிர்ந்து வாழ வழி செய்வார் என்பது திண்ணம். கணவனை இழந்து தலைமைத்துவம் கண்டுள்ள பெண்களுக்கு மறு வாழ்வு, தமிழர்கள் இவ்வளவு இழந்தும் சுயமாரியோடு வாழ தன்மான வாழ்வு, தமிழர்களிடம் பறிக்கப்பட்ட சொத்து சுகங்களை ஒப்படைக்க வேண்டிய பணி எல்லாவற்றிற்கும் மேலாக மக்கள் உணவிற்கேற்ப ஒப்பற்ற நிலையை தலைவர் அவர்கள் உருவாக்குவார் என்பது. திண்ணம்.

மாநாட்டின் போதே பவள விழாநாயகரை நானும் தந்தையார் பெருங்கவிக்கோவும் தமிழகத்திலிருந்து வருகை தந்த பெருமக்களோடு பொன்னாடை போர்த்தி வாழ்த்தி மகிழ்ந்தோம். பவள விழா நாயகருக்கு மலர் வெளிவிடுவது காலத்தின் தேவை. அதை உணர்ந்து செயல்படும் உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தினரை நெஞ்சாரப் போற்றுகிறேன். வாழ்க ஈழ அண்ணல் வெல்க ஆவர்தம் கொள்கை.

# இலட்சியப் பாதையில் ஈழ அண்ணல்

கலாநிதி முருகு தயாநிதி

ஆம்பிலாந்துறை.

வரலாற்றுக்கு முற்பட்ட காலமிருந்து இலங்கையில் தமிழினம் வாழ்ந்து வருவதனை வரலாற்று அடிப்படையில் நிறுவியுள்ளனர். காலத்துக்குக் காலம் இலங்கை பல மன்னர்களின் கீழ் ஆட்சிப்பீடம் ஏறுகின்றது. ஐரோப்பியரின் வருகையினைத் தொடர்ந்து இலங்கை அரசியலில் ஒரு குழப்பமான சமூகக் கட்டமைப்பு நிலவுகின்றது. ஐரோப்பியரின் வருகைக்கு முன்பாகவும் சிங்கள - தமிழ்ப் இனப் பாகுபாடு பல நூற்றாண்டுகளாக நிலைபெற்றிருந்தது. தமிழர்கள்; அரசியல், சமூக, சமய, பண்பாட்டுச் சூழலில் தமிழ் மக்கள் பாரிய துன்ப துயரங்களைச் சந்திக்கின்றனர். அவற்றுள் ஆங்கிலேயர் ஆட்சியில் பண்பாட்டுத்தளத்தில் பாரிய சிக்கல் நிலையினை அவதானிக்க முடிகின்றது. முதலில் தமிழ் இராச்சியத்தை அழித்த ஐரோப்பியர் பின்னர் படிப்படியாகச் சிங்கள இராச்சியங்களையும் ஒழித்துவிட்டனர். இவ்வாறான நிலையில், 1919ஆம் ஆண்டு இலங்கைத் தேசிய காங்கிரசை சேர். பொன். அருணாசலம் ஆரம்பித்தார். பின்னர் 1924இல் இலங்கையின் தமிழ் லீக்கை ஆரம்பித்து தமிழ் இனத்தின் தனித்துவம் காப்பதற்கு தனிநாடு வேண்டும் என்று கூறி, 1931ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட டொனமூர் அரசியல் திட்டத்தை எதிர்த்தார். எனினும் இந்த முயற்சி வெற்றிபெறாமல் போனது. அதன் பின்னர் 1944 ஆம் ஆண்டு ஜீ.ஜீ.பொன்னம்பலம் தலைமையில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தாபிக்கப்பட்டது. இலங்கையில் தமிழர்கள் படும் இன்னல்களைப் பலமுறை ஆங்கிலேயருக்குச் சுட்டிக்காட்டிய அவர் ''பெரும்பான்மைச் சமூகத்திற்கும் சிறுபான்மைச் சமூகத்திற்குமிடையே சமபலப் பிரதிநித்துவம் இருக்கவேண்டும்'' என்ற கொள்கையை தெளிவாகவே ஆங்கிலேயருக்கு எடுத்து விளக்கினார். இதற்காக டொனமூர் அரசியல் திட்டத்தில் தமிழ் இனத்துக்கு இழைக்கப்பட்ட இன்னல்களை எடுத்துக்காட்டினார். இதனைத் தொடர்ந்து 1947ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட சோல்பரி அரசியல் திட்டத்தின் 29வது சரத்து எந்தவொரு சமூகத்திற்கும் மதத்திற்கும் விரோதமான சட்டமியற்றுவதைத் தடுக்கும் ஒரு பாதுகாப்பைத் தவிர தமிழர்களுக்கென்று எதுவும் வழங்கப்படவில்லை என்பதனை ஜீ.ஜீ.பொன்னம்பலம் இங்கிலாந்து சென்று தெளிவுபடுத்தினார். அவர் ஆங்கிருக்கும்போது 1945ஆம் ஆண்டு தமிழ் மக்கள் பல ஆண்டுகளாகப் போராடிவந்த உரிமைகளை மறுக்கும் வெள்ளை அறிக்கைக்கு ஆதரவாக அரசாங்கசபை தமிழ் அங்கத்தவர்களும், ஏனைய தமிழ்ப் பிரதிநிதிகளும் வாக்களித்தனர். இவர்களில் சோ.மகாதேவா, நடேசன், தியாகராசா அகியோர் அடங்குவர். நடேச ஐயரும், ஐ.எக்ஸ்.பெரேரா அவர்களும், டபிள்யு. தமநாயக்க அவர்களும் எதிர்த்து வாக்களித்தனர். 1947ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 20ஆம் இடம்பெற்ற தேர்தலில் இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் அமோக வெற்றிபெற்றது. வெள்ளை அறிக்கைக்கு வாக்களித்த ஒருவர் தவிர அணைவரும் தோற்கடிக்கப்பட்டனர்.

இலங்கையின் அரசியல் நிலைபற்றி பலவாறு சிந்தித்த ஜீ.ஜீ.பொன்னம்பலம் எதிர்ப்பு அரசியலைக் கைவிட்டு, சிங்கள ஆட்சியோடு ஒத்துழைப்பு வழியை மேற்கொள்ளத் தீர்மானித்தார். 1948ஆம் ஆண்டு மார்கழி மாதம் நம்பிக்கைக்குப் பாத்திரமாக இருந்த தலைவர் ஜீ.ஜீ.பொன்னம்பலம் அரசபக்கம் சரணடைகின்றார். இதனால் தமிழ்க் காங்கிரஸ் கட்சியுள்ளே பல எதிர்ப்புக்கள் கிளம்பியது. டாக்டர் இ.மு.வி.நாகநாதன் இந்த யோசனையைப் பகிரங்கமாகவே எதிர்த்து தமிழ்க் காங்கிரஸ்சில் இருந்து வெளியேறினார். S.J.V. செல்வநாயகம் அவர்கள் பகிரங்கமாக எதிர்ப்பினைக் காட்டவில்லை என்று அறியக்கிடைக்கின்றது. காங்கிரசில் ஏற்பட்ட பிளவைத் தொடர்ந்து 13.02.1949 ஆம் ஆண்டு செல்வநாயகம் அவர்களின் தலைமையில் ஒரு கூட்டம் ஆரம்பமானது. நல்லூரில் ஆரம்பமான இந்தக் கூட்டத்தில் கு.வன்னியசிங்கம், இ.மு.வி.நாகநாதன், அ.அமிர்தலிங்கம் ஆகியோர் உரையாற்றினர். "ஈழத் தமிழன் ஒரு தனித் தேசிய இனம் என்றும், அவனுக்கு ஒரு தனிப்பிரதேசம் உண்டு, அதை அவன் ஆளவேண்டும்" போன்ற கருத்தக்கள் உணர்ச்சி வசமாக முன்வைக்கப்பட்டபோது, அக்கருத்து மக்கள் மத்தியில் எழுச்சியினை ஏற்படுத்தி இருந்தன. S.J.V.செல்வநாயகம் தலைமையில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரசிலிருந்து வெளியேறிய அணியினரால், 18.12.;1949இல் உருவாக்கப்பட்ட இலங்கைத் தமிழரசுக் கட்சி, ஒற்றையாட்சி முறை இலங்கையில் தமிழர் உரிமையுடன் வாழ்வதற்கு உகந்ததல்ல என்று கூட்டாட்சிக் கோரிக்கையை முன்வைத்தது. S.J.V. செல்வநாயகம் "ஒற்றையாட்சியில் தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்காவிட்டால் பிரிந்து செல்லும் உரிமையுடன்கூடிய இணைப்பாட்சி முறையைத் தமிழ் மக்கள் கோரவேண்டிவரும்" என்ற பிரகடன உரையினை நிகழ்த்தினார். இதற்கிடையில் டி.எஸ்.சேனநாயக்கா தமிழ்க் காங்கிரசைச் சாராத சில தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களை அமைச்சராக்கி ஆட்சியமைத்தபோது அதனை ஆங்கில ஆட்சியினர் சகல மக்களினதும் தீர்மானமாக ஏற்றுக்கொண்டனர். இவ்வாறான நிலையில் 1948ஆம் ஆண்டு இலங்கை சுதந்திரம் அடைந்தபோது தமிழ் மக்களின் உரிமையைப் பெறலாம் என்ற கனவு முடிவடைகின்றது. இவ்வாறான நிலையில் 1956ஆம் ஆண்டு இடம்பெற்ற பொதுத் தேர்தலில் தமிழரசுக்கட்சி தமிழ்ப் பகுதிகளில் பெரும்பான்மை இடங்களை வென்று, தமிழர் அரசியல் பலத்தை நிருபித்தது. தாய்க்கட்சியான தமிழ்க் காங்கிரஸ், ஆளும் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் ஆரசாங்கத்தில் இணைந்திருந்தது. எனினும் இவர்களால் அரசாங்கத்தால் கொண்டுவரப்பட்ட மொழிக்கொள்கை முதலான முக்கிய பிரச்சினைகளில் தமிழரின் விருப்பங்களை நிறைவு செய்யும் எவ்வித முன்னேற்றத்தையும் கொண்டுவரமுடியாமற் போனது. இதனால் தமிழரசுக்கட்சியின் எழுச்சி மேலும் வலுவடைகின்றது. தமிழ்க் காங்கிரஸ் நடந்தவற்றைப் பாடமாகக்கொண்டு 1972 ஆம் ஆண்டில் தமிழரசுக்கட்சி, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஆகிய கட்சிகளுடன் இணைந்து தமிழர் ஐக்கிய முன்னணி என்ற பெயரில் கூட்டணி ஒன்றை அமைத்தது. பின்னர் இக்கூட்டணியின் பெயர் தமிழர் விடுதலைக் கூட்டணி என மாற்றப்பட்டது.

1970இல் நடந்த தேர்தல் சிறிமாவோ பண்டாரநாயக்கா அம்மையாரின் சிறீலங்கா சுதந்திரக் கட்சி, மற்றும் இடதுசாரிக் கட்சிகள் இணைந்த ஐக்கிய முன்னணியைப் பதவிக்குக் கொண்டுவந்தது. இந்தப் பதவிக்காலத்தில் புதிய குடியரசு அரசியல் சட்டத்தை ஐக்கிய முன்னணி அரசு உருவாக்கியது. இந்த அரசு முன்னைய

அரசியல் சட்டத்தில் சிறுபான்மையினருக்கு வழங்கப்பட்டிருந்த பாதுகாப்புகளை நீக்கியதுடன், சிங்கள பௌத்தர்களின் அதிகாரத்தை வலுப்படுத்தியது. இதனால் தமிழரசுக் கட்சியும், எனைய தமிழ்க் கட்சிகளும் எடுத்த நடவடிக்கைகள் பயனற்றுப்போனது. இந்த நிலையில் தங்களுடைய எதிர்ப்பு அரசியலைக் கைவிட்டு ஒன்றிணைந்து போராடத் தமிழரசுக் கட்சி, தமிழ்க் காங்கிரஸ், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் போன்ற தமிழ்க் கட்சிகள் முன்வந்தன. இந்கக் கட்சியிகளிலிருந்து S.J.V. செல்வநாயகம், ஜீ. ஜீ. பொன்னம்பலம், சௌ. தொண்டமான் அகியோரைக் கூட்டுத் தலைவர்களாகக் கொண்டு தமிழர் விடுதலைக் கூட்டணி தாபிக்கப்பட்டது. இதன் பின்னர் சகல அரசியல் நடவடிக்கைகளும் மேற்படி கூட்டணியின் சார்பிலேயே நடைபெற்றன. 1976 இல் இவ்வமைப்பு தமிழர் விடுதலைக் கூட்டணி (Tamil United Liberation Front) எனப் பெயர் மாற்றம் பெற்றதுடன், வட்டுக்கோட்டையில் நடந்த அதன் மாநாட்டில், “வட்டுக்கோட்டைத் தீர்மானம்” என்று பரவலாக அறியப்படும் தீர்மானத்தையும் நிறைவேற்றியது. இத் தீர்மானம் இலங்கையில் தமிழ்த் தேசத்தின் இருப்பைப் பாதுகாத்துக் கொள்வதற்காக, சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில், சுதந்திர, இறைமையுள்ள, மதச் சார்பற்ற, சோசலிசத் தமிழீழ நாட்டை மீள்விக்க வேண்டுமெனப் பிரகடனம் செய்தது. 1977ஆம் ஆண்டில் நடைபெற்ற பொதுத் தேர்தலில், சுதந்திரத் தமிழீழக் கொள்கைக்கு மக்கள் ஆணை கோரிப் போட்டியிட்ட தமிழர் விடுதலைக் கூட்டணி பெரும் வெற்றி பெற்றது. இத்தேர்தலில் 18 ஆசனங்களுடன் பாராளுமன்றத்தில் பிரதான எதிர்க் கட்சியாக அமரும் வாய்ப்பைப் பெற்றது. கூட்டணித் தலைவர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் எதிர்க்கட்சித் தலைவரானார். பின்னர் இவர் 13.07.1989ஆம் ஆண்டு படுகொலை செய்யப்படுகின்றார்.

தமிழர் விடுதலைக் கூட்டணி, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் ஆகிய கட்சிகள் பின்னர் கூட்டமைப்பில் இருந்து விலகின. தமிழர் விடுதலைக் கூட்டணியின் சில அங்கத்தவர்கள் இரா. சம்பந்தனின் தலைமையில் கூட்டமைப்பில் தொடர்ந்து இயங்கினர். இவர்கள் பின்னர் இலங்கைத் தமிழரசுக் கட்சியைத் தமது கட்சியாக ஏற்றனர். இக்கட்சியின் வீட்டுச் சின்னத்திலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேர்தல்களில் போட்டியிட்டது. 2004 ஆம் ஆண்டில் கூட்டணியில் ஏற்பட்ட முரண்பாடுகள் காரணமாக தமிழர் விடுதலைக் கூட்டணியின் அப்போதைய தலைவராக இருந்த வீ.ஆனந்தசங்கரி பிரிந்து சென்றதை அடுத்து இலங்கைத் தமிழரசுக் கட்சி மீண்டும் புதுப்பிக்கப்பட்டது. தற்போது இக்கட்சி இலங்கையின் வட, கிழக்கு மாகாணங்களில் பலமான ஓர் அரசியல் கட்சியாக விளங்கி வருகிறது. இக்கட்சி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முக்கிய கட்சியாகவும் உள்ளது. இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணத் தமிழ் மக்களிடையே இக்கட்சி பெரும் செல்வாக்கைப் பெற்றுள்ளது. இக்கூட்டமைப்பில் இலங்கையின் மிதவாதத் தமிழக் கட்சிகள், மற்றும் முன்னாள் போராளிக் குழுக்கள் அங்கம் வகிக்கின்றனர். 2001 ஆம் ஆண்டில் இருந்து இக்கூட்டமைப்பு தேர்தல்களில் போட்டியிட்டு வருகிறது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வாக தமிழீழ விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தைகளை ஆதரித்து வந்தது. அக்காலத்தில் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கி. சிவநேசன், ஜோசப் பரராஜசிங்கம், நடராஜா ரவிராஜ் ஆகியோர் படுகொலை செய்யப்பட்டனர். இலங்கைத் தமிழர்களுக்கு சுயாட்சியை இக்கூட்டமைப்பு

ஆரம்பத்தில் வலியுறுத்தி வந்திருந்தாலும், 2010 ஆம் ஆண்டில் சுயாட்சிக் கோரிக்கையைக் கைவிட்டு, பிராந்திய தன்னாட்சி அமைப்பை ஏற்றுக்கொள்வதாக அறிவித்தது. தற்போது இலங்கைத் தமிழரசுக் கட்சி, தமிழீழ விடுதலை இயக்கம், தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் ஆகிய கட்சிகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கின்றன. இவ்வாறான நிலையில் மாவை சேனாதிராசா தமிழரசுக் கட்சியின் தலைவராகச் செயற்படுகின்றார்.

மாவை சேனாதிராஜா (Mavai Senathirajah) என அழைக்கப்படும் சோமசுந்தரம் சேனாதிராஜா 27.10.1942 பிறந்தவர். இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மூத்த உறுப்பினரான இவர், சிறந்த அரசியல்வாதியும், நாடாளுமன்ற உறுப்பினரும் ஆவார். தனது கல்வியை வீமன்காமம் பாடசாலையிலும், நடேஸ்வரா கல்லூரியிலும் பயின்று பின்னர், இலங்கைப் பல்கலைக்க்ழகத்தில் இளங்கலைப் பட்டம் பெற்றார். சேனாதிராசா இலங்கைத் தமிழ்த் தேசிய இயக்கத்தில் செயல்பட்டு 1961இல் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் பங்குபற்றினார். 1962இல் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் இளைஞர் அணியில்; இணைந்தார். 1966 முதல் 1969 வரை ஈழத்தமிழர் இளைஞர் இயக்கத்தின் செயலாளராகப் பணியாற்றினார். 1969 முதல் 1983 வரையான காலப்பகுதியில், கைது செய்யப்பட்டு எட்டு வெவ்வேறு சிறைச்சாலைகளில் மொத்தம் ஏழாண்டுகள் சிறையில் கழித்தார். 1972 இல் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தமிழ் இளைஞர் பேரவையின் செயலாளராக நியமிக்கப்பட்டார்.

சேனாதிராஜா 1989ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் கூட்டணி சார்பில் யாழ்ப்பாண மாவட்டத்தில் போட்டியிட்டு தோல்வியடைந்தார். அனாலும், அ.அமிர்தலிங்கம் 1989 யூலை 13 இல் படுகொலை செய்யப்பட்டதை அடுத்து அவரின் இடத்திற்கு சேனாதிராசா தேசியப்பட்டியல் மூலம் நாடாளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்பட்டார். இதேபோல் 1999 யூலை 29 இல் நீலன் திருச்செல்வம் படுகொலை செய்யப்பட்டதை அடுத்தும் தேசியப் பட்டியல் மூலம் நாடாளுமன்றம் சென்றார்.

| தேர்தல் இடம்பெற்ற ஆண்டு | பெற்ற வாக்குகள் | தேர்வுநிலை |
|---|---|---|
| 1989 | 2820 | தேர்வு செய்யப்படவில்லை |
| 2000 | 10965 | தேர்வு செய்யப்பட்டார் |
| 2001 | 33831 | தேர்வு செய்யப்பட்டார் |
| 2004 | 38781 | தேர்வு செய்யப்பட்டார் |
| 2010 | 20501 | தேர்வு செய்யப்பட்டார் |
| 2015 | 58782 | தேர்வு செய்யப்பட்டார் |

மூலம்: தேர்தல் திணைக்களம்

2000ஆம் ஆண்டு தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளராக யாழ் மாவட்டத்தில் போட்டியிட்டு வெற்றிபெற்று மீண்டும் நாடாளுமன்றம் சென்றார். 2001 அக்டோபர் 20 இல் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழீழ விடுதலை இயக்கம், தமிழர் விடுதலைக் கூட்டணி அகிய கட்சிகள்

இணைந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற கூட்டமைப்பை நிறுவின. 2001 தேர்தலில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு சார்பாக யாழ் மாவடத்தில் போட்டியிட்டு மீண்டும் நாடாளுமன்றம் சென்றார். 2000, 2001, 2004, 2010, 2015 தேர்தல்களில் மீண்டும் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

ஈழ அண்ணல் அவர்கள் படிப்பைத் தொடர்ந்த காலத்திலே தமிழ் மீதும், தமிழர் மீதும் பற்றுக்கொண்டு பல செயற்பாடுகளை உணர்வு ரீதியாக மேற்கொண்டு வந்தார். 1961ஆம் ஆண்டு நடைபெற்ற சத்தியாக்கிரகப் போராட்டத்தில் பங்கேற்று தீவிர எதிர்ப்பைக் காட்டினார். தந்தை செல்வா, அ.அமிர்தலிங்கம் ஆகியோர் தலைமையில் இளைஞர் பாசறையை உருவாக்கி தமிழ்த் தேசிய போராட்டத்தில் ஈடுபட்டார். பாடசாலைகளில் சிங்கள மொழி கல்வி அமைச்சரால் திணிக்கப்பட்டபோது அதற்கெதிராக ஈழத் தமிழ் இளைஞர் மாணவர் இயக்கத்தின் செயலாளராக இருந்து பேரணிகளையும், போராட்டங்களையம் நடத்தினார். 1962ஆம் ஆண்டு இலங்கை தமிழரசுக் கட்சியின் இளைஞர் அமைப்பில் இணைந்த இவர், 1966 முதல் 1969 வரை ஈழத் தமிழ் இளைஞர் இயக்கத்தின் செயலாளராகத் திகழ்ந்தார். 1972ஆம் ஆண்டு தமிழ் ஐக்கி விடுதலை முன்னணி தொடங்கியபோது அதன் இளைஞர் பிரிவுச் செயலாளராகச் செயற்பட்டார்.

சமூக விழிப்புணர்வுள்ள இவர் தமிழ் வாலிபர் முன்னணியைத் தோற்றுவித்து சமூக இலக்கியப் பணிகளை முன்னெடுத்தார். சிங்களமொழி மேலாதிக்கம், 1972ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட சோசலிச ஜனநாயக யாப்புக்கு எதிராக எதிர்ப்புப் போராட்டங்களில் ஈடுபட்டு சிறையில் அடைக்கப்பட்டார். பின்னர் 1978ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட ஜனநாயக சோஸலிச அரசியல் திட்டத்தினை எதிர்த்ததோடு, சுதந்திரத் தமிழீழம் கோரியும் இடம்பெற்ற போராட்டங்களில் தீவிர எதிர்ப்பைக் காட்டியமையினால் மட்டக்களப்புச் சிறையில் அடைக்கப்பட்டார். நீதி மன்ற வழக்குகள் பலதை எதிர்நோக்கியபோதும் நில ஆக்கிரமிப்புக்கு எதிராக போராட்டங்களை நடத்தியே வந்தார். இன்னும் பல வழக்குகள் முடிவுறாமல் அவருக்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் இருக்கின்றமையும் குறிப்பிடத்தக்கதே.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலகம் 1983ஆம் ஆண்டு சென்னையில் திறந்து வைக்கப்பட்டபோது அந்த அலுவலகத்தின் பொறுப்பாளராக இருந்தார். அமிர்தலிங்கம், சிதம்பரம் ஆகியோர் இந்திய இலங்கை தொடர்பின் முக்கியத்துவத்தை வலியுறுத்தியிருந்தனர். இந்திராக் காந்தி, மற்றும் ராஜீவ் காந்தி பிரதமாராக இருந்த காலங்களில் அவர்களுடன் இலங்கைத் தமிழர் நிலை பற்றி பல பேச்சுக்கள் இடம்பெற்றது. அந்தப் பேச்சுக்களில் கலந்து கொண்டு தமிழர்கள் எதிர்நோக்கும் இன்னல்களை தெளிவுபடுத்தினார். இந்தியாவில் கல்வி கற்கின்ற பல மாணவர்களுக்கு உதவி அவர்களில் கல்விக்கு உரங்கொடுத்தார். பொதுவுடமைக் கொள்கைகளில் ஈடபாடு கொண்டிருந்த இவர் உலகநாடுகில்; விடுதலைப் போராட்டங்கள் எழுச்சிபெற்றபோது அவற்றுக்கு ஆதரவும் வழங்கியமையினையும் அறியமுடிகின்றது. தமிழர்களுடைய இன்றைய நிலையினைப் பற்றி 23.08.2014ஆம் ஆண்டு பாரதப்பிரதமர் நரேந்திரமோடி முன்னால் இரா.சம்பந்தன் எடுத்துக் கூறியனார். இதற்குப் பாரதப் பிரதமர் சொன்னார் “உங்கள் முகபாவங்களே உங்கள் நிலைமைகளை எடுத்துக்காட்டுகின்றன. அது என்னை ஈர்த்துள்ளது. ஐக்கிய

இலங்கைக்குள் அரசியல் தீர்வு ஒன்றைக் கோருகிறோம். வன்முறையை நாடவில்லை என்பதையிட்டு நான் திருப்தியடைகிறேன் என்று கூறினார். இந்தச் சந்திப்பில் மாவை அவர்களும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கதே.

தமிழ் அரசியல் கட்சி வரலாற்றில் தலைமைகள் பல இருந்து தமிழர்களின் விடிவுக்காக குரல் கொடுத்து வந்தனர். ஸ்தாபகத் தலைவராக S.J.V.செல்வநாயகம் அவர்களும் (16.12.1949 - 16.04.1955), கு.வன்னியசிங்கம் அவர்களும் (17.04.1955 - 24.05.1958), ந.இ.இரசஜவரோதயம் அவர்களும் (25.05.1958 - 20.01.1961), சி.மூ.இராசமாணிக்கம் அவர்களும் (21.01.1961 - 23.06.1966) இ.மு.வி.நாகநாதன் அவர்களும் (24.06.1966 - 07.04.1969), அ.அமிர்தலிங்கம் அவர்களும் (07.09.1973 இருந்து பணிபுரிந்தனர். தமிழனத்தின் விடிவுக்காய் அகிம்சாவழியில் பேராடி பல இன்னல்களைச் சந்தித்த ஈழ அண்ணல் அவர்கள் தமிழரசுக் கட்சியின் எட்டாவது தலைவராவார். தந்தை செல்வா, அமிர்தலிங்கம் தலைமையில் அரசியல் பயணம் செய்த இவர் இன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முக்கிய உறுப்பினராவார். தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் அத்தனை தலைவர்களும் சந்திக்காத துன்பங்களைச் சுமர்ந்த மாபெரும் தலைவன் மாவை சேனாதிராசா என்பதனை இந்த அரசியல் வரலாற்றுவழி காணமுடிகின்றது. தமிழ் மக்களுக்காகவே பலதடவை சிறைப்பிடிக்கப்பட்டிருக்கின்றார் என்றால் இவரால் மற்றவர்கள் சிக்கலைச் சந்தித்திருக்கின்றார்கள் என்பது வெளிப்படை. உண்மைமைக்காக, உரிமைக்காகக் குரல் எழும்பியபோதெல்லாம் அவர் சிறைப் பிடிக்கப்பட்டார். எனினும், வீழும் போதெல்லாம் எழுந்து இன்று தமிழர்களுக்கான விடிவெள்ளியாய் நிற்கின்றார்.

மாவையனுடைய மதிநுட்பத்தையும், அவருக்கிருக்கும் தீவிரப் போக்கினையும் உணர்வினையும் அடக்குவதற்காக எத்தனையோ இன்னல்கல், துன்பங்கள், துயரங்கள், சோதனைகள் வேதனைகளை தொடராகச் சுமந்து சிறுபராயத்திலே இடருற்று பலமுறை சிறை சென்றபோதும் தனது நிலையில் இருந்து தவறாமல், கடந்த 57 ஆண்டுகளாக தமிழுக்காகவும் தமிழ் பேசும் மக்களின் விடிவுக்காகவும் (தமிழ் - முஸ்லிம்) ஆற்றிவரும் அளப்பரிய சேவையுடன், இன்றைய அரசியல் சூழ்நிலைகளை நுணுக்கமாக அராய்ந்து பல்வேறு நிலைகளில் தமிழரசுக்கட்சியை தடம்மாறத வகையில், வெற்றியை மேலும் வலுப்படுத்தி எவ்வாறு முன்கொண்டு செல்லமுடியும் என்கின்ற அலோசனைகளைப் பல்வேறு தரப்பிலிருந்தும் பெற்று, கட்சியையும் தமிழ்பேசும் மக்களையும் சிறந்தவகையில் வழிநடத்தும் புதிய உறுப்பினர்களுக்கு முன்னுரிமையளித்து சிறந்த தலைமையை உருவாக்குவதற்கு துணையாக நிற்கும் அவர், காந்தீய வழியில், சாத்வீக வழியில், தருமத்தின் வழியில் அறத்தில் நம்பிக்கை வைத்து எமது மக்களின் உரிமைக்காகவும் விடுதலைக்காகவும், விடிவுக்காகவும், தன்னாட்சிக்காகவும் ஒன்றுபட்டுழைப்போம் என்று தீர்க்கதர்சனமும் திட சங்கற்பமும் கொண்டு வாழும் அண்ணலை என்றும் வாழ்த்துவோம்.

பொது நூலகம்
வலி. வடக்கு பிரதேச சபை
தெல்லிப்பளை

# சீர்வளச்சீர் ஈழ அண்ணல் மாவை சோ.சேனாதிராசா



பாவலர் அப்துல் மஜித்
புதுச்சேரி

இறைவன் உலகம் யாவையும் தாமுளவாக்கி நிலைபெறுத்தி வாழ்விக்கப் பலதூதுவரை உலகின் உயிரினங்களில் உயர்ந்த மாந்தரினத்திற்கு வழிகாட்டிகளாக உதவ அனுப்பியுள்ளதைப் பல வேதங்களும் மொழிகின்றன. புத்தர் பிரான், இயேசு பிரான், முஹம்மத் நபி பிரான் போன்றோர் வழிகாட்டிகளில் குறிப்பிடத்தக்கவர்களாவர்.

அண்மையில் தோன்றிய ஆன்மிகப் பெருந்தகைகள், ஆழ்வார்கள், நாயன்மார்கள், சித்தர்களும் இறைவனின் தூதுவர்களில் அடங்குவோராவர். தேசப்பிதா மகாத்மா காந்தி, பகுத்தறிவுத் தந்தை பெரியார், ஈ.வே.ராமசாமி ஐயா புனித அன்னை தெரெசா அம்மையார் மற்றும் பலர் இறைத் தூதர்களாவர்.

"தோன்றின் புகழொடு தோன்றுக அஃதில்லார்
தோன்றலின் தோன்றாமை நன்று" குறள் - 237

தெய்வப் புலவர் திருவள்ளுவர் 2000 ஆண்டுகளுக்கு முன்னர் படைத்தருளிய, பொதுமறையாக அனைத்து சமயத்தவரும் கருதும் திருக்குறள் மாந்தரினம் வையத்தில் வாழ்வாங்கு வாழ ஏற்ற வழிகாட்டிகளாக அமைந்துள்ளது. ஆதலினால் இவ்வரிய நூல் வாழ்வியலாகக் கொண்டு மாந்தரினம் அனைத்து வகையான செயல்களைச் செம்மையாகச் செய்துவர இன்றியமையாததாக உள்ளது.

உலகில் மந்தர்கள் தோன்றுகிறார், வாழ்கிறார், மறைகிறார், ஆயின், உலக வாழ்வில் மாந்தர், மாந்தநேயப் பண்புகளைப் பயன்படுத்திச் செயற்கரிய செயல்களைச் செய்து உலகம் உய்வதற்குத் தேவையான செயல்களைச் செய்தவரே, நிலையாக உள்ளனர்.

அவ்வண்ணம், இலங்கை ஈழத் தமிழரின் நெஞ்சங்களில் நிறைந்து நிற்பவர், ஈழத்தமிழரின் விடிவெள்ளியாகத் திகழும் திரு.மாவை சோ.சேனாதிராசா அவர்களே ஆவர். அண்ணல் மாணவ நிலையிலிருந்தே குமுகாயப் பணிகளில் தன்னார்வமுடன் செயல்பட்டு வந்தவராவர்.

பிறப்பொக்கும் எல்லாம் உயிர்க்கும், சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான். குறள் - 972

ஐயன் திருவள்ளுவரின் திருக்குளுக்கேற்ப, இலங்கையில் ஈழத் தமிழரினத்தின் தொண்டரென மாவை சோ.சேனாதிராசா அவர்களை இறைவன், சோமசுந்தரம் - தையல்நாயகி இணையருக்கு மகனாகப் பிறக்க வைக்கிறான், 1942-ஆம் ஆண்டு அக்டோபர் 27-ஆம் நாள் யாழ்ப்பாண தீபகற்பத்தின் "மாவட்டபுறம்" என்னும் புனிதமண்ணிலே.

இறையருள் நிறையுடன் தோன்றிய அண்ணல் சோ.சேனாதிபதிராசா அவர்கள், தாயின் கருவினிலேயே "திரு"வைப் பெற்றுப் பிறந்ததினால், "தொடக்கக் கல்வி முதல் தொழிற்கல்வி முடிய" கசடறக் கற்றுணர்ந்துத் தேர்ந்தவரானார்.

"விளையும் பயிர் முளையிலே" என்பதற்கேற்ப, அண்ணல் பள்ளி, கல்லூரிகளில் பன்முக மாணவனாக விளங்கி பள்ளியில் நிகழும் பல விளையாட்டுப் போட்டிகளிலும் வெற்றிக் கிண்ணங்கள் பலவென்று பாராட்டுக்களைப் பெற்ற மாணவ மணி ஆவர். ஈழ அண்ணல் சமுதாயப் பணியின் ஈடுபாட்டுடன் இளமைப் பருவத்தில் "தமிழ்வாலிபர் முன்னணியைத்" தோற்றுவித்துச் சமூக இலக்கியப் பணிகளை முன்னெடுத்தார். "தொடர்ந்து தமிழ் இளைஞர் பேரவையைத் தொடங்கிச் 'சிங்கள மொழி' ஆதிக்கத்தை எதிர்த்துப் போராடிய மொழிப்போர் வீரர்". தியாகி ஆவர்.

அறிவு அற்றம் காக்கும் கருவி செறுவார்க்கும்
உள்அழிக்கல் ஆகா அரண். குறள் - 421.

ஈழரின், சமூக நிலையை உயர்த்த 1972 ஆம் ஆண்டு புதிய அரசியல் அமைப்பை எதிர்த்துப் பல போராட்டங்களில் தீவிரச் செயல்பாட்டால் சிறை சென்றார். அதனால் நீதிமன்ற வழக்குகளையும் வழிமுறையில் வாதித்த வீரர்.

அவ்வாறு, அரசியலமைப்புக்கு எதிரான பல போராட்டங்களிலும், நில ஆக்கிரமிப்புக்கு எதிரான உச்சநீதிமன்ற பல வழக்குகளைச் சந்தித்து சமர்த்தராய் வெற்றி வாகை சூடியுள்ள வீரர் ஆவர், ஈழ அண்ணல் சோ.சேனாதிராசா அவர்கள்.

அரசியலில், இளைமையிலேயே ஆர்வத்துடன் ஈடுபட்ட அண்ணல் இலங்கைத் தமிழ்த் தேசிய இயக்கத்தில் பங்கேற்று, 1961-ஆம் ஆண்டில் நிகழ்ந்த சத்தியாக் கிரகப் போராட்டத்தில் பங்கேற்றுத் தீவிராமாய்ச் செயல்பட்டவரே, மாவை அண்ணல் சோ.சேனாதிராசா அவர்கள்.

தம்மின் பெரியார் தமரா ஒழுகுதல்
வன்மையுள் எல்லாம் தலை. குறள் - 444

தந்தை செல்வா அ.அமிர்தலிங்கம் அவர்களின் தலைமையில் "இளைஞர் பாசறையை" உருவாக்கித் "தமிழ் தேசிய விடுதலைப் போராட்டத்தில்" தன்னார்வத்துடன் மாணவர் ஈடுபட்டார். பாடசாலைகளில் "சிங்கள மொழித் திணிக்கப்பட்டபோது, "ஈழத்தமிழ் இளைஞர் மாணவர் இயக்கத்தின் செயலாளர் தகுதியில் மாபெரும் பேரணிகளையும், போராட்டங்களையும் நிகழ்த்தி ஈழ மக்கள் நெஞ்சங்களில் நிற்பவர் அண்ணல் அவர்கள். 1962-ஆம் ஆண்டு "இலங்கைத் தமிழரசு கட்சியின் இளைஞர் அமைப்பில் இணைந்து 1966 முதல் 1969 வரையும் ஈழத் தமிழர் இளைஞர் இயக்கத்தின் செயலராகத் திகழ்ந்துத் திறமையுடன் செயல்பாட்டுக்களைச் செய்து வந்தவரே அண்ணல் அவர்கள்.

1972-ஆம் ஆண்டு முதல் 1983-ஆம் ஆண்டு வரை (11) பதினோரு முறைகள் சிறைவாசஞ் செய்த சத்திய சீலர் அண்ணல் மாவை சோ.சேனாதிபதிராசா அவர்கள். விலாவாரியாகக் கூறவேண்டின், அண்ணல் அவர்கள் இலங்கையின் எட்டு சிறைகளில் ஏழு ஆண்டுகள் இருத்திச் சித்திரவதைச் செய்யப்பட்டு, உயிர் பிரிந்துவிட்ட நிலையெய்தியவரே, தியாகத் தருமேனியே அண்ணல் மாவை சோ. சேனாதிராசா அவர்கள் எவ்வித வதைக்கும் சிறிதும் அஞ்சாது நாட்டுப்பற்றுடன் அண்ணல் அவாகள் 1972-ஆம் ஆண்டில் தமிழ் ஐக்கிய விடுதலை முன்னணி (TULF) தொடங்கியபோது அதன் "இளைஞர் பிரிவின் செயலராகப்" பொறுப்பேற்று, அதன் செயல்பாடுகளை மிகுந்தப் பொறுப்புடனும் விவேகமுடனும் வினையாற்றியவர் அண்ணல் அவர்கள்.

"தமிழ் விடுதலைக் கூட்டணியின் செயலகம் சென்னையில் 1989-ஆம் ஆண்டு தொடங்கிய பொழுது அந்த அலவலகத்தில் பொருப்பாளர் பணியில் இருந்து

இயங்கியவர் அண்ணல் சோ.சேனாதிராசா அவர்ள். மேலும் அதன் வழியே, இந்தியாவில் பலதுறைகளிலும் இலங்கை மாணவர்கள் உயர்கல்வி பெற உதவி வந்த காரணி அண்ணல் அவர்கள் என்பது பாராட்டப்பட வேண்டிய செயலாகும்.

திருவாளர் அ.அமிர்தலிங்கம் மற்றும் சிவசிதம்பரம் அவர்களுடன் "இந்திய இலங்கைத் தொடர்புகளில் பாரதப் பிரதமர் இந்திரா காந்தி அவர்கட்குப் பின்பு இந்தியாவின் பிரதமாரான ராஜீவ்காந்தி அவர்களின் காலத்தில், தமிழகத் தலைவர்களுடன் நிகழ்ந்தப் பேச்சுவார்த்தை நிகழ்வுகளில் அண்ணல் மாவை சோ.சேனாதிராசா அவர்களும் கலந்து கொண்டுள்ளது பெருமைக்குரிய செய்தியாகும். தமிழ்நாட்டு அரசியல் தலைவர்களுடன் நல்லுறவுத் தொடர்பிலிருந்தவர் அண்ணால் அவர்கள். அமிர்தலிங்கம் மறைவைத் தொடர்ந்து 1989-ஆம் ஆண்டில் இலங்கை பாராளுமன்ற உறுப்பினராகத் தேர்வு செய்யப்பட்டார். பின்னர் 2001-ஆம் ஆண்டுப் பாராளுமன்றத் தேர்விலும் அதைத் தொடர்ந்து 2004-ஆம் ஆண்டு, 2010-ஆம் ஆண்டு மற்றும் 2015-ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தல்களில் வெற்றி பெற்று அண்ணல் பாராளுமன்ற உறுப்பினராய்ச் செய்மையாய்ச் செயல்பட்டார். அரசியல் சமூக பொருளாதார மாநாடுகளில் பங்கேற்றது போற்றிப் புகழக் கூடிய நிகழ்வுகளாகும்.

> உள்ளுவது எல்லாம் உயர்உள்ளல் மற்றது
> தள்ளினும் தள்ளாமை நீர்த்து. குறள் - 596.

பொதுவுடைமைக் கொள்கைகளிலும் ஈடுபாடு கொண்டிருப்பவர் அண்ணல். உலக நாடுகளிலும், இலங்கையிலும் "தமிழின விடுதலைப் பொராட்டங்களில் புரட்சிகரப் போராட்டங்களுக்குப் பெரும் ஆதரவு தந்தவர் அண்ணலின் செயல்பாடுக்களை விளங்க வைக்கச் சுருங்கக்கூறின், மொததமாக அறுபது ஆண்டுகள் இலங்கையின் தமிழரின் வரலாற்றில் ஜனநாயகம் மற்றும் புரட்சிகரப் போராட்டங்களில் ஈடுபாடு கொண்டு தமக்கென ஈழத்தில் வரலாறு பதித்தவராவர், அண்ணல். அன்னார் தொடர்ந்தும் அவ்வாறே தேசிய உணர்வோடு செயல்பட்டுத் தம்மை அர்ப்பணித்து வருவது போற்றிப் பாராட்டத் தக்கதாகும். தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற குழுத்துணைத்தலைவராகவும் செயலாளராகவும் செயல்பட்டு விளங்குகிறார்.

> ஒல்வது, அறிவது அறிந்து, அதன்கண்தங்கிச்
> செல்வார்க்குச் செல்லாதது இல். குறள் - 472.

தந்தை செல்வா சு.அமிர்தலிங்கம் வழியில் தமெக்கென ஒரு நெடிய வரலாற்றைக் கொண்டுள்ள திருமாவை சோ. சேனாதிராசா அவர்கள் "இலங்கைத் தமிழரசு கட்சியின்" எட்டாவது தலைவராகத் தேர்வுச் செய்யப்பட்டபோது (15) பதினைந்தாவது தேசிய மாநாடு (பவுனியா) 07.09.2014 அன்று ஆற்றிய உரையில் சில தரவுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

1856-ஆம் ஆண்டு தனிச் சிங்களம் ஆட்சிமொழிச் சட்டம் "பண்டார நாயக்காவினால் நிறைவேற்றப்பட்டமைக்கு எதிராக" காலிமுகத் திடலிலே தந்தை செல்வநாயகம் தலைமையில் நிகழ்ந்த சத்தியாக் கிரகப் போராட்டத்ஜுதின் பின் "திருமலைக்குச் செல்வோம் சிறுமை அடிமை வெல்லுவோம்" என்று 1956-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 7-ஆம் நாள் "திருமலை மாநாடு நடைபெற்றது. அந்த மாநாட்டிலே ஏற்பட்ட தீர்மானம் 1957-ஆம் ஆண்டு ஆவணி 20-ஆம் நாள் கிடப்பில் பிரதமமந்திரியும், அரசும் இலங்கையில் "சமஷ்டி அரசமைப்பில்" தமிழர்தேசத்தில்

தன்னாட்சியை நிறுவும் நடவடிக்கையை எடுக்கத் தவறின் அவ்விலட்சியத்தை அடைவதற்குச் சாத்வீக வழியில் கட்சி நேரடி நடவடிக்கையில் இறங்கும்'' என்றும் போராட்டத் தீர்மானம் அறிவித்தபின் 26.07.1957-ல் ''பண்டாரநாயக்க செல்வநாயகம்'' ஒப்பந்தம் ஏற்பட்டது.

கண்ணோட்டத்து உள்ளது உலகியல் அஃதுஇலர்
உண்மை நிலைக்குப் பொறை. குறள் - 572.

இதனால் ஓரளவு சுயாட்சி நிலவுரிமை நிலை நாட்டப்படடது. 1955 ஏப்ரல் 08-ஆம் நாள் அந்த ஒப்பந்தம் ரத்துச் செய்வதாக பண்டார நாயக்கர் அறிவித்தார். அதற்குப் பின் தான் 1958-ஆம் ஆண்டு மே மாதம் 25-ஆம் நாள் ''வவுனியாவில்'' 1958-ஆம் ஆண்டு ''தமிழரசுக் கட்சியின் மாநாடு'' தமிழ்மக்கள் போராட்டங்களுக்கு அழைத்து 2014-ஆம் ஆண்டு செப்டம்பரிலும்அதே வவுனியாவில் மாவை சோ.சேனாதிராசா அவர்களின் தலைமையில் இராஜபக்ஷ ஜனாதிபதி அரசுக்கு எதிரான போராட்டத் தீர்மானங்கள் அறிவிக்கப்பட்டன.

இந்த ''வன்னி'' நிலப்பரப்பிலே அந்த மாநாடு நடைபெற்றது. போட்ட ஆயத்த நடவடிக்கைககளின் காலத்தில் 2015 ஜனவரியில் ஜனாதிபதித் தேர்தலில் இராஜபக்ஷா வீழ்த்தப்பட்டார். புதிய நல்லிணக்க ஆட்சி ஏற்பட்டது. 2015-ஆம் ஆண்டு ஆகஸ்டில் ''ரனில்'' பிரதமர் தலைமையில் தேசிய அரசு ஏற்பட்டுள்ளது. புதிய அரசியல் அமைப்பில் ''இளப் பிரச்சனைக்குத்'' தீர்வு காணப்படுமெனும் இலக்கில் அரசியல் நடவடிக்கைகள் தீவிரம் அடைந்துள்ளன. இருப்பினும் தமிழர் மத்தியில் ஏமாற்றமும் இராணுவ ஆதிக்கமும் இருந்தே வருகின்றன. சர்வதேச நாடுகளின் தலையீடுகளும், இராஜதந்திர முயற்சிகளும் தீவிரம் அடைந்துள்ளன.

ஞாலம் கருதினும் கைகூடும் காலம்
கருதி இடத்தால் செயின். குறள் - 484

தந்தை செல்வநாயகம் 1949-ஆம் ஆண்டு மார்கழி 18-ஆம் நாள் ''இலங்கைத் தமிழரசுக் கட்சியின்'' வரலாற்று முக்கியம் மிக்க தலைமை உரையை நிகழ்த்தினார்.

1951-ஆம் ஆண்டில் ''திருமலை மாநாட்டிலே'' தலைமையுரை நிகழ்த்தினார். தமிழனத்தின் முஸ்லிம் மக்களின் அடிமைத்தனத்தை அறுத்த ''சமஷ்டி அரசியற்'' கோட்பாட்டில் தமிழ் முஸ்லிம்களால் நிலைநாட்டும் கொள்கைத் திட்டத்தை பிரகடனப்படுத்தினார். அம்மா நாட்டில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள், கடந்த காலங்களிலும் எதிர்காலங்களிலும் ''இனப்பிரச்சனைத் தீர்வுக்கு ஒரு அரசியலமைப்புத் திட்டம்'' உருவாகினால் அதன் அடிப்படையாகவே இருக்கும் என்பதில் உறுதியாக உள்ளோம்'' என்பதை 2015-ஆம் ஆண்டு அறிவித்தார் அண்ணல் மாவை சோ. சேனாதிபதிராசா அவர்கள்.

வினைத்திட்பம் என்பது ஒருவன் மனத்திட்டம்
மற்றைய வெல்லாம் பிற குறள் - 661

இவ்வாறாக அண்ணல் மாவை சோ.சேனாதிராசா அவர்கள் நாட்டுப்பற்றுள்ள தகைமிகுத் தன்னார்வத் தொண்டராக மாணவப் பருவ முதற்கொண்டு இன்றளவும், ஏன் அண்ணல் தம் இறுதிமூச்சு வரையும் தொய்விலாது தொடர்ந்து தொண்டாற்றி வருவார் என்பதில் கிஞ்சித்தும் ஐயமில்லை என்று திண்ணமாய்க் கூறமுடியும். இவ்விலக்கணம் உடைய மாந்தர் ஒருபொழுதும் ஓய்வுறார். ஏனெனில், இவர்கள் பிறர்க்குரியராகிக் கருமமே கண்ணாய் இருப்பவர் ஆவர்.

உள்ளம் உடைமை உடைமைபொருள் உடைமை
நில்லாது நீங்கி விடும். குறள் - 592

நுழைமாண் நுண்புல, ஈழ அண்ணல் மாவை. சோ.சேனாதிராசா அவர்கள் பாரம்பரியம் படைத்தப் பன்முக அறிஞர் ஆவர். அவர்கள் பெற்ற தாயையும், பிறந்த நன்னாட்டையும் நற்றவ வானினும் நனி சிறந்தவையாகக் கொண்டு இளமையிலிருந்தே தன்னார்வத் தன்மையோடு செயல்பட்டு வருவர் கண்ணோட்டமுடன்.

திருவள்ளுவர் கூறும் அனைத்து உடைமைகளைப் பயன்படுத்தி பெரியாரைத் துணை கொண்டு இலங்கையில் மீண்டும் தமிழீழம் மலரச் செய்ய வேண்டுவனவற்றை முறையே செவ்வனே செய்துவர இறைவன் நோயற்ற வாழ்வும், குறைவற்ற ஊக்கமும் கொடுத்தருள வேண்டுகிறேன்.

# "நீதிக்காய் எழுவோம்"

**ஆ.ச. அந்தோணிசாமி அடிகள்**
தலைவர்
அனைத்து சமய சகோதர வாழ்வு சங்கம்
நிறுவனர் மற்றும் தலைவர் குடும்ப முன்னேற்றக் கூட்டுறவு சேமிப்பு,
மற்றும் நாணய சங்கம்
115, நீடராஜப்பய்யர் வீதி
புதுச்சேரி

## அரசியல் கடந்து ஆதரவளிக்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா அழைப்பு

March 14, 2019

மக்கள் பேரணிக்காக அரசியல் கடந்து ஆதரவளிக்கும் முகமாக அனைவரும் பங்கேற்க வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா கோரிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் இன்று விடுத்துள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அதில், மேலும் கூறப்பட்டுள்ளதாவது,

யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தால் நாளை மறுதினம் முன்னெடுக்கப்படும் "நீதிக்காய் எழுவோம;" மக்கள் பேரணியின் இலக்கும் செய்தியும் ஐ.நா. மனித உரிமைகள் சபை உள்ளடங்களாக சர்வதேசத்தை எட்ட வேண்டும்.

இதற்காக அரசியல் கடந்து அனைவரும் ஆதரவளிக்கும் முகமாக பங்கேற்க வேண்டும். 2009ல் இலங்கையில் போர் ஓய்ந்த நிலையில் செப்டம்பரில் ஐ.நா. செயலாளர் நாயகம் பான்.கி.மூன் கொழும்பு வந்தார்.

முன்னாள் ஜனாதிபதி ராஜபக்ஷவை சந்தித்தார். போர்க்குற்றங்களை விசாரிக்கவும், இலங்கை இனப்பிரச்சினை உள்ளிட்ட ஏனைய பிரச்சினைகளுக்கும் தீர்வு காணவும் இருவரும் ஒரு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டனர்.

தமிழர் பிரதிநிதிகளையும் செயலாளர் நாயகம் சந்தித்திருந்தார். 2011 ஒக்டோபர் 24ல் இலங்கைத் தமிழர் தலைவர்கள் அமெரிக்க இராஜாங்க அமைச்சுக்கு அழைக்கப்பட்டு மூன்று நாள்கள் கலந்துரையாடல் இடம்பெற்றன.

இலங்கையில் போர்க்குற்றங்களுக்கு சர்வதேச விசாரணை உள்ளிட்ட ஏனைய பிரச்சினைகளுக்கு தீர்வுப் பிரேரணை ஐ.நா.மனித உரிமைகள் சபைக்குக் கொண்டு வருவதற்கு 27ந் திகதி தீர்மானிக்கப்பட்டது.

அந்த அடிப்படையில் 2012ல் அமெரிக்கா முன்வைத்த தீர்மானம் 24 வாக்குகளைப் பெற்று நிறைவேறியது.

அந்தப் பிரேரணையை அமெரிக்கா முன்னெடுக்காது விட்டால் நிறைவேறியிருக்க முடியாது. ஆனால் அத் தீர்மானம் சிலரால் ஜெனிவா வெளியிடத்தில் தீயிட்டுக் கொழுத்தியமை துரதிர்ஷ்டமானது.

2013ல் மனித உரிமைகள் சபை ஆணையாளராக நவநீதம்பிள்ளை பல தடைகளைத் தாண்டி கொழும்பு வந்தார்.

தமிழ்த் தலைவர்களுடன் நீண்ட நேரம் பேச்சு நடத்தினார். அரச தரப்பையும் சந்தித்தார்.

ஆணையாளர் நவநீதம்பிள்ளை தெளிவாகவும், கடும் தொனியிலும் இலங்கை மீது போர்க்குற்ற விசாரணைக்குச் சர்வதேச பங்களிப்பு முதலான திட்டங்கள், நடவடிக்கைகளையும் மனித உரிமைகள் சபையில் முன்வைத்தார்.

அவர் கொழும்பு வருகையின் போது எதிர்த்தும், ஆதரித்தும் கிளர்ச்சிகள் இடம்பெற்றன. 2013லும் முன்வைக்கப்பட்ட தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

இந்தத் தீர்மானங்களின் போது இலங்கை,ருசியா, சீனா, பாகிஸ்தான் நாடுகள் உள்ளிட்ட பத்து நாடுகள் எதிர்த்தே வாக்களித்து வந்தன.

2014லும் மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் இலங்கைக்கு எதிராக சர்வதேச போர்க்குற்ற விசாரனையையே வலியுறுத்தப்பட்டது.

2015ல் ஆணையாளர் அல்குசைன் இலங்கை வந்தார். ஒரு தீர்க்கமான அறிக்கையை வெளியிட்டார். இலங்கை மீதான ஏமாற்றத்தை வெளியிட்டார். 2015 ஒக்டோபரில் 30/1 தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அத் தீர்மானம் பல முன்னேற்றமான கடுமையான நடவடிக்கைகளை இலங்கைக்கு எதிராக முன்வைத்து வற்புறுத்தியது. 30/1 தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பொழுது பாதிக்கப்பட்டவர்களுக்கு ஒரு ஆறுதலை அளித்தது.

2017 மார்ச் 23ல் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் 2015ல் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தின் பின் இலங்கை அனுசரனையுடன் ஏகமனதாக 47 நாடுகளும் இணைந்து 34/1 தீர்மானம் எடுக்கப்பட்டது.

இத் தீர்மானம் சர்வதேச நாடுகளில் ஒரு இராஜதந்திர வெற்றியாகப் பார்க்கப்பட்டது வர்ணிக்கப்பட்டது.

இருப்பினும் இலங்கை அரசு அந்தத் தீர்மானங்களை முழுமையாகவே நிறைவேற்றத் தவிர்த்து வருகிறது.மீண்டும் 2019 மார்ச் 8ல் மனித உரிமைகள் ஆணையாளர் "மைக்கேல் பட்சலேற்ற" பாராட்டக் கூடிய வகையில் ஒரு அறிக்கையைச் சமர்ப்பித்துள்ளார்.

அதனை முழு மனதுடன் நாம் வரவேற்கின்றோம். ஆனால் 2018ல் ஐ.நாவிலும், 2019ல் இலங்கையிலிருந்தும் இலங்கை ஜனாதிபதி "மனித உரிமைகள் சபைத் தீர்மானங்களை ஏற்கமாட்டோம். அவற்றைத் தூக்கி வெளியே போடுங்கள் என்று சூளுரைக்கின்றார்.

2019 மார்ச்சில் புதிதான இப் பிரேரணை நிறைவேற்றப்பட வேண்டிய தீர்மானம் பிரிட்டன்,கனடா,ஜேர்மனி முதலான ஐந்து நாடுகள் முன்வைத்துள்ளன.

அமெரிக்கா வெளியிலிருந்து ஆதரவு வழங்குகிறது. இத் தீர்மானம் சபையில் பலத்த சவால்களை நெருக்கடிகளைச் சந்திக்கிறது.

ஆகக் குறைந்தது மனித உரிமைகள் ஆணையாளர் அறிக்கையின் அடிப்படையில் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்படாவிட்டால் ஜனாதிபதி மகிந்த தரப்புக்கு வெற்றியாகிவிடும்.

மீண்டும் பாதிக்கப்பட்ட நாம் ஏமாற்றப்பட்டு விடக் கூடாது. இலங்கை உலக நாடுகளின், மனித உரிமைகள் சபையின் தலையீடுகள், கண்காணிப்பிலிருந்து விலகி விடும். இதற்கு இடமளிக்க முடியாது.

ஐ.நா மனித உரிமைகள் சபை ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட 30/1 மற்றும் 34/1 தீர்மானங்களின் அடிப்படையில் மேம்பட்ட காத்திரமான குறுகியகால அட்டவணையில் அத் தீர்மானங்களை முழுமையாக இலங்கை நிறைவேற்றுவதற்கு ஆணையாளரின் அறிக்கையில் அறுதியிட்டவாறு தீர்மானம் ஒன்று மார்ச் 20ல் நிறைவேற்றப்பட வேண்டும்.

அல்லது மாற்று வழிகள் அறிவிக்கப்பட வேண்டும் என வற்புறுத்துகிறோம். 2018 ஐப்பசியில் மஹிந்த பிரதமராக நியமிக்கப்பட்டபோது அமெரிக்கா உள்ளிட்ட உலக நாடுகள், ஐரோப்பிய யூனியன், பொதுநலவாய நாடுகள் வாழ்த்துத் தெரிவிக்கவில்லை என்று எச்சரிக்கை விடுத்தன.

பொருளாதார உதவித் திட்டங்களை திரும்பப் பெற்றன. இலங்கை மீது பலவிதத் தடைகளை, நடவடிக்கைகளை அறிவித்தன.

இலங்கை உயர் நீதிமன்றின் முழு நீதியரசர்களும் ஜனாதிபதியின் ஜனநாயக அரசியலமைப்புக்கு மாறான நடவடிக்கைகளுக்கு எதிராகத் தீர்ப்பளித்தனர் என்பதை நினைவூட்டலாம்.

இத்தகைய நடவடிக்கைகள் ஏன் இலங்கை அரசுக்கு எதிராக உலக நாடுகள் எடுக்க முடியாது என கேள்வி எழுப்புகின்றோம்? ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட 30/1 மற்றும் 34/1 தீர்மானங்கள் ஆணையாளர் அறிக்கையில் கூறிய வாறும் குறுகிய கால அட்டவணைக்குள் இலங்கை அரசு முழுமையாக நிறைவேற்றாதுவிட்டால் சர்வதேச, ஐ.நா சாசன வழிகளில் மாற்று நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமெனவும் வற்புறத்துவோம்.

இதற்கான பொருத்தமான தீர்மானங்களை எடுக்க மனித உரிமைகள் சபையில் அங்கம் வகிக்கும் நாடுகள், ஐ.நா.சபை குறிப்பாக பாதுகாப்புச் சபை , வல்லாண்மை நாடுகளை இராஜதந்திர ரீதியில் நாம் ஒன்றுபட்டு வென்றெடுக்க வேண்டும். இதற்கான திட்டங்களையிட்டு தீர்மானிப்பதற்கு அரசியல் கட்சிகளை கடந்து நாம் செயல்பட வேண்டும். இவ் இலக்கைக் கொண்டுதான் யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் அமைப்பு 16ஆம், 19 ஆம் நாள்களில் பேரணிக்கு அழைப்பு விடுத்துள்ளது.

இதேவேளை, இவ்வழைப்பைப் பற்றி நின்று இப் பேரணியை, ஜனநாயகப் போராட்டங்களை வரவேற்போம் என அழைப்பு விடுக்கின்றோம். அனைவரும் பங்கு கொள்வோம் என்றும் குறித்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

மாவை. சேனாதிராஜா அவர்களின் தீர்க்க தரிசனமான செயலாற்றலுக்கு ஒரு சான்றாக இதனைக் குறிப்பிட விரும்புகிறேன்.

75 ஆம் அகவை முடித்து முத்து விழாவை எதிர் நோக்கியுள்ள திரு. மாவை. சேனாதிராஜா அவர்கள் எல்ல நலமும் பெற்றிட ஆசிர்வதிக்கின்றேன்.

**ஆ.ச. அந்தோணிசாமி அடிகள்**

# மாவை என்றொரு சரித்திரம்



**கலைமாமணி. பாவலர் மு.கு. இராமன்**
சிறப்புத் தலைவர்.
புதுச்சேரி மாநில கலை இலக்கிய பெருமன்றம்
197 தியாகு முதலியார் வீதி, புதுச்சேரி .1

அன்புடையீர்,

உலகத் தமிழர்கள் அனைவருக்கும் வணக்கம்.

"யாதும் ஊரே யாவரும் கேளீர்...."

**தமிழ் வேத ஆகமங்கள், மக்களனைவருக்குமான இலக்கியங்களே**

கலை, இலக்கியம், கலாச்சாரம், பண்பாடு இவை அனைத்தும் மனித குலம் யாவுக்கும் பொதுவேயென பல்வேறு நூல்கள் தமிழில் வழிகாட்டுகின்றன. சித்தர் நூல்களில் குறிப்பாக மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் 3000 பாடல்கள் அடங்கிய திருமந்திரத்தில் திருமூலர் உயிர்களின் தோற்றம் முதல் வாழ்வின் இறதிக் காலம் வரை வாழ்வியல் முறையை எடுத்தியம்புகிறார்.

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் திருக்குறள் இன்றைய சமூக நிலைக்கேற்ப உலகத்தமிழர்கள் அனைவருக்கும் வாழும் வழியைக் காட்டுகிறது.

அதற்குபின் வந்த தமிழின் சிலப்பதிகாரம் தமிழரின் நீதியை நிலை நிறுத்தும் வகையில் கற்பின் பெருமை, மன்னராட்சி முறைமையின் குறை, நிறைகளை எடுத்துக் காட்டும் நீதிக் காவியமாக உள்ளது.

பதினெட்டாம் நூற்றாண்டில் இந்திய தென்னக தமிழ் நாட்டில் பிறந்த வள்ளலார் 6000 தமிழ் பாடல்கள் மூலம் அமைதியான முறையில் இறை வழிபாட்டுடன் கூடிய மானுடவியலை வலியுறுத்தி மானுடம் உய்வதற்கான பாதையைக்காட்டிச் சென்றார்.

இவைகளை யொட்டி சங்க இலக்கியம், பன்னிரு திருமுறைகள், சித்தர் இலக்கியங்கள், வைணவப் பாசுரங்கள் மருத்துவ நூல்கள், வான சாஸ்திரம், சிற்பசாஸ்திரம், புவியியல் ஆராய்ச்சி இவை போன்றவை யாவும் ஆய்வுகள் மூலம் தமிழர்களால் உருவாக்கப்பட்டு மானிட வளர்ச்சிக்கும் மனித குலம் வெல்வதற்கும் சிறப்பாக அளிக்கப்பட்டுள்ளது.

**திருமந்திரம்**

நாம் முன்னர் குறிப்பிட்டது போல பரிணாம ரீதியான மனித குல தோற்றத்தின் தொடக்கமாக திருமந்திரம்

"உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்
வள்ளல் பிரானாருக்கு வாய் கோபுர வாசல்
தெள்ளத் தெளிந்த சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் காலா மணி விளக்கே."

இவ்வாறு மனித உடற்கூறு இயலை தெளிவுறுத்துகிறது. இன்னொரு பாடலில்,

"உடம்பால் அழியின் உயிரார் அழீவர்
திடம்பட மெய்ஞானம் சேரவும் மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயமறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்ந்தேனே"

என உடம்பை வளர்க்கும் முறையை கூறுகிறது.

இவைகளை யெல்லாம் எவ்வாறு கையாளுவது என்பதை

ஊமை கிணற்றகத்து உள்ளே உறையும் ஓர்
ஆமையின் உள்ளே அழுவைகள் அய்ந்துள
வாய்மையின் உள்ளே வழுவாது ஒடுங்கின்
ஆமையின் மேலும் ஓர் ஆயிரத்தாண்டே.

இப்பாடலில் "அழுவைகள் அய்ந்துள" என்பது உடலின் பஞ்ச பூதங்கள் எனப்படும் நீர், நிலம், நெருப்பு காற்று, ஆகாயம் இவற்றை இயற்கை சூழலுக்கு ஏற்ப கட்டுப்படுத்தி வாழ்ந்தால் ஆயுள் நீடிக்கும் என நீண்ட காலம் வாழ வலியுறுத்திக் கூறுகிறது திருமந்திரம்

**திருக்குறள்**

அடுத்துவந்த திருவள்ளுவர் 1330 பாக்கள் கொண்ட திருக்குறளில் உலக மனிதர்கள் மாண்புற வாழ்தல் வேண்டி

"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப்படும்"

என்பதை, அனைத்திலும்பொது ஒழுக்கம் வேண்டி வலியுறத்தி அறம், பொருள், இன்பம் என 133 அதிகாரமாகப் பிரித்து அவை உலக நாடுகளில் பல்வேறு மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டு பயன்பாட்டுக்கு வந்துள்ளது தமிழருக்கு ஏற்பட்ட பெருமையே.

**சிலப்பதிகாரம்**

சிலப்பதிகாரம் தமிழர்களின் அரசு, ஆட்சி முறையில் ஏற்படும் குறைகளை பெண்களே போராடி நீதியை நிலை நாட்டும் காவியமாகத் திகழ்கிறது.

**திருவருட்பா**

இறுதியில் இவையனைத்தையும் அறிந்தும, புரிந்தும், தெளிந்த வள்ளலார் வாழ்க்கையை லேசாக்க வேண்டி வெள்ளையராட்சியிருந்த காலத்தில்

கருணையிலா ஆட்சி கடுகி ஒழிக
அருள் நயந்த நன் மார்க்கர் ஆள்க
தெருள் நயந்த நல்லோர் நினைத்த நலம்பெறுக
நன்று நினைத் தெல்லோரும் வாழ்க இசைந்து.

என கருணை யில்லாதவர்கள் ஆட்சி ஒழிய வேண்டும் எனவும் அருள்மிக்க தெளிந்த சிந்தனையாளர்கள் ஆளவேண்டும் என்பதை வலியுறுத்துகிறார். இது இன்றைய சூழலில் மிகவும் பொருத்தமானதாக உள்ளது.

நான்கு சமஸ்கிருத வேதங்கள் அனைவரும் அறிய முடியாத நிலையில் இவையே வேத ஆகமம் என பண்டிதர்களால் கூறப்படுகையில், தமிழில் மனிதகுல வளர்ச்சிக்கு மிகச்சிறப்பாக, எளிமையாக தெளிந்த நீரோடைபோல் இருக்கும் மேற்கொண்ட நான்கு தமிழ் நூல்களையும் தமிழ் ஆகம நூல்களாக காலத்தால் அளித்த தமிழ் கொடையாக கொள்ளலாமே.

**ஈழத் தமிழர் விடுதலை**

தமிழின் சிறப்பையும், தமிழர்களின் பெருமைகளையும் பேசிப் பேசிப் புகழ் பெறுவதையும், பொருள் ஈட்டுவதையும் விடுத்து தமிழர் நாகரீகம், பண்பாடு, கலாச்சார மரபுகள், மொழி இவற்றைக் காக்க உலக அளவில் மாந்தரை ஒன்று படுத்தி மனித குலம் நலம் பெற்று வெற்றி பெற மானுடம் வெல்லும் என்ற நம்பிக்கையை உருவாக்கும் வகையில் இலங்கையில் தமிழர்கள் தனிநாடு கேட்டு போராடுவது, வீரவரலாற்றில் இடம் பெறுவதாக அமைந்துள்ளது.

இலங்கை தமிழர் விடுதலைக்கான போராட்டத்தில் லட்சக்கணக்கான போராளிகளும், தமிழர்களும் தம் இன்னுயிரை ஈந்தும் முற்றுப் பெறாத நிலையில் இன்றும் சர்வாதகார சிங்கள ஆட்சியில் தமிழர்கள் தொடர்ந்து போராடும் அவல நிலையே உள்ளது.

இந்நிலையில் இலங்கை பாராளுமன்ற உறுப்பினரும், எனது அன்பிற்குரிய நண்பருமான ஈழ அண்ணல், திருமிகு மாவை. சோ. சேனாதிராசா அவர்ளின் 75வது ஆண்டு நிறைவு விழா புதுவையில் நடைபெற இருப்பது கண்டு மகிழ்ச்சி அடைகிறேன்.

**ஈழ விடுதலையில் எனது பங்களிப்பு**

நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு தெற்காசிய நாடுகளுக்கு நான் சுற்றுப் பயணம் மேற்கொண்ட போது இலங்கை தமிழர்களுக்கான விடுதலை போராட்டம் தொடங்கி வெளிக்கடைசிறையில் ஜெகன், குட்டிமணி போன்ற போராளிகள் படுகொலை செய்யயப்பட்ட நேரமது. அப்போது இலங்கையல் தங்கி திரு. டொமினிக் ஜீவா அவர்களை சந்தித்துப் பேசினேன். தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் தேவையையும், நியாயத்தையும் எடுத்துரைத்தார்.

அதற்கு பிறகு தோழர் தா. பாண்டியன் அவர்களின் வேண்டுகோளுக் கிணங்க இலங்கையின் E.P.R.L.F. களப்போராளிகளை நீண்ட நாட்கள் எனது இல்லத்தில் தங்கவைத்து உதவி, உபசரித்து பாதுகாப்பளித்துள்ளேன்.

அக்காலக் காட்டத்தில் பத்மநாபா, வரதராஜா, ராசிக், ராஜன் போன்ற மற்றும் சிலரின் தொடர்பும் எனக்கு இருந்தது.

**சிங்களவர்களின் சதி**

எனது மூத்தமகன் ரங்கநாதன் மற்றும் 40 மாணவர்கள் புதுச்சேரி பெத்திசெமினார் பள்ளியின் மூலம் இலங்கை சுற்றுலா சென்ற போது தமிழ் மாணவர்கள் தங்கும் விடுதியில் நீரில் வி-ம் வைத்து சிங்களவர்களால் அம்மாணவர்கள் கொல்லப்பட இருந்த சதியை அங்குள்ள ஒரு தமிழ் போராளி மூலம்

அறிந்து அன்றைய பாரதப் பிரதமர் இந்திரா காந்தி அவர்களால் தனி விமானம் மூலம் மாணவர்கள் திருப்பி அழைத்து வரப்பட்டது மறக்க முடியாத வரலாற்று சம்பவாகும்.

**நண்பர் சேனாதி ராசாவின் அறிமுகமும் நெருக்கமும்**

முதன் முதலாக நண்பர் பாஞ். ராமலிங்கம், சேனாதிராசா அவர்களை எனது இல்லத்திற்கு அழைத்துவந்ததும், நான் உபசரித்து மகிழ்ந்ததும் பசுமையான நினைவில் இன்றும் உள்ளது. தமிழகம் இலங்கைத தமிழர்களுக்கு பாதுகாப்பு தந்த அந்த வேளையில் அவரது இரு மகன்களும், மகளும் திருச்சியில் தங்கி படித்துக் கொண்டிருந்த நிலையில் அவர் குடும்பத்தைப் பிரிந்து களப் போராளியாக இலங்கையில் போராடிக் கொண்டிருந்த வேளையில் மேலும் இரண்டு மூன்று முறை எனது வீட்டுக்கு வந்துள்ளார்.

நெருக்கடி நிலையிலும் இலங்கையில் தங்கி தலைமையேற்று போராட்டங்களை தொடர்ந்து நடத்தித் கொண்டிருந்த அவர்மீது நன்மதிப்பும், மரியாதையும் கூடியது.

**நண்பரோடு பயணம்**

ஒரு சமயம் மனம் சோர்வுற்ற நிலையில் என்னை சந்திக்க வந்தபோது திருப்பதிக்கு செல்ல வேண்டும் என்றார். எனது பொறுப்பில் திருப்பதிக்கு அவரோடு, பாஞ். ராமலிங்கம் அப்போது சட்டமன்ற உறுப்பினராக இருந்த தோழர் ஆர். விஸ்வநாதனையும் அழைத்து சென்று வந்தேன். அப்போதும் கூட ஈழப்போர் நடவடிக்கைகளையும், தமிழர்களின் பாதிப்பையும் குறித்து கவலையோடு பேசிக்கொண்டிருப்பார்.

மறு முறையும் அவரோடு திருப்பதிக்கு சென்ற வரும்போது களப்போராட்டத்துக்கான ஆலோசனையைத் தரும் வாய்ப்பு எனக்கு கிட்டியது.

**களப்போராளி சேனாதிராசா**

தமிழர்களின் விடுதலைக்கான போராட்டக் களத்தில் இருந்து கொண்டே பாராளுமன்ற உறுப்பினராகவும், இலங்கை தமிழர்களின் நல்வாழ்வுக்காகவும், தமிழ் கலாச்சார பண்பாடு காக்கவும் 14 வயது தொடங்கிய அவரது போராட்டம் 61 ஆண்டுகளுக்கு மேலாக இன்றும் தொடர்கிறது. பலமுறை சிறையிலும் போராட்டக் களத்திலும், தலைமைப் பொறுப்பிலும் கழித்த ஒரு வீர ஈழத் தமிழரின் வாழ்வு தமிழுக்கும், தமிழருக்கும் கிடைத்த பெருமையும், சிறப்புமாகும்.

**வாழ்த்து**

அவரது 75வது ஆண்டு விழாவை புதுவையில் 78 ஆம் ஆண்டில் கொண்டாடுகிற வேளையில் அவரையும், அவரது குடும்பத்தினரையும், அவரது இயக்கத்தையும், இயக்கத் தோழர்களையும் பாராட்டி மனமாற வாழ்த்துகிறேன்.

வரும் காலத்தில் நண்பர் சேனாதிராசா அவர்களின் வாழ்க்கையின் அனுபவங்களையும், போராட்ட வடிவங்களையும் முன்மாதிரியாகக் கொண்டு மானுடம் வெல்லும்என்னும் நம்பிக்கையோடு மனிதகுல வளர்ச்சிக்கு இயற்கையோடு இணைந்து தோழர்கள் செயல்பட தமிழும், தமிழ்க் கலாச்சார, பண்பாடு, நாகரீகமும் என்றும் வெற்றி பெறும் என்பது உறுதியே.

**மு.கு. இராமன்**

புதுச்சேரி

## ஈழத் தமிழர்களின் உரிமைக்காக அறவழி தன்னில் களம்பல கண்டு கொடுஞ்சிறை மீண்டமூத்த போராளி

### மாவை அண்ணர் வரலாறு

**சோ.செல்வரத்தினம்,**
மாவிட்டபுரம்,தெல்லிப்பழை,யாழ்ப்பாணம்
இலங்கை

இலங்கையின் வட பால் யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள மாவிட்டபுரம் எனும் புனித மண்ணில் 1942ம் ஆண்டு ஐப்பசி 27ந் திகதி நன்னித்தம்பி சோமசுந்தரத்தின் மூத்த மகனாகப் பிறந்த சேனாதிராசா அவர்கள் பிறந்தார். அவர் தனது இளம்பராயத்திலிருந்தே விளையாட்டுத்துறையிலும் கல்வியிலும் சிறந்து விளங்கினார்.ஆரம்பக் கல்வியை மாவிட்டபுரம் தெற்கு அமெரிக்கன் மிஷன் பாடசாலையில் தொடங்கியபோதும் மாவிட்டபுரம் வீமன்காமம் ஆங்கில பாடசாலையிலேயே சிரேஸ்ட பாடசாலைப் பரீட்சை வரை கல்வி பயின்று வந்தார். இவரது இளம்பராயம் மிகவும் பேச்சு வன்மையால் மேடைப் பேச்சளனாய் முதன்மை மாணவனாகத் திகழ்ந்தார். இப் பாடசாலையில் இலக்கண வித்தகர் பண்டிதர் திரு. இ.நமசிவயாளம் அவர்களின் வழிகாட்டலில் பாடசாலையில் பல்வேறு நிகழ்வுகளிலும் தனது ஆற்றல் மிகுந்த கணீரென ஒலிக்கும் ஓசைகொண்ட பேச்சுக்களால் ஆசிரியர்களையும் மாணவர்களையும் ஆர்வத்துடன் கேட்கச் செய்யும் சக்தி கொண்டவராய் விளங்கினார். இவரது பேச்சுகள் புரட்சிகரமான கருத்துக்களை உள்ளடக்கியதாகவே இருக்கும்.இவர் உயர்தர பாடசாலைக் கல்வியை யா/ நடேஸ்வராக் கல்லூரியில் பயின்றபோது அங்குஇவரது பேச்சு ஆற்றலை முன்னரே அறிந்து வைத்திருந்தார் தமிழ் இலக்கண ஆசிரியர் திரு.சுப்பையா அவர்கள். இவருக்குத் தமிழ் ஆசிரியராக பாடம் கற்பித்தார். அவர் சேனாதிராசா அவர்களை தன்னிடத்தே அழைத்து மென்மேலும் அவரது தமிழ் அறிவாற்றல் வளர்ச்சி பெற உதவினார். நடேஸ்வராக் கல்லூரியிலே கல்வி கற்றபோது கரப்பந்தாட்டம்,உதைபந்தாட்டம், மெய்வல்லுநர் வருடாந்த விளையாட்டுப் போட்டிகளிலும் முதன்மை வீரராக இருந்து அநேக மாணவர்களையும் கூடவே தனது உற்ற நண்பர்களாக வைத்திருந்தார். நடேஸ்வராக் கல்லூரி யாழ்ப்பாணநகரின் வடபால் கடற்கரைப் பிரதேசமாகன காங்கேசன்துறையில் அமைந்துள்ளது. அநேகமாக இவரது ஆரம்பகால நண்பர்கள் மயிலிட்டி , காங்கேசன்துறை, கீரிமலை போன்ற கிராமத்து மாணவர்களாக இருந்தார்கள். பாடசாலை மட்டத்தில் மட்டுமல்லாது கிராம மட்ட விளையாட்டுக்கழகங்களுக்காகவும் உதைபந்தாட்டம், கரப்பந்தாட்டம் போன்ற போட்டிகளில் பங்குபற்றி வெற்றியீட்டச் செய்தார்.

அடுத்து உயர்தரப் பாடசாலைப் கல்விப் பரீட்சையை எழுதிய கையோடு சில நண்பர்களுடன் சேர்ந்து யாழ்ப்பாணம் கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரியில் கல்விகற்க மாவிட்டபுரம் புகையிரத நிலையத்திலிருந்து செல்லத் தொடங்கினார். ஆனாலஇவரது நோக்கம் மாறுபட்டுவிட்டது..கல்வியை இடைநிறுத்திவிட்டு- தந்தை எஸ்.ஜே.வி.செல்வநாயகம்நாடாளுமன்ற உறுப்பினர், நியாயவாதி, இராணிஅப்புக்காத்து (Q.C) அவரது அகிம்சைவழிபோராட்டங்கள், இலங்கைத் தமிழர்களின் துன்பங்கள் பற்றி அறிவதற்கு சில நண்பர்களுடன்தெல்லிப்பழையிலுள்ள அவரது வீட்டுக்குச் சென்றார். அவருடன் பல மணிநேரம் உரையாடலில்ஈடுபட்டனர். அவ்வளவு தான். தந்தை செல்வா

அவர்களின் அமைதியான குரலும் அரியபண்பும் கொண்டஅஅரசியல்அறிவாற்றல் மிக்க கருத்துக்களும் ஈழத்தமிழருக்கான உரிமைப் போராட்ட எணணக்கரு ஆகியன மாவை. சேனாதிராசா அவர்களையும் அவரது நண்பர்களையும் மிகவும் கவர்ந்துவிட்டது. மாவை சேனாதிராசா அரசியல் போராட்டங்களுக்குதந்தை செல்வாவுடன் செல்லத்தயாரானார். சிங்கள ஆட்சியாளர்களின் இனவெறி கொண்ட தமிழ் இனத்துக்கு எதிரானஅடக்குமுறைச் சட்டங்கள் 1935 ம் ஆண்டு தொடக்கம் காலத்துக்கு காலம் பாராளுமன்றத்துக்கு கொண்டுவந்து நிறைவேற்றப்பட்டு வந்தது.

1944 ல் ஜீ.ஜீ.பொன்னம்பலம் அவர்களினால் உருவாக்கப்பட்ட அகில இலங்கை தமிழ்க்காங்கிரஸ் கட்சியை ஆரம்பித்தபோது திரு.எஸ்.ஜே.வி. செல்வநாயகமும் அக்கட்சியில் இருந்தார். ஐக்கிய தேசியக்கட்சி இலங்கையில் ஆட்சியைக் கைப்பற்றியபோது தமிழ்க் காங்கிரஸ் ஒற்றையாட்சியை ஏற்றதோடு மந்திரிப் பதவிகளையும் ஏற்றுக் கொண்டார்கள்.

அடுத்த ஆண்டிலேயே மலையக மக்களின் பிரஜாஉரிமையை பறிக்கும் சட்டமூலம் உருவாக்கப்பட்டு அம்மக்களின் பாராளுமன்றப் பிரதிநிதித்துவமும் இல்லாமல் செய்யப்பட்டது. இதை எதிர்த்த தந்தை எஸ்.ஜே.வி.செல்வநாயகம் தம் குழுவினருடன் தமிழ்க்காங்கிரஸிலிரு ந்து விலகி 1949ம் ஆண்டு சமஷ்டிக் கட்சியான இலங்கைத் தமிழரசுக் கட்சியை ஆரம்பித்தார். அவர் தலைமையில் பல சாத்வீகப் போராட்டங்கள் தமிழ்மக்களின் ஏகொபித்த ஆதரவுடன் சிங்கள ஆட்சியாளருக்கெதிராக நடாத்தப்பட்டன. 1957ல் அரச கரும மொழி தனிச் சிங்களச் சட்டம் அப்போது பிரதமராக இருந்த S.W.R. பண்டாரநாயக்காவினால கொண்டுரப்பட்டபோது அச் சட்டத்தை லங்கா சமகமாசக்கட்சி, தமிழரசுக்கட்சி என்பன பாராளுமன்றத்தில் எதிர்த்ன..அதேபோல் சிங்கள அரசாங்கம் சகல வாகனங்களின் இலக்கத்தகடுகளில் சிங்கள 'ஸ்ரீ'இடவேண்டும் என்ற சட்டத்தைக் கொண்டு வந்தனர் இதனையும்எதிர்த்துத் தமிழ் பிரதேசமெங்கும் எதிர்ப்புப் போராட்டங்கள் நடைபெற்றன. அதேபோல் 1958 ல் தமிழப்பிரதிநிதிகள் தலைமையில் யாழ்பபாணம், வவுனியா, மட்டக்களப்பு போன்ற பகுதிகளிலிருந்துதிருகோணமலைக்கு சிங்கள ஸ்ரீ யை எதிர்க்குமுகமாக தமிழரசுக்கட்சியினால் பாதயாத்திரை மேறகொள்ளப்பட்டது.இதனால் நாடுபூராவும் இனக்கலவரங்கள் ஏற்பட்டன.. கொழும்பு, கண்டி, அனுராதபுரம் போன்ற சிங்களப் பகுதிகளிலிருந்து தமிழர்கள் பெரும் தாக்குதலுக்கானதுடன் அவர்களது உடமைகள்யாவும் கொள்ளையடிக்கப்பட்டு தமிழர்கள் கொல்லப்பட்டும் வெறுங்கையுடன் துரத்தப்பட்டனர். உயிர் தப்பியவர்கள் யாழ்ப்பாணம் வந்துசேர்ந்தனர்.

தந்தை. செல்வா — எஸ்.டபிள்யூ.ஆச். பண்டா ஒப்பந்தங்கள், 1965 ல் தந்தை செல்வா- டட்லி சேனநாயக்கா ஒ்ப்பந்தங்கள் தமிழர் பிரச்சனை தீரப்பதறகாக சமாதான நோக்கில் செய்யப்பட்டு சிங்கள இனவாதிகளின் எதிர்ப்பால் அவை கைவிடப்பட்டன. துமிழர்களுக்கான உரிமைகள் மறுக்கப்பட்ட காரணத்தால்1962ம் ஆண்டு தமிழரசுக்கட்சிப் பிரதிநிதிகள் காலி முகத் திடலில் சத்தியாக் கிரகப் போராட்டத்தை ஆரம்பித்தனர். சிங்கள காடையர்களால் பலமாகத் தாக்கபட்டார்கள். இரத்தம் உடலிலிருந்து சொட்ட தங்கள் ரோராட்டத்தை தொடர்ந்தனர். இதைத் தொடர்ந்து யாழ்ப்பாணம், வவுனியா, மட்டக்களப்பு ,திருகோணமலை போன்ற இடங்களில் இருந்த அரச மாவட்ட செயலகங்களுக்கு முன்பாக தமிழரசுக்கட்சிப் பாராளுமன்ற பிரதிநிதிகள் தலைமையில் மறியல் போராட்டங்கள் இடம்பெற்றன. ஒரு கிழமை யாக அரச நிர்வாகச் செயற்பாடுகள்

யாலும் முடங்கிப் போயின. இந்த நாட்களில் தான் தந்தை செல்வாவுடன் மாவை சேனாதிராசா இளைஞனாக இருந்த போது இச் சாத்வீகப் போராட்டத்தில் பங்குகொணடார். இம் மறியற் போராட்டத்தை முறியடிப்பதற்காக இராணுவ உதவி அரசால் பெறப்பட்டது. மறியற் போராட்டங்கள் நடைபெற்ற மாவட்ட செயலகங்களுக்கு

புகையிரதம் மூலம் இராணுவம் வந்தது. கால் கை முறியக்கூடிய வகையில் பொல்லுகளாலும் கம்பிகளாலும் இராணுவம் தமிழரசுக்கட்சி பாராளுமன்ற உறுபபினரகளையும் பொதுமக்களை யும் பலமாகத் தாக்கினார்கள். இரத்தம் உடல்களிலிருந்து சொட்டச் சொட்ட போராட்டக்காரர்களை அகற்ற முற்பட்ட இராணுவம் பலமாக அவர்களைத் தூக்கிவீசினார்கள்.

1970 ல் தமிழ் மாணவர்கள் பல்கலைக்கழகக் கல்வியைத்தொடருபர்களின் எண்ணிக்கையைககுறைக்கும் நோககுடன் தரப்படுத்தலை அரசாங்கம் அறிமுகப் படுத்தியது. தமிழ்மாணவர்கள்பல எதிர்ப்புப் போராட்டங்களை நடாத்தினர்.

1972 ல் சோசலிஸக் குடியரசுச் சட்டத்தை பாராளுமன்றத்தில் கொண்டு வந்துநிறைவேற்றினார்.

யாழ்ப்பாணம் பலாலி விமான நிலையத்தை வந்தடைந்த அமைச்சர் திரு.என்.எம். பெரேராவை தமிழ் இளைஞர்களுடன் மாவை சேனாதிராசா அவரகளும் சென்று கறுப்புக்கொடி ஆர்ப்பாட் டத்தில் ஈடுபட்டார்.மாவை சேனாதிராசா காவற்துறையினரால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்சிங்களக் குடியேற்றங்களை சிங்கள அரசு திட்டமிட்டு செய்து வந்தது. இதைத் தடுக்கு முகமாக திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, முல்லைத்தீவு ,வவுனியா போன்ற இடங்களுக்கெல்லாம் தமிழ் இளைஞர் அமைப்பான தமிழரசுக் கட்சி வாலிப முன்னணி செயற்பட்டுவந்தபோது அமரர்.திருநாவுக்கரசு தலைவராக இருந்தார். இரவிரவாக அவ்வப் பகுதிமக்களுடன்கூடி தமிழ்ப்பிரதேசங்களில் சிங்களக் குடியேற்றங்களைத் தடுக்கும் வகையில் தமிழர்குடியிருப்புகளை விஸ்தரிக்கும் வகையில் மாவை சேனாதிராசா தலைமையில் பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. 1970 ம் ஆண்டு தொடக்கம் தமிழர் தாயகமெங்கும் தமிழ்இளைஞர்கள் தீவிரமாக தமிழர் தாயகம், தேசியம் , சுயநிர்ணயம் போன்ற தந்தை செல்வா அவரகளால் உருவாக்கப்பட்ட தாரக மந்திரமான அடிப்படைக்கோட்பாடுகளை வலியுறுத்தி மக்கள் மத்தியில் விழிப்புணர்வுக் கூட்டங்கள் தமிழ்இளைஞர்களால் கிராமம் கிராமமாக ஒழுங்குசெய்யப்பட்டு நடாத்தப்பட்டு வந்தன. வடக்கு கிழக்குதமிழர் தாயகமெங்கு பார்த்தாலும் இளைஞர்கள் மிகவும் ஆக்ரோஷமாக புறப்பட்ட இளைஞர்கள், தமிழ்இளைஞர்பேரவையை உருவாக்கி மாவை சேனாதிராசா தலைமையில் மிகவும் பொறுப்புடன் செயற்பட்டுவந்தனர். தந்தை செல்வாவுக்கு அகிழ்சை வழிப்போராட்டங்களை தலைமை தாங்கிநடாத்தி செல்லும் மனவலிமையும் பொறுமையும் இருந்தது. எதையும் தாங்கும் இதயம் எனக்கூறுவார்கள். அதே மனவலிமையும் பொறுப்புணர்வும் தந்தை செல்வாவிடமிருந்து கற்றுக்கொண்ட பாடமாக தாரக மந்திரமாக மாவை சேனாதிராசா பேணிவந்துள்ளார்

தமிழ் இளைஞர் கூட்டம் மாவை அண்ணர் பின்னால் பெரும் திரளாக இருந்தார்கள். அதேநேரம் இலங்கை காவற்துறையினரும் மாவையர் பின்னால் இரகசியமாகத் திரிவதும் தமிழ்இளைஞர்களுக்கு தெரியாமல் இல்லை. எனினும் அச்சமென்பது மடைமையடா என நெஞ்சுஉறுதியுடன் பேசுவார்கள். ஒரு முறை மாவை சேனாதிராசா அவர்கள் மன்னாரில் ஒருகூட்டத்தில் பேசிக்கொண்டிருக்கும்

போது கைது செய்தார்கள். என்ன குற்றம் என்று கேட்டால்தமிழ் மக்கள்மத்தியில் அரசுக்கெதிரான தீவிரவாதத்தை வளர்க்கக் கூடிய பேச்சு அதுநாட்டில. பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் என்று பதில் கூறினார்கள். சேனாதிராசா எனப்பெயர் பெயர் கொண்ட இவருக்கு அனைத்து அன்புள்ளம் கொண்ட தமிழ்இளைஞர்களால்பாசமாக அழைப்பதற்கென சொல்லபபட்ட மாவை அண்ணர் என்ற பெயர்ததான் இன்று நிரந்தரமாக மாவிட்டபுரம்.பெயர் -' மாவை' என முதல் சொல்லாக இன்று' மாவை.சோ. சேனாதிராசா என வழப்பமாக உள்ளது.

நாட்டில் சிங்கள அரசுக்கு எதிராகவோ அரசுக்கு துணைபோவோர்களுக்கு பாதிப்பு வந்தாலோ

ஏதாவது நடந்து விட்டால் உடனே வீட்டுக்கு வந்துவிடுவார்கள் மாவை சேனாதிராசா நிற்கிறாரோ என்று கேட்டு வந்த காவற்துறையினர் விசாரணைக்கு என அழைத்துச் சென்றுவிடுவார்னள். ஒரு முறை விசாரணைக்கென காங்கேசன்துறை காவற்துறையினர் மாவை சேனாதிராசாவைக் கைது சென்றவர்கள் அங்கு வைத்து விசாரணை செய்துவிட்டு ஒரு கிழமையால் ஊர்காவற்துறை தடுப்புக்காவல் நிலையத்துக்கு கொண்டு சென்றனர். காவற்துறைஎன்ன நினைத்தார்கள் என்றால் மாவை சேனாதிராசாவைக் கைதுசெய்வது சுலபம் என்றும்அரசாங்கம் இவரது கைதின் மூலம் தாம் உடனடியாகவே தமது கடமையைச் செய்துவிட்டார்கள்என நம்புவார்கள் எனவும் நினைத்தார்கள். மாவை சேனாதிராசாவைப் பொறுத்தவரைகாவற்துறையைக் கண்டு பயப்பட்டு ஓடி ஒழித்ததில்லை. கைது செய்யவா வந்தீர்கள் நான்வருகிறேன் என மனத்தைரியம் இருந்தது. தந்தை செல்வநாயகம் ஒரு நேர்மையான அரசியல்வாதி என்று சிங்கள அரசியல்வாதிகளும் சொல்வார்கள். ஆனால் அரச தரப்பு தந்தை செல்வாவின் நம்பிக்கையை துரோகத்தனத்தால் வென்றவர்கள். தமிழர்களின் அரசியல் பிரசிசனையை தீர்ப்பதாக எத்தனைகயோ முறை சொல்லியிருக்கிறார்கள். நம்ப வைத்தார்கள்.எழுதிய ஒப்பந்தங்களையே பௌத்த துறவிகளதுஎதிர்ப்புக்கும் இனக்குரோத சிங்கள அரசியல் வாதிகளின்அச்சுறுத்தலுக்கும் முகம்கொடுக்கப் பயந்து எழுதிய ஒப்பந்தங்களைக் கிழித்தெறிந்துள்ள நேர்மையற்றவர்களால் தான் இன்று வரை எமது நாட்டில்நிழ்மதி இன்னும் தமிழருக்குக் கிடைக்கவில்லை எனலாம்.ஊர்காவற்துறைக்குக் கொண்டு செல்லப்பட்ட மாவை சேனாதிராசா அவர்களை பின்பு ஆனையிறவு தடுப்புமுகாமில் வைத்து மிகவும் கொடூரமாகத்தாக்கிய இராணுவத்தினர் இவர்இறந்துவிட்டதாக எண்ணி வெளியில் வீசிவிட்டுச் சென்றுவிட்டார்களாம். சில மணிநேரம்கழித்து மயக்கம் தெளிந்த மாவை சேனாதிராசா ஒருவாறு வேறு ஆட்களின் உதவியுடன்கொண்டுவரப்பட்டு சிகிசையளிக்கப்பட்டார். இவர் வெலிக்கடை மகஸின் சிறைச்சாலையிலும்பின்பு ஒருமுறை கைது செய்யப்பட்டபோது கண்டி போகம்பரை சிறைசாலையிலும் இண்னும்பல கொடும்சிறைகளில் 13 வருடங்களுக்கு மேலாக கொடூரமான சித்திரவதைகளை அனுபவித்து எதுவித நீதிமன்ற விசாரணைகளுமின்றி விடுதலை செய்யப்பட்டார்.. சிறைச்சாலைகளில் காசி ஆனனந்தன், வண்ணை ஆனந்தன், பன்னீர்ச்செல்வம் போன்ற 42பேர்இறுதிவரை நீண்ட காலம் சிறைவாசம் அனுபவித்த அறவழி விடுதலைப் போராளிகளாகசிறை மீண்டார்கள். இவர்களது விடுதலையை எதிர்பார்த்த தமிழ் மக்கள் இவர்கள் புகையிரதம் மூலம் வரும் நாளன்று வெகுநேரம் யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்தில்காத்திருந்து மாலையணிவித்து வரவேற்றார்கள். இவர்களுக்கு இரத்ததிலகமும் இட்டார்கள்.யாழ். புகையிரத நிலையம் அன்றைய தினம் கடலென ஆயிரக்கணக்கான மக்கள் கூட்டத்தால்நிரம்பி

வழிந்தது. மாவை சேனாதிராசா அவர்களின் முகத்தோற்றம் முற்றிலும் மாறுபட்டவாறு தாடியும் மீசையும் நீண்டதலைமயிர்கள் சிகப்பு பான்ட் தலையில் போடப்பட்டவாறு காணப்பட்டஉருவமே, இன்றும் நினைவில். மறையாமல் இருக்கிறது.

மாவை அண்ணர் வெலிக்கடைச் சிறைச்சாலையில் கொடூரமான முறையில் அடித்து உதைக்கப்பட்ட செய்தி அன்று தமிழரசுக் கட்சியினால் நடாத்தப்பட்டு வந்த சுதந்திரன் பத்திரகையில்பெரிய எழுத்தில் வந்தது. இப் பத்திரிகை பிரதம ஆசிரியராக கோவை மகேசன் அவர்களமிகவும் துணிச்சலுடன் செயற்பட்டு செய்திகளை வெளியிட்டு வந்தார். அவருக்கு எதவியாகயாழ். கருகம்பனையைச் சேர்ந்த உமாபதிசிவம் என்பவர் கொழும்பு பணடாரநாயக மாவத்தையிலஇயங்கிய பத்திரிகை அலுவலகத்தில் அங்கேயே தங்கியிருந்து செய்றபட்டார். இப்போதும் நினைவிருதலைவர்களுக்கு மிகவும் உறுதுணையாக இரவுபகலாக செயற்பட்டதை நான் நிச்சயம்மறக்காமல் இந்த சந்தர்ப்பத்தில் கூறத்தான் வேண்டியுளளது.

மாவை சேனாதிராசாவுடன் சேர்த்து 42 இலட்சிய வீரர்கள் இளைஞர்கள் சிறைச்சாலைகளில் சிந்திய இரத்தம் தமிழ் உள்ளங்களை கண்ணீரில் ஆழ்த்தியது.என் தம்பி இராசரத்தினம் அன்று தனியார் நிறுவனமொன்றில் கொழும்பில் கடமையாற்றவந்தவர் மாவை அண்ணரைபார்ப்பதற்கு பொறளை வெலிக்கடைச் சிறைசசாலைக்கு ஒவ்வொரு கிழமையும் தவறாமல் சென்று வந்தார். அடுத்த தம்பி தங்கராசா இடையிடையே யாழ்ப்பாணம் இருந்து புகையிரதத்தில்கொழும்புக்குச் சென்று வெலிக்கடைக்குச்சென்று மாவை அண்ணரைப் பார்த்து வருவார நான் அரசாங்க சேவையில் உத்தியோகத்தராக திருயோணமலையில் வேலைபார்த்து வந்தபோதிலும் .மாவைஅண்ணரை வெலிக்கடைச் சிறைசசாலையிலும் பினபு கண்டி போகம்பரைச் சிறைச்சாலைசென்று பார்த்து வந்தேன். மாவை அண்ணரின் சிறைவாழ்க்கை அவருக்கு தனது இலட்சியப்பாதை நிறைவேறவேண்டும் என்றமன உறுதியுடன் காணப்பட்டாலும் எமது தாய் தந்தையர் சகோதர சகோதரிகள் குடும்பம் எல்லாமே கண்ணீரில் தான் வாழ்ந்தோம்.மாவை அண்ணர் எத்தனையோ தடவை கைதுசெய்யப்பட்டு சிததிரவதைக்குள்ளாகி சிறையில் அடைக்கப்பட்டார். அதே போல் கவிஞர் காசி ஆனந்தன்வண்ணை ஆனந்தன் போர்களின் குடும்பங்களும் சிறைச்சாலைகளின் உறவுகள் போல் அலைந்துதிரிந்த காட்சி இன்றும் என் மனதில் இன்றும் அகலவில்லை. என்ன துன்பம் வந்தபோதும்எங்கள் குடும்பம் அணணன் காட்டிய வழியில் தமிழ் இலட்சியத்துக்காக வாழ்ந்தது.சிறைமீண்ட கவிஞர் ஆனந்தன். அவர்களின் திருமணம் அமரர்.திரு.அமிர்தலிங்கம் அவர்களது தலைமையிலேயே யாழ்.வீரசிங்கம்மண்டபத்தில் நடந்தது. அங்கே பெருந்திரளான மக்கள் கூட்டமாக வந்து பலரும் தம்பதிகளை வாழ்த்தினர்..

மாவை அண்ணர் 1980 களில் இலங்கையில் சீற்றங்கொண்ட தமிழ் இளைஞர்கள் சிங்கள ஆட்சியாளருக்கெதிராக ஆயுதப் போர் செய்து தமிழர் உரிமையை வென்று எடுக்கவேண்டும் ஏன்ற நிலைக்கு சிங்கள ஆட்சியாளரின் தமிழருக்கெதிரான கொடிய நியாமற்ற நடவடிக்கைகள் ஏற்படுத்தின. தமிழ் இளைஞர்கள் வெவ்வேறு ஆயுதக் குழுக்கயை ஆரம்பித்தனர் தமிழ்அரசியல் தலைவர்களுக்கு தமிழ் அமைப்புக்களாலும் சிங்கள அரசாங்கத்தாலும் அச்சுறுத்தல்களும் நெருக்குதல்களும் ஆரம்பிக்கத் தொடங்கின. இக்கால கட்டத்தில் தமிழ் அரசியல் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் மாவை சேனாதிராசா உட்பட இலங்கையில் இருந்து தென்இந்தியா லுக்குப் பயணமானார்கள். மாவை சேனாதிராசா தனது குடும்பத்துடன் சென்னையில்

முதலில் துங்கியிருந்தார். பின்பு திருச்சியில் தங்கியிருந்தார். அக்கால கட்டத்தில் அவர் M>A.(Hon) பட்டப்படிப்பை மேற்கொண்டு சித்தியடைந்தார். இவர் இலங்கையில் இருநதபோது சட்டக்கல்லூரியில் சட்டப்படிப்பை மேற்கொள்ள விண்ணப்பித்தபோதிலும் அவர் சிறைவாசம் இருந்தபடியால் சட்டப்படிப்பை மேற்பொள்ள முடியவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. எனினும் சிறைச்சாலைகளில் இருந்தபோது உலகநாடுகளில் ஏற்பட்ட அதாவது பிரான்ஸ் புரட்சி, ரஷ்யப் புரட்சி, அமெரிக்க தொழிலாளர் போராட்டங்கள், இந்திய சுதந்திரப் போராடங்கள், லெனிஸம். மார்க்கிஸம் , ஆபிரிக்க காங்கிரஸின் நெல்சன் மண்டேலாவின் ஆயுதப் போராட்டம் போன்ற வற்றின் வரலாற்று தமிழ், ஆங்கில நூல்களை படிக்கும் சந்தர்ப்பம் மாவை அண்ணருக்கு கிடைத்தது.தமிழ் மக்களுக்காக அவர்களின் சுயநிர்ணய உரிமைகளைப் பெற்றுக்கொள்வதற்காக, தமிழர்கள்தமது பாரம்பரிய கலாச்சார பண்பாட்டுடன் தங்கள் சொந்த மண்ணில் சுதந்திரமாக பாதுகாப்பு டன் வாழ வேண்டுமென்பதற்காக தமது இளமைக்காலத்தை சிறைகளில் கழித்தார்களே சிறை மீண்டபோது தமது எதிர்கால வாழ்வுக்காக எதைக் கொண்டுவந்தார்கள் என்ற கேள்வயானதி எவ்னவடிவிலும் தமிழ் தாயகத்துக்கான போராட்டத்தில் உயிர் துறந்த, வலுவிழந்த உள்ளங்களுக்கும் பொருத்தமானதே. சிறை மீண்ட செம்மல் மாவை சேனாதிராசா தந்தை செல்வாவின் நினைவிடத்தைச் சிந்தித்தார்அவர் வாழ்வில் அவருடன் இருந்த அகிம்சை வழி என்ற கொள்கை, தமிழர் தாயகம், தேசியம்,சுயநிர்ணயம் என்ற அடிப்படைக் கோட்பாட்டின் இலட்சியத்தைப் பற்றிச் சிந்தித்தார். நாம் தந்தைசெல்வா அவர்களை அவருக்காக அமைக்கப்பட்ட நினைவிடத்தில் அவரது இறுதி நினைவிலும் கனவிலும் நின்றகலா எண்ணங்கள், தந்தை செல்வா ஆத்மா உலா வருவதாய் எண்ணி அவர்வழிதவறா மனதுடன்பணிசெயய உறுதிகொண்டஅரசியல் நோக்கராய் வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

அரசியல் பதவிகளை பெறுவதற்காக,மற்றவர்களை விமர்சித்து அரசியல் செய்யவிரும்பாத இவர் மூத்த தலைவர்களான தந்தை செல்வநாயகம் அவர்களையும்திரு.அ.அமிர்தலிங்கம் போன்றவர்களையும் மதித்து கட்சித் தொண்டனாகவே இலட்சியப்பாதையை நோக்கி தன்னலமற்றவராகவே உழைத்து வந்துள்ளார். ஏனெனில்தந்தை செல்வா தலைமையில் எத்தனையோ சாத்வீகப் போராட்டங்களை மன வலிமையுடன் சிங்கள இனவெறியர்களின் அடிஉதைபட்டு வியர்வையிலும்இரத்தம் சிந்தி தமிழர் அடிமைப்பட்டு விடக்கூடாது தமிழினம் அழிந்து விடக்கூடாதுஎமது தாயக மண் அந்நியரால் பறிக்கப்பட்டு விடக் கூடாது எமது தமிழ்மொழிஅழிந்து விடக்கூடாது என்பதற்காக தமிழ்த்தலைவர்களால் வளர்க்கப்பட்டதமிழரசுக்கட்சி. இப்புனித இலட்சியக் கொள்கையுடைய கட்சி வீணர்களின் கைகளில் சென்று விடக்கூடாது என்பதற்காக எம் மக்கள் மாவை சேனாதிராசா அவர்களைக் கட்சியின் பொதுச் செயலாளராக ஏற்றிருந்தனர். திரு.சம்பந்தன்ஐயா அவர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவராக தேர்ந்தெடுத்துக் கொண்டதன் பின்னர் தமிழரசுக் கட்சியின் தலைவராக திரு.மாவை.சோ. சேனாதிராசா அவர்கள் பொருத்தமானவரென தெரிவு செய்யப்பட்டுபொறுப்புடன் அக்கட்சியை வழிநடாத்தி வருகிறார்.கடந்த ஆயுதப் போரால் அழிவுற்ற, கொல்லப்பட்ட தமிழர் குடும்பங்கள்பற்றியும் அவர்கள் நலன்கள் பற்றியும் முக்கியமாக கவனத்திற் கொள்ள வேண்டியது எமது தமிழினத்தின் பொறுப்புள்ளவர்களின் கடமையானது என்பதை வலியுறுத்தக் கடமைப்பட்டுள்ளோம்.

வாழ்க நலமுடன் வாழ்க.





# புதுச்சேரியில் மாவை சோ. சேனாதிராசா பங்கேற்ற உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கச் சிறப்பு மாநாடு





















































தமிழ்வின்


தமிழ்வின்



## யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற 13 ஆவது உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்க மாநாடு 2017



இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர்கள்
மாவை. சோ. சேனாதிராஜா அவர்களுக்கு துணைவேந்தர்
உலகத் தமிழ்மாமணி விருது வழங்கினார்.



அரசாங்க அதிபர் திரு. நாகலிங்கம் வேதநாயகம் அவர்களுக்கு
துணைவேந்தர் உலகத் தமிழ்மாமணி விருது வழங்கினார்.



பெருங்கவிக்கோ வா.மு. சேதுராமன் அவர்களுக்கு
துணைவேந்தர் உலகத் தமிழ்மாமணி விருது வழங்கினார்.



மலேசியத் தமிழ்ச் சங்கத் தலைவர் டாக்டர். சு. சுப்ரமணியன்
அவர்களுக்கு துணைவேந்தர் உலகத் தமிழ்மாமணி விருது வழங்கினார்.



திரு. நா. இ. விக்கிரமசிங்கம் உலகத் தமிழ்ப் பண்பாடு இயக்கம்,
ஆஸ்திரேலியா அவர்களுக்கு துணைவேந்தர் உலகத் தமிழ்மாமணி
விருது வழங்கினார்.




யூனியன் கல்லூரி முதல்வர் திரு. தி. வரதன், துணைவேந்தரிடம் இருந்து
உலகத் தமிழ்மாமணி விருது பெறல்.



பேராசிரியர் C. இராமமூர்த்தி அவர்களுக்கான உலகத் தமிழ்மாமணி
விருதினைப் பெற்றுக் கொள்கிறார் செல்வி பிரதிஷ்டா



உலகத் தமிழ்மாமணி விருதினை அ. இளங்செழியன், பிரித்தானியா
அவர்களுக்கு துணைவேந்தர் வழங்கினார்.



மாநாட்டு மலரினை டான்சிறி வீரசிங்கம் வெளியிட கல்வி
இணை அமைச்சர் திரு. வி.எஸ். இராதாகிருஷ்ணன் பெறல்
மாவை. சோ. சேனாதிராஜா, M.P. முனைவர் பாஞ். இராமலிங்கம்
அருகில் உள்ளனர்



புதுவைத் தமிழ்ச் சங்கத் தலைவர் வி. முத்து அவர்களுக்கு
உலகத் தமிழ்மாமணி விருதினை துணைவேந்தர் வழங்கினார்.




மேடையில் வீற்றிருந்த சிறப்பு அழைப்பாளர்கள்



மாநாட்டுக் கலை நிகழ்வுகள்

# 13ஆவது பன்னாட்டு மாநாடு நிறைவு விழா



துணைவேந்தரிடம் இருந்து சான்றிதழ் பெறும் முனைவர் செல்வபெருமாள்



திரு. செல்வரத்தினம் அவர்களைப் பாராட்டி துணைவேந்தர் அவர்கள் பொன்னாடை அணிவித்தல்



திரு. பிரதீபன் அவர்களுக்குத் துணைவேந்தர் சான்றிதழ் வழங்குதல்



திரு. கணேசன். மலேசியா அவர்களுக்கு துணைவேந்தர் சான்றிதழ் வழங்



டாக்டர். சு. சுப்ரமணியன், மலேசியா அவர்களுக்கு துணைவேந்தர் சான்றிதழ் வழங்குதல்



முனைவர் தி. இராமநாயகம், மலேசியா அவர்களுக்கு துணைவேந்தர் சான்றிதழ் வழங்குதல்



டத்தின். தாமரைச்செல்வி அவர்களுக்கு துணைவேந்தர்
சான்றிதழ் வழங்குதல்




பெருங்கவிக்கோ. வா.மு. சேதுராமன் தலைமையில் கவியரங்கம்



புதுச்சேரி நா. கோதண்டபாணி துணைவேந்தரிடம் சான்றிதழ் பெறுதல்



புதுவை சித்தன் ஜெயமூர்த்தி துணைவேந்தரிடம் சான்றிதழ் பெறுதல்




கலை நிகழ்வுகள்



மாவை. சோ. சேனாதிராசா, மலேசியா, இந்தியா பேராளர்களை
தமது இல்லத்தருகில் இருந்து வழியனுப்பி வைத்தல் (7-8-2017)

மலர் - 4

# கவிதைகள்


X
9 X

முத்துவிழாக்காணும் ஈழ அண்ணல்

## மாவை. சோ. சேனாதிராசா வாழி நீடூழி!



**பெருங்கவிக்கோ வா.மு. சேதுராமன்**

உலக அமைப்பாளர்

பன்னாட்டுத் தமிழுறவு மன்றம்

சென்னை.

அலைகடல் நடுவோர் அணிஎழில் தீவே
வலைகடல் முரசம் வழங்கும் ஈழமே!
ஆதி மனிதன் அவனியில் தோன்றவும்
ஆதிமொழியை அகிலம் ஏந்தவும்
ஆதி ஆதிஅம் மொழிதமிழ் தமிழினம்
ஆதிப் பேற்றுடை அறம்வளர் ஈழமே
காலவெள் ளத்தினில் களம்பல கண்டே
சாலவும் மேல்கீழ் தான்புரண் டெழுந்தே
இனவெறி கொடுமை ஏற்றே தமிழினம்
புனல்புயல் வெள்ளம் போம்ஒரு நாவாய்
தனைக்கரை ஏற்றி தகுதமி ழீழம்
தனைப்பெற களம்காண் காவல் மறவர்கள்
சிந்திய குருதியும் செத்ததில் மிதந்த
செந்தமிழ் ஈகியர் செயலுரம் வெற்றிகாண்
வழிசமைத் திடும்பெரும் மலைபோல் சுமைகளை
சுழிநிலை கடந்தே சுடவிடு தலையினை
வெற்றிக் கலங்கரை விளக்கம் தாங்கிடும்
சுற்று பகைமுடி தொகைதகை அறிவருள்
உன்னதப் பெருமகன் உயர்சேனா திபதியே!
தன்னலம் இன்றி தான்வாழ் பெருந்தகை!
நிலம்போல் பொறுமை! நிலவொளித் தாய்மை!
உலகமுவப்ப ஒளிதரு கதிர்போல்
எதிர்கா லம்காண் இதயம் ஏற்றோன்
ஆளுமை அரிமா! அறத்தின் ஆணிவேர்!
பண்பினில் தென்றல்! பாதகம் தன்னையும்
எண்ணிப் பகைமை ஏந்தியே திருத்துவன்!
ஈழஅண்ணல் எம்மா வைசோ

தோழமை சேனாதி சுடர்புகழ் இராசா
கடந்தநாள் மறமும் வருநாள் திறமும்
திடத்தமிழ் ஈழம் திசைஎதிர் பார்க்கும்
தடந்தோள் செயல்மை தனக்கொரு தமிழ்வேள்
கடமை புரிஎதிர் காலக் கணக்கன்!
கணக்கின் விடையோ மணக்கும் முறைஒளி
பிணக்கிலாத் தெளிவாய் பேறுதமிழ் ஈழம்
பெறவே முனைந்தெழு பெருமகன்! நெஞ்சகம்
துறவிபோல் பணிபுரி தூயவன் தமிழ்க்கோன்!
தனித்தமிழ் ஈழம் தகுகா லம்காண்
மனிதநே யத்தின் மன்னுநல் புகழோன்
சேனாதி இராசா மானத் தெழுமகன்
முத்துவிழாக் காண் முன்னவன்
எத்திக்கும் வாழிய இனிது நீடூழியே!

# கைகுவிக்கும் என் கவிதை!

பாட்டி கொடுத்த கதைகளைவிட
காட்டிக்கொடுத்த கதைகளே
அதிகமாகும் நாட்கள் இவை!

ஒரே ஒரு எட்டப்பன்தான்!
ஒருகாலத் தமிழரில்?
இன்று ஒவ்வொரு எட்டப்பனும்
எட்டு (8) அப்பன் ஆனதால்
துட்டப்பன் (துட்டு + அப்பன்) ஆகத்
துஷ்டப்பன் ஆகிகின்றனர்!

தமிழரில்தான் எத்தனை எத்தனை
மார்க்கண்டேயர்கள்?
என்றும்பதினாறாய் வாழ்வதிலல்ல?
என்றும் பதினாறு கட்சி மாறுவதில்!

இப்படி ஆற்றுப் பெருக்கற்று
அடிசூடும் கோடை நாளில்
ஊற்றுப் பெருக்கால் உவகையூட்ட
எப்படி முடிகிறது
என் ஈழச் சொந்தங்களால்?

அடையாளத்தை
அடமானம் வைத்துவிட்ட
தமிழ்ச் சாதியில்
ஈழ ஜோதிமட்டும்
எப்படிப் பிரகாசிக்க முடிகிறது?

ஈழத் தமிழரை வழிநடத்தும்
இயக்கங்களின் சாதனை அது!

அப்படிச் சாதிக்கும்
தலைவரில் ஒருவர்தான்
நாடாளுமன்ற உறுப்பினர்
மாவை. சோ.சேனாதிராஜா!

அடக்குமுறை அரசின்
அகோரப் பசிக்கு
உணவாக்கப்பட்ட போராட்டங்களால்
உயர்கல்வி வாய்ப்பை இழந்தபோதும்

மானமிகு தமிழனாய்ப்பிறந்து
மானமிகு மாணவனாய் வாழ்ந்ததால்
வழங்கப்பெற்ற விருதெனக்கருதி
விரும்பும் மனப்பக்குவத்திற்கு
மற்றொரு பெயர்தான்
மாவை சோ. சேனாதிராஜா!

1972 - 1983 இடைப்பட்ட
பதினோரு ஆண்டுகளில்
பதினோருமுறை
கைது செய்யப்பட்டு
எட்டுச்சிறைச் சாலைகளின்
பூட்டிய இரும்புக் கூண்டில்
இந்தச் சிறுத்தை
சிறைவாசம் செய்தது
மொத்த ஏழு ஆண்டுகள்!

எங்கிருந்து வந்தது
இந்த வல்லமை?
தந்தை செல்வா தந்த
"வதையும் தாங்கும்" இதயத்தின்
வலிமை அது
ஐயா அ அமிர்தலிங்கம் கற்பித்த
அஞ்சா வழிக் கல்வி!

இப்படி வாழும்
இந்த 75 வயது இளைஞர்
பொதுவாழ்விற்கு வயது
அறுபது ஆண்டுகள் என்றால்
மாவை சோ. சேனாதிராஜாவை
சேவை சோ சேனாதிராஜா
என்றும் சிறப்பிக்கலாம்!

தமிழனாய்ப் பிறக்க ஆசைப்பட்ட
அண்ணல் காந்தியார்.
தமிழரின் இந்தியாவைத்
தரிசிக்க ஆசைப்பட்ட கொலம்பஸ்,
அப்துல்கலாம் மாதமான
அக்டோபரில் பிறந்தவர்!

அதே அக்டோபரில் பிறந்த
என் ஈழத் சொந்தம்
மாவை சோ. சேனதிராஜா
பவழவிழா மேடையில்வாழ்த்தும்
வாய்ப்பு வசதி
எனக்கு இல்லாவிட்டாலும்
கனிவோடு வாழ்த்தும்
கைகுவிக்கும் என் கவிதை!



தோழமையுடன்
முகவை முத்து
பேசி எண்:
9600496715

## பவளவிழாக் காணும் பெருமைக்குரிய மாவை சோ. சேனாதிராசா பாராட்டு வாழ்த்துப்பாடல்

அன்னைத்தமிழ்
பெற்றெடுத்தவர்களில்
அய்யன் வள்ளுவனுக்கே
முதலிடம் முதன்மையிடம்!

அன்று தொடர்ந்து
இன்று வரையில்
அவர் வழி வந்தார்
பல்லாயிரங்களில்
பண்பட்டுத் தமிழர்
இவர்களில் ஒருவர்தான்
இலங்கையைச் சேர்ந்த
ஈழத்தமிழனாம் மேதகு
மாவை. சோ. சேனாதிராசா!

மானமிகு மாந்தராம்
அண்ணல் அம்பேத்கர்
சட்டக்கல்லூரியின்
நிறுவனராம் மேதகு
இராமமூர்த்தியாரின்
கால் நூற்றாண்டுத் தோழர்
சேனாதிராசா தமிழ்
மன்னராக வாழ்கவே!

அண்ணல் சிறப்பாய்
அம்பேத்கர் - காந்தியார்
இவர்களுடன் இணைகிறார்
ஈழ அண்ணலார் மாவைசோ
தமிழராக வாழ்க!
தமிழாக வாழ்க!

ஏழுபத்தோடு ஐந்திணைந்த
எழுச்சிமிகு அகவையுடன்
மகிச்சிகர பவளவிழாக்
காணும் இளம் கன்றாம்
சேனாதிராசா வாழ்கவே!

இலங்கைத் தமிழர்
இந்தியத்தமிழர்
இவர்களோடிணைந்த
அனைத்துலகத் தமிழர்
அனைவரும் என்றும்
நன்றாய் வாழ்ந்திட
நாளும் உழைத்திடும்
நற்தமிழர் நமது இதய
சேனாதிராசா
நூறாண்டு கடந்தும்
வாழ்க! வாழ்கவே!

தமிழன்னை வாழ்த்துகிறாள்
தமிழர்கள் வாழ்த்துகின்றனர்
இவர்களோடு நாமிணைந்து
மூவேந்தராய் - முழுநிலவாய்
வாழ்வாங்கு வாழ்ந்திட - இதய
வாழ்த்துகிறோம்! வாழ்க!

அன்புடன்
**பேராசிரியர் சி. இராமமூர்த்தி**
நிறுவனர் - முதுல்வர்
டாக்டர் அம்பேத்கர் சட்டக்கல்லூரி
பெங்களூர்

# 75 வது பிறந்த தின வாழ்த்து மடல்



மாவை சேனாதிராசா அண்ணனுக்கு தம்பி எழுதும் வாழ்த்துக்கவி
செந்தமிழ் மறவர்குலத்தோர் மாவை மண்ணிலே கச்சிதமாய்
வந்துதித்தவரே ! தந்தைக்கு மூத்த மகனே - பண்பினால் எம் அன்னை
பைந்தமிழ்த் தாயாக தூய தமிழ்த் தலைவர்க்கெல்லாம் மகிழ்வோடு
அந்த நாள் விருந்தோம்பி வரவேற்ற பெருமை கொள்வாயே !
வெந்துயர் தமிழர்க்குத் தந்த சிங்களப்படையினர் கொடுமைகளால்
சிந்திய குருதிகண்டீர்- வெகுண்டெழுந்தே வீரத் தமிழர்படைவேண்டுமென்றே
சொந்தங்கள் பலவிருந்தும் தன்மானத் தமிழரின் அடிமை விலங்கொடிக்க
குந்தியிருக்க நேரம் காணாய் இரவு பகல் வேறு காணா நெஞ்சம் கொண்டீரே !
தேரோடும் கனவுகளை தெருவோடு விட்டு தமிழரின் தாயக உரிமை கேட்டுப்
போராட வந்த தலைவன் அல்லவா நீங்களண்ணா - ஒரு சாதனைப் பூவின்
பாரினில் ஓர் சரித்திர வசந்தமே - வாழ்க்கையை திகைக்க வைக்கும்
பேரலை இடியாய் வந்த சிங்களத்துக்கு சிம்மசொப்பனமாய் வந்த தலைவா!
இங்கே வீணையாகக் கிடந்த தமிழனை வில்லுடன் அம்பாக மாற்றியது
தங்கள் வீரத்தின் பேச்சல்லவா □ கண்கொள்ளா எம் மண்ணெல்லாம்
மங்காத தமிழனாய் வீரம் துள்ளும் - மாதர் கற்பு சொல்லும் விண்ணிலே
தங்காமல் ஏறுகின்ற கொடிநிலவோ பகைமையை வெல்லும் அர்த்தங்களே!
முழக்கமிடும் உங்கள் பேச்சுக்கள் தமிழ் உயிர் மூச்சாகி பகைவரை வெல்லும் என
ஒழுக்கமொடு கேள் இளைஞர்கள் தம் நரம்புகளைத் தொட்டுப் பார்த்தது உங்கள் பேச்சு
வழுக்கி வீழா கட்டுறுதி தமிழர் சேனைப்படை வேண்டுமென்றே இடித்துரைத்த புரட்சி
அழுத்தமான மேடைப்பேச்சால் ஆயுதப்போருக்கு வித்திட்ட தளபதி அல்லவா !
பேசினால் பூங்காற்று வீசினால் புயல் காற்று போன்றதே உங்கள் மூச்சு
மாசில்லா அவர் புகழ் தன்மானத்தில் உயர்ந்தது உழைப்பால் நீங்கள் போதிமரம்
ஆசியாவின் சரியாத இமயமலை தமிழுக்கு உயர்ந்த புதிய கலை
பாசம் அறா வயதேறிப் போனாலும் வாலிபத்தில் சிங்களத்தை தமிழால் தாக்கினீரே !
வீரமொடு உன்தம்பி படையினர்க்கு எதிர் படையெடுத்து விடைகொடுத்தான் அறிவாரே
ஆரவாரமின்றியே அவர் நம்பி படை யாவும் பல தங்கத்திறனுள்; ஒருவராம்
சீராய் நட்பின், நம்பித் திறன் தமிழ் முறை பாடி நலமே நிறை பாடியே
பேரால் ஊர்முதற்கொண்டாய் என் அண்ணனுக்கு தென்புக்கு இது குறைவே !
கறைபடியாத கரங்கள் கொண்டவர்; தந்தை செல்வாவின் தாரக மந்திரத்தை
முறையாகப் பறைசாற்றி தமிழரசை எம் தாயகத்தில் நிலைநாட்ட உறுதியாய் நின்று
சிறை பல கண்டு மீண்ட செம்மலே - அற வழியே மனம் தளராது களமாடிய வீரரே !
மறையாத புகழொடு பல்லாண்டு வாழ்கவே !
செம்மொழியாம் தமிழ்மொழியே ! வாழ்க தமிழ்மொழி - வளர்க தமிழினம் !.
உயிர் தமிழுக்கு உடல் மண்ணுக்கு ! தங்களை நூறு ஆண்டுகள் வாழ்கவென
வாழ்த்தி நலமுடன் விடைபெறும்

**உங்கள் தம்பி தங்கராசா..**

## பவளவிழா வாழ்த்து

சேனைக்கு அதிபதி என்று - உமக்கு
செல்லமாய்ப் பெயரிட்டார் பெற்றோர்
இட்ட பெயருக்கு இலக்கணமாய்த்
திகழ்கின்றீர் நீவீர் வாழ்க!

நூற்றாண்டு பலவாய் இவ்வுகலம்
போர்கள் எத்தனையோ கண்டதுண்டு - அதில்
ஈழத்துப்போர் ஒன்றே இன விடுதலைப்போர்!

நீயும் ஒரு போராளி! ஆம்!
ஆயுதம் ஏந்தாத அறிவுப் போராளி! - உன்
எழுத்தும் பேச்சும் ஏவுகணை வேகம்!

அறிவுசார் சேனைக்குத்தளபதி - நீ!
அன்புக்குத் தலை-வணங்கும் பண்பாளன்
நேச-நாடுகளின் நேசன்- நீ!
தமிழ்தேச விடுதலைக்குத் தலைவன் நீ!

வருங்காலத் தலைமுறையின் வழிகாட்டி - நீயோ!
அறப்போர் தொடுக்கின்ற அறிவாளி! இன்று
பவளவிழா கானும்-நீவீர் பல்லாண்டு
பல்லாண்டு பல்லாயிரம் ஆண்டு
நலமோடும் வளமோடும் வாழ்கவென
வாழ்த்துகிறேன் நீவீர் வாழ்க!

இவன்

**கவிஞர் வயி.பி மதியழகன்**

இலந்தமங்கலம், சிவகங்கை, மாவட்டம், தமிழ்நாடு

# ஈழ அண்ணல் மாவை. சோ. சேனாதிராஜா, பாராளுமன்ற உறுப்பினர்
# பவள விழா நிழற்படங்கள்




இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர்கள், கல்வி இணை அமைச்சர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர்



இலங்கை நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் திரு. இரா. சம்பந்தன் அவர்களும் இந்திய துணைத் தூதுவர் திரு. A. நடராஜன் அவர்களும் திரு. மாவை. சோ. சேனாதிராஜா அவர்களுக்குச் சிறப்பு செய்தனர்.



மாவை. சோ. சேனாதிராஜா பவள விழாவினையொட்டி மலரினை கல்வி இணை அமைச்சர் வெளியிட்டார்.



இந்தியப் பேராளர்களின் சார்பில் சிறப்பு செய்தல்



இலங்கைப் பேராளர்கள் திரு. மாவை. சோ. சேனாதிராஜா அவர்களுக்குச் சிறப்பு செய்தல்



நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் வாழ்த்துரை



நாடாளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரன் வாழ்த்துரை



வடமாகாணசபை எதிர்கட்சித் தலைவர் தவராசா வாழ்த்துரை



மாவை. சே. சேனாதிராசா ஏற்புரை



பங்கேற்ற சிறப்பு அழைப்பாளர்கள்




புதுச்சேரி பேராளர்கள் திரு. மாவை. சோ. சேனாதிராசா
அவர்களைச் சிறப்புச் செய்தல்




சிறப்பு அழைப்பாளர்களுக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் இரத்தின விக்னேஸ்வரன் சிறப்பு செய்தல்



துணைவேந்தர் திரு. மாவை. சோ. சேனாதிராஜா அவர்களுக்கு சிறப்பு செய்தல்



இலங்கை கல்வித் துணை அமைச்சர் கௌரவ இராதாகிருஷ்ணன் அவர்கள் சிறப்பு செய்தல்



சமயத் தலைவர்கள் திரு. மாவை. சோ. சேனாதிராஜா அவர்களுக்கு சிறப்பு செய்தல்



நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் திரு. இரா. சம்பந்தன் அவர்கள் சிறப்பு செய்தல்



குணவதி மைந்தன் எழுதி இயக்கிய "திருவள்ளுவர்" திரைப்படம் வெளியிடல். டாக்டர் வி. முத்து முதல் பிரதி பெறல். இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர் திரு. சித்தார்த்தன் அவர்கள் "திருவள்ளுவர்" நூலைப் பெற்றுக் கொள்ளுதல்



13ஆவது பன்னாட்டு மாநாட்டுத் தலைவர்
முனைவர் பாஞ். இராமலிங்கம் வரவேற்புரை



முனைவர் வி. முத்து வாழ்த்துரை



வடமாகாண சபைத் அவைத் தலைவர் கௌரவ சீ.வி.கே. சிவஞானம்
வாழ்த்துரை



இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி ஸ்ரீகந்தராஜா வாழ்த்துரை



இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர் கௌரவ ஸ்ரீநேசன் வாழ்த்துரை



நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் அவர்களுக்கு மாநாட்டு
நினைவுப் பரிசு வழங்குதல்





மாவை. சோ. சேனாதிராஜா குடும்பத்தினர்
















மாவை. சோ. தங்கராஜா குடும்பத்தினருடன் மாவை. சோ. சேனாதிராஜா குடும்பத்தினர்








அண்ணல் அ. அமிர்தலிங்கம் - மங்கையர்க்கரசி முன்னிலையில் சிவக்குமரன் - செல்வராணி திருமணம்



புதுவை முதலமைச்சர் வே. நாராயணசாமி அவர்கள் மாவை. சோ. சேனாதிராஜா அவர்களின்
பவழவிழா வாழ்த்து (2017)










உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கச்சிறப்பு மாநாட்டினைப் புதுச்சேரியில் நடத்த திட்டமிட்ட தருணம் (2016)





CPA Sri Lanka Branch
CPA COMMONWEALTH PARLIAMENTARY ASSOCIATION
3rd CPA Asia Regional Conference – 2011
Colombo, Sri Lanka
10th-16th February 2011



மலர் - 5

மாவை. சோ. சேனாதிராஜா

பவழ விழா


நாடாளுமன்றப்
பொதுத்தேர்தல் 2015
யாழ். மாவட்டம்
இலங்கைத் தமிழரசுக் கட்சி
(தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு)
9
முதன்மை வேட்பாளர்
மாவை சோ.சேனாதிராசா
(தலைவர், இலங்கைத் தமிழரசுக் கட்சி)
இலங்கைத் தமிழரசுக் கட்சி
1 2 3 4 5 6 7 8 9 10



## "ஈழ அண்ணல்" மாவை. சோ. சேனாதிராஜா அவர்களின்

# பவள விழா – நிகழ்ச்சி நிரல்

நாள் : 06-08-2017, ஞாயிற்றுக்கிழமை நேரம் : காலை 11.00 மணி

இடம் : **ரில்கோ ஹோட்டல் அரங்கம்,** யாழ்ப்பாணம், இலங்கை.

**தமிழ் வாழ்த்து**

வரவேற்புரை : முனைவர் **பாஞ். இராமலிங்கம்,** புதுச்சேரி.

தலைமை : கௌரவ **வி. எஸ். இராதாகிருஷ்ணன்,** பா. உ.
கல்வி ராஜாங்க அமைச்சர், இலங்கை.

முன்னிலை : கௌரவ **இரா. சம்பந்தன்,** பா. உ.
நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர், இலங்கை.
கௌரவ **சி.வி.கே. சிவஞானம்,**
அவைத்தலைவர், வடமாகாண சபை, யாழ்ப்பாணம்.

பவழவிழா மலர் வெளியீடு : பேராசிரியர் **ரத்னம் விக்கினேஸ்வரன்**
துணைவேந்தர், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், இலங்கை.

பாராட்டுரை : கௌரவ **ஸ்ரீநேசன்,** பா. உ.
கௌரவ **யோகேஸ்வரன்,** பா. உ.

வாழ்த்துரை : திரு. **வி.சு. துரைராஜா,** அவைத் தலைவர், உ.த.ப.இ. கனடா.
டத்தோ டாக்டர் **சு. சுப்ரமணியன்,** தலைவர், தமிழ்ச்சங்கம், மலேசியா.
டாக்டர் **வி. முத்து,** தலைவர், தமிழ்ச்சங்கம், புதுச்சேரி.
திரு. **சிவா கணபதி பிள்ளை,** தலைவர், உ.த.ப.இ. அமெரிக்க ஒன்றியம், கனடா.
திரு. **நா. இ. விக்கிரமசிங்கம்,** தலைவர், உ.த.ப.இ. ஆஸ்திரேலியா.
திரு. **அ. இளஞ்செழியன்,** தலைவர், உ.த.ப.இ. பிரித்தானியா.
பாவலர் **கதிர். முத்தையன்,** தலைவர், உலகத் தமிழ் மன்றம், கடலூர்.
திரு. **தே. செந்தில் வேலவர்,** உ.த.ப.இ. கொழும்பு.
திரு. **இ. இராஜ சூரியர்,** தலைவர், உ.த.ப.இ. ஜெர்மனி.
திரு. மாவை. **சோ. தங்கராஜா,** ஆலோசகர், உ.த.ப.இ. ஜெர்மனி.

ஏற்புரை : கௌரவ. **சோ. சேனாதிராஜா,** பா. உ.
பாராளுமன்ற உறுப்பினர், இலங்கை.

நன்றி நவிலல் : திரு. **துரை. கணேசலிங்கம்**
அகிலச் செயலர், உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம், ஜெர்மனி.

*அனைவரும் வருக, விழாவினைச் சிறப்பித்துத் தருக.*

அன்புடன்

**விழாக் குழுவினர், உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம், கனடா.**

# மாவை. சோ. சேனாதிராஜா பவழ விழா

*முனைவர் பாஞ். இராமலிங்கம்*

இலங்கை நாடாளுமன்ற உறப்பினரும் இலங்கைத் தமிழரசுக் கட்சித் தலைவருமான மாவை. சோ. சேனாதிராஜா இளமைப் பருவம் முதல் தமிழின முன்னேற்றத்திற்காக தம்மை அர்ப்பணித்துக் கொண்டவர். தந்தை செல்வா, அண்ணல் அமிர்தலிங்கம் வழித்தடத்தில் தனிமுத்திரை படைத்தத் தலைவர் சேனாதிராஜா எனில் மிகையன்று.

தமிழின முன்னேற்றத்திற்காக அவர் ஆற்றிவரும் சாதூர்யமான செயல்பாடுகள் அனைத்துத் தரப்பினராலும் வரவேற்கப்படுகிறது. காலச் சூழலுக்கேற்ப அரசியல் பண்பாடு போற்றி தமிழர் நலனே தன்னலன் என பணி ஆற்றி வருகின்றார்.

தமிழ் கூறும் நல்லுலகம் போற்றும் வகையில் பல்வேறு நாடுகளுக்குப் பயணம் மேற்கொண்டு தமிழர்களை ஒன்றிணைக்கும் பாலமாக செயல்பட்டவர். தம்முடையப் பயணங்களில் உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் மூலம் ஆற்றிய பணிகள் குறிப்பிடத் தக்கவை. தமிழர்களின் கலை, பண்பாட்டை முன்னிறுத்தி அவர் மேற்கொண்ட பயணங்கள் எண்ணிலடங்காதவை. இலங்கை, இந்தியா, மலேசியா, பிரான்சு, இங்கிலாந்து, ஜெர்மனி, சுவிட்சர்லாந்து, கனடா, அமெரிக்கா, தென்னாப்பிரிக்கா என பல நாடுகளுக்குச் சென்று உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் செயல்பாடுகளை ஊக்கப்படுத்தியவர்.

எனவேதான் உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் மாவை. சோ. சேனாதிராஜா அவர்களின் பவழவிழா உலகெங்கும் நடத்தி அவர்தம் பணிகளுக்குப் பாராட்டு தெரிவிக்க முயன்றது. அதன் தொடக்கமாக 2017 யாழ்ப்பாணத்தில் பவழ விழா நடத்தப்பட்டது. இலங்கை நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன், கல்வி இணை அமைச்சர் வி.எஸ். இராதாகிருஷ்ணன், இந்திய துணைத் தூதுவர் நடராஜன், மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், கல்வியாளர்கள், அறிஞர் பெருமக்கள் பங்கேற்றுச் சிறப்பு செய்தனர்.

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் 13ஆவது பன்னாட்டு மாநாடு 2017 ஆகஸ்டு 4, 5 நாட்களில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டது. பல்கலைக் கழகத் துணை வேந்தர் விக்னேஸ்வரன் தலைமையில் பேராசிரியர்கள் பலரும் முனைப்போடு சிறப்பான எற்பாடுகளைச் செய்திருந்தனர்.

உலகின் பல நாடுகளில் இருந்தும் பேராளர்கள் பங்கேற்றனர். புதுவைப் பல்கலைக் கழகப் பேராசிரியர் பாஞ். இராமலிங்கம் மாநாட்டுக் குழுத் தலைவராக இருந்து மாநாட்டு ஆய்வரங்கம், சிறப்பரங்கம் ன அனைத்து அமர்வுகளையும் செம்மையாக நடத்தி கொடுத்தார். எந்த மண்ணில் உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் 1974இல் தொடங்கப் பெற்றதோ அதே மண்ணில் 13ஆவது மாநாடு நடைபெற்றதை எண்ணித் தமிழ் ஆர்வலர்கள் புலகாங்கிதம் அடைந்தனர்.

இத்தகைய சிறப்புகளுக்கெல்லாம் சிகரம் வைத்தார் போல் அனைத்து உதவிகளையும் செய்தளித்த பெருந் தகையாளர் மாவை. சோ. சோனதிராஜா அவர்கள்.

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் சார்பில் யாழ்ப்பாணத்தில் தொடங்கி வைக்கப்பட்ட பவழ விழா 2019 ஜீன் மாதத்தில் புதுச்சேரியில் சிறப்பு விழாவாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தொடக்க விழாவில் வெளியிடப்பெற்ற மலருடன் மேலும் வாழ்த்துக்கள், கட்டுரைகள், பவழவிழா நிகழ்வுகள் உள்ளடக்கி இம்மலர் வெளிவருகிறது. யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற பவழ விழாவில் நிகழ்த்தப் பெற்ற சிறப்புரைகள் இங்கே இணைக்கப்பட்டுள்ளது.

மாவை. சோ. சேனாதிராஜா அவர்களின் இடையறா பணிகளுக்கு இம்மலர் ஒரு படிக்கல்லாக அமையட்டும்.

# தமிழாராய்ச்சி மாநாட்டு துயரத்தின் பின் யாழில் இடம்பெறும் தமிழ் மாநாடு

பெருமையளிப்பதாக இராதாகிருஸ்ணன் பெருமிதம்

"யாழ்ப்பாண மண்ணில் 1974 இல் இடம் பெற்ற தமிழாராய்ச்சி மாநாட்டு துயரத்தின் 43 வருடங்களின் பின்னர் அதே யாழ் மண்ணில் யாழ். பல்கலைக்கழத்தில் உலகத் தமிழ் பண்பாட்டு மாநாடு இடம்பெறுவதனையிட்டு மகிழ்ச்சி அடைகின்றேன்."

உலகத்தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் 13ஆவது மாநாட்டு செயல்பாட்டு தலைவரும் கல்வி இராஜாங்க அமைச்சருமான வேலுச்சாமி இராதாகிருஸ்ணன் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலை அரங்கில் உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் 13ஆவது மாநாடு நேற்று ஆரம்பமானது. ஈழ நல்லூர் பாலமுருகனின் மங்கள இசை மற்றும் பின்லாந்து நாட்டில் இருந்து வருகை தந்த திருமதி கஸ்தூரி மாசிலனின் பரதநாட்டியம் இடம் பெற்றது. வரவேற்புரையை உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் ஜேர்மன் வாழ் தலைவர் இ. இராஜசூரியர் வழங்கினார். 13ஆவது மாநாட்டு பன்னாட்டு தலைவர் முனைவர் பாஞ். இராமலிங்கம் தலைமையுரை வழங்கினார்.

இந்நிகழ்வில் கலந்து கொண்ட கல்வி இராஜாங்க அமைச்சர் வே. இராதாகிருஸ்ணன் தொடர்ந்து பேசுகையில். மூன்று வருடங்களுக்கு ஒருமுறை இடம் பெறுகின்ற மாநாடு இறுதியாக 2014 இல் 12 ஆவது மாநாடாக ஜேர்மனியில் இடம்பெற்றது. அன்றைய ஜேர்மனி மாநாட்டில் அண்ணன் மாவை சோ. சேனாதிராஜா கலந்து கொண்டிருந்தார்.

அன்றைய மாநாட்டில் நாம் எடுத்துக் கொண்ட முக்கிய கருப்பொருளாக அடுத்த உலகத் தமிழ் பண்பாட்டு இயக்க மாநாடு யாழ்ப்பாணத்தில் இடம்பெறவேண்டும். அங்கு தற்போது அமைதி, சமாதானம் நிலவுகின்றது. எனவே, யாழ்ப்பாணத்தில் இடம் பெறவேண்டும் என்ற கருப்பொருள் தமிழை மையமாக வைத்து தமிழுக்கு முதன்மை கொடுக்கின்ற 66 கட்டுரைகள் ஆராயப்படவுள்ளன.

7 கோடி தமிழர் இருக்கின்ற இந்தியாவில் தமிழுக்கு ஆய்வு இடம்பெறாத சூழலில் தமிழை மையக்கருப்பொருளாக வைத்து இலங்கையின் யாழிலில் தமிழுக்கு முக்கியத்துவம் கொடுப்பதை தமிழர் பண்பாடு மாறக்கூடாது என்பதை இம்மாநாடு எடுத்தியம்பும். இம்மாநாட்டுக்காக வெளிநாடுகளில் இருந்து 168 பேர் வருகைதந்து சிறப்பித்துக் கொண்டிருக்கின்றனர். இன்று வெளிநாடுகளில் புலம்பெயர் தமிழ் வளர்கின்ற நாடுகளில் உலக தமிழ் பண்பாடு போற்றப்படுகின்ற அதேநேரத்தில் இலங்கையில் தமிழர் பண்பாடு வளர்கின்றதா அல்லது அழிகின்றதா என்ற கேள்விக்குறியும் தோன்றியுள்ளது என்றார்.

"உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் கனடாவாழ் தலைமையகத் தலைவர் வி.சு. துரைராசர் பேசுகையில். உலகிலேயே அங்கீகரிக்கப்பட்ட செம்மொழிகள் ஐந்தில் ஐந்தாவது இடத்தில் தமிழ்மொழி போற்றப்படுகின்றது. அந்தளவுக்கு தமிழ்மொழியின் அற்புதம் அதன் கரு மேல்நிலை கொண்டுள்ளது."

ஆனால், எதிர்காலத்தில் விரைவில் அழியப்போகும் மொழிகளின் பட்டியலில் தமிழ் மொழி 25 ஆவது இடத்தில் இருக்கின்றது என்பதனை எவரும் மறந்துவிடலாகாது. இன்றைய தருணத்தில் எமது தாய்மொழியாம் தமிழ்மொழி பற்றி இன்றைய பன்னாட்டு உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்க நாளில் கூறவேண்டிய முக்கிய செய்தியாக தமிழ் மக்களுக்கு கூறவிழைகின்றேன் என்றார்.

இந்நிகழ்விற்கான ஆசியுரைகளை ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள், கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் மௌலவிபை-ர், கலாநிதி சந்திரகுமார் ஆகியோர் வழங்கினர். இணைப்பாளர் உரையை பேராசிரியர் சுபதினி ரமேஷ் வழங்கினார், முதன்மை விருந்தினராக கலந்து கொண்ட துணைவேந்தர் பேராசிரியர் ரத்தினம் விக்னேஸ்வரன் சிறப்புரையாற்றினார், சிறப்பு விருந்தினர் வரிசையில் வடமாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே, நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா ஆகியோர் உரையாற்றினர்.

13 ஆவது உலகத்தமிழ் பண்பாட்டு இயக்க நிகழ்வை முன்னிட்டு 25 பேருக்கு உலகத்தமிழ் மணி விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

வறுமைக்கோட்டிற்கு உட்பட்ட இளம் தாய்மார்களுக்கு பணப்பரிசில்கள் வழங்கப்பட்டன. இந்நிகழ்வுக்கான நிதிப்பங்களிப்பினை முழுமையாக கனடா வாழ் மதன் சண்முகராஜா வழங்கி உதவினார். வாழ்த்துரையை சென்னை தமிழ்ப்பணி இதழ் ஆசிரியர் தமிழ்மாமணி வா.மு.சே. திருவள்ளவர் வழங்கினார்.

நன்றியுரையை யாழ். பல்கலைக்கழக பேராசிரயர் தி. வேல்நம்பி வழங்கினார். அனைத்து இணைப்பையும் தே. செந்தில் வேலவர் ஒருங்கிணைத்தார்.

நன்றி: ஞாயிறு யாழ். தினக்குரல் 06 ஆகஸ்ட் 2017 ப. 4

## இப்போது கிடைக்காவிட்டால் எப்போதும் தமிழருக்கு விடிவில்லை

கல்வி இராஜாங்க அமைச்சர் சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்) இந்தியாவில் தமிழுக்கு வழங்கப்படும் முக்கியத்துவத்தைவிட இலங்கையில் தமிழுக்கும் தமிழர்களுக்கும் முக்கியத்துவம் வழங்குகின்றனர் எனத் தெரிவித்துள்ள கல்வி இராஜாங்க அமைச்சர் வி. இராதாகிருஸ்ணன் இலங்கையில் தமிழ் மக்களுக்கு இருக்கக்கூடிய பிரச்சினைகளை தீர்த்து அவர்களுக்கு விடிவுகாலத்தை பெற்றுக்கொடுக்கக் கூடிய ஓர் காலம் தற்போது ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு கனிந்துள்ள இக் காலத்தை தமிழர்கள் பயன்படுத்தி கொண்டு தமது விடிவு காலத்தை ஏற்படுத்திகொள்ள வேண்டும். இப்போது இருக்கும் காலத்தை விட்டால் வேறெந்த காலத்திலும் தமிழர்களுக்கு விடிவினை பெற்றுக் கொடுக்க முடியாது எனவும் தெரிவித்துள்ளார்.

உலக தமிழர் பண்பாட்டு இயக்கத்தின் 13 ஆவது சர்வதேச மாநாடு நேற்றைய தினம் யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் கைலாசபதி கலையரங்கில் ஆரம்பமானது. இதில் சிறப்புத் தலைவராகக் கலந்து கொண்டிருந்த இராஜாங்க அமைச்சர் இராதா கிருஷ்ணன் மேலும் உரையாற்றகையில்,

ஒரு காலத்தில் யாழ்ப்பாணத்து மக்களையும் சிங்கள மக்களையும் இணைக்க முடியாத நிலை காணப்பட்டது. ஆனால் அந்த நிலைமை மாற்றமடைந்துள்ளது. அந்த

வகையில் நாம் ஒன்றிணைந்து செயற்பட வேண்டிய கட்டாயம் இருக்கின்றது. எமது பண்பாடுகளை, கலை, கலாசாரங்களை மறக்காது ஏனைய சமூகத்தோடு இணைந்து செயற்படக்கூடிய சம்பிரதாயத்தை உருவாக்க வேண்டும்.

குறிப்பாக உலகத்தில் தமிழ் மக்களுக்கு என்றொரு தனியான நாடு கிடையாது. ஆனால் ஏழு கோடி தமிழ் மக்கள் வாழுகின்ற தமிழ் நாட்டில் தமிழுக்கு கொடுக்கப்படாத முக்கியத்துவம் இன்று இலங்கையிலே தமிழுக்கு கொடுக்கப்படுகின்றது. தேசிய கீதத்தை தமிழ் மொழியில் பாடக்கூடிய சூழலும். தமிழ் அமைச்சர்கள் செயற்படக்கூடிய சூழலும் தற்போது ஏற்பட்டுள்ளது. இவ்வாறான படிப்படியாக தமிழுக்கு அந்தந்தஸ்து வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்ற அதே நேரம் இன்னமும் அந்தஸ்து வழங்கப்படாத பல விடயங்கள் உள்ளன. அவற்றுக்காக போராடுவதற்கு நாம் தயாராகவுள்ளோம்.

நாம் கிடைத்திருக்கின்ற சந்தர்ப்பங்களை பயன்படுத்தி இனங்களுக்கு இடையில் ஐக்கியத்தை ஏற்படுத்த வேண்டும். இலங்கையை பொறுத்தவரையில் இரண்டு மொழி பேசுகின்ற நான்கு மதங்களை, இனங்களை சேர்ந்த மக்கள் வாழ்கின்றார்கள் அந்தவகையில் வடக்கு, கிழக்கு, மலையக மக்கள் அனைவரையும் ஒன்றாக சேர்த்து வாழக்கூடிய செயற்படக்கூடிய நிலையை நாம் உருவாக்க வேண்டும்.

தற்போது பாராளுமன்றத்தில் கூட தமிழ்த் தேசிய கூட்டமைப்போடு இணைந்து தமிழ் முற்போக்கு கூட்டமைப்பு செயற்பட்டு வருகின்றதை காணமுடியுமாக இருக்கிறது. அந்த வகையில் தற்போது நாட்டிலே இருக்கின்ற சாதகமான சூழ்நிலையை பயன்படுத்தி முக்கியமாக இதனை தமிழ் மக்கள் பயன்படுத்தி கொண்டு தமியாழ் மக்களுக்குரிய விடிவு காலத்தை ஏற்படுத்தி கொடுக்க வேண்டும். அது இந்த காலத்தை விட்டால் வேறெந்த காலத்திலும் கிடைக்காது.

தற்போது இருக்கின்ற ஜனாதிபதி மைத்திரி சிறிசேன சொல்வதை செய்கின்றவராக இருக்கின்றார். அதேபோன்றே பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் தனது நாற்பதாண்டு கால அரசியல் பயணத்திலே தமிழ் மக்களுக்கு உதவுபவராக இருந்துள்ளார்.

எனவே இச்சந்தர்பத்தை விட்டால் வேறு சந்தர்ப்பம் கிடைக்காது என்பதுடன் கனிந்துள்ள நல்ல காலத்தை பாதுகாக்க வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ -4)

நன்றி: (வலம்புரி ப. 13)

## பதவி, பட்டங்களை ஒருபோதும் விரும்பியவனே அல்லன் நான்!

தமது பவளவிழா நிகழ்வில் மாவை சுயவிளக்கம்

(எஸ். நிதர்சன்)

பதவி, பட்டங்களை நான் ஒரு போதும் விரும்பியவனில்லை தமிழினத்தின் விடுதலையே எமக்கு வேண்டும். அந்த விடுதலைக்காக என்னை அர்ப்பணித்துச் செயற்படுகிறேன் என்று கூறினார். இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா.

உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கம் யாழ்ப்பாண பல்கலைக் கழகத்துடன்

இணைந்து யாழ்ப் பாணத்தில் நடத்தும் 13 ஆவது சர்வதேச மாநாட்டின் இரண்டாம் நிகழ்வு யாழ். நகரிலுள்ள ரில்கோ விருந்தினர் விடுதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

அந்நிகழ்வின் இடையே இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசாவின் பவள விழா நிகழ்வும் நடைபெற்றது.

அதன் போது நிகழ்வில் ஏற்புரையை வழங்குகையிலேயே மாவை சேனாதிராசா மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் தமிழ் மக்கள் பாரம்பரிய கலை, கலாச்சார, பண்பாட்டு விழுமியங்களைக் கொண்டவர்கள், அத்தகைய கலை, கலாச்சார, பண்பாட்டு விழுமியங்களை நாங்கள் பேணிப் பாதுகாக்க வேண்டும். எமது அடையாளங்களை நாங்கள் பாதுகாக்க வேண்டிய கடமையும் பொறுப்பும் எங்கள் ஒவ்வொருவரிடத்திலும் இருக்கிறது.

நாம் பண்பாடுள்ளவர்களாகவும், நிம்மதியாகவும் சுதந்திரமாகவும் வாழ வேண்டுமென்பதற்காகவே பல லட்சக்கணக்கான உயிர்களை எமது இனம் பறிகொடுத்தது. அதற்காகத்தான் இன்றும் போராடிக் கொண்டிருக்கிறோம். அதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் நாங்கள் மேற்கொள்ள வேண்டும்.

பண்பாடு, கலை, கலாசார ரீதியாக நாங்கள் உயர்ந்த நாகரிகத்தை உடையவர்கள். இலங்கைத் தமிழர்கள் தான் ஏனைய நாடுகளில் உள்ள பண்பாட்டு விழுமியங்களக்கே எடுத்துக் காட்டாகவும் இருக்கின்றனர். இவ்வாறு பாரம்பரிய விழுமியங்களையும் பண்புகளையும் கொண்ட தமிழினம் தனது நிம்மதியான வாழ்வுக்காக - விடுதலைக்காக - போராடி வருகிறது.

எமது இனத்திற்காக எமது வாழ்வு போராட்டமாகவே காணப்படுகிறது. அதாவது போராட்டப் பாதையில் காலடி எடுத்து வைத்தவர்கள் நாங்கள். என்னுடைய வாழ்வு முழுவதும் போராட்டம்தான். அத்தகைய அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகிறோம்.

அவ்வாறு இனத்தின் விடுதலைக்காக நாம் போராடிக் கொண்டிருக்கையில் பதவி, பட்டங்களை ஒரு போதும் நான் விரும்பவில்லை என பலமுறை நிரூபித்துள்ளேன். இப்போதும் அதுதான் நிலைமையாக இருக்கிறது. ஆகையால் என்னை இனத்தின் விடுதலைக்காக அர்ப்பணித்துக்கொள்கிறேன். - என்றார்.

இதேவேளை தென்னிலங்கையிலுள்ள தீவிரவாதப் போக்குடைய சக்திகள் தமிழரசுக் கட்சியைத் தடை செய்ய வேண்டுமென்று வழக்குப் போட்டார்கள். ஆனால் அதில் நாங்கள் வெற்றி பெற்றிருக்கிறோம். தமிழரசுக் கட்சி சமஷ்டிக் கோரிக்கையை வலியுறுத்தி வருகின்ற போது சமஷ்டி என்றால் பிரிவினை, நாட்டைப் பிரித்துவிடும் என மூடத்தனமாகத் தெற்கு தீவிர போக்குடையவர்கள் கருதுகின்றனர்.

அதுவே எமக்கு இப்போதுபல வழிகளிலும் தடையாக இருக்கிறது. இருந்தும் சமஷ்டி நாட்டைப் பிரித்து விடாது என்று உயர்நீதி மன்றம் நல்லதோர் தீர்ப்பை வழங்கியுள்ளது. ஆகவே இதனைப் பயன்படுத்திக் கொண்டு நாம் எமது கொள்கையின் அடிப்படையில் தொடர்ந்து பயணிப்போம் என்றும் மாவை சேனாதிராசா மேலும் தெரிவித்தார்.

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் யாழ்ப்பாணத்தில் நடத்தும் 13 ஆவது சர்வதேச மாநாட்டின் இரண்டாம் நாள் நிகழ்வு யாழ் நகரிலுள்ள ரில்கோ விருந்தினர்

விடுதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இதன் போது பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றகையிலையே சம்பந்தன் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்க அவர் மேலும் தெரிவிக்கையில் -

கடந்த 1974 ஆம் ஆண்டு பரபரப்பான சூழலில் தமிழாராய்ச்சி மாநாடு யாழில் நடைபெற்றது. அதன்போது தான் தமிழர்பண்பாட்டு இயக்கம் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்று முடிவெடுக்கப்பட்டது. அதற்கமைய 77 ஆம் ஆண்டு தமிழர் பண்பாட்டு இயக்க முதல் மாநாடு தமிழ்நாட்டில் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து வெளிநாடுகள் பலவற்றிலும் இந்த மாநாடுகள் தொடர்ந்து நடைபெற்றிருந்தன.

கனடாவில் தான் இந்த இயக்கத்தின் தலைமையகம் அமைந்துள்ளது. அந்த அமைப்பு அன்றிலிருந்து இன்று வரை திறம்படச் செயற்பட்டு வருகிறது. இதற்கமைய 13 ஆவது மாநாட்டை இம் முறை யாழ்ப்பாணத்தில் நடாத்துகின்றனர். இந்த மாநாட்டில் வெளிநாடுகளில் இருந்து வந்தவர்களும் இங்குள்ளவர்களும் இணைந்து எல்லோரும் ஆர்வத்துடனும் அர்ப்பணிப்புடனும் கலந்து கொண்டுள்ளீர்கள்.

எங்களுடைய இலக்கியம், கலை, கலாசாரம், பண்பாடு, பழக்கவழக்கம் இவை எல்லாவற்றையும் பாதுகாக்க வேண்டும். அது எமது கடமை, உலகில் எந்த பாகத்தில் வாழ்ந்தாலும் தமிழர்கள் என்ற வகையில் நாம் எல்லோரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவரகள், எங்களுக்கிடையே எவ்விதமான வித்தியாசமும் இல்லை.

குறிப்பாக இங்கு வந்திருப்பவர்கள் பண்பாட்டு இயக்கத்தால் ஒரு நிகழ்வு நடைபெறுகின்ற போது நாங்களும் அதில் பங்காளர்களாக இருக்க வேண்டும் என்று வந்துள்ளீர்கள். அதனை நாங்கள் பாராட்டுகிறோம்.

நீங்கள் எல்லோரும் உலகின் பல பாகங்களிலில் இருந்தும் வந்ததற்கு ஒரு காரணம் இருக்கிறது. அதாவது நாங்கள் தமிழர்கள். எங்களுடைய கலை, கலாச்சாரம், பண்பாடுகளை பாதுகாக்க வேண்டுமென்று வந்துள்ளீர்கள். அதையீட்டு நாங்கள் மிகவும் பெருமையடைகிறோம். ஆகவே இத்தகைய செயற்பாடுகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட வேண்டும்.

இலங்கையில் வாழும் தமிழர்கள் பல்வேறு கஷ்டங்களுக்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறார்கள். எமது மக்களில் 50 வீதமாக மக்கள் இன்றைக்கு இந்த நாட்டில் வாழவில்லை. ஏறத்தாழ 15 லட்சம் பேர் உலகத்தில் வெவ்வேறு நாடுகளில் தற்போது வாழ்ந்துவருகின்றனர். குறிப்பாக கலவரங்கள் காரணமாகவும், தாக்கப்பட்ட காரணத்தின் நிமித்தமும் அந்த மக்கள் சொந்த வாழ்விடங்களில் வாழ முடியாத நிலைமை ஏற்பட்டிருந்தது. இதனாலேயே வெளிநாடுகளுக்குச் சென்று வாழ்ந்துவருகின்றனர்.

இவ்வாறான தொரு நிலையில்தான் தற்போது இந்த நாட்டில் ஆட்சி மாற்றம் ஏற்படுத்தப்பட்டு புதிய பாதையில் நாங்கள் செல்வதற்கு முயற்சித்துக் கொண்டிருக்கிறோம். அதாவது நாட்டில் புதிய அரசமைப்பு சாசனத்தை உருவாக்கி அதனூடாக நாட்டில் சமத்துவதத்தையும், சமாதானத்தையும் எற்படுத்வதில் நாம் வெற்றி பெறவேண்டும்.

அதில் எல்லோருக்கும் பங்கு இருக்கிறது. தமிழன் என்ற வகையில் இலங்கையில் வாழும் தமிழ் மக்கள் தலைநிமிர்ந்து. சுயநிர்ணய உரிமையுடன் கௌரவத்துடன் வாழ வேண்டும்.

சமீபத்தில் சிங்கப்பூர் வெளிவிவகார அமைச்சர் என்னைச் சந்தித்தார், அவரைச்

சந்தித்து நீண்ட நேரம் உரையாடியிருந்தேன். அவ்அமைச்சர் யாழ் வந்து முதலமைச்சரையும் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தார். மேற்படி அமைச்சர் யாழ் வந்தபோது யாழில் இருக்கின்ற அந்நாட்டின் முதல் வெளிவிவகார அமைச்சர் இராஜரட்னம் பிறந்து வளர்ந்த வீட்டிற்குச் சென்று பார்வையிட்டார். அவ்வாறு எமக்கு தொடர்புகள் உள்ளன.

நாங்கள் எல்லோரும் தமிழர்கள். நாங்கள் அநீதியாக எதனையும் கேட்கக் கூடாது. ஆனால் நீதியாக, நீதியின் அடிப்படையில், உரிமையின் அடிப்படையில், பிறப்புரிமையை நாங்கள்பெற வேண்டும். அதைப் பெறுவதற்கு நீங்கள் எல்லோரும் உதவ வேண்டும்.

இங்கே வாழும் மக்கள் 30 வருட யுத்ததின் பின்னர் பல்வேறு கஷ்டத்தின் மத்தியில் வாழ்ந்து வருகின்றனர். அந்த மக்களுக்கு இயன்ற உதவிகளை நீங்கள் புரிய வேண்டும். குறிப்பாக பெற்றோரை, கணவரை, சகோதரர்களை இழந்து பெரும் கஸ்டப்படுகின்றனர். அவ்விதமான மக்களுக்கு வெளிநாடுகளில் வாழ்கின்ற எமது மக்கள் உதவ வேண்டும். அவர்களுக்கு எங்களால் இயன்றதை நாங்கள் செய்ய வேண்டும்.

இந்த நிகழ்வை மிகவும் சிறப்பாக நடத்துகின்ற பண்பாட்டு இயக்கத்திற்கும் பல்கலைக்கழகத்திற்கும் நன்றியையும் பாராட்டையும் தெரிவித்து கொள்கிறேன். இந்த மாநாடு தொடர்ந்து நடைபெற வேண்டும். சிறப்பாக நடைபெற வேண்டும், எங்கள் மத்தியில் இருக்கிற ஒற்றுமை இன்னும் பலமடைய வேண்டும். எமது இனம் இந்த உலகத்தில் உயர்வில் பக்குவமான, கௌரவமான இடத்தை அடைந்திருக்கிறது. அதனை நாங்கள் பாதுகாத்துக் கொண்டு ஊக்குவிக்க வேண்டும் இவ்வாறு எல்லாவற்றுக்கும் நாங்கள் ஒற்றுமையுடன் டையேற்றுவதற்கான ஒழுக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. குறிப்பாக ஏழு சிறுவர்களுக்கான நாடகங்கள் மேடையேறவுள்ளன. ஈழுத்தின் சிறந்த நாடகாசிரியர் குழந்தை ம. சண்முகலிங்கத்தின் 'கூடிவிளையாடு பாக்க', ''பஞ்ச வாண நரியார்', குழந்தைகள் பாவனை செய்யும் ஆகிய சிறவர் நாடகங்களும் விளையாடு பாக்க' சிறுவர் நாடகமும் பேராசிரியர் நந்தியின் சிங்கப்பூர் டொக்டர், இலவசமாக நடைபெறுகின்ற இந்த நாடகத் திருவிழா சிறுவர்களுக் குமட்டுமல்லாமல் நாடகமும் அரங்கியலும் கற்கின்ற மாணவர்களுக்கும் நாடக ஆர்வலர்களுக்கும் அரிய வாய்ப்பாக அமைகின்றது.




# பின்னிணைப்புகள்


தமிழ்வின்

# தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு

(இலங்கைத் தமிழரசுக்கட்சி)

# பாராளுமன்றப் பொதுத் தேர்தல் - 2015

# தேர்தல் அறிக்கை

அந்நியர் ஆட்சியிலிருந்து 1948 இல் இலங்கை சுதந்திரம் பெற்றபோது சாதாரண பெரும்பான்மை ஆட்சி முறையிலான ஒற்றையாட்சி அரசியலமைப்பு முறையொன்று இங்கு பலவந்தமாகத் திணிக்கப்பட்டது. 1949 ஆம் ஆண்டில் இந்திய வம்சாவளித் தமிழர்களில் கணிசமான எண்ணிக்கையிலானோரின் வாக்குரிமை பறிக்கப்பட்டது. இச் செயற் பாட்டை எதிர்த்தத்தினால் ஏற்பட்ட அரசியல் எழுச்சி காரணமாக 1949 டிசம்பரில் இலங்கைத் தமிழரசுக் கட்சி தோற்றம் பெற்றது. இச் சமகாலத்திலேயே அரச ஆதரவுடன் தமிழ் பேசும் மக்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளில், குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் பெரும்பான்மை இனத்தவர்களைக் குடியேற்றும் திட்டங்கள் தீவிரமடைந்தன.

இந்தப் பின்னணியில் தான் இலங்கைத் தமிழரசுக் கட்சி, தமிழ் மக்கள் ஒரு தேசிய இனத்திற்குரிய அனைத்து அம்சங்களையும் கொண்டவர்கள் என்பதால் தமிழர் ஒரு தனித்துவமான தேசிய இனமெனவும், அந்த அடிப்படையில் சுயநிர்ணய உரிமைக்கு உரித்துடையவர்கள் என்கின்ற தனது அரசியற் கோட்பாட்டினை முன்வைத்தது இந்த உரிமையை செயற்படுத்த வென தமிழ் பேசும் மக்கள் பெரும்பான்மையாக வாழும் வடக்கு - கிழக்குக் கூட்டாட்சி அடிப்படையிலான தன்னாட்சி ஏற்பாடு ஒன்றை இலங்கைத் தமிழரசுக் கட்சி கோரி நின்றது.

இந்தக் காலப் பகுதியிலிருந்து 1970 வரையிலான கால இடைவெளியில் முதலில் அந்நிய ஆக்கிரமிப்பினாலும் பின்னர் பெரும்பான்மை ஆதிக்கத்தினை வலுப்படுத்திய அரசு அமைப்பினாலும் இழந்துவிட்ட எமது இறைமையை மீட்டெடுக்க அறவழிப் போராட்டங்கள் பல முன்னெடுக்கப்பட்டன.

மொழி மற்றும் கலாசாரத் தனித்துவ அடையாளங்களைப் பேன வென அன்று தமிழ் மக்களின் தரைலவராக விளங்கிய தந்தை செல்வா அவர்களால் முறையே 1957 மற்றும் 1965களில் பிரதம மந்திரிகளான எஸ்.டபிள்யூ. ஆர்.டி பண்டாரநாயக்க, டட்லி சேனாநாயக்க என்பவர்களுடன் வடக்கு - கிழக்கில் உள்ள அரச காணிகளைப் பாரதீனப்படுத்தலைப் பிரதான அம்சமாகக் கொண்ட ஒப்பந்தங்கள் செய்து கொள்ளப்பட்டன. இவ்விரு ஒப்பந்தங்களுமே அன்றைய அரசாங்கங்களால் ஒருதலைப்பட்டசமாகக் கிழித்தெறிய்பட்டன.

1961 இல் இலங்கைத் தமிழாரசுக் கட்சி வடக்கு - கிழக்கில் வாழும் பல்லாயிரக்கணக்கான தமிழ் பேசும் மக்களை இணைத்து சந்தியாக்கிரகப் போராட்டத்தை நடாத்தியது மக்கள் அமைதியான முறையில் கச்சேரி வாசல்களை வழிமறித்து மத வழிபாட்டிலும், போராட்டத்திலும் ஈடுபட்டமையால், வடக்கு - கிழக்கில்

அரச கருமங்களை முற்றிலும் இயங்கா நிலைக்கு உள்ளாகியது.

1970இல் இலங்கைக்கான சுதேசி அரசியலமைப்பொன்றை நிறுவும் முகமாக அரசியலமைப்புப் பேரவை ஒன்று ஏற்படுத்தப்பட்டது. இந்தச் செயன்முறையில் தமிழரசுக் கட்சியும் பங்குபற்றியதோடு தமிழ் பேசும் மக்களின் ஜனநாயத் தீர்ப்பிற்கமைய, ஒன்றுபட்ட நாட்டிற்குள் பகிரப்பட்ட இறையாண்மை என்ற அடிப்படையில் வடக்கு - கிழக்கில் வாழும் தமிழ் பேசும் மக்களுடன் ஆட்சி அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்வதற்கான ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட வேண்டுமென்று வலியுறுத்தியது. இந்த ஆலோசனைகள் அரசியலமைப்புப் பேரவையில், பெரும்பான்மை வாக்குகளால் தோற்கடிக்கப்பட, இலங்கை தமிழரசுக் கட்சி உறுப்பினர்கள் அரசியல் அமைப்புப் பேரவையிலிருந்து வெளியேறினர். இதேபோன்று 1978 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட அரசியலமைப்பிற்கும் தமிழ் மக்கள் தமது சம்மதத்தினை வழங்கவில்லை.

முதலாம் மற்றும் இரண்டாம் குடியரசு யாப்புக்கள் இரண்டுமே ஒற்றையாட்சி அரசமைப்பை உறுதிப்படுத்தியதுடன், சிங்கள மொழியினை மாந்திரமே ஒரே அரச கருமமொழியாகக் கொண்டு செயற்படவும், தொடர்ந்தும் பௌத்த மதத்திற்கு முதன்மையான இடத்தை வழங்கவும் வழிவகுத்தன. இந்த இரு குடியரசு யாப்புக்களும் தமிழ் மக்களின் சம்மதமின்றியே நிறைவேற்றப்பட்டன.

1948 இல் இலங்கை சுதந்திரம் பெற்றதிலிருந்து தமிழ் மக்களின் வரலாற்று வாழ்விடமாகிய வடக்கு - கிழக்கின் இன விகிதாசாரத்தை மாற்றியமைக்கும்முனைப்புடன்திட்டமிட்ட அரச ஆதரவுச் சிங்களக் குடியேற்றங்கள் நடைபெற்றன 2009 ஆம் அண்டு யுத்தம் முடிவுற்று பின்னர் வடக்கு - கிழக்கில் இது முழு முனைப்புடன் தொடர்ந்தது. அரசாங்கம் வடக்கு மாகாணத்தில் அடக்குமுறையான இராணுவமயமாக்குதலைத் தொடர்ந்து பேணி வருவதுடன், இராணுவ நோக்கத்திற்கென பெருமளவு காணிகளை அபகரிப்பதிலும் ஈடுபட்டது.

தமிழ் இளைஞர்களின் உயர் கல்வியைப் பாதித்த தரப்படுத்தும் மற்றும் அரச துறையில் வேலை வாய்ப்பு வழங்குவதில் காட்டிய வெளிப்படையான பாரபட்சம் என்பவற்றுடன் 1956, 1958, 1961, 1981 மற்றும் 1983 ஆகிய ஆண்டுகளிலும், அதனைத் தொடர்ந்து தொடர்ச்சியாகவும், தமிழ் மக்களுக்கெதிரான திட்டமிட்ட வன்முறையும், கலவரங்களும் கட்டவிழ்த்து விடப்பட்டன. இச் சந்தர்ப்பங்களில் நாட்டின் ஏனைய பாகங்களில் பாதிக்கப்பட்ட தமிழர்கள் நிலம், கடல் மற்றும் வான் வழியாக வடக்குக் கிழக்கிற்கு அன்றைய அரசாங்கங்களினால் அனுப்பி வைக்கப்பட்டனர். இதன் மூலம் இவ்விரு மாகாணங்களையும் தமிழர் தம் தாயகமாகவும் அங்குதான் தமிழர்களுக்கு பாதுகாப்பு உண்டு எனவும் அரசாங்கமே ஏற்றுக்கொண்டது.

### அதிகாரப் பகிர்வு ஏற்பாடுகள்

1983 ஆம் ஆண்டு தமிழருக்கெதிராகக் கட்டவிழ்த்துவிடப்பட்ட இனப் படுகொலையினைத் தொடர்ந்து, தமிழ் பேசம் மக்களுக்குப் பெருமளவு தன்னாட்சி அதிகாரத்தை வழங்கும் ஒரு மாற்று அரசியல் ஏற்பாட்டின் மூலம் தமிழரின் தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இலங்கை - இந்திய ஒப்பந்தத்தைத் தொடர்ந்து 1987 இல் குறைந்தபட்ச அதிகாரங்களைக் கொண்ட

மாகாணசபை அறிமுகப்படுத்தப்பட்டதுடன், ஆதி உயர்மட்டக் கலந்துரையாடல்களில் அதிகாரப்பகிர்வு விருத்தி செய்யப்படுமென்ற வாக்குறுதிகளும் வழங்கப் பட்டன. தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் ஏனைய முயற்சிகள், 1993 இல் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவின் ஆட்சிக் காலத்திலே மங்கள முனசிங்க தெரிவுக் குழுவின் தீர்வாலோசனைகள். ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்காவின் ஆட்சியின் கீழ் 1995, 1997 மற்றும் 2000 ஆம் ஆண்டுகளில் முன்வைக்கப்பட்ட அரசியலமைப்புச் சீர்திருத்த ஆலோசனைகள் அத்துடன் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச ஆட்சியின்கீழ் 2006 டிசம்பரில் சர்வ கட்சி பல்லின வல்லுநர் குழுவின் பெரும்பான்மை அறிக்கை ஆகியவற்றிற்கு இட்டுச் சென்றன.

எரிந்து கொண்டிருக்கும் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண அரசியல் அரங்கில் எதுவித முன்னேற்றமும் ஏற்படாதிருந்த காலகட்டத்தில், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தனது ஆயுதப் போராட்டத்தினைத் தொடர்ந்து முன்னேடுத்தது அடுத்தடுத்து ஆட்சி செய்த அரசாங்கங்கள் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டன. 2002 பெப்ரவரி மாதம் தமிழீழ விடுதலைப் புலிகளும் அன்றைய இலங்கை அரசாங்கமும் போர் நிறுத்த ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட்டதோடு, 2002 டிசம்பரில் ஏற்பட்ட 'ஒஸ்லோ' உடன்படிக்கையில் சில அடிப்படைக் கோட்பாடுகளின்மீது இணக்கங் கண்டன அந்தகோட்பாடு பின்வருமாறு அமைந்தது.

ஒன்றுபட்ட இலங்கைக்குள் தமிழ் பேசும் மக்களின் வரலாற்று ரீதியான வாழ்விடப் பகுதிகளில் உள்ளக சுயநிர்ணய உரிமைக் கொள்கையின் பிரகாரம் சமஷ்டிக் கட்டமைப்பின் அடிப்படையிலமைந்த தீர்வொன்றை ஆராய்தல் என்பதாகும்.

### இராணுவத் தாக்குதலும் அதன் பின்விளைவுகளும்

இருப்பினும், இந்த யுத்த நிறுத்தம் நீண்ட காலம் நீடிக்கவில்லை. அரச படைகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையே மிண்டும் மூண்ட இராணுவ மோதல்கள் 2009 ஆம் ஆண்டு மே மாதம் 19 ஆம் திகதியன்று முடிவுக்கு வந்தது 30 வருட காலமாக நடந்த இந்தக் கொடூர யுத்தம் வடக்கையும் கிழக்கையும் பேரழிவிற்குள்ளாக்கியதோடு, தமிழ் மக்களையும் கதியற்றவர்களாக்கியது. பத்து இலட்சத்துக்கும்மேற்பட்ட தமிழர்கள் பாதுகாப்புத்தேடி வெளி நாடுகளில் தஞ்சம் புகுந்தனர். மேலும், ஐந்து இலட்சம் தமிழர்கள் நாட்டிற்குள்ளேயே அகதிகளாக்கப்பட்டனர். ஒரு இலட்சத்து ஐம்பதினாயிரத்திற்கும் அதிகமான தமிழர்கள் யுத்தம் நடைபெற்ற காலப்பகுதியில் கொல்லப்பட்டுள்ளதுடன். நம்பத்தகுந்த கணக்கெடுப்புக்களின்படி எழுபதாயிரத்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் போரின் இறுதிக்கட்டங்களில் கொல்லப்பட்டனர்.

இதற்கும் மேலாகப் பல்லாயிரக்கணக்கானோரது அவயவங்கள் பாதிக்கப்பட்டதும், மோசமான காயங்களுக்குள்ளானதும், உள அழுத்தங்களுக்கும், உளவியல் பிரச்சினைகளுக்கும் ஆளானதும் நாமறிந்த யதார்த்தம். ஐந்து இலட்சத்திற்கும் அதிகமான தமிழ்மக்கள் தமது வசிப்பிடங்களை இழந்தனர். இவர்களில் பலர் எல்லா சர்வதேச நியமங்களுக்கும், நாகரிக நடைமுறைமைகளுக்கும் எதிராகத் தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டனர். இம் மக்கள் தமது பூர்வீக இடங்களில் மீளக் குடியமர்த்தப்படுவார்கள் என சர்வதேச சமூகத்திற்கும், ஐக்கிய

நாடுகளுக்கும் வாக்குறுதியளிக்கப்பட்டபோதும் இந்த வாக்குறுதிகள் இன்றுவரை நிறைவேற்றப்படவில்லை.

### தமிழ் மக்களும் இன்றிருக்கும் அரசியலமைப்பு ஏற்பாடுகளும்

சர்வதேச நியமங்களின் படியும், சர்வதேச சாசனங்களின் பிரகாரமும் தமிழர்களாகிய நாங்கள் தனிச் சிறப்புமிக்க மக்கள் குழாமாவோம். ஒரு மக்கள் குழாமான நாங்கள் பேரினவாதத்தின் பிடிக்கு ஆட்படாது கௌரவத்துடனும், சுயமரியாதையுடனும், சுதந்திரமாகவும், அச்சமின்றியும், நாட்டின் ஏனைய மக்களுடன் சமத்துவமுள்ள மக்களாக வாழவிரும்பு கின்றோம்.

இதனால், தனித்துவமான மக்களாகவும், தேசிய இனமாகவும் இருப்பதுடன் நாம் எமது வரலாற்று ரீதியான வாழ்விடங்கள்தொடர்பிலும், எமக்குரிய எமது ஒருமித்த உரிமைகள் தொடர்பிலும், மேலும் எமது தலைவிதியை அல்லது எதிர்காலத்தை நாமே தீர்மானிப்பதற்கு எமக்கிருக்கும் உரிமை தொடர்பிலும், அதை உறுதிப்படுத்த ஒன்றுபட்டதும், பிளவுபடாதது மான இலங்கைக்குள் தமிழ் பேசம் மக்கள் வாழும் வடக்கு - கிழக்கில் தக்க தன்னாட்சி முறைமை ஒன்றை நடைமுறைப்படுத்துவது தொடர்பிலும் திடசங்கற்பம் கொண்டிருக்கின்றோம். இவை தொடர்பிலான தற்போதைய அரசியலமைப்பு ஏற்பாடுகள் பொருத்த மற்றதாகவும், திருப்தியற்றதாகவும் அமைந்துள்ளன. தற்போதுள்ள ஏற்பாடுகள் பெரும்பான்மை மக்களுக்குச் சார்பானதாகவும், அவர்களது ஆதிக்கத்தை தமிழர் மீது திணிக்கும் வகையிலுமே அமைந்தள்ளன. நீதி, சமத்துவம், சமாதானம் மற்றும் பாதுகாப்பு என்பவற்றை உறுதிப்படுத்தும் ஓர் அரசியலமைப்புக் கட்டமைப்பின்றி பல்லின சமூகமொன்றில் ஜனநாயகம் செயற்பட முடியாது இந்த பின்புலத்திலேயே நாம் எதிர்வரும் பாராளுமன்றப் பொதுத் தேர்தலைச் சந்திக்கின்றோம்.

இறையாண்மை என்பது மக்களிடமே உண்டு.அரசிடம் அல்ல எனத் தமிழ்த் தேசியத் வட்டமைப்பு உறுதியாக வலியுறுத்துகின்றது. தமிழ் மக்களை ஆளுகின்ற உரிமை கொழும்பிலிருக்கும் அரசாங்கத்திடமல்ல, தமிழ் மக்களிடமே பொதிந்திருக்கின்றது. இதனடிப்படையில், மத்திய அரசிடமும் அதன் முகவரான ஆளுநரிடமும் அதிகாரங்களைக் குவிக்கின்ற 13 ஆம் திருத்தச்சட்டம் முற்றிலும் பிழையானதொன்று ஏதேச்சதிகார அரசிற்கு விடுக்கும் அடிப்படை ஜனநாயகச் சவாலின் மீதே எமது அரசியல் சித்தாந்தம் வேரூன்றி நிற்கின்றது. இந்த நோக்கம் நாடளாவிய ரீதியில் செயற்படுவதற்கென நாம் கடந்த ஜனவரி 8 இல் நடந்த ஜனாதிபதித் தேர்தலில் எமது மாபெரும் பங்களிப்பை வழங்கியிருந்தோம். ஆகவே, எமது அரசியலானது, அனைத்து மக்களதும் தேவைகள் மற்றும் அரசியலபிலாசைக ளோடும், தமிழ் பேசம் மக்களது நீதி மற்றும் சமத்துவத்திற்கான போராட்டத்துடனும் பின்னிப்பிணைந்துள்ளது.

### அரசியல் தீர்வு தொடர்பான எமது நிலைப்பாடு

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண அத்தியாவசியமெனக் கருதும் கோட்பாடுகளும், பிரத்தியேக அரசியலமைப்பு ஏற்பாடுகளும் பிரதானமாக இத்தீவில் வாழும் பல்வேறு மக்களிடையே ஆட்சி

அதிகாரங்களைப் பங்கிடுவதனூடாகப் பகிர்ந்த இறையாண்மையினை உறுதிப்படுத்தலைக் குறித்தது. உண்மையான நல்லிணக்கத்தையும், நீடித்து நிலைக்கும் சமாதானத்தையும். இலங்கை மக்கள் அனைவருக்கும் பொதுவான அபிவிருத்தியையும் எய்துவதற்குப் பின்வரும் அதிகாரப் பங்கீட்டு அடிப்படைகள் முக்கியம் பெறுகின்றன.

- தமிழர்கள் தமக்கேயுரிய நாகரிகம், மொழி, கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்தைக் கொண்டு தனித்துவமிக்க தேசிய இனமாவர். அத்துடன் தொன்றுதொட்டே சிங்கள மக்களுடனும் ஏனைய மக்களுடனும் இந்தத் தீவில் வாழ்ந்து வருகின்றனர்.
- புவியியல் ரீதியாகப் பிணைக்கப்பட்டுள்ளதும், தமிழ் பேசும் மக்களைப் பெரும்பான்மையாகக் கொண்டதுமான வடக்கு - கிழக்கு மாகாணங்கள் தமிழ் மக்களதும், தமிழ் பேசும் முஸ்லிம் மக்களதும் பூர்வீக வாழ்விடங்களாகும்.
- இலங்கை நாடு ஏற்றுக்கொண்டு கைச்சாத்திட்டுள்ள ஐக்கிய நாடுகள் அமைப்பின் குடியியலுரிமைகள் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சாசனத்திலும், பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகள் தொடர்பான சாசனத்திலும் அடங்கியிருக்கும் விதிகளின் பிரகாரம் தமிழ் மக்கள் ஒரு தனித்துவமான மக்கள் என்ற அடிப்படையில் சுயநிர்ணய உரிமைக்கு உரித்துடையவர்களாவர்.
- முன்னர் இருந்தவாறு ஒன்றுபட்ட வடக்கு- கிழக்கு அலகைக் கொண்ட சமஷ்டிக் கட்டமைப்பிற்குள்ளே அதிகாரப் பகிர்வு ஏற்பாடுகள் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். வடக்கு கிழக்கின் வரலாற்றுக் குடிகளான தமிழ் பேசும் முஸ்லிம் மக்களும் மேற்கொள்ளப்படும் அனைத்து அதிகாரப் பகிர்வு ஏற்பாடுகளினதும் நன்மைகளைப் பெற உரித்துடையர்வர்கள். இது வடக்கு - கிழக்கில் வாழும் எந்த ஒரு மக்கள் மீதும் எவ்வித முரண்பட்ட தாக்கத்தையும் ஏற்படுத்தா வண்ணம் இருத்தல் அவசியம்.
- பகிரப்பட்ட இறையாண்மையின் அடிப்படையில் உருவாக்கப்படும் அதிகாரப் பகிர்வு ஏற்பாடானது. நிலத்தின்மீதும், தமிழ் மக்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் சட்டம் - ஒழுங்கு, சட்ட அமுலாக்கம் என்பவற்றின் மீதும, சமூக பொருளாதார அபிவிருத்தியின் அங்கங்களான சுகாதாரம், கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்பயிற்சி, விவசாயம், மீன்பிடி, கைத்தொழில், கால்நடை அபிவிருத்தி, பண்பாட்டுத்துறை, உள்நாட்டிலும், வெளிநாட்டிலுமிருந்து வளங்களை திரட்டிக்கொள்ளல் மற்றும் நிதி அதிகாரம் என்பவற்றின் மீதானதாகவும் இருக்க வேண்டும்.
- வடக்கு - கிழக்கல் வாழும் இளைஞர்களுக்கு நேரடி வெளிநாட்டு முதலீட்டின் மூலம் புதிய கைத்தொழிற் துறைகளும் வேலை வாய்ப்புக்களும் உருவாக்கப்படல் வேண்டும்.
- தேசிய பல்கலைக் கழகங்களிற்கு அனுமதி பெறாதோர் தமக்கு உகந்த துறைகளில் உயர் கலவியைத் தொடர்வதற்கு மாற்று வழிமுறைகள்

செயற்படுத்தப்பட வேண்டும்.

மேற்குறித்த யாவும் ஒன்றுபட்டதும், பிளவுறாததுமான இலங்கைக்குள் நிறைவேற்றப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

## பொறுப்புக் கூறல்மற்றும் நல்லிணக்கம் தொடர்பான எமது நிலைப்பாடு

உண்மையானதும் நிலையானதுமான சமாதானத்திற்கு பொறுப்புக் கூறலும். நல்லிணக்கமும் இன்றியமையாதவை. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் மார்ச் 2012. மார்ச் 2013, மார்ச் 2014 இல் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் பரிந்துரைகளதும், மார்ச் 2014 இன் தீர்மானத்தால் அங்கீகாரம் பெற்று எதிர்வரும் செப்டெம்பர் மாதம் வெளியிடப்படவிருக்கும் சர்வதேச விசாரணை அறிக்கையினது பரிந்துரைகளதும், முழுமையான நடைமுறையாக்கலை நாம் வலியுறுத்துகின்றோம். உண்மை கண்டறியப்பட வேண்டும் என்பதிலும், அது இலங்கையில் வாழும் சிங்களவர், தமிழர், முஸ்லீம்கள் மற்றும் ஏனைய மக்கள் அனைவருக்கும் தெரிவிக்கப்பட வேண்டும் என்பதிலும், எமக்கு உறுதியான அர்ப்பணிப்புண்டு. உண்மை, நீதி, பரிகாரம் மற்றும் மீள் - நிகழாமைக்கான உறுதி என்பன இலங்கையின் தேசி இனப் பிரச்சினை முழுமையாகத் தீர்க்கப்படுவதற்கும், இலங்கை வாழ் பல்வேறு மக்களுக்கிடையே நீதி, சமத்துவம் என்பவற்றின் அடிப்படையில் தோன்றும் நிரந்தரமானதும், உண்மையானதுமான நல்லிணக்கம் நிலைப்பதற்கும் அத்தியாவசியமானவையாகும்.

## தமிழ் மக்களது உடனடிப் பிரச்சினைகள்

நாம் நீதியானதும், நிலையானதுமான அரசியல் தீர்வொன்றைக் காண தொடர்ந்து மயற்சிக்கும் அதேவேளை எமதுமக்களது உடனடித் தேவைகளைச் சந்திப்பதிலும் முனைப்புடன் ஈடுபடுவோம் குறிப்பான சில விடயங்கள் இங்கு பட்டியற்படுத்தப்பட்டுள்ளன.

- வடக்கிலும் கிழக்கிலும் அர்த்தமுள்ள இராணுவக் குறைப்பிற்கு ஆதாராக ஆயுதப்படைகள், இராணுவச் சாதனங்கள் மற்றும் உயர் பாதுகாப்பு வலயங்கள் என்பன அகற்றப்பட வேண்டும். இது இன்று நிலவும் அமைதிச் சூழலில் இன்றியமையாததாகும்.
- வடக்கிலும் - கிழக்கிலும் போரினால் இடம்பெயர்ந்த மக்கள் விரைவாகத் தமது சொந்த இடங்களில் மீளக் குடியேற்றப்பட வேண்டும். இவர்களுக்கான வீடுகளும், வாழ்வாதாரங்களும் இவர்களது கௌரவம் குன்றா வண்ணம் மீளமைக்கப்பட வேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரது அயராத பங்களிப்பின் விளைவாக, ஜனவரி மாதம் 2015 இல் முன்னைய அரசு தோற்கடிக்கப்பட்டதன் பின்பு ஆட்சிக்கு வந்த அரசாங்கத்தினால், வடக்கில் வலிகாமத்திலிருந்தும், கிழக்கில் சம்பூரிலிருந்தும் வெளியேற்றப்பட்ட மக்களுக்கு அவர்களது காணிகளை மீளக் கையளிப்பதற்கும். அவர்களை மீளக் குடியமர்த்து வதற்குமான தீர்மானம் எடுக்கப்பட்டு, இன்று அது நடைமுறைப் படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றது. மேலும், எமது முயற்சியால் முல்லைத்தீவு

கேப்பாப்பிலவில் ஆயிரம் ஏக்கர் நெற்காணி அவற்றிற்கு உரித்தான மக்களிடம் கையளிக்கப்பட்டுமை குறிப்பிடத்தக்கது. இந்த விடயங்கள் முற்றாக நிறைவேறும் வரை எமது முயற்சிகள் தொடரும்.

- யுத்தம் நிறைவடைந்து ஆறு வருடங்கள் கடந்துவிட்டதனால் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் கைதுசெய்து சிறையில் வைக்கப்பட்டிருக்கும் அனைத்து அரசியல் கைதிகளும், போருடன் தொடர்புபட்ட குற்றச்சாட்டுக்களின் பெயரில் சிறையிலிருக்கும் மற்றைய கைதிகளும் விடுதலை செய்யப்பட வேண்டும்.
- உண்மையைக் கண்டறிவதனூடாக, இன்றுவரை நீடிக்கும் காணாமற் போனோர் விவகாரத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டும். தமது வாழ்வாதாரமாக இருந்த குடும்பத் தலைவர்களையும், பிள்ளை களையும் இழந்த, காணாமற் போனோர் குடும்பங்கள் துயரங்களைக் கையாளவும் அவர்களை இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பச் செய்வதற்குமான பன்முகப்படுத்தப்பட்ட விமோசனத் திட்டங்கள் அவர்களுக்குக்கிட்ட வேண்டும்.
- வெளிநாடுகளில் தஞ்சம் புகுந்த தமிழர்கள் தமது வாழ்விடங்களுக்குத் திரும்ப அனுமதி வழங்கப்படுவதோடு. திரும்பத்தக்கதான சூழலும் உருவாக்கப்பட வேண்டும். குறிப்பாக தென்னிந்தியாவில் இருக்கும் ஒரு இலட்சத்திற்கும் அதிகமான அகதிகளின் மிள்வருகைக்கும், மீள்குடியேற்றத்திற்குமான திட்டங்கள் விரைவாக முன்னெடுக்கப்படல் வேண்டும்.
- இளைஞர்களுக்கான வேலை வாய்ப்பை உருவாக்குதல் அடங்கலாக வடக்குக் கிழக்கின் அபிவிருத்திக்கான விரிவானதொரு நிகழ்ச்சித் திட்டம் இலங்கை அரசாங்கத்தினதும். புலம்பெயர் தமிழர்களதும், சர்வதேச சமுகத்தினதும் முனைப்பான ஆதரவுடன் மேற்கொள்ளப்பட வேண்டும். கடந்த அரசின் எதிர்மனப்பாங்கும், ஜனவரித் தேர்தலின் பின்னரான அரசின் உறுதிப்பாடற்ற யதார்த்தமும் இதுவரை மேற்குறிப்பிட்ட திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கான அவகாசத்தை வழங்கவில்லை. இந்த பொதுத் தேர்தலின் பின்னர் உருவாகும் அரசின் கீழ் இந்நிகழ்ச்சி நிரல் நடைமுறைப்படுத்தப்பட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அயராது உழைக்கும்.
- எமது மக்களின் விவசாயத்திற்கு அவசியமான நீர்த் தேவை மற்றும் குடிநீர்த் தேவை என்பவற்றைப் பூர்த்தி செய்யும் பொருட்டும். வடக்கு - கிழக்கில் உள்ள அனைத்துச் சிறு குளங்களையும் புனர் நிர்மாணம் செய்யும் திட்டத்தினை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்னேடுக்கும். மேலும் வடக்கில் நிலவும் குடிநீர்ப் பிரச்சினையினைத் தீர்க்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏற்ற வல்லுநர்களின் உதவியுடன் ஆவண செய்யும்.
- பலாலி விமானத்துறையை சர்வதேச விமான நிலையமாக மாற்றுதல், வடக்கு கிழக்கில் உள்ள துறைமுகங்களையும் மற்றும் மீன்பிடித்துறை முகங்களையும் அபிவிருத்தி செய்தல் என்பன உள்ளடங்கலான பாரிய அபிவிருத்தி திட்டங்கள் வடக்கு கிழக்கில் முன்னெடுக்கப்படும்.

- எமது பனைவளத்தை நவீன முறையில் அபிவிருத் செய்வதற்கு தேவையான நிபுணத்துவம் மற்றும் தொழில்நுட்ப உதவி பெறப்படும்.
- எமது மீனர்வகள் தமது தொழிலில் சுயாதீனமாக ஈடுபடுவதில் எதிர்நோக்கும் சவால்களுக்கு தீர்வுகள் காணப்படுவதுடன் அவர்களது வாழ்வாதார மேம்பாட்டுக்கான பொருத்தமான முன்னெடுப்புக்கள் மேற்கொள்ளப்படும்.

## போரினால் விதவையாக்கப்பட்டோர், அநாதைக் குழந்தைகள், முதியோர்கள் மற்றும் அங்கவீனர்கள்

வடக்கு - கிழக்கில் ஆதரவின்றியிருக்கும் 90,000 இதற்கும் அதிகமான விதவைகள் போர் விட்டுச் சென்று ஆழ்ந்த வடுக்களாய் வாடுகின்றனர். அவர்களது ஆளுமையினை விருத்திசெய்து அவர்களது வாழ்க்கையினை மேம்படுத்தத் தெளிவானதொரு திட்டம் அவசியம் எம் விதவைகள் இன்று பொருளாதார ரீதியிலும், சமூக ரீதியிலும் பலத்த இன்னல்களிற்கு முகம் கொடுக்கின்றனர். இவர்களது வாழ்வாதாரத் தேவைகளை சீர்செய்யும் திட்டங்களை விரைந்து நடைமுறைப்படுத்தி இவர்களது இக்கட்டான சூழ்நிலையிலிருந்து இவர்கள் விடவிக்கப்படுவது அவசியம குழந்தகள், முதியோர் மற்றும் ஊனமுற்றோரதும் தேவைகளும் நிவர்த்தி செய்யப்பட வேண்டும்.

## முன்னாள் போராளிகள் சமூகத்துடன் மீளிணைவு

முன்னாள் போராளிகளுக்கு வழங்கப்படும் மிளிணைவுத் திட்டங்கள் அவர்கள் தமது வாழ்க்கையை சுயகௌரவத்துடன் மீள ஆரம்பிக்கத்தக்க தொழிற்பயிற்சி, வேலைவாய்ப்பு உருவாக்கம் என்பன அடங்கிய பூரணத்துவமிக்க திட்டங்களாக இருக்க வேண்டும் இவ்விடயம் தொடர்பில் இதுவரை நடைமுறையில் உள்ள திட்டங்கள் தம்மகத்தே பல்வேறு குறைபாடுகளைக் கொண்டிருக்கின்றன. போராளிகளால் தமது வாழ்க்கையை மீண்டும் தொடங்வோ. வாழ்வாதாரத்தை ஈட்டிக் கொள்ளவோ முடியாத நிலையே தொடர்வதால், இது குறித்த உடனடி வேலைத் திட்டம் அவசியம்.

## மரபுவழிச் சமூகக் கட்டமைப்புக்களின் சிதைவு

தமிழர்களை அர்த்தமுள்ள ஆட்சிப் பங்களிப்பிலிருந்து ஒதுக்கிவைத்து. அதற்குப்பதிலாக இராணுவத்தைப் பயன்படுத்தும் இன்றைய நடைமுறையினால், பெண்களுக்கெதிரான வன்முறைகள் தலைவிரித்தாடும் சூழலும். இளைஞர்கள் மது மற்றும் போதைப் பொருளுக்கு அடிமையாகும் நிலைமையும் தோற்றுவிக்கப்பட்டிருப்பதுடன். மரபுவழிச் சமூகக் கட்டமைப்புக் களின் சிதைவிற்கும் வழிவகுத்துள்ளது. இதனைத் தீர்க்கும் ஒரே வழி மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளிடம் ஆட்சி அதிகாரங்களைப் பங்கிடுவதேயாகும்.

## சர்வதேச சமூகத்தின் வகிபாகம்

தமிழ் மக்கள் உள்ளூர் பொறிமுறைகளினூடாகத் தமது தேசிய இனப் பிரச்சினைக்கு நியாயமானதும், ஏற்றுக்கொள்ளக் கூடியதுமானதொரு தீர்வினைப்

பெற்றுக்கொள்ள அர்ப்பணிப்புடனே இருந்து வந்துள்ளனர். இலங்கை அரசே கிட்டிய சந்தர்ப்பங்களையெல்லாம் உதறித் தள்ளியது மட்டுமல்லாதுதொடர்ச்சியாக இலங்கைத் தமிழர்மீது இன அழிப்பைக் கட்டவிழ்ப்பதனூடாக அடக்கியாளவும் தலைப்பட்டது. இலங்கை அரசின் இந்த நிலைப்பாடே தேசிய இனப் பிரச்சினையை சர்வதேச மயமாக்கியதோடு சர்வதேச வகிபாகத்தை ஏற்றுக்கொள்ள வேண்டிய கட்டாயத்தையும் இலங்கை அரசிற்கு ஏற்படுத்தியது. இருப்பினும், இலங்கை அரசின் இந்த நிலைப்பாட்டின் தவிர்க்க முடியா விளைவான ஆயுதப் போராட்டம் இன்று முடிவுறுத்தப்பட்டுள்ளமை கவனத்தில் கொள்ளல் வேண்டும்.

கடந்த அரசு சர்வதேச தலையீட்டின் மூலம் விளைந்த சிறிதளவான நன்மைகளையும் களையத் துடித்தது. இலங்கையில் வாழும் பல்லின மக்களிடையே நிரந்தரமானதும். நிலையானதுமான நல்லிணக்கத்தை ஏற்படுத்தி அதன்மூலம் அனைவரும் சமத்துவமுள்ள குடிமக்களாக வாழ வழிசெய்ய சர்வதேச வகிபாகம் தொடர்வது அத்தியாவசியமானது என்பதே தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடாகும்.

## முடிவுரை

யாழ்ப்பாணம், வன்னி, திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை தேர்தல் மாவட்டங்களில் வாழும் வாக்காளர் யாவரும் ஒன்றுபட்டு முழுமையாக தமது வாக்குகளை இலங்கைத் தமிழரசுக் கட்சி என்ற பெயரிலும் வீட்டுச் சின்னத்திலும் போட்டியிடும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களித்து, தமிழ் மற்றும் தமிழ் பேசும் மக்களது அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்ப்பது தொடர்பில்தமிழ்த் தேசியக் வட்டமைப்பினால் இந்த விஞ்ஞாபனத்தில் முன்மொழியப்பட்டிருக்கும் செயற்றிட்டங்களுக்கும் தங்கள் ஜனநாயக ஆணையினைப் பூரணமாக வழங்குமாறு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு அன்புடன் வேண்டி நிற்கின்றது.

இத்தேர்தல் அறிக்கையானது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகளான இலங்கைத் தமிழரசுக் கட்சி தமிழீழ விடுதலைக் கழகம், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் ஆகியவற்றால் இணைந்து வெளியிடப்படுகிறது.

# The Tamil National Alliance
## Ilankai Tamil Arasu Kadchi
## Parliamentary Election - Eor.g
## Manifesto

At the time of independence from colonial rule in 1948, Ceylon was foisted with a unitary type constitution with simple majoritarian rule. In 1949 a sizeable number of Tamils of recent Indian origin were disenfranchised. State aided colonization of the preponderantly Tamil speaking territory, particularly the Eastern province, with the majority community intensified. The Ilankai Tamil Arasu Kadchi (OTAK) was formed as a consequence in December 1949. In this background in April 1951 the ITAK articulated its claim that the Tamil People in Ceylon were a Nation distinct from that of the Sinhalese by every test of nationhood and were therefore entitled to the right to self-determination. As a necessary corollary to the exercise of this right, we demanded a federal arrangement in the North and the East, where the Tamil Speaking Peoples are a predominant majority. In 1956 Sinhala was made the only official language of the country, again by the use of the parliamentary majority that was available to the majority community. Various peaceful agitations were organized between this time and the late 1970s to win back the right to self-determination that was lost first through foreign conquests and later due to a system of government that reinforced majoritarian hegemony not accepted by the Tamil

Power sharing arrangements must continue to be established as it existed earlier in a unit 9f a merged Northern and Eastern Provinces based on a Federal structure. The Tamil speaking Muslim historical inhabitants shall be entitled to be beneficiaries of all People. Agreements were also entered into between two Prime Ministers, S W R D Bandaranaike and Dudley Senanayake, and S J V Chelvanayakam, the leader of the Tamil People in 1957 and 1965 respectively, relating primarily to the alienation of state land in' the North-East, to ensure the linguistic and cultural identity of the North-East. Both were unilaterally abrogated by the governments of the day. In 1961 the ITAK conducted a massive satyagraha campaign involving thousands of Tamil speaking Peoples in the North and the East, peacefully engaged in prayer resulting in the entrances to the Government Agents' offices (Kachcheris) in the North-East being peacefully

obstructed and government administration in the North and East being completely paralysed.

In 1970 a Constituent Assembly was formed to enact an autochthonous constitution. ITAK also participated in this exercise and urged the inclusion of provisions to share powers of governance with the Tamil Speaking Peoples in the North-East on the basis of shared sovereignty within a united country in keeping with their democratic verdicts. Those proposals were defeated by majority votes and the members of the ITAK left the Constituent Assembly. Similarly the Tamil People did not grant their consent to the enactment of the 1978 Constitution. Thus the first and second Republican constitutions having entrenched a Unitary State continued with Sinhala as the only official language and gave Buddhism the foremost place. These constitutions were enacted without the consent of the Tamil People.

Systematic State-sponsored colonization was carried out since independence in 1948 in order to change the demographic pattern of the North-East, which are the areas of historical habitation of the Tamil Speaking Peoples. This has continued with full vigour in the North and the East after the end of the war in 2009. The government retains an oppressive army presence in the Northern Province and has engaged in acquiring large tracts of land for 'military purposes'.

In addition to the acts of discrimination, including standardization which affected the tertiary education of the Tamil youth and occasioned discrimination in employment in the state sector, organized violence was periodically unleashed against the Tamil People in the country in 1956, 1958, 1961, 1977, 1981 and 1983. No protection was provided by the State to the Tamil victims. On these occasions, affected Tamil People from other parts of the country were transported by the State by land, sea and air to the North and East recognizing these two provinces to be their homeland.

## POWER SHARING ARRANGEMENTS

Soon after the anti-Tamil pogrom in 1983, attempts were made to solve the Tamil national question by means of an alternate political arrangement in which greater autonomy would be granted to the Tamil Speaking Peoples. An arrangement was introduced in 1987 consequent to the Indo-Lanka Accord. These changes paved the way for the setting up of Provincial Councils with minimal powers, and promises were made at the highest levels that it will be improved upon. Several such attempts resulted in the 1993 Mangala Munasinghe Select Committee Proposals during President Ranasinghe Premadasa's term, the Government's proposals for constitutional reform of 1995, 1997 and 2000 under President Chandrika Bandaranaike Kumaratunga and the APRC multi-

ethnic expert 'committee majority report in December 2006 under President Mahinda Rajapaksa.

While no progress was being made on the political front to solve the burning national issue, the Liberation Tigers of Tamil Eelam (LTTE) continued its armed struggle. Successive governments entered into negotiations with the LTTE and in February 2002 the LTTE and the Government of Sri Lanka signed a Ceasefire Agreement and later in December 2002 agreed on a set of principles called the Oslo Communiqué, which stated

"[T]o explore a solution founded on the principle .of internal self determination in areas of historical habitation of the Tamil-speaking Peoples, based on a federal structure within a united Sri Lanka."

## MILITARY ONSLAUGHT AND ITS AFTERMATH

However, the ceasefire did not last and hostilities broke out between the government forces and the LTTE with the military confrontation coming to an end on 19th May 2009. The 30 year old hostilities and war has ravaged the Tamil speaking North-East and left the Tamil People destitute. Over One Million Tamils have fled to other countries for safety and another half a million Tamils were displaced within the country. Over One Hundred and Fifty Thousand Tamils have been killed over the years of the conflict and credible estimates point to over seventy thousand civilians having been killed in the last stages of the military onslaught. Many more have been maimed and grievously injured and suffer from traumatic disorders. In addition over 500,000 Tamil people were rendered homeless. Most were interned in detention camps against all civilized and international norms. The right of resettlement of these people in their original places, though promised to the international community and to the United Nations, have not been honoured.

## TAMIL PEOPLE AND THE PRESENT CONSTITUTIONAL ARRANGEMENTS

We, the Tamil People of Sri Lanka are a distinct People in terms of relevant International Conventions and Covenants. We as a People want to continue to live in our country in peaceful co-existence with others, with dignity and self-respect, with freedom and liberty and without fear, as equal citizens free from majoritarian hegemony.

We as a People are thus concerned about our historical habitats, our Collective Rights that accrue to us as a People and as a Nation and our entitlement to exercise our right to determine our destiny to ensure self-government in the Tamil Speaking North-East of the country within a united and undivided Sri Lanka.

The present constitutional arrangements in this regard have proved to be inadequate and unsatisfactory. They favour the majority and impose majoritarian hegemony on the Tamil People. Democracy in a plural society cannot function effectively without a constitutional framework that provides for equity, equality, justice, peace and security. It is in this context that we face the forthcoming Parliamentary Election.

The TNA firmly believes that sovereignty lies with the People and not with the State. It is not the government in Colombo that holds the right to govern the Tamil People, but the People themselves. In this regard the Thirteenth Amendment to the Constitution of Sri Lanka is flawed in that power is concentrated at the Centre and its Agent, the Governor. Our political philosophy is rooted in a fundamental democratic challenge to the authoritarian state. We made a significant contribution towards the achievement of these objectives on the 8th of January 2015 in the whole country. Our political programme is therefore rooted in the needs and aspirations of all people including the Tamil Speaking Peoples for justice and equality.

## OUR STAND ON A POLITICAL SOLUTION

The principles and specific constitutional provisions that the TNA considers to be paramount to the resolution of the national question relate mainly to the sharing of the powers of governance through a shared sovereignty amongst the Peoples who inhabit this island. The following salient features of power sharing are fundamental to achieving genuine reconciliation, lasting peace and development for all the Peoples of Sri Lanka:

- The Tamils are a distinct People with their own culture, civilization, language and heritage and from time immemorial have inhabited this island together with the Sinhalese People and others
- The contiguous preponderantly Tamil Speaking Northern and Eastern provinces is the historical habitation of the Tamil People and the Tamil Speaking Peoples
- The Tamil People are entitled to the right to self-determination in keeping with United Nations International Covenants on Civil and Political Rights and Economic, Social and Cultural Rights, both of which Sri Lanka has accepted and acceded to
- Power sharing arrangements must continue to be established as it existed earlier in a unit of a merged Northern and Eastern Provinces based on a Federal structure. The Tamil speaking Muslim historical inhabitants shall be entitled to be beneficiaries of all Power-sharing arrangements in the North-East. This will no way inflict any disability on any People.

- Devolution of power on the basis of shared sovereignty shall be over land, law and order, enforcement of the law so as to ensure the safety and security of the Tamil People, socio-economic development including inter-alia health, education, higher and vocational education, agriculture, fisheries, industries, livestock development, cultural affairs, mustering of resources, both domestic and foreign and fiscal powers.
- Direct foreign investment in the North-East should be facilitated resulting in new industries and employment opportunities being created for youth
- Avenues for tertiary education should also be set-up so that those who cannot enter universities can pursue higher education in relevant fields

All that has .been stated above shall be enacted and implemented within the framework of a united and undivided Sri Lanka.

## OUR STAND ON ACCOUNTABILITY AND RECONCILIATION

Accountability and reconciliation are fundamental to genuine and permanent peace in Sri Lanka. We seek fulfilment of the resolutions adopted at the United Nations Human Rights .Council (UNHRC) in March 2012, March 2013, and March 2014 and the Report of the international investigation mandated by the March 2014 resolution to be released in September 2015. We are strongly committed to the ascertainment of the truth which must be made public and known to all the peoples of this country, the Sinhalese, the Tamils, the Muslims and others Truth, justice, reparation and the guarantee of non-recurrence are fundamental to the national question being comprehensively addressed so as to ensure permanent and genuine reconciliation between the different peoples on the basis of justice and equality.

## MATTERS OF IMMEDIATE CONCERN FOR THE TAMIL PEOPLE

In addition to continuing to pursue a just and lasting political solution to the national ethnic question, we will actively engage in addressing the immediate and current concerns of our People. The specific matters are as follows:

There must be meaningful de-militarization resulting in the return to the pre-war situation as it existed in 1983 before the commencement of hostilities by the removal of armed forces, military apparatuses and High Security/Restricted Zones from the Northern and Eastern Provinces. This is imperative in the prevailing calm and peaceful environment

Tamil People who have been displaced in the North and the East due to the conflict must be speedily resettled in their original places; housing provided and livelihoods restored in a manner that respects their dignity

After the defeat of the former regime in January 2015 and due to the persistent and indefatigable efforts of the TNA over the past several years and since January 2015, decisions have been taken by the new regime for the return of the lands to and the resettlement of the displaced Tamil People in Valikamam in the North and Sampur in the East which are being currently implemented. Action will be expeditiously pursued to fulfil these objectives. 1,000 acres of farm land has also been released in Keppapulavu in Mullaithivu.

Since 6 years have elapsed after the conclusion of the war, all political and other prisoners held under the Prevention of Terrorism Act (PTA) in relation to war-related activities must be released. The TNA has been pressing for their release and for the abrogation of the PTA and will continue to strenuously pursue this objective.

There must be finality reached by the truth being ascertained with regard to thousands of missing persons who were largely bread-winners of their families and adequate multi-faceted relief provided to the said families so as to enable them to overcome their agony and recommence lives.

Tamils who fled the country must be permitted to return to their homes and a conducive atmosphere created for their return. In particular, expeditious steps must be taken for the return of over 100,000 refugees in South India. A comprehensive programme for the development of the North and the East including the creation of employment opportunities for the youth will be undertaken with the active support of the Sri Lankan State, the Tamil Diaspora and the International Community. It was not possible to implement such a programme during the term of the former regime due to its negative attitude and since January 2015 the country has not had a strong and stable government. The TNA would actively promote the accomplishment of such a programme when a new government is established.

The TNA will initiate a programme to rehabilitate all minor tanks in the North-East so as to increase the water resources for our agricultural needs and will also take serious steps, with necessary expert help to solve the drinking water problem in the North.

- A comprehensive development programme will be undertaken in the North-East, including upgrading the Palali airport as an international airport, and developing sea ports and fisheries harbours.

- Relevant expertise and technologies will be obtained so as to modernise the utilization of our palmyrah resources.
- We will find solutions for the challenges faced by our fishermen in freely pursing their vocation and make every effort to improve their livelihood.

## WAR WIDOWS, ORPHANS, ELDERS AND DISABLED

The war has left behind almost 90,000 widows in the North-East. There is a need for a clear policy to build their capacity and uplift their lives. These widows have become economically and socially vulnerable. Adequate steps must be taken to swiftly and effectively create livelihood programmes and other necessary measures to alleviate their present condition. The needs of children, elders and disabled also need to be addressed.

## RE-INTEGRATION OF EX-MILITANTS

The rehabilitation and re-integration into the social fabrics of ex-militants must be comprehensive ensuring the acquisition of necessary skills and the creation of employment opportunities to enable them to recommence lives with dignity. Programmes that have been implemented thus far have been inadequate and the ex-militants have not been able to earn their livelihood or recommence their lives with dignity. An early programme of action is needed to address this issue.

## THE BREAKDOWN OF TRADITIONAL SOCIAL STRUCTURES

The current structure of government which excludes meaningful Tamil participation in effective governance and substituting therefore the military in the North-East, post-war, has resulted in the increase of gender based violence, abuse of alcohol and drugs and the general breakdown of traditional social structures. The only way in which this can be remedied is through powers of governance being effectively exercised by democratically elected representatives of the people.

## THE ROLE OF THE INTERNATIONAL COMMUNITY

The Tamil People have always worked with commitment towards a reasonable and acceptable resolution of the national ethnic question through domestic processes. It is the Sri Lankan state which has spurned these opportunities and sought to suppress the Tamil People through repeated anti-Tamil pograms. It was such conduct on the part of the Sri Lankan state that internationalized the national question and compelled the Sri Lankan state to



accept an international role. Tamil militancy, which also was an inevitable consequence, has now ended.

The former regime endeavoued to undo even the minimum progress achieved through international involvement. The TNA is firmly of the view that international auspices is inevitable to achieve permanent peace through genuine reconciliation thereby enabling all Peoples living in Sri Lanka to live as equal citizens.

## CONCLUSION

The TNA calls upon the voters in the electoral districts of Jaffna, Vanni, Trincomalee, Batticaloa and Ampara to unitedly and overwhelmingly exercise their franchise in favour of the TNA, contesting under the name of the Ilankai Tamil Arasu Kadchi and the "House" symbol and thereby democratically endorse, to the fullest degree, policies of the TNA enunciated here in regard to vital issues of fundamental concern to the Tamil and Tamil speaking Peoples as set out in this Manifesto.

This Manifesto is issued by the TNA comprising of

ITAK, TELO, EPRLF and PLOTE.



சிறையில் இருந்து விடுதலையான தமிழ் இளைஞர்கள் குபேந்திரராஜா. பூபதி பாலவடிவேற்கரசன், ஜீவராசா, வண்ணை. ஆனந்தன், மாவை. சோ. சேனாதிராஜா உள்ளிட்டோர் அ. அமிர்தலிங்கம் அவர்களுடன் சந்தித்தத் தருணம் (1976)





01.08.2008ம் ஆண்டு ஜேர்மனி ஹைன நகரில் நடைபெற்ற ஈழத்தமிழர் வாழ்வுரிமை மாநாடு


















பொது நூலகம்
வலி. வடக்கு பிரதேச சபை
தெல்லிப்பளை







**உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம்**

கனடா தலைமையகம் மற்றும் இந்தியக் கிளை